உ

சொக்கலிங்கம் துணை.

ஸ்ரீஞானஸம்பந்த குரவே நம:

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீன மடாலயத்தில்

எழுந்தருளியிருக்கும்

சுத்தாத்துவித சைவசித்தாந்த சார்வபௌம

ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிக மகாசன்னிதானத்தின்

திருமுன்னர்ப் பல வித்வான்கள் பாடிய

# தோத்திரப்பாடற்றிரட்டு.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மகாசன்னிதானத்தின்

ஆக்ஞைப்படி

தருமபுர ஆதீன வித்துவசிரோன்மணி

ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு

மறைமலையடிகள் நூல்நிலையம் சென்னை-1
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

கும்பகோணம்

யதார்த்தவசனி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டன.

1933.

உ

சொக்கலிங்கம் துணை.

ஸ்ரீ ஞானஸம்பந்தகுரவே நம :

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனமடாலயத்தில்

எழுந்தருளியிருக்கும்

சுத்தாத்துவித சைவசித்தாந்த சார்வ பௌம

ஸ்ரீமத் சுப்பிரமணியதேசிக மகாசன்னிதானத்தின்

திருமுன்னர்ப் பலவித்துவான்கள் பாடிய

# தோத்திரப்பாடற்றிரட்டு.

குறள்.

தருமைக் குருஞான சம்பந்தன் வாழி
அருமையடி யாரு மவண்.

---

தருமபுரம் ஆதீனம் செந்தமிழ்ப் பாடசாலை போதகரும்,

கூறைநாடு தமிழ் வித்வானுமாகிய

மெய்கண்டார். அ. கந்தஸாமிதேசிகர் குமாரர்

பாகவதர்—தியாகராஜதேசிகர் இயற்றிய

## பஞ்சரத்நம்.

வெண்பா.

1 செந்திருவெல் லாமளிக்குஞ் சீரளிக்கு நாரளிக்கு
நந்தலிலா ஞான நலமளிக்குஞ்—சந்தத்
திருத்தருமைச் சுப்ரமண்ய தேசிகனெனுஞ் சேரமான்
கருத்திலமர் சொக்கலிங் கம். (க)

2 தருமன்பூ சிக்கத் தருமைநக ரென்பார்
தருமைக்கு வேறுபொருள் சாலும்—வருவோர்க்
கிருமைப் பயனெல்லா மீவதன்றி ஞானந்
தருமை வசிப்பதனாற் றான். (உ)

3 சம்பந்த நாளிற் றருகுமா னேகாழிச்
சம்பந்த னென்பதுபோற் றண்டருமைச்—சம்பந்தர்
தற்போது வாழ்சுப் பிரமணிய சற்குருவாய்ப்
பிற்போதும் வந்ததுநம் பேறு. (௩)

4 பெருமையுற்று வாழ்சுப் பிரமணிய னெங்கோன்
தருமையுற்ற தாரூரிற் சாருங்—குருநாதன்
அன்றனுப்ப வந்த வருண்ஞான சம்பந்தர்
இன்றழைக்க வந்தா ரிவண். (௪)

5 முடியாரச் சொக்கலிங்க மூர்த்திக்கு மன்று
ரடியார்சம் பந்த ரடிக்குங்—கடிமலராற்
பூசிக்குங் கையேகைப் பூந்தண் டுளவோன்கை
யாசிக்குங் கைத்தூங்குங் கை. (௫)

## முக்கனி.

### 6 அறுசீர்க்கழி நெடிலடியாசிரியம்.

திருமணியைப் புணர்நீலச் செழுமணிக்குங் கலைமணியைச் சேரும் வேத
வருமணிக்கு முயர்சோதிச் சொக்கலிங்க மணியருளி னொளியி லங்குங்
குருமணியாஞ் சம்பந்த மணியினக்கோ வையிலுறநாங் கொள்ளப் பெற்ற
வொருமணிசுப் பிரமணிய தேசிகமா மணிக்கிணைமூ வுலகி லுண்டோ. (௬)

### 7 வேறு ஆசிரியம்.

மாணிலம் புகழ்தருமை நகரில்வா ழுஞ்சுப்ர மண்யகுரு நாத னெங்கோன்
வருமடியர் கட்கரிய பிரணவப் பொருளினை வகுத்தருள்வ தன்றி மேலும்
ஞானதீக் கைகள்மூன் றினைப்புரிவ துங்கேட்டு நாமகளும் வேத னையுற
நான்மலர்ப் பொறிபொறிக லங்கிடச் சசிமதியு நாட்குநாட் குறைய மிக்க
வீனமிது வென்றுதம் பதிமூவர் கலையிகழ்ந் தேசிடக் கண்டு பிரம
னேக்குற்று முகம்வெளுத் தேயனமிறங்க திருப்பின்றிப் பூவிழிந் தான்
வானமுறு நெடுமாலு மாலாகி யேகுறளின் வடிவுற்று மண்ணி ரந்தான்
மன்னுபுரு கூதனே தீவினைச் சோறுண்டு வாணாள் கழித்தன னரோ (௭)

### 8 இரட்டையாசிரிய விருத்தம்.

சகளநிஷ் களசொக்க லிங்கமூர்த் திக்குரிய ஸத்வகுண தேவாலயம்
தன்னிகரி லாஞான சம்பந்த குருநாத சரணபங் கயத டாகம்
சச்சிதா நந்தமய முற்றசிவ மாகித் தனித்தமெய்ஞ் ஞானமூர்த்தம்
தக்கதிரு மாலயன் புருகூத னமரர்புகழ் சாற்றுகை லாஸ கோத்ரம்
தாரணியி லுள்ளசை வாதீன கர்த்தர்கள் தமக்குமோ ரரிய திலகம்
சைவாக மாதிசித் தாந்தபதி பசுபாச தத்வமய மாதாங்கம்
சாரும்பு றச்சமய மதவார ணங்களைத் தாக்கிடும் ஞான ஸிம்ஹம்
தான்பிரம மென்னுமே காத்மமத வாதபஞ் சானனஞ் சாடுசரபம்.

நிகரிலணி மாதிசித் திகளுமெளி தாச்செய்து நீங்குலீ லாவிநோதம்
நித்தியா நித்தியவி வேகமுணர் தார்க்கிக நிபுணவாதனவி லாஸம்
நிர்மூட ஜீவர்களி னிதயமுறு மிருளினைநீக்கியொளிர் சூர்யோதயம்
நெக்குவிட் டுருகுமடி யார்க்குளத் தினிலன்றி நிதரிசன ஞான [கோலம்
நேமமுறு தீக்கைகள்பு ரிந்துஞா னத்தையரு ணிர்மலப ராவதாரம்
நீங்காத பில்லிசூ னியமாதி சங்கைகளு நீங்கவருள் மந்தர பீடம்
நிணமுறுங்கருமேகமுதலான நோயெலாநீறுசெய்திடு மௌஷதம்
நிலவுயிர்களுறுஜனனமரண மெனுமூசலைநிறுத்திடுஞ்ஜீவாம்ருதம்.

அகநொந்து மிடிவந்து தனையண்டி வருபவரை யாதரித் திடுதாயகம்
அழியாத பலவகைச் செல்வமெல் லாந்தரு மன்னைலக்ஷ் மீகடாக்ஷம்
அரியபல சிவதலங் களிலுற்ற பலசிவா லயதர்ம பரிபாலனம்
அங்கங்கு தனதறம றக்கருணை யாற்பூசை யாற்றிடும் வலதிகாரம்
அரியசெந் தமிழினொடு வடமொழிப் பருணிதர்க் காவமைந்திடு [பொக்கிஷம்
அமுதநவ ரஸகீத ஸத்கதாப் பிரஸங்க வதுலஜன கணசேகரம்
அவரவ ரபீஷ்டமிது வென்றறிந் தேயளித் தருள்செய் கற்பக [விருக்ஷம்
அவமற்ற துரியநிலை யதிலுற்ற துறவறத் தன்பர்கள் சதாபூஜிதம்.

திகழுமுடி யரசர்பலர் பணிசெய்து காணிக்கை சேர்த்திடும் ஞான நிலயம்
செந்தமிழ்க் குமரகுரு பானுதவு விருதுகொடி ஜெயசின்ன ஸத் [ப்ரபாவம்
தேடிவரு புலவர்க்கு சால்வைபீ தாம்பரஞ் செம்பொனுந் தருவுதா
செல்வீக ரானபல ப்ரபுடீக ஸ்ரீமான்கள் சேவைசெய் கருணாகரம் [ரம்
திருநீ றளித்தாசி கூறிதிரு வாசகஞ் செப்பிடும் விநயசதுரம்
திறமிகுஞ் சேவகர்க ணக்கர்சம யோசிதர்கள் சேருஞ்சபா [லங்க்ருதம்
திருமகளினோடுகலைமகளுறும்பொன்னிநதிசேர்தருமபுரநிவாஸம்
தீனதருக் கருள்கண்ய ஞானசுப் பிரமண்ய தேசிகச் சிவபுண்யனே.

## வாழ்த்து.

9 வாழ்க வேதசி வாகம மாநிலம்
வாழ்க சைவத் திருத்தரு மைப்பதி
வாழ்க ஞானசம் பந்தன் மலரடி
வாழ்க சுப்பிர மண்யர்நீ டூழியே. (௯)

### சிதம்பரம் நாவலர் கலாசாலை உபாத்தியாயா

### வேங்கடாசலம்பிள்ளை அவர்கள் பாடிய

# கொலுமுக விண்ணப்பம்.

நேரிசை யாசிரியப்பா.

10 பூமகட் கணியாம் பொன்னிநன் னாட்டிற்
காமகட் கணியாக் கவின்மயி லாடு
துறைப்பதிக் கீழ்பாற் றுலங்குறுந் தருமைத்
துறைப்பதி ஞானத் துறைப்பதி யென்ப
குருவின் றுணர்ந்த குமர குருபாற்
குருவுப தேசமாக் குலாஅம்பதி யென்ப
அப்பதிக் கேற்ற திப்பிய குரவனாச்
சுப்பிர மணியத் தொல்குரு மூர்த்தியே
சகளீ கரித்துத் தரணியில் வந்தான்
என்றே யறிஞர் இதயசம் மதத்தால்
நன்றே நன்றே நாம்புரி புண்ணியம்
எனப்புகழ்ந் தேத்தவே யெழிற்சந்நி தானமாய்
எழுந்தரு ளெந்தாய் எம்போ லுநருக்
கழுந்திட ஞானச் சுடரறி வுறுத்தவே
பரம தயாளுவாய்ப் பண்புடன் சிவிகையிற்
சிவணியே ஞானச் சிவகுருப் பொருளை
இவணுளா ரறிய வெழின்மறு கெழுந்தாய்
நின்புகழ்ப் பெருமை மன்பதை யுலகிற்
போற்றுந ருறுதார் பூதலத் தின்றால்
பேற்றினி லுயர்சிவப் பேற்றினை யடியவர்க்
கேற்ப வுறுவினை மலபரி பாகக்
கேற்ப வருளவே யெண்ணினை யம்மா
வீதியிற் றிருவுலாப் போந்த மேன்மையை
ஏதெடுத் தேத்துவே னெளியனே னைய
மதப்போக் கறியாப்பல விதப்போக் காளரும்
வெள்ளைக் குருமெய் வெள்ளைக் கவர்மெண்
டுத்தியோ கத்தரும் பத்தியாக் குழுமினர்
மெத்துடல் லறிஞரும் ருத்திர கணிகையர்
சுத்ததொல் வித்தையர் தொக்கனர் முறைமுறை
ஆடினர் பாடினர் ஊடினர் நீடினர்
கண்ணினாற் பெறுபலன் கருத்தாறு பலனும்
மண்ணினாற் பெற்றனர் மகிழ்ந்தனர் யாவரும்
எனவே

சிறியேன் அறியேன் செப்பவும் அஞ்சுவல்
ஆயினும் புகழ்வது சாலவுங் கடமையே
சுப்பிர மணியத் திப்பிய வள்ளால்
நாயினே னையும் நலனுறச் செய்குவை
பார்முகத் திருவருள் பாவியேற் ககற்றித்
தராதலத் துயர்ந்த தண்ணருள் புரிவாய்
சந்நிதி புக்கோர் மன்னிதி பெறுதல்
முறைமைய தாகு முனிவோர்க் கரசே
வாழிய நின்புகழ் வாழிமண் ணுலகே.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

## சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமி அவர்கள் பாடியது.

11 திருத்துருத்தி யமர்ந்தருளும் சிவபெருமான் கட்டளையைச்
சிறப்பாய்ச் செய்யும்
கருத்துருத்தி யிகந்துபெருங் கருணையிற்சுப் பிரமணிய
மூர்த்தி கேண்மோ
அருத்தியினால் முன்னாளி லடியனைநட் பிடைப்படுத்தி
யமர்தற் கேற்பத்
திருத்தியுறச் செய்தனையே திருத்தியுற வெந்நாளும்
செய்மா றென்னே.

*　　*　　*　　*　　*

*　　*　　*　　*　　*

வித்துவான்

## சண்முகசுந்தரம்பிள்ளை பாடியது.

12 சீர்மேவு தருமபுர வாதீன மதுதனைச்
சேர்புள் ளிருக்கும் வேளூர்ச்
சிவனருள் மிகப்பெற்ற செல்வமே யுன்றனிரு
சேவடித் தாம ரைக்கு
நீர்மேவு கோனேரி ராயபுரந் தனில்வாழ்
நேயசண் முகசுந் தரன்
நீலமயி லேறுமுரு கேசன்ப தாம்புயம்
நினைந்தெழுது நந் நிருபம்

கார்பேவு கூடனகர் சென்றங் கயற்கண்ணி
கணவனைக் கண்டு செந்தூர்
கந்தனையு மேகண்டு கால்வீழ்ந்த வடியனைக்
காத்தருளு மென்று போற்றி
ஊர்மேவ வேணுமெற் கோவரைக் காசுமிலை
உள்ளமதி லேகிருபை வைத்து
உதவிசெய் தனுப்பிக்க வேண்டியே
யிவ்விடம் மோடிவந்தேன் சுவாமியே.

---

தருமபுரம் ஆதீன வித்வான்

ந. சுந்தரலிங்கக்கவிராயர் இயற்றியது.

13 திங்களு மரவுங் கங்கைமான் மழுவுஞ்
சிறந்தகண் பாலமுங் கடுக்கைத்
திகழ்தொடைக் கரித்தோ லுழுவையின் றோலுந்
திவளுமா துறுமிடப் புறமும்
பங்கயக் கண்ணன் கண்ணமர் பதமும்
பாரினிற் கரந்தரு ளுருவாய்ப்
பரிவுட னடியார் பவக்கட லுடைத்தே
பதியளித் தாண்டிடு மரசே
மங்கிடா தடியேன் பவத்தினி லாழா
வகையடி மலர்முடி சூட்டி
மதித்தெழு பிறப்பு மெழுபவப் பிணியு
மாற்றிட வழக்குக ளுண்டோ
துங்கமா ரடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறு தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (௧)

14 திருக்கரத் துறுநீ றுற்றுளோர் வெய்யத்
தீவினை யற்றுளோர் நின்றாள்
செய்யநீ ருண்டோர் தாய்முலைப் பாலாந்
தீயபா லுண்டிடார் நின்னை
இருகையாற் றொழுதோர் சிரத்திறுற் பணிந்தோர்
இப்புவி விண்டல மரசாய்
இருப்பர் பின்வீட்டின் பயனடைந் தாங்கே
ஈசனோ டொன்றிவாழ் வாருகும்
பெருக்கினை சேட னாயிர நாவாற்
பேசிட வரியதா மென்றால்

பேதையிற் பேதை பிழையுறு மடியேன்
பிதற்றுவ நகைப்பதா மன்றோ
துரியங்கொ ளடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறா தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (உ)

15 கனகமார் நின்கை யடியவர் முடிமேற்
கருணையால் வைத்தருள் புரியக்
கயிலைமால் வரையை விடுத்தரு ளுருவாய்க்
கடிகியிப் படிமிசை வந்த
வுனதுபே ரருளைக் கடையற்குங் கடையேன்
உரைப்பதற் காகுமோ கால
னுற்றிடும் பாசக் கயிற்றினை யறுத்தே
யுன்றிருத் தாண்மலர் சூட்டி
எனக்கென வமைத்த நாலெழு கோடி
யெனுநர கக்குழி மாற்றி
எளியனை யாள விதுதரு ளைங்கா
ணினியவர் மனத்துறு மாசே
துனியக லடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறா தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (௩)

16 பிரசமா மலர்செந் தேறல்கொப் பளிக்கும்
பெற்றிபோ லினதுவாய் மொழிகள்
பிரிவிலைம் புலனுங் கரியினை யடக்கும்
பெரியவங் குசமதோ மனமாம்
புரவிகொட புறவே யடக்கிடுங் கலினம்
புரைகரு மேந்திய மென்னும்
புகழ்தரு வீர விறலினர் கடக்கும்
புழையெயிற் றாவெனுங் கயிறோ
வரியவென் னுடற்றேர் தொடக்கினை யறுக்கு
மரங்கொலோ கரும்பினின் ரசமோ
வமுதமோ முக்கட் கனிகளின் சாறோ
அறைவதற் கெளியனு லாமோ
சுரர்புக ழடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறா தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (௪)

17 பிஞ்சுவெண் பிறையை யனைய வெண்ணுதலார்
பெருமுகிற் குழற்கையி னூட்டிப்
பிறங்கிய குழற்கே நஞ்சமு மமுதும்
பெருகிய கண்வலை தனக்கே
பிஞ்சுதே னொழுகு மாம்பல்வாய் மொழிக்கே
மேற்படு களிற்றின் மத்தகநேர்
மேருசெங் கமல முகைநிக ரிளநீர்
வெள்கிட பொருத்தகொங் கைக்கே
நெஞ்சமுங் கொடுத்து யறநெறி மறந்து
நெறியிலாக் கொடியனுக் குன்றாள்
நேருமோ நேரி லக்கல னேற்றி
நிலைக்கும் வீடளித்தருள் புரிவாய்
துஞ்சுறா தடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறா தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (ரு)

18 பரிதியோ வகத்தி லர்ணவ விருளைப்
பரிப்பவன் மாயையாம் வெயில்
பரிபட வெண்ணெண் கலைகளாய் நிறைந்தே
பாவமு தந்தனைப் பொழிந்து
பெரிதுநின கருணை வாரியிற் படிந்து
பேரின்ப முற்றிடும் வல்லார்
பேசிடும் பொருளே யடியனேன் காணைப்
பெற்றிலா மடமையை நோக்கி
யரிதுநின் பாத தாமரை பொழிதே
னமுதை யளித்தென தகந்தை
யடுகரி யடக்கி யாளநின் கடனே
யல்லது நல்வழி காணேன்
துரியங்கொ ளடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறா தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (சு)

19 தனதுறு மந்தக் கரணமோ டுமூன்று
சார்விலா விடயத்தி லாழ்ந்து
தயவிலாக் காம முதலைந்தில் மூழ்கித்
தரையினிற் றுக்கசா கரத்திற்
றினந்தடு மாறி தவிக்கும் நாயேனைச்
சேர்த்தெடுத் தாள்வதுன் கடனே

திக்குக ளனைத்தும் போற்றும் புண்ணியனே
திருவடித் தாமரை நீழல்
எனக் களித்தின்ப வமுதினை யுண்ண
விச்சம யத்தருள் புரிவாய்
எழிலுறுங் கூடல் கமலையுந் தருமை
யின்புற வாழ்வுகொ ளரசே
துனியக லடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறு தேத்துந
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (எ)

20 அன்னையி லுதாமா மண்டம் விட்டடியேன்
அவனியிற் குருவடி தேடி
அலைந்துவரு போதருண் ஞானசம் பந்தரா
மடியடி யாக வந்தோன்
தன்னைப் பணிந்திடக் கமடஜிக ருன்னியே
சார்ந்தமீன் போல் நோக்கியே
சாலவே குக்குட நேர்பரிச தீக்கையுஞ்
சார்வாகச் சொக்கேசர் முன்
என்னைப் பரிசீல னுக்கிதிரு வடிசூட்டி
யெழில் கருணை மிகவைத்துமே
ஏகதே சத்திலருள் செயவேணு நாதனே
என்றென்றுங் காத் தருளுவாய்
துன்னுமெய் யடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறு தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (அ)

21 முக்காலமு நினது திருவடித் தாமரையில்
மொய்த்திடு மடியார் நடுவில்
முறைமுறைப் பணிந்திடத் திருவருள் புரிகுவாய்
முதல்வநா னேழை கண்டாய்
எக்கால முனதருள் பெறுவனோ பெற்றிடில்
எனக்குநிக ரில்லை யுலகில்
இக்கொத்த மெய்ஞ்ஞான வுபதேச வள்ளலே
யிங்குனக் காரு நிகரோ
தக்காலஞ் சுத்தரா யாக்கியே யகந்தையைத்
தவிர்த்தெனை வாழ வைப்பாய்
தருமைகுரு ஞானசம் பந்தர்மா பினில்வந்த
தயாநிதிக் கருணை வாழ்வே!

துக்கமி லடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறு தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (௫)

22 வாழையடி வாழையென வந்ததிருக் கூட்டமதின்
வகை கண்டு சேராமலே
வந்துவந் தேதினமும் வாய்த்ததிரு வடிகண்டு
மகிழாம லே திரிந்த
ஏழையனைக் காக்கவே யெண்ண வருமோவரா
திதுகண்டு மறை யோதுமே
ஏகநாயக னட்ட மூர்த்தமா யெங்கெங்கு
மிருந்து விளையாடு முறைபோல்
மாழையொண் கண்ணியை மறைத்து குருவடிவாக
வந்த மெய்ஞ்ஞான குருவே
வாழ்விலாப் பொய்யுடலை மெய்யென்று நம்பினேன்
மயங்கியே திரியா மலே
சோழையி லடியார் விண்ணவர் தினமுந்
துதிமிக வழுவுறு தேத்துந்
தூயவர் நாளும் வாழ்வுறுந் தருமைச்
சுப்பிர மணியசற் குருவே. (௬)

சுபம்.

உ

ஶிவமயம் ।

வைத்யேஶ்வராலய வித்யாஶாலாத்யாபகவஞ்சித

கோபாலஶாஸ்த்ரிவிரசிதா

( ஸத்ரத்நமாலிகா ॥

23 ஶ்ரீமாந்த்³ருக்தாமாரஃ க்ருஷ்க ஜணாராதோஷேளவ ஸர்வஶ்ரீ
தேள । பாஸ்வ்யூகே ஸ்ருதவஜேள ஶக்திம் ஹுதேஜ பிஹ்ருதா
வவதாம் ॥ ॥௧॥

24 ஶ்ரீ மத்ஸாம்பிகயா ஸமேதமக்ஷிதஸ்ஸ்தா ஹரி வைவ
த்யேஶஃ । காருணாபரதரம்ஶிதத்ருஷ்ட்யா த்ருஷ்டாயினோதி
ஸந்தவக்தாம் ॥ ॥௨॥

25 ஶ்ரீமச்சங்கரசரணவரவாணீ ப்ருணமா யந்தாத்யஹம யக்தா ।
யஸ்மாந்மேஶித்ரூக்ஸம் ஜயதா ஜக்யாதுயோகதாவாயுஃ ॥௩॥

26 ஸயம் ஸமயேஶ்வயமுகாயேஷு ப்ருஜாநக்ஷயஃ பரமோ
த்யாஜ்யஃ । விஜ்ஞாநிவேக்ஷ்க்ஷமயா ஸம்மோதா யமேமராஹி மக்ஷ
தஃ பரிவாரமநாயஷும் ॥௪॥ ॥௪॥

27 கிஞ்ச ஶ்ரீ ஜ்ஞாநஸம்பந்தரக்ஷபாதிசரண ஸமஃ ।
பாஞ்சேத்ரந வ ஸக்த்யாவ விரக்த்யா யமுந்தியா ॥௫॥

28 வாச்ய பஞ்சாக்ஷரமேதிநமஸி ஶிவாயமசதஜ ஶிவயமஷும் ।
விஜயமாநம் ஶ்ரீமத்³ருத்³கமாரம் ஸதா ஹ்ருத³ம்பு³ஜேந ॥௬॥

29 ஊர்வேஷுராரபஶிவ பாதேள க்ருக்வா பத்³மஸமேநஸமாவஸீநம் ।
ஶ்ரீ மத்க்ஷராத்³மத்ரமே யமஷும் பாபாவியம் ஸ்வஶமேஷ்யஸ்யஃ ॥௭॥

30 உபதேஶஸம்ரவயஜம் தேஶிகவயஷு ப்ருஸேஜமரவகமஶம் ।
யதாத்வஶ்யம் பக்ஷஷும் ஶ்ரீ ஶ்ரீ மஹாதேவஸேவநாஸம் ॥௮॥

31 tat subrahmaṇyaṃ deśikavaryaṃ maṭhādhipaṃ dṛṣṭvā | [illegible]
[illegible] hṛdayaṃ [illegible] sevakaṃ [illegible] ||9||

32 [illegible] |
[illegible] ||10||

33 [illegible]
[illegible] | iti jānīta śrīmat subrahmaṇyārya deśikendra-
[illegible] || ||11||

34 [illegible] |
[illegible] |12|

35 [illegible] |
[illegible] ||13||

36 [illegible] |
[illegible] subrahmaṇyārya deśika[illegible] ||

37 [illegible] |
śrī [illegible] deśikaṃ [illegible] ||

38 itthaṃ [illegible] racitā |
[illegible] deśikavaryasya [illegible] ||

[illegible] |

உ

ஸ்ரீ-ல-ஸ்ரீ

மகாசந்நிதானம் தரங்கைக்கு எழுந்தருளியபோது
கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் கிளையாகிய
பிறைசைத் தமிழ்ச்சங்கத்தார் சமர்ப்பித்த

# நல்வரவேற்பு விண்ணப்பம்.

குரோதன-௵ ] [ 1925.

தமிழ்த்தாய்வாழ்க.

நேரிசையாசிரியப்பா.

39 செந்தமிழ் மொழிவளர் சீர்சேர் நாட்டில்
இந்தணி சடையோன் எம்பிரான் மகிழுறூஉம்
தரும புரமெனும் தகைமாண் பதியோய்!
பெருமால் தணாஅது பிணிப்பிற் செறிந்து
கருவுற் றுழலும் மாந்தர்கள் தமக்கிங்
கறவுரை புரிந்தே யவர்மலம் அகற்றி
நுதல்விழி நாட்டத் திறையோன் அருளுக்
கிலக்குற வாக்கும் எழில்மிகு குருவே!
எல்லொளி பிறங்க இயன்ற வேணியும
பொன்னெனும் மேனியிற் பொலிதிரு நீறும்
நயப்புடன் புனைந்த கண்டிகை நலமும்
கண்ணுறக் காணுபு கண்ணுதல் என்றே
எண்ணி இறைஞ்சிட விளங்குறும் இறையே!
பொருவறு சிறப்பிற் புலவோர் போற்றும்
திருவருள் உற்ற திறலோய்! வருக
உய்வகை தரூஉம் உயர்தனிப் பொருளாம்
சைவசித் தாந்த சறகுரு! வருக
தாய்மொழி யாய தமிழ்மொழி தன்னை
அன்பொடு பேணி அரும்பணி குயிற்றுறூஉம்
கரந்தை வளர்தமிழ் மன்றக் கிளையாம்
பிறைசை நிலைதமிழ்ச் சங்கத் தார்யாம்
பெட்புடன் போற்றினேம் பெரிதுவந் தருள்க!
கண்ணுதற் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுற வாய்ந்த பசுந்தமிழ் மொழியாம்

அன்னையைப் போற்றும் அடியார் பலர்க்கும்
அருந்துணை யாய பெருங்குண வள்ளால்!
வான அமிழ்தெனும் வாயுரை யுடைய
ஞானச ம்பந்த நற்குரு! வருக
வருக! வருக! திருவருள்
தருக! தருக! தண்ணளி யோயே!

---

தரங்கைக் கடற்கரையில் நடந்த
பிறைசைத்தமிழ்ச்சங்கப் பொதுக்கூட்டத்தின்ஞான்று
அவைத்தலைமை வகித்த
ஸ்ரீ-ல-ஸ்ரீ
மகாசந்நிதானம் உயர்திரு முன்னாக்கிய

## தோத்திரப்பா.

40 சுருதி பரவும் கைலையமர் தோன்றாத் துணையாஞ் சிவபெருமான்
தருமை யமர்வா னொருபெருமான் சார்ந்தார் தமது வினையறுப்பான்
பெருமை புகலற் கெளிதாமோ பெருமை யூரும் பெருமானை
உரிமை யாக வுடையானெம் முள்ளத் தமரும் பெருமானே. (க)

41 கன்னற் பாகைக் கற்கண்டைக் கடந்த வமுதைக் கைப்பிக்கும்
தென்னல் லமுதாந் திராவிடத்தைத் தேசு பெறுமெய்ஞ் ஞானத்தை
உன்னற் கரிய பரசிவத்தின் உயர்வை யறத்தைச் சங்கத்தைப்
பன்னற் கினிதாய் வெளிவந்த பரம குருவாஞ் சிற்பரனே. (உ)

42 நறையார் பொழில்வாய் மடக்கிள்ளை நவிலு மறைகள் ஞாங்கர்தொறும்
முறையான் முன்னூல் முனிவரர்கள் முடிக்கும் வேள்விப் புகைநாறும்
கறையார் மிடற்றேம் மண்ணல்திருக் கருணை யுருக்கொண்டமர்ந்தருளும்
பிறையா றெனுமிப் பெரும்பதிக்கெம் பெருமான் வருவீர் வருவீரே. (ங)

43 வந்தெஞ் சங்கங் கடைக்கணித்து வளர்ந்தோங் கிடமா மனமிரங்கிச்
சிந்தை களிப்பக் குழுவிடையே சீரார் தலைமைத் தலைநின்று
விந்தை பெறுவான் விரும்பியயெம் விருப்ப மொருப்பட் டுயர்வெய்தச்
சந்தக் கூடற் றமிழ்ச்சங்கந் தானே யிதுவா மெனவருளே. (ச)

தருமபுர ஆதீனம்
சைவ வெளியீடு.

வேறு

44 தவமுடையா யெமக்கருளத் தருணமிது கண்டோம்
சாற்றுமெங்கள் மொழியனைத்து மேற்றருளிச் சங்கம்
நவமுறவே வளர்ந்தோங்கி நாளுநிலை பெற்று
நானிலத்து மக்களெலாம் நல்லறிவுக் காளாய்ப்
பவமறவே சைவநெறி பற்றகலா வண்ணம்
பாங்குபெற வமைத்தளித்துப் பரிப்பதுநும் பண்பே
சிவமறையே சித்தமறி யாதனவு முளவோ
சீர்பெறவே செய்திடலும் செயலாகும் தேவே. (௫)

45 அருளளிக்குந் தருமைவள ராசேயா ரமுதே
அடிமலர்க்கண் ணூற்றெடுக்கு மானந்தத் தேனே!
மருளளிக்கும் மனப்புலத்தை யறிவெனும்வாள் கொண்டு
வளம்பெறவே யுழுதுவஞ்சக் காம்புகளு மாற்றித்
தெருளளிக்கும் நின்னும வித்தையதில் வித்தித்
திகழுமெங்கள் கண்களினீர் செவ்விதெரிந் திறைத்தேம்
பொருளளிக்கு மெய்ஞ்ஞானப் போகம்விளைந் திடுமோ?
போகமலா ததுவுறுமோ? புனிதகுண நிதியே. (௬)

46 வாழ்க செந்தமிழ் மாமறைச் சைவமும்
வீழ்க தண்மழை வென்றியு மோங்குக
ஆழ்க வெய்ய வரும்பிணி யாவுமே
சூழ்க தொண்டர் துணையடி நீழலே. (௭)

---

நாகை நீலலோசனி பத்திராதிபர் வித்துவான்

## சதாசிவம்பிள்ளை அவர்கள் பாடிய

# வாழ்த்துப்பாக்கள்.

---

47 வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுள
மகான்க ளெல்லாம்
பொன்றரிய ஞானமதைப் பூரணமாய்ப் பெற்றிருந்தும்
புவியோ ருய்யத்
துன்றுசிவ ஸ்தலஞ்சென்று துதித்தாற்போற் சுப்ரமண்ய
சுகுண மூர்த்தி
நன்றுவளர் தலம்வந்து நம்மையெலாம் உயச்செய்தார்
நாளும் வாழி. (௧)

48 பரிசனகல் வேதிதான் பரிசித்த தலம்பொன்னும்
பரிசே போலக்
குருமூர்த்தி பரிசித்த குவலயத்திற் சிவகதியே
கூடு மென்பார்
தருமையிற்சுப் பிரமணிய தயாநிதிதான் தலந்தோறுந்
தரிசித் திந்த
வரிசைபெறு கீழ்வேளூர் வந்துதரி சனந்தந்தார்
வாழி வாழி. (உ)

வேறு.

49 பொய்ம்மலி சமயக் குறும்பெலா மடக்கிப்
புகழ்மலி சைவமென் றறையும்
மெய்ம்மலி யரசு தழைத்திடும் வண்ணம்
வெளிவந்த நங்குரு பரனை
மைம்மலி கண்டம் மறைத்தினி திருக்கும்
வழுத்துதற் கரியதத் துவத்தைச்
செய்ம்மலி தருமைச் சுப்பிர மணிய
தேசிகன் றன்னைவாழ்த் துவமே. (ங)

சுபம். சுபம். சுபம்.

---

தருமபுர ஆதீன வித்துவான் கோவூர்
அ. சிதம்பரநாதமுதலியார் பாடியது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் வேதாரண்யம் யாத்திரையில் இந்தக்
கவிராயருக்குரிய வண்டி, கீழுள்ளவர்களால் மாறுபட்டதினாலும்
படிக்காசுகொடாததினாலும்
தெரிவிக்குமுகத்தான் பாடிய செய்யுள்.

50 கற்றுக்க முட்டைக்கக் கால்வாய் நகந்தகர
முற்றுக்கை நொந்து முரணுற்றேன்—சற்றேற
சுருள்பவள வார்சடில சுபரமண்யக் கோவே
அருள்சிறிதென் பாலாக லாம். (க)

51 காலைச்சிற் றுண்டிக்குக் காசுகொடாக் காரணத்தாற்
சாலப் பசித்துத் தளர்கின்றேன்—கோலக்
குருமணியே சுப்ரமண்யக் கோமணியே கண்ணாட்
கருமணியே செய்க வருள். (உ)

ஷைடியார் மற்றொருசமயம்.

52 தென்னாட்டுத் திருமுனிவன் செந்தமிழ்தேர் சிதம்பரம்யான்
செப்பு மாற்றம்
இந்நாட்டிற் றிகழ்தருமைச் சுப்பிரமண்ய சிவஞான
விறைவ கேண்மோ
என்னாட்டக் கருமணிநே ரிளம்பருவப் பெண்குழவி
யிமையோர் மேவும்
பொன்னாட்டுக் ககன்றதன் கடன்புரியச் சிறிதுதவி
புரிக மாதோ. (௩)

---

சிவராஜதானிக்ஷேத்திரமாகிய

## திருநாகைச் சைவாபிமானிகள் வந்தனோபசார

# வாழ்த்துப்பாக்கள்.

53 சீராருங் கைலையெனுஞ் செழுமலைநோற் றடைந்தபெருஞ்
சிறப்பை யிந்தப்
பாராருஞ் சோணாடு பனாள்முன் செய்தவத்தின்
பயனே யென்னப்
பேராருந் தருமபுர மெனப்பேசுந் திருப்பதியும்
பெறுவான் வேண்டிக்
காராருங் கண்டத்தெங் கண்ணுதல்தன் றிருவுளத்திற்
கருதி மாதோ. (க)

54 புலியெடுத்த உடைமறைத்துப் பொற்காவி யுடையுடுத்த
புனித னாகிப்
பலியெடுத்த கலமறைத்துப் பரவுசிவ ஞானமுறை
பரிப்போ னாகி

அலையெடுத்த கலைமறைத்தவ் வறுபத்து நான்குகலை
யமைந்தோ னாகி
யிலையெடுத்த இதழ்மறைத் தெழிற்குவளை மாலைதனை
யிழைந்தா னாகி. (௨)

55 கனல்வழியுங் கண்மறைத்துக் கருணைவழிந் தொழுகுமிரு
கண்ணா னாகி
அனல்வழியு மழுமறைத்தவ் வபயகர மிரண்டுடைய
அம்மா னாகிச்
சினம்வழியும் விடைமறைத்துச் சிவிகையினி லேறிவரும்
செல்வ னாகிப்
புனல்வழியுஞ் சடையுடனே புண்ணியசுப் பிரமணியப்
புகழ்ப்பேர் தாங்கி. (௩)

வேறு.

56 இருண்மலத் தழுந்தும் எம்மனோர் யாரும்
எளிதினி லிறைஞ்சியே யுய்வான்
அருளுருத் தாங்கி யடியர்கள் சூழ
அமர்ந்திடும் அருமறை முதலை
தெருண்மனத் தொளிருஞ் செழுஞ்சுடர்ப் பிழம்பைத்
தெய்வவான் கற்பகத் தருவைக்
குருமணி மாடத் தருமையம் பதிவாழ்
கோதிலா ஞானவா ரமுதை. (௪)

57 அடுக்கலைக் கிணற்றி லமுதம்ஊற் றெடுப்ப
அதுபெறுப் பேதையர் போல
இடுக்கணி லுழலும் எம்மனோர் யாரும்
எய்திடா திழிந்ததற் கிரங்கித்
தடுக்கொணாக் கருணை ததும்பும் அம்மூர்த்தி
தனக்குள தன்மையா லின்றும்
உடுக்கணத் தோடும் உடுபதி யெழுந்த
தொத்திட உதவினன் காட்சி. (௫)

58 கன்றினைத் தேடிக் கறவை வந்தாங்குக்
கடையரேங் கண்களாற் பருகித்
துன்றிய பாசத் தொடக்கினை யறுத்துச்
சுகக்கடல் திளைத்திடும் வண்ணம்
நன்றுகொள் தருமபுரந்தனி லிருந்து
நாகைமா நகர்தனை நணுகிக்
குன்றலில் கோலங் காட்டியாட் கொண்ட
குருமணி கருணையைப் புகழ்வாம். (௬)

திருவிளையாடற்புராணம்.

59 மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும்
பரவுக அறங்க ளின்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்
நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக உலக மெல்லாம்
புரவலன் செங்கோல் வாழ்க. (எ)

---

திருக்கைலாயபரம்பரை—தருமபுரம் ஆதீனம் திருக்கூட்டத்துத்
தம்பிரான்களிலொருவராகிய வித்துவான்
சட்டைநாதத்தம்பிரான் பதிலளிக்குமுகத்தான்
பாடியது.

60 நாவாலுங் கையாலு நற்கவியும் பொற்குவையு
மோவாம லீவ துணர்த்துமே—சேவேறிப்
பைவா ரரவணியும் பாலவிழி யார்க்குரிய
சைவாபி மானிகளோர் தான். (க)

---

திருவாரூர்க் கீழைரதவீதி
பென்ஷனர் த. கணபதிபிள்ளை அவர்கள் சமர்ப்பித்த
பஞ்சரத்னம்.

61 சீர்பூத்த வெள்ளிவரைத் தனிக்கருணை யெம்பெருமான்
றிகழ்முக் கண்ணன்
ஏர்பூத்த பதிவிடுத்து மதிபுனைந்த செஞ்சடையு
மிடப்பான் மேவும்
வார்பூத்த பசுங்கொடியு மழுமானு மால்விடையு
மறையச் செய்து
நீர்பூத்த தருமபுர நிரம்பவரு தேசிகனின்
கழல்கள் போற்றி. (க)

62 பிறைமலியுஞ் சடைப்பெருமான் பெரும்பதத்தைத் தினம்போற்றிப்
பேறியைந்த
மறைமலிய மண்மலிய அடியரொடு மாந்தர் குல
மலியச் சைவத்
துறைமலிய நூன்மலியத் தொன்மையுறும் ஆகமங்கள்
மலிந்து தோன்ற
நிறைமலியு நித்தனுறை தருமபுரத் தேசிகனின்
கழல்கள் நேர்வாம். (௨)

63 பண்ணிறைந்த தமிழ்வேத மாணிக்கர் வாசகமும்
பழகு சைவத்
தண்ணிறைந்த பூசனைகள் நாளிலங்கு தருமபுரந்
தழைக்க மேவுங்
கண்ணிறைந்த சடைமகுடக் குழைக்காதுங் கண்மணிமா
மாலை பூதி
வண்ணநிறைந் தழகொழுகுந் திருமேனித் தேசிகனின்
மலர்க்கால் வாழி. (௩)

64 இப்புவனஞ் செய்தவமோ இவணுறையு மாந்தர்புரி
தவத்தின் கூறோ
செப்பரிய சீர்த்தியுறு மித்தலஞ்செய் மெய்த்தவனோ
சிறியே னாயேன்
எப்பிறவி தனிற்புரிந்த அருந்தவத்தின் விளைவோமற்
றெதுவோ தேறேன்
அப்பனல்மண் கால்வெளியா யமைந்தசிவ மிங்கெழுந்த
அருட்பே றம்மா. (௪)

65 பன்மையெனுந் தேவரெலாந் தொழுதேத்தும் பரசிவந்தம்
பான்மை தோன்றச்
சன்மமெடுத் திவணடைந்த தனிப்பெருமைத் தேசிகஇத்
தமியேன் பாபக்
கன்மமெலாந் துடைத்தருளி இபரத்தி னின்பமெலாங்
கரைகண் டெய்யும்
நன்மையுறச் சடைச்சணிந்தநல் வேண்டினனவ் வாறுன்னருள்
நல்கு வாயே. (௫)

## தருமபுர ஆதீன வித்துவான் கோவூர்
## அ. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் இயற்றியது.

### நேரிசை வெண்பா.

66 சுரும்பார் பொழிற்றருமைச் சுப்ரமண்ய கோவுக்
கரும்பார் தமிட்கவிதை யாற்றக்—கரும்பாரும்
அஞ்சக் கரமும்மை யையர்க்கு மையனும்
பஞ்சக் கரனெஞ்சே பார். (௧)

### கட்டளைக் கலித்துறை.

67 அணியேறு கண்டிகை யாரந் திகழு மருமைமெய்யிற்
பிணியேக மாற்றும்வெண் ணீற்றொளி மேவு பெருந்தகையே
நுணியே ரிளமதி சூடிக் கினிய சுடர்க்கண்சிந்தா
மணியே தகைமிகு சுப்ரமண் யச்சைவ மாமணியே. (௨)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

68 சீரோங்கு மணிமாடத் திருத்தருமபுரமுகந்த
தெய்வக் கோவே
பேரோங்கு சுப்ரமண்யப் பெருமானே மும்மைமலம்
பெயரு மாறு
நேரோங்கு சிவஞான நெறிகாட்டி யருள்புரியு
நிமல வாழ்வே
காரோங்கு கரதலத்த கனகனெனக் குனையன்றிக்
காண்கி லேனே. (௩)

### நேரிசை வெண்பா.

69 இன்னற்பா டென்பா டிழைத்த விலம்பாடே
கன்னற்பா கிக்குட் கடிதடைவேன்—பொன்னைப்போற்
சூழுந் தழைசடிலச் சுப்ரமண்ய தேசிகனார்
வாழுந் தருமை மடம். (௪)

### கட்டளைக் கலித்துறை.

70 இல்லோ ரிரப்ப தியல்பே தனையடைந் தேற்றவர்க்கின்
சொல்லோ டளிப்ப துடையோர் கடனெனச் சூழ்ந்துசொன்ன
நல்லோர் மொழிப்படி நல்குஞ் செயல்கண்டு நானடைந்தேன்
சொல்லோ வெனத்திகழ் சுப்ரமண் யச்சைவ தேசிகனே. (௫)

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

71 மன்பால நயனத்தன் மருவுமனச் சுப்ரமண்ய
வள்ளான் மிக்க
வன்பாலன் றெனையடுத்த மாமிடியால் யானடைந்த
வருத்த மாற
முன்பால நீழலமர்ந் தொருநால்வர்க் கருள்புரிந்த
முன்னோ னன்ன
நின்பாலன் பொடுபோந்தேன் சிறிதுதவி செய்தருள்க
நேயங் கூர்ந்தே. (சு)

நேரிசை வெண்பா.

72 துப்பார் சடைத்தருமைச் சுப்ரமண்ய தேசிகனை
ஒப்பார் சிலரு முளர்கொல்லோ—இப்பார்மேல்
பூவிற் கமலமே பொன்னிற் சாம்பூநதமே
காவிற் கமழ்கற் பகம். (எ)

கட்டளைக் கலித்துறை.

73 ஞாலத் திடையிரு ணீக்குங் கதிரிள ஞாயிறென
சீலத் தடிய ரகவிரு ணீக்கிச் சிறந்ததெய்வ
மூலத் தருமறை போதித்து ஞான முறையருளுங்
கோலத் தருமை யிற்சுப்ர மண்ய குருபரனே. (அ)

---

உரத்தநாட்டிலிருக்கும் மழையூர் வித்துவான்
பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் குமாரர்
திருத்தருப்பூண்டி போர்டு ஹைஸ்கூல் உபாத்தியாயர்
S. குப்புசாமி அய்யர் அவர்கள் சமர்ப்பித்த

## விருத்தம்.

74 புகழ்கின்றவுயர்வுசெறிதகைமையொடுமகிமைசெறி
புனிதம்பிறங்கிடுவதாம்
பொழிகொண்டலணியுலவுபொழில்கொண்டுசெழிதரும
புரநன்றிலங்கிடுவதாம்

புடையெங்குமொளிபடரமிடைகொண்ட மணிகளுறு
 பொலிவின்விளங்கிடுவதாம்
புனைகின்றவதிசயமேநினைவொன்றவிளைவுதரு
 புகழுந்திகழ்ந்திடுவதாம்
பொடிகொண்டவுடலினர்கள்கடிகொண்ட நறுமலரைப்
 புகல்கொண்டணிந்திடுவதாம்
புரையற்றபலகுரவர்நிறையுற்றபெருமைகொடு
 பொலிவின்னிலங்கியுளதாம்
பொருவின்றுதெளிவுபெறவருகின்றவினியவருள்
 புரியுந்திறம்பெறுவதாம்
புல்லலுறும்பல்லரியநலமொன்றியுளதென்று
 புகல்கின்றபீடமிசையே. (க)

75 மகிழ்கின்றமனதினொடுதருகின்றவறிவினொடு
 மாட்சியுறுமாட்சியுமுளோர்
வளர்கின்றபலகலையினெழில்நின்றதமிழினுயர்
 வாரிதியைநேரிதுணர்வோர்
வையமிசையினிமையுறுசெய்யதமிழ்வளமையுறு
 வகையுதவுதகையுமுடையோர்
மகிமையுறுநிறையாகமங்களுணர்புங்கமொடு
 வழுவாதுதழுவுபெரியோர்
வளமருவுகல்லாடைகனமருவுமுடன்மீது
 மணிமாலைகளுமணிவோர்
மதுரமுறுபதமொழியர்மதிமிலையுந்தனியுயர்சி
 வந்தனையேவந்தனைசெய்வோர்
மன்னுமிசையுன்னரியதெய்வமலிசைவநெறி
 வையமிசைவளரமுயல்வோர்
மதிநிலவுபெருஞானவொளிகுலவுதேசிகர்
 மகாஞானசம்பந்தரே. (உ)

76 திகழ்கின்றவறிவினொடுமிகுகின்றநல்லிசையுந்
 திண்ணமொடுநண்ணவருளும்
சிகியானககமீதினுறுபவனேயிருமூன்று
 சிரமேவுவரமேவுவோய்
திடவலிமைமடிவடையநிசியுலவுமசுரர்களைத்
 தேய்த்துயிரைமாய்த்தவலியோய்
செப்புமுயர்வொப்பரியவிருநான்கெண்கலைகளொடு
 திருமறைகடிருமுறைகளும்

செகமதனிலிலகவருள்குகனேவுயர்வள்ளியொடு
தெய்வானைமெய்நாயகா
தேவருயர்சேனைமுனடத்திவருதேவவுறு
தேசிற்பிரகாசமுளனே
திசைநான்குமுகமேவுபகவானையகமாயச்
சிரமீதிலுறமோதுவோய்
திங்களொடுகங்கையணிசங்கரனருங்குமர
செயமேவுவயவீரனே. (௫)

77 நெகிழ்கின்றநெஞ்சினொடுதஞ்சமெனவஞ்சலிக
ணீர்மையொடியற்றிவருவோன்
நீடுகலைகூடுறுசுப்பிரமணியசாஸ்திரிபெறு
நேசவிசுவாசபுதல்வன்
நேர்த்திபெறுதனமமிகுராத்தநாடெனு
நகரனேர்தமிழிலார்வமுடையோன்
நிலவளமிகுந்ததிருத்தருப்பூண்டிஹைஸ்கூலி
னியமித்தவாத்தியாயன்
நிகழ்த்திடுமிராமசன்மாவாமியற்பெயரே
நேர்குப்புசுவாமியானே
நிதநிதமேவிதமுறுபல்துதியறையமதியருளு
நின்மலனேவருகமுருகா
நேயர்மனமார்முருகமான்மருகமேன்முருக
நிணமுலவுவேன்முருகனே
நிகரரியவொளிர்முருகபரையின்மகபுரிகவரு
ணியமகுருபரமுருகனே. (௬)

---

## திருத்தருப்பூண்டி போர்டுஹைஸ்கூல் தலைமைத்தமிழ் பண்டிதர்
## மு. இராமையா முதலியார் அவர்கள் பாடியது.

78 மலரேசெறிந்து பலவேவிரிந்து மதுவேசொரிந்த வதனல்
மருவாரிடங்கண் மலரார்மடந்தை மகிழ்வாயிருந்த நலமும்
மயலேயொழிந்து நயமேமிகுந்து மணமேதுலங்கு பலரால்
மலமேமழுங்க நலமாசனங்கண் மதியானெருங்கு மியலும்
மலயம்விளங்கு முனியேமொழிந்த மருவார்ந்திலங்கு தமிழால்
மனமாசழிந்த புலவோரிறைஞ்சி மகவாயடைந்த திறலும்
மலையாமலுந்து தலையாவிளங்கு மதனேபதிந்த பதியாம்
மணமார்குணங்கண் மலைபோலுயர்ந்து மகிமேறுதன்ம புரமே. (௧)

79 பலவாயிலங்கு நலவாகமங்க ளிடமேயிருந்த பயனே
பணமேவிரிந்த வரவேயணிந்த பதியேவிழைந்து தரவே
பலமாயைவென்ற நலமேவுநந்தி பதியினியைந்த மரபாம்
பகலோனெழும்ப விகலோர்மழுங்க பவமேயொழிந்து மதனால்
பதிசொக்கலிங்கந் திருஞானசம்பந் தரையேவிழைந்து தரைமேல்
பசுவேயுயர்ந்து பண்பின்னிருந்து பகர்ஞானமங்கே யுணரப்
பலமாதலங்க ளிருவாகமுஞ் செய்திறலுமிகுந்து பரவப்
பதியாயிருந்த பதியாகுமெங்க ளிசையேசெறிந்த தலமே. (௨)

80 நலமுந்திருந்து செயலும்மிகுந்து நகமேயுறழ்ந்த குணனும்
நடையான்விளங்கு விடைபோலிலங்கு நளினம்பிறங்கு பதமும்
நகமீதுறைந்த மழையேநிகர்ந்து நனியேவழங்கு கரமும்
நயனேகனிந்து பயனேமலிந்து நசையோடியம்பு மொழியும்
நசைவோர்க்கிரங்கு கருணைநிறைந்து நலமேவுகின்ற விழியும்
நவமாயொளிர்ந்தகுழையும்விழைந்துநணுவோர்க்கிரங்குசெவியும்
நடனம்பயின்ற விடபன்னியைந்த நளிமேவுகின்ற சடையும்
நலமேதுலங்க நகரைவயங்கி மிகுஞானசம்பந் தரையே. (௩)

81 வலமேபுரிந்து மலரேயணிந்து முறையின்னவின்று மறையின்
வகையேயிரண்டு கரமேகுவிந்து மனமேநெகிழ்ந் தடையவும்
மலமும்மழிந்து புலனேதெளிந்து மகிழ்வேவிளங்கி வருமால்
மதியேகுறைந்து மலமேமிகுந்து மறுகும்விதஞ்செய்மிடி தான்
மருவாதொழிந்து திருவேவதிந்து மனமாசழிந்து மிகவே
மறுவேகழன்ற சிவமேவுகின்ற மதமேபொலிந்து வரவே
மருவுங்கனங்கொள் குருசாமியின்பொன் மலராம் பதங்களணுகி
வழிபாடியன்று துதிகூறிநின்று மனதேயடைந்து றவமே. (௪)

---

தருமபுரம் ஆதீனம் வித்வான்
எம். சொக்கலிங்கதேசிகர் பாடியது.

---

எழுசீரடி விருத்தம்.

82 பொன்னிமா நதிசூழ் புவிபுகழ் தரும
புரம்வளர் சைவமந் திரத்துள்
மன்னிய வீச னருட்பெரும் பீடம்
வதிந்துல கோர்க்கருள் செய்ய
மின்னிமுன் றேவா யிருந்தினாள் மனித
வித்தென வந்தருட் குருவாய்
துன்னிய சீல சுப்ரமண்யப் பேர்
தோன்றிய தேசிக மணியே. (௧)

(விஷயம்.)

83 இத்தமிழ்ப் பாவின் கருத்துக ளுரைப்பேன்
எவ்வுல கத்திலும் படர்ந்து
சித்தமின் விளைத்து வருசிவ பெருமான்
றிருமலர்த் தாள்களை நோக்கி
உத்தம மனைவாழ் மக்களுஞ் சிந்தை
யுடையதோ டப்பான் றாள்கள்
முத்திசீர் பெறவும் பிரார்த்தனை மனுவாய்
மொழிந்துளே னிதனைநீ யுணர்வாய். (உ)

84 இன்றையுன் றனது சாதனப் பொருளை
யெம்பெரு மான்கழற் றுதிக்கே
சென்றிட விடுத்தல் தெய்வநோன் பிதனி
லொன்றதாஞ் செப்பினே னுண்மை
யுன்றன திதய மிதற்கிடந் தந்தே
யுவப்புட னான்றுதி யெனவே
நன்றெனக் கொண்டு நானிலம் படர
நன்னிலத்துன் பொருள் விதைப்பாய். (௩)

85 முருகவேள் மலர்த்தா ளருளையே விரும்பி
மொழியுமித் திராவிட மனுவை
கருதியன் புற்றே யச்சுபுத் தகமாய்க்
காண்கவுங் குமாவே ளருளால்
தாணியின் னினது நாமமே படர்த்தித்
தங்குமு னினைவெலா முடிய
வருளுவன் குமர வேட்டா னுண்மை
யறிந்துளா யிப்பெரு நோன்பால். (௪)

86 மறுபிறப் புயர்வை மனத்திடை வைத்து
வாய்மை நூல்சாட்சியாய் வழங்கி
யறுகொடு தும்பை கொன்றையோ டரவு
மணிந்தருள் சடைப்பான் மற்றும்
விறற்படை சூரான் விடையெனக் கொண்ட
வேற்பான் வேழமா முகத்தைப்
பெறுவிநாயகனு மாலுமை யோர்தாள் பெருகருள்
பெறு மனு வாமே. (௫)

## வித்துவான் சோமசுந்திரதேசிகர் பாடியது.

### அகவல்.

87 மலர்தலைப் பூமிசை மலர்தலைப் பூமிசைக்
கள்ளுண் வாழ்க்கைப் புள்ளே போலும்
பாத்தேர் நாவலர் நாத்தேர்ந்து பரீஇ
நவையற யாத்த குவையுறு பெருந்தனம்
அள்ளிக் கொடுக்கும் வள்ளிய வேந்தர்
இல்லாது படர் பொல்லாங் குறுத்தும்
எடுக்குஞ் சிந்தை படுக்கும் பான்மையன்
வன்னெஞ் சருக்கும் புன்னெஞ் சுருக்கும்
மாதபத் தாரையு மாதபத் தீர்க்கும்
உற்றோர் தமையும் பற்றாத ளிக்கும்
ஈன்றோ னன்புந் தோன்றா தகற்றும்
கொண்ட வூக்கமும் விண்டிடச் செய்யும்
அணைஇய கல்விப் புணையும் போக்கும்
திருவெலாந் தேய்க்க மருவிய மிடியெனும்
பொல்லாப் பகைஞன் புல்லா தொழிய
பறவைக்கு நிறனுங் கறவைக்குக் கோடும்
நனையகங் கள்ளும் கனியகஞ் சுவையும்
வைத்தாங்கு புலவ ரெய்த்தாங் குதவ
அறுசம யத்தினு நறுசமய மாய
தெய்வ மலியுஞ் சைவம் பொலியும்
சோழிக் கொடியோன் வாழிமீக் கிளரவும்
ஐங்கர னம்பிகை சங்கர னருளவும்
புடவியிற் றருமந் திடனுறப் பதியவும்
தாயிற் பரீஇய தூய வாகிய
ஆதீ னம்பல மேதினி யுறுமே
அவற்றில்,
அங்கண் வானத் தவிர்மீ னடுவட்
டிங்க ளன்ன தேசுபல வார்ந்து
வானகம் பரவுதிரு ஞானசம் பந்தனால்
நிறீஇய மேன்மை செறீஇய தொன்றாய்
உற்றோர்க் குதவல் கற்றோர்க் களித்தல்
பூசனை வளர்த்தல் போதனை முதலாம்
அறம்பல செய்யுந் திறம்பல வாய்ந்து
பிரமரும் புகழுந் தரும புரத்துநேர்
நற்கதிக் குதவுஞ் சொக்கரி னருளும்

இக்கலிக் குயருங் குக்குட னருளும்
துன்னும் வளனே மன்னு சித்தாந்த
மடாதிப னருங் கெடாத புகழினன்
மோனசம் பத்தார் ஞானசம் பந்தனை
நெல்லக மூயிரு நீரக மூலகும்
அளித்தாங்கு புலவர் களித்தோங்க அவர்நிலை
தாங்குமா வைத்திசை வீங்குமா தவனுயர்
சந்தமார் கழலர விந்தம் பலமுறை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே. (க)

---

திருவாரூர் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
K. M. சிதம்பர ஐயர் பாடியது.

88 பூமேவு தண்டலைகள் பொற்பதும நீரோடை
புடையமர்ந் திலகு மெழிலாற்
பொன்னுலக மென்றரும புரதல மமர்ந்தருள்செய்
புண்ணியன் மிகு கண்ணியன்
காமேவு கரதலன் கல்விகளை கண்டவன்
கண்டுநிக ரினிய சொல்லன்
கருணைக் கிருங்கடல் பொறுமைக்கு மகிதலம்
கவினுறும் வடிவின் மதனன்
மாமேவு மருமமா லின்னமு மறியாத
மலரடி வழுத்து புனிதன்
வள்ளலிவ னன்றிவே றில்லெனப் பொன்னுடை
மாநிதிக ளீநது மகிழ்வான்
றாமேவு மனமறிவு நல்லொழுக் கம்முதற்
றோமறு குணங்க ணிறையுஞ்
சுகுணசுப் பிரமணிய குருவெனும் பெயருடைய
தொல்புகழ் படைத் துளானே. (க)

திருவாதி சமஸ்கிருத காலேஜ் தமிழாசிரியர்

### பண்டித இ. கோவிந்தசாமிபிள்ளையவர்கள் பாடிய

## வரவேற்பு வாழ்த்துப்பா.

அகவற்பா.

89 பூமிசை யதனுள் பொன்னிசூழ் நாடே
புலவரும் போற்றும் நலம்பா டுற்றதென்
றெவரும் அறிவர் தவரும் சூழ்வர்
அத்தவ முனிவருக் குய்த்துணர் வைப்பாய்
அமைக்கப் பட்டன வாகிய திருத்தளி
பலவு முள்ளன பலனுறு விப்பன
சிலவே யுளவகை திருக்கயி லாய
பரம்பரை வந்த வுரம்பெறு முனிவரர்
ஆக்குவித் தனவே போக்கறு மடங்கள்
அம்மட மெவற்றினு மும்மல மறுத்து
மோக்க மென்னுந் தாக்கறு மின்பம்
துய்க்கு மறையினை யுய்த்தருள் பெரியர்
என்று முறையுங் கன்றலில் வளமுடைத்
தருமைத் திருத்தளி பெருமையுற் றதுவே
காழிப் பதிவருங் கவுணியன் ஞான
சம்பந் தன்பினுஞ் சம்பந் தங்கொடு
வந்தவ தரித்து நந்தலில் மடாலயம்
கட்டுவித் தருளினன் கட்டறுத் தருளிட
அப்பெரு நிலைக்குச் செப்பருங் குணமும்
ஒப்புர வும்முடைச் சுப்பிர மணிய
தேசிக ஞானசம் பந்த பண்டார
சந்நிதி யாக எந்நிதி யுந்தர
ஞாலம் போற்ற நாலேந் தொடுசேர்
மூன்று வதுகுரு மூர்த்தியாய் எழுந்தருள்
புரியும் எங்கள் புரிசடைப் புண்ணிய
சொக்க நாதனைத் துதித்துப் பூசனை
கொண்டுள தூயோய் கண்டும் விண்டிடாக்

காட்சியைக் காட்டி யாட்சிகொள் புனித
ஆசிலா மறையுணர் மாசிலா மணிக்குக்
குமார ராருளுறை குமர குருபரன்
முன்னிச் செய்த மும்மணிக் கோவையில்
மதுரை யாரூர் மாண்புறு தருமையாம்
மூவூர் பொலிந்த மூர்த்தி யென்பது
நினைக்குந் தகுமே நின்மல மூர்த்தி
ஆரூர் தன்னின் அமர்ந்தருள் புரிதலின்
அமல னாகிய கமலை ஞானப்
பிரகாச தேசிகன் பேரும் பெறுவைநீ
ஆகம விதங்களும் ஆரண வகைகளும்
பூரண மாயுணர் பொருளுந் தேர்ந்து
செஞ்சடை முடியுடைத் தேவ னாக
ஐயா றதன்மிசை யன்பர்கள் காணச்
சைவத் தூயராய்த் தானெழுந் தருளலின்
ஐயா றதன்மிசைச் சைவ னாகியுமென்
றுழுதடி யடைந்த அன்பன் வாக்கின்
மெய்ம்மையே யின்றே மெய்ம்மையாக் கண்டேம்
ஐயா றன்ற னடித்தலஞ் சிந்திப்
பரியன வென்பதை யண்மையி லெண்மையாய்ப்
பொன்னடித் தவமா நின்னடித் தலத்தைக்
கண்டு சிந்திப்பக் காட்டுவித் தருளினை
அப்பருக் களித்த வொப்பருங் காட்சிபோல்
நகர்வலச் சிறப்பால் நல்கிட வெமக்கிங்
கெழுந்தருள் புரிக எழுந்தருள் புரிக
செந்தமிழ் வாணர்தஞ் சிந்தையி னிற்போய்
செந்தூர்க் கந்தன் வந்தனைக் குகந்து
போந்தனை யாகலி னுந்தகக் காணும்
பேறும் பெற்று வீறுங் கொண்டுளேம்
மெய்த்தவ வேடரும் மெய்ம்மை யாளரும்
புடைசூழ் பெரும புடைசூழ் பெரும
பாவலர் நாவலர் பணிந்துறும் பரமநீ
எண்ணிய வெண்ணியாங் கெய்தப பெற்று
நண்ணிய குழாங்கட் குண்மயக் ககற்றிப்

போதந் தந்து பொருளு முதவுக
சங்கத் திருந்தே தனித்தமி ழாய்ந்தநீ
சங்கத் திருந்தே தனித்தமி ழாயுங்
கடம்பணி மார்பன் திடம்படு தெய்வ
யானைக் குகந்த தேனுறு கரும்பன்
வள்ளிக் கொடிபடர் புள்ளி மயிலோன்
சேவலங் கொடியுடைத் தேசிகன் ஆகிய
செந்தூர்ப் பரமன் சேவடி பரவி
முந்துற மீளவந் திந்துவாழ் சடையனும்
எங்க ளையாறன் இன்புற் றமர்ந்தருள்
கோயி றனக்கு மேயநற் பணிகளும்
நல்லறம் வளர்த்த நாயகி யாரின்
கோயிற் பணிகளும் கூடிய விரைவினில்
ஈட்டுமா றுணைசெய் தருளுதி யென்றும்
இம்ப ரெலாமகிழ் கும்பநீர் முழுக்கும்
உம்பருங் காண வுவப்போ டாற்றுதி
பவத்துய ரறுக்குந் தவத்துயர் பெரிய
தருமை யாதீன சற்குரு ராய
எங்க ணாற்றவ எழிலுடைக் குரவநீ
ஐயா றப்ப னல்லரு ளதனால்
என்று நின்று நன்று வாழியரோ. (க)

வெண்பா.

தருமைத் திருத்தளிசார் சற்குருவாஞ் சித்திப்
பெருமைக் கியைந்த பெரும்பேறும்—அருமையுரைச்
சீர்சுப் பிரமணிய தேசிகரா மாமணியைச்
சீர்செப்பிச் சென்றடைந் தோம். (உ)

## நாகை நீலலோசனி பத்திராதிபர்
## வித்துவான் சதாசிவம்பிள்ளை அவர்கள் பாடிய
## ஓர் இங்கிலீஷ் நோட்டின் மெட்டு.

91
துதிநிறையும் தருமைமா நகர்வளர் சுப்பிரமண்ய ஜோதிமணி
தூய்மையுளார் யாவரும் போற்றும் சுத்தமெய்ஞ்ஞான போதமணி
சுத்தாத்வைத சித்தாந்தமணி முக்தாத்மாக்கள் சித்தமணி
சுத்தமணி வித்வமணி தூய்மைமேவிய வாய்மைமணி (க)

92
மெய்கண்டான் தெய்வ நன்மரபு விளக்கிடவந்த மெய்ஞ்ஞானமணி
மேன்மையுளார் யாவரும்வந்து வியந்துதுதிக்க விளங்குமணி
வேதகீத நாதமணி நீதபோத சீதமணி
மென்மைமணி நன்மைமணி வித்துவநித்திய கர்த்தமணி (உ)

93
ஆலிருந்துங் குருந்திலிருந்தும் அருளுபதேசம் செய்தமணி
அருள்வடிவே குருவடிவாகி நல்லடியவர் சூழுவமர்ந்தமணி
ஆணவாதி போக்குமணி கானவினிய காட்சிமணி
அன்புமணி இன்புமணி அஞ்சாகம்விஞ்சிய செஞ்சொல்மணி. (ங)


94
மன்னுநீதி மன்னவர்மணிமுடி வருடிடு பதமலர் மகிமைமணி
மாதவமே ஓருருவாகியே மாநிலம்வந்த மகிமைமணி
மாநிலமெங்கும் விளங்குமணி மேனிலைதன்னை விளக்குமணி
வண்மைமணி தண்மைமணி வாழியவாழிய வாழியவே. (ச)

சுபம்! சுபம்!! சுபம்!!!

திருத்தருப்பூண்டி ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

## மு. இராமையா முதலியார் அவர்கள் இயற்றியது.

## இரத பெந்தம்.





### நேரிசைக் கலிவெண்பா.

95. 1 பார்வநது சேணுடர் பாவின்ப நன்றுய
வேர்தந்து பேருந்து மேணதாந — தேர்தந்து
96. 2 மெய்ம்மை நெறிபலமா மேவிடவே நாடியிருட்
பொய்ம்மாயம் போக்கும் பொருளதா — முய்யச்
97. 3 சகமூற்றுஞ் சாற்றுசைவ மேனெறித்தா மோன
சுகமூறு பேரேய சூழ — விகத்தே
98. 4 திருஞான சம்பந்த தேசிகரா னேய்பார்
தருவன்ன தன்மபுரச் சீர்ச்சொக் — கரையுன்னிச்
99. 5 சார்வான்பேர்த் தற்பானைப் பற்றுவயத் தூயபதச்
சீர்ஞான சம்பந்தன் சேர்.

திருத்தருப்பூண்டி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிட்
மழையூர் வித்துவான் சுப்பிரமணிய சாஸ்திரிகள் குமாரர்
S. குப்புசாமி அய்யர் அவர்கள் இயற்றியது.

இரத பெந்தம்.



நேரிசை யாசிரியப்பா.

100 பூணேரி ருபதங் கோநேர் பக்கிரு
வாகுவு மொளிபடர் தோகையுங் கோழி
பருந்து சுலவும் பெருஞ்சமர வேலு [யும்
மாயே னெப்பரி தாயரி னருளு
முன்னூறுஞ் சிந்தனை துன்னிய ஞாதா
காசறுங் கவிதை யாசிற்செய் புலவர்

போதமுற் றுந்தேர் மேனையா மினரே
யுணரும் பலவிலக் கணமுழு தாயும்
புரையோரெல் லாமுகந் துரைசெய தேசிக
னாமு றுதிருத் தருமபு ரத்துறோ
ஞான முதலே யானமா
மோன முத்திரையுணர் ஞானசம்பந்தனே

## 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌦𑌾𑌸𑌾𑌰𑍍𑌯𑍇𑌣 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑌾
## 𑌯𑌾𑌤𑍍𑌰𑌾 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 !

101
𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌶𑍍𑌰𑍀 𑌸𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯 𑌕𑌿𑌂 𑌹𑌸𑍍𑌤𑌗𑌤𑌸𑌾𑌧𑍍𑌯 ।
𑌹𑍃𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑍃𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌕𑌸𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑌾𑌜𑌾 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌸𑍇𑌵
𑌇𑌤𑌿 ॥ ॥௧॥

102
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑌂 𑌪𑌤𑌿𑌤𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 𑌘𑌾𑌟𑌿𑌕𑌾𑌂 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌯𑌤𑌨𑌾𑌣𑌿 । 𑌦𑍇𑌵
𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌸𑌨𑍍𑌤𑌰𑍍𑌪𑌣𑌂 𑌦𑍇𑌶𑌿𑌕𑌪𑌾𑌦𑌯𑍋 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 ॥௨॥

103
𑌶𑌿𑌰𑌸𑌿 𑌜𑌟𑌾𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌧𑌾𑌰𑌂 𑌧𑌾𑌰𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌵𑌾𑌸𑍋𑌽𑌜𑍇𑌤𑌿
𑌯𑌵𑌨𑍍𑌤𑍁 । 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌵𑌣𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌧𑍀
𑌶𑍀𑌕𑌾𑌰𑌂 𑌕𑍃𑌣𑍍𑌵 ॥ ॥௩॥

104
𑌕𑌾𑌷𑌾𑌯𑌂 𑌕𑌟𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇𑌽𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌂 𑌵𑌿𑌧
𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 । 𑌹𑌸𑍍𑌤𑌯𑍋𑌃 𑌵𑌿𑌨𑍀𑌤𑌾𑌂 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌨𑌾𑌸𑌾𑌵𑌂𑌶𑍇 𑌨𑌯
𑌨𑌯𑌨𑍍𑌤𑍁 ॥ ॥௪॥

105
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌿 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌖𑍍𑌯𑍇 𑌸𑌂𑌸𑍃𑌤𑌿 𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑍍𑌯 𑌹𑍃𑌦
𑌯𑍇𑌷𑍁 । 𑌵𑌿𑌜𑌿𑌗𑍀𑌷𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇𑌷𑍁 𑌜𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌯𑍇𑌷𑍁 𑌸𑍌𑌸𑍍𑌥𑍍𑌯𑌶𑌿
𑌖𑍇𑌷𑍁 ॥ ॥௫॥

106
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌸𑌾𑌦𑍃𑌶𑍇𑌷𑍁 𑌯𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑍇𑌨 ।
𑌶𑍍𑌰𑍀𑌶𑌾𑌕𑍍𑌷𑌿𑌂𑌶𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌵𑌿𑌯𑌾𑌨 𑌸𑍇𑌵𑌸𑌵𑌿𑌤𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑌨𑍍𑌤𑍁 ॥௬॥

107
𑌸𑌚𑌮𑍍𑌪𑌿𑌵𑌾𑌮𑌯𑌸𑌾𑌗𑌤𑌯𑌤𑌿𑌂 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌯𑌜𑍍𑌞 𑌸𑌵𑌿𑌵𑍃𑌤𑍍𑌯 । 𑌉𑌵
𑌦𑍇𑌷𑌾𑌰𑌂 𑌦𑍇𑌶𑌿𑌕𑌪𑌯𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌵𑌿𑌦𑍋𑌤𑍍𑌕𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌿𑌤𑍇𑌯 ॥௭॥

108
𑌵𑌣𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌕𑌾𑌯𑌜𑌾𑌯𑌿𑌵𑌤𑍍𑌯𑌿𑌹𑌕𑌿𑌂𑌹𑌿𑌸 । 𑌕𑌢𑌾𑌧𑍀
𑌦𑌾𑌨𑌪𑌤𑌿𑌰𑌾𑌜𑌾𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯𑌿𑌵𑌤𑍍𑌯 𑌹𑌕𑌿𑌂𑌹𑌿𑌸 ॥ ॥௮॥

109

[illegible] ||௯||

110

[illegible] ||௧௦||

111

[illegible] ||௧௧||

112

[illegible] ||௧௨||

113

[illegible] ||௧௩||

114

[illegible] ||௧௪||

115

[illegible] ||௧௫||

116

[illegible] ||௧௬||

117

[illegible] ||௧௭||

118
கம் வா ஸேவே ந்ருபதிம் யாசே யதிநம் கிராஶ்ரயம் கிமஹம் ।
இதி விஷயாகாங்க்ஷோ ஹம் நயாமி காலம் கடாக்ஷதஃ பஶ்ய ।௧௮।

119
கோ வா தைஶிக ஹோ ஸமுதேந்த்ர தேஹேந்த்ர நிரபேக்ஷ
மாஸ்தாம் । பக்ஷ்யாணகாரணகலாபம் விஷேஷ்டதோ ஹா கலம் கி
தாரயிஷ்யாமி வண்ட்ய ॥ ॥௧௯॥

120
நிஷ்பரிஸ்ப்ரஷ்டுமோகே தைஶிகவிஜய ஹம்ஸீஶ்ரேஷ்ட இவ ।
மகா நித்ய தபாஸயாம் மஹஸ்யம் தேவீ ப்ரபாஸயநிவயம் ।௨௦॥

121
யமேஃ பாபப்ரணாஶஸ்ய கீர்த்யாராயாய்பேஶாபலம் ।
ஶ்ரேராஜ்யம் ஸங்கடாந்தக்திஃ ஸக்திஸவர்ணாஶ்ய ஸம்பதஃ ॥ ॥௨௧॥

122
காமே காமே ஸாவ்ருஷ்டிஸ்ஸ தேஶே யாந்த்ராதிவ்யூஹயஃ ।
ஸவந்தி ஸததம் தஸ்மாத்ருதோ தேஷ்த்ரா தாநாதிகம் ।  ।௨௨।

123
ஶக்ஷ்யபஸம்ஜேஷு வதேஷு யீமேஷுப்ரவரேண ஸத்ஸமோத்ரேண ॥
யமேஷுபாராயீநமேம் பஞ்சதநாராயணேந ரசிதேயம் ॥௨௩॥

யாத்ரா ப்ரபந்தம் ஸமாப்தா ॥

சூரியனார்கோவிலாதீனம்

அதிவர்ணாச்சிரம ஆச்சார்யவர்ய சைவசமய பரிபாலக

ஸ்ரீ சிவாக்ர யோகீந்திர ஞானசிவாசார்ய சுவாமிகளாகிய

ஸ்ரீ-ல-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தர தேசிகர்

இயற்றியது.

---

## விருத்தம்.

124 புரமெரித்த புண்ணியனற் கருணை யாலே
பூவுலகோர் முத்திபெற நினைத்து வந்த
திருமுறுநற் றருமையா தீனத் திற்கே
திருநிறைசுப் பிரமணிய தேசி கேந்திரா
குரவனது வாய்மொழிக்கே யஞ்சி யானுங்
குற்றமிலாப் பரிதிபுரம் நிலைத்தி ருந்தேன்
பரசிவனாஞ் சொக்கலிங்க மருளா னும்மைப்
பார்த்தவுடன் குறைவற்றேன் சீரும் பெற்றேன். (க)

## அகவல்.

125 அருக்க வனத்தி லழகுட னிருந்து
சிவனடி யார்க்குச் சிந்தை யுருகச்
சங்கர னருளாற் சாத்திரம் புகன்ற
முத்துக் குமர முனிவற் கன்ப
செஞ்சடை தாங்குந் தேசிக மூர்த்தி
அன்பாய்க் கொஞ்ச மறைகுவன்
கேடிலா வகத்தாற் கேட்டுநீ மகிழே. (உ)

## வெண்பா.

126 படியி லடியார் பசிநோய் தொலைத்து
மடிசெய் மலமூன்றை மாய்க்கும்—பொடியுடனே
யக்கமணி யார்சுப் பிரமணிய தேசிகநீ
பக்கமுட னெந்நாளும் பார். (௩)

127 தினையளவு நன்றி செயினும் பனையளவாக்
கொள்வரெனக் கூறுங் குறளின்கண்—உள்ளத்தா
லுன்மடத்தின் வாசகனை யோங்கார் படந்தன்னி
னன்மைபெறப் பூசிப்பேன் நாடு. (௪)

128 ஈசன் றெரிசனத்தி லெப்பொழுது மன்புள்ள
பாசந் தொலைத்தவரும் பண்ணவனே—நேசமுடன்
சொக்கலிங்க மூர்த்தி சுகபுரியி லர்ச்சித்தாய்
சிக்கறவே செய்வான் றிடம் (ரு)

129 ஒன்று மறியே னுரைத்த கவிதன்னில்
ஒன்று பலகுற்ற முற்றிடினும்—நன்றாக
வுள்ளதையே வுள்ளத்தி லுண்மையுட னீகொண்டு
வள்ளலென வெதத்தினமும் வாழ். (சு)

---

சூரியனார்கோவில் ஆதீனம் மடாலயத்தில்
தருமபுரம் ஆதீனம் மகாசந்நிதானம் எழுந்தருளியிருந்தகாலத்தில்
தருமபுரம் ஆதீனம் வித்துவான்
## சட்டைநாதத்தம்பிரான்சுவாமிகள் பாடியது.

130 கண்படைத்த பேறின்று கைகண்டே னாயேனும்
விண்படைத்த கீர்த்திமிகு வெங்கதிரோன்—தண்பதியில்
மாட்சிமைகொள் தேசிகரு மாதருமைத் தேசிகரும்
காட்சிதரத் தூய்மையுடன் கண்டு. (க)

---

திருச்செந்தூர் வித்துவான்
வி. முத்தையாபிள்ளையவர்கள் இயற்றிய
## திருமுகவிலாசம்.

131 ஆதித்தன் முதலமர ரனவரத மருட்சிவனை
யருச்சித் தேத்தும்
சீதத்தெண் டிரைக்கடல்சூழ் செழுந்தரைப்பால் வறுமையெனைச்
சேரா வண்ணம்
போதச்செம் பொருடருவான் புவிமுழுதும் படைத்தவனே
புகலென் றேகி
வேதத்தை யுணர்ந்தவனைப பணிந்துபொரு ளருளெனலும்
வினவிச் சாற்றும். (க)

132 அன்பாவுன் னிலையறிந்தே னருளவெனில் யான்படைத்த
வவனி தன்னில்
இன்பாரோர் தனியுமெனக் கிலையெனினும் படைத்தவனீ
யெனைக்கா வென்னில்
துன்பாவென் றனிசிரம்பின் கொளவறியேன் சூர்ப்பகை
றுணைகொண் டாற்றும் [ வன்
என்பாலே னிரக்கின்றாய் இரட்சிப்பான் முகுந்தனவ
னிடைசே ரென்றான். (௨)

133 சீதரனைச் சீரரங்கஞ் சென்றேத்திச் செயலுரைப்பச்
சீமான் றானும்
போதருநின் புகலுணர்ந்தேன் புவியதனி லெனதுநிலை
பொருந்தக் கேணீ
ஆதரவா யமர்வதுநச் சரவுதொழி லாவினமேய்ப்
பவுணர் பான்முன்
பூதலமு மிரந்துண்டேன் புவிமுழுதும் புரத்தலெவன்
புகல்வா யென்னின். (௩)

134 ஆதிபர னாணையினா லவ்வவுயிர் வினைப்படியே
யளிப்பே னவ்வா
றாதியமொன றிலையரன்பா லுற்றதுநீ யுரைக்கிலவ
னுவப்பி னீயும்
போதியென நயந்துரைப்பப் புகழ்மதுரைச் சுந்தரனே
புகலென் றேகிப்
பாதிமதி நதியணியும் படர்சடையோ யெனப்பலவும்
பகர்ந்து போற்றி. (௪)

135 அன்றடைந்த விடைக்காடன் பிணக்ககற்றித் தருமிக்கு
மரும்பொன் னீந்தீ
றென்றடைந்தே னெளியேனைக் காத்தருள்வீ ரெனவுரைப்ப
வீசன் றானும்
நன்றுனது வரவறிவே னானிலத்தென் னியல்பதனை
நவிலக் கேண்மோ
துன்றுமுடை யடற்புலியன் றோவணியும் விடவரவு
துணையும் நீலி. (௫)

136 உண்பதயன் கபாலத்தி லுறைவதுவும் கடம்பவனத்
துயர்ந்த தேவன்
நண்புடனே தருமெச்சி லொடுசிறுவ னறுங்கறிக்கு
நயந்து நாளும்

பண்புடையா ளிடும்பிட்டி னாசையினாற் பட்டடியும்
பட்டேன் பின்னும்
என்பெரிய வலைவிறகு விற்றுமிரந் துண்டலுத்து
விடமுந் தின்றேன். (௬)

137 எனக்குளதாய்ப் புகழ்நிதிய மெல்லாமும் வழுதிமகத்
தெழுந்து வந்தாள்
தனக்குரிய சீதனமா மவளன்றி யான்கொடுக்கும்
தகைமைத் தன்றால்
உனக்கினியென் னுரைப்பதென வுரைப்பமனம் நொந்தடியி
லோடி வீழ்ந்தேன்
மனக்கினிய வருட்கடலே மாமேருச் சிலையானே
வள்ளால் வள்ளால். (௭)

138 முன்புலவ ருய்யவிட முண்டேனப் பறழ்களுக்கு
முலைதந் தாண்டீர்
அன்புடைய வறிஞருக்குப் பலகையொடு திருமுகமு
மளித்துக் காத்தீர்
இன்புடைமை யெனக்கருள வரிதோவென் றிரங்குதலு
மெளியேன் றன்னைத்
தன்பெரிய கருணையினா லுளர்தளரே லெனவழைத்துச்
சார்பு சாற்றும். (௮)

139 உலகமெலாம் புகழ்பலநல் வளங்கணிறைந் துயர்பொழில்
தோங்கு மேலாங் [சூழ்ந்
குலமுறைவே தியர்சூழ்ந்த தருமபுர மாதீனக்
கோவாய் நாளும்
நலம்பரவு நம்பன்திருக் கைலாய பரம்பரைக்கு
நாதன் தொண்டர்
திலகமெனும் குருஞானத் தேசிகனின் சார்பாளன்
தேவ தேவன். (௯)

140 மன்னுதிருச் சைவநெறி வளர்த்தோங்கு மார்க்கமதில்
மணியென் பாத
முன்னுதிரு வுளத்தனுயர் சுப்ரமண்ய தேசிகனும்
முருகன் றன்னை
அந்நகரில் கண்டுனையா னனுப்பினனென் றுரைப்பையெனி
லையன் யாவுந்
துன்னவுன துளநிலைபோற் றருவனென வருளமனம்
துணிந்திங் குற்றேன். (௧௦)

141 சீராரும் தண்முகச்செந் தருவேசிந் தாமணியே
திசைக ளெங்கும்
பேராரும் புகழ்முதலாம் பேரனைத்தும் சிவனருளாற்
பெற்று வாழும்
தாராரும் தடம்புயத்துத் தண்முகிலே யுளமகிழத்
தனமும் தந்து
நீராரும் நெடும்புவியில் நீடூழி நீடூழி
நீடி வாழ்க. (கக)

---

தருமபுரம் ஆதீன வித்துவான் காழி

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் இயற்றிய

# திருமுன் விஞ்ஞாபனம்.

பாடாண்டிணை—உடனிலைத்துறை.

142 உலகு திகழுக வோங்கி யிலகறம்
விளரிவண் டிமிரத் தளையவிழ் முல்லை
விளைபுன முருக்கத் துளைதரு தோற்றங்
களங்கனி மிடற்றுக் கண்ணுத னிறத்துத்
துளங்குவெண் டலைநிரை விளங்குவ கடுக்குந்
துடவை செறீஇப் படர்தரும் பாண்டி
மண்டிலத் தவனிபர்க் கொண்டுறற் றகைநீஇ,
யிவனே யிளங்கதிர் தவழுதிர் தோற்றத்துப்
பசைபாற் றளிர்த்த பன்னிறச் சத்தியாக்
காவிரி கிளைத்துக் கணக்கில் காலெழப்
பூவிரி வளவர்தம புனனாட் டாங்கண்
தொண்டியர் பரசுந் தொண்டைய ராண்டகை.
நீயே செம்மலை நிலைத்தெனப் பரஞ்சுடர்
தாயே நிற்பத் தாழ்வி லாற்றலி
னுருப்பிறழ்ந் தொருவ னும்பர் நாணவுந்
தருக்குற் றொருவன் தாணிலை பேணவுந்
துருவிய குறியினை சுட்டுதல் கருதி
நொச்சியுங் கிடங்கும் தோன்றுநிற் பனவென
நசசுநர் நவிற்று நாமக் கூடலாய்,
இவனே யுடலுயி ரியக்க மிறைவன

திவரிய லின்றி யியங்கா வென்னப்
புலப்படுத் தற்காப் பொறிபல சுமந்த
தலத்தொளிர் முனிவரர் தருமையிற் கூடுவான்.
மங்கல குணந்தான் மலிந்தவ னென்றும்
பங்கமும் மலமில பண்பின னென்றும்
நிறைசிவ னென்றும் பறைமொழி யவற்று
லானிலை முழக்கும் விரிந்த வாரண
விழுப்பொருள் சொக்க மேலவ னீஇ,
யருவுரு குறிகுண மடிமுடி நாப்பண்
தருநிலைக் கட்டுச் சார்பிலா வீடு
தணந்தவ னாகித் தனித்தவன் பதியாம்,
வெண்சிலை போன்று வியனிலை பற்றும்
பண்ணிய னிலையின பசுவாம், அவற்றைத்
திண்ணிதி னுறுத்துவ திரிமலம், இவற்றை
யண்ணலஞ் செழுத்தே யகற்றுவ வென்னு
முண்மைச் சொரூப முவப்ப நுவலு
மண்ண லாகமத தப்பொருள் சுப்பிர
மணிய தேசிக மாசிலா மணியிவன்.
அங்கயற் கண்ணி பங்கின னீஇ, யுளப்
பங்கயச் செல்வி பாங்கின னிவனே.
கண்ணுதல் கண்டங் கறுத்தோ னீஇ,
ஒண்டக வாங்கவை யொறுத்தோ னிவனே.
அறிவான் றானே யறிவிப் பானே
யறிவா யறியும் அவனுந் தானே
அறியும் பொருளு மவன்றா னேய
யுடனின் றுங்குத் திடனுறக் கெழீஇ,
யெங்குற் றுனிறை யென்றிசைப் பவர்தம்
நெஞ்சுற் றன்னவிந் நீர்மைய ராகலின்,
பேறு மப்பெரும் பேறளிப் பானும்
நீறு தவப்பூத்த நீயிரே யாகலின்,
இனியவு முளவோ வெமக்கிந் நிலையினும்
மருமலர்க் கமலையும் வளஞ்சால் தருமையுங்
குருநில மென்னக் குழீஇய வாறு
திருமுக மலர்ந்த செழுந்தமிழ் வேந்திர்
பிறிதுங் கேண்மினும் பிறங்கிசை வாழிய
வாழிய நிகமம் வாழிய வாகமம்
வாழிய வடியவர் மாண்பமர் குழாஅத்து
வாழிய தருமை மரபட் டவணை
ஞானசம் பந்த நற்பெயர் கொளீஇ
மோனதா தான்மிய முறுகக் கூடலின்

புறப்புற நெறியும் புறமார் நெறியும்
அகப்புற நெறியு மகற்றியவ் வகஞ்சால்
செம்மை நெறியே யம்மைய சரதம்
ஆங்ஙனம் வென்றிங் கசைவில் சித்தாந்த
மாப்பெரு வென்றி யடைந்தனிர் நிற்பீர்.
இருவரு மொருங்கே யிசைந்தனிர் மருவலிற்
பெருநில மடங்களும் பெருநெறி யிலகநுங்
கைவயப் படுதல் மெய்யே யன்றே
பொய்யா காதென வெய்யா தறைவல்.
அதனால்
நுந்திரு மடத்து நால்வல் லாருட்
செந்திரு மாலெனச் சீரியன் வடுகன்
பேரா காரன் பேரா முல்லை
வாயி லென்னுநும் வாழ்க்கை மேம்பாடு
மொழிந்தன னதனை வழிப்படுத் துவிரேன
வச்சத் தோடுநும் பக்க லியம்புங்
கொச்சை மழலைக் கோடணைக் குதவுதிர்
பரம்பொருண் முக்கட் பரமனன் றென்று
முரண்படு மூகர் மொய்வலி தொலைப்பான்
பெரும்பிணி தீர்க்கும் பேருண் மந்திரஞ்
சைவ மடங்க ளுய்பதி னெட்டினு
மைந்தே யைந்தென வநுவதிப் பதற்கா
விருபத்து மூன்று விருப்பு பட்டத்
தம்பெயர் ஞான சம்பந்த ராயினீர்
சாதன முற்றிய சாதிப் பானைங்
கோதன மாநுங் குரைகழற் பணிதலும்,
இறைபணி யாகக் கறைய வெவ்வினை
தேடலி னுகர்விற் கூடலிற் கழித்துச்
சேர்ச்சி மாயை செறியிருண் மூலஞ்
சோர்ச்சியி னலியத் தூய தொண்டின்
மலரடி வைத்து மன்னுதா ளுக்கியும்
அலர்ப்பத நிழற்கீ ழமர்த்தி யணைந்திங்
கொப்பச் செய்தும் ஒருவ னாகிச்
செப்பம் நின்றிடச் சீரதி னடக்கியும்
இருத்தி யானந்த சொரூப மியைத்தும்
சிவரூ பந்தொடர் சிவபோ கம்வரை
அணைந்தோ னாகப் புணர்ந்தனிர் கேண்மின்
அஃதான்று,
நின்மலஞ் சார நிலவிய வவத்தையுட்
பன்மயல் கடிந்து பகரும் விகாரி

யல்ல ஞக்கித் தொல்லை சாக்கிரம்
தன்வணந் தந்து தாவில் சொப்பனம்
ஆரச் செய்திங் கரும்புஞ் சுழுத்தி
நீரத் தடக்கி நீடருந் துரியம்
ஆனந்தா தீதத் தழுத்திய வதீதம்
பெறுவான் புரிந்து பிணைஇ யுவர்தனிர்
அஃதான்று,
உயிர்தனைப் புல்லி யுரியதா ஞக்கிச்
செயிரற வணைந்து தீதற வடக்கி
வேதித் தமுதஞ் சாதித் திருந்தனிர்,
சாந்த மனல்புனல் காந்துங் குளிகை
பொன்னய முப்புப் புகாறு சீருண
மிவற்றொடு மருவ லியைய வீங்குக்
குன்றுத விலனுப் பொன்றுத விலனுப்
சமத்துவ முளனுச் சமைத்துற் பத்தி
யாதி யாதற் கிழுக்கிலி ரன்று
னநுபவ மொன்றற் கநுகுண ஞாக
நல்கினிர் பரவ நற்றமிழ்க் கமலை
பல்வளஞ் சுரப்பப் பாரகத் துதித்த
ஞானப் பிரகாச மானவ ராதலி
னென்று மினிதி னியைகநும் மியைபு.
சைவநற் கவசஞ் சாத்தி நீவிர்
மெய்ப்புரி வாளாற் பொய்ப்பகை களைஇப்
புகழும் வலியும் நிகழுங் கொடையும்
அளியுங் கவினுதிர் களியாம் பெறற்கே. (க)

உரிமையுரை.

143 முப்புவ னத்து மிக்க முல்லைமான் மியமா மாலை
யிப்புவித் தருமை ஞானத் திலகுமா தீன கர்த்தர்
சுப்பிர மணிய நாமச சுரேந்திரர்க் குரிய தாமாற்
றப்பிலா தணிந்தேன் முத்துத் தாண்டவ ராயப் பிள்ளை, (உ)

144 பிறங்குசீர்ப் புராணந் தன்னைப்
பெரும்புவி யச்சி னேற்ற,
நிறந்தரு பொன்னை யீந்த
நிருபர்தம் புகழ்கூறிற்று, (ங)

145 முந்தன மூரலார் முல்லை மான்மியம்
பந்தன மிறைஞ்சுமத் தருமைப் பண்ணவர்
மந்தன சுப்பிர மணிய தேசிகர்
கந்தன மீயநற் காட்சி சான்றதே. (ச)

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனத்துமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

சுப்பிரமணியதேசிக ஞானசாரியசுவாமி அவர்கள்

உபகாரச்சம்பளம்பெற்று விளங்கும் ஜில்லா ஜட்ஜாகிய

பிரமஸ்ரீ வி. ஆர். குப்புசாமிஐயர் அவர்கள்

திவான்பகதூர் பட்டம் பெற்றதற்காக

27—2—27-ல் நடத்திவைத்த விருந்தில்

ஆதீனத்துத்திருக்கூட்டத் தம்பிரான்களில் ஒருவரும்

ஸ்ரீவைத்தீஸ்வரன்கோவில் கட்டளைத்தம்பிரானும் ஆகிய

ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் அவர்களால் இயற்றி

வாசித்துக் கொடுக்கப்பெற்ற

# வாழ்த்துப்பத்திரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

146 வருக. வருக. ஐயா! வருக.
செந்தமி ழுலகிற் றிகழ்சோ ணாட்டுப்
பூர்வீக வேதப் புராதன நகரமர்
அந்த மிருந்திடு மாரியர் தம்மில்
சந்தத நியாயஞ் சரிவர வழங்குஞ்
ஜில்லா ஜட்ஜெனும் சிறந்திடும் பதவியில்
பலதலைத் தமர்ந்து பல்லோர் புகழ
உத்தி யோகத்தி னுயர்வையுங் காட்டி
நீதிக் குரிய நிகழ்ச்சியுங் காட்டி
ஒப்புயர் வற்ற உயர்தரப் பான்மையிற்
குப்புசா மிப்பேர்க் குரிசிலோய்! வருக.
சந்திர சூரியர் சலித்திடு நாட்டில்
தந்திர ராஜியந் தகுதியாய்ப் புரியும்
ஐந்தாஞ் ஜார்ஜு அரசர் தந்நாளில்
மந்திரர்க் குரிய மகிமைப் பட்டம்
பற்பல விருப்பினும் பகருதற் கெளிதாந்
திவான் பகதூர் தெய்விகப் பட்டந்
திகழ்ந்திடப் பெற்ற திறலோய்! வருக.
நீதி வழங்கிய நெறியோய்! வருக.
அந்தணர் குலத்தின் அறவோய்! வருக.
செந்தழல் வளர்க்கும் சிறப்போய்! வருக.
மயூர நகர்தனை வாசமாய்க் கொண்டு

மயூரநாதன் மலரடி மறவா
மகிமை பொருந்திய மறையோய் ! வருக
திருக்கை லாய திகழ்பரம் பரையிற்
றரும புரமெனுஞ் சைவா தீனத்
துயர்குரு பரம்பரையி னுயர்ச்சியின் வந்த
ஞான சம்பந்த ஞான தேசிகப்
பின்வழி தோன்றற் பிறவா நெறியுள
சுப்பிர மணியத் தூய்மைத் தேசிகர்
இப்புவி புரக்கு மிந்நா ளெங்கள்முன்
சக்கியஞ் செய்து சந்திக்க வருக.
உங்கள் வருகையா லுலகஞ் செழிக்க.
திங்கள் மும்மாரி செழித்திடப் பெய்க.
வேதா கமநெறி விளங்கிப் பொலிக.
சைவமும் வாழ்க. சமயமும் வாழ்க.
மெய்வழி தவிரா மேன்மையோய் ! நீயுஞ்
சிரஞ்சீவி யாகச் சிறப்புடன் வாழ்க.
வாழ்க. வாழ்க. சற்குரு வாழ்க
வாழ்க. வாழ்க. மறையோர் வாழ்க.
வாழ்க. வாழ்க. மற்றுள அடியார்.
வாழ்க. வாழ்க. மன்பதை யுலகே.

---

ரிடையர்டு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்

பிருஹ்மஸ்ரீ V. R. குப்புசாமிஅய்யர் அவர்கள்

திவான்பஹதூர் பட்டம் பெற்றதை முன்னிட்டு,

தருமபுரம் ஆதீனத்தில் செய்வித்த விருந்தின்போது

ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் தேவஸ்தானம் ஷராப்பு

மு. சண்முகசுந்தரம்பிள்ளையால் இயற்றிய

## விருந்து விவரச் சிந்து.

சொக்கவிநாயகர் காப்பு.

147 தேமியைபூ வார்தருமைத் தேசிகனார் ஜட்ஜிகுப்புச்
சாமியய்யர்க் கோர்விருந்து தந்ததனை—யாமியம்பச்
சொக்கவிக்கி னேசுரன்றாட் டுமலர்கள் தாமருளும்
இக்கவிக்குச் சொற்பொருளை யே.

பல்லவி.

148 விருந்து விவரம் சொல்லுவேன்—தெரிந்தமட்டில்
விருந்து விவரம் சொல்லுவேன்.

அநுபல்லவி.

149 பொருந்து புகழ்த்தருமா புரத்திலா தீன கர்த்தர்
போற்று மன்பருக்கருள் புரியு மோன நித்தர்
மருந்தாகும் ஸ்ரீசுப்ர மணியதே சிக சித்தர்
அருந்தவக் குப்புசாமி அய்யர் தமக் களித்த. (விரு)

சரணங்கள்.

150 1 தெரிந்தவோ ராயிரத் தொள்ளா யிரத் திருபத்
தேழில்பிப் பிரவரி தேதி வரு மிருபத்
திருந்த வேழிலாதி வாரத் துயர் பருவத்
தேனல்ல வேளோயி லேயென் று மாலையில்
சரியாக நான்கு மணிக்கய்யர் வாவுயர்
பெரியாரின் பாங்கு வரவு.

151 2 ஏற்கக் கார் பார்சுவாமி யேஜண் டய்யர்மு கப்பு
இருநது மாலைகள் போட்டு எதிர்கொண்டா ருகப்பு
பார்க்கவந் தவர்களிப் பாலே மனந்தி கைப்பு
பாருமி வர்க்குப சாரப் பரிச ளிப்பு
மடத்துக்குள் போக சன்னிதான மெதி
ரிடத்தக்க தாக பெரிய.

152 3 உத்தியோகப்பற் றுடையா ரனே கரும்
உயர்காழி மாயூர நகரின்முன்சீ பாரும்
சத்திய வான்களும் சாழித் தாசில் தாரும்
சற்குண மாஜிஸ்டிரேட் சார்ந்தபெரி யாரும்
ஹாலிலி ருக்க தமபிரான்களொரு
பாலிலி ருக்க மாயூர.

153 4 முன்சீபல் சேர்மானும் வக்கீல்கள் கூட்டமே
முதலா வாராவ முதய்யங்கா ரீட்டமே
முன்னே மகாசன்னி தானத்தி ஞட்டமே
முறைவித ரணையாகச் செய்தருள் நோட்டமே
கண்டு மகிழ்ந்தார் சன்னிதானம்மகிமை
கொண்டு புகழ்நதார் பின்னர்.

154 5 சேங்காலி புரம்சீனி வாசய்யர் வந்தனர்
சேர்ந்து தஞ்சைசீனி வாசய்யர் முந்தினர்
பாங்காய் பாலசுப்ர மணியய்யர் குந்தினர்
பக்கத்தில் சீடர்கள் பலரும்வ திந்தனர்
காப்பி சாப்பிட்டார் ஆரஞ்சுமாதுளை
ஆப்பிள் சாப்பிட்டார் இன்னம்.

155 6 வக்கீல் சாம்பசிவ செட்டியா ரவாதி
வைத்திய நாதய்ய ரெம்மே பீயெல் கியாதி
தக்க பேப் பர்பிள்ளை கோவிந்தசாமி சேதி
சாற்றியே வந்தார்கள் போற்றி யேபுக ழோதி
திருநோக்கங் கண்டு காரியமீதுவென்று
உருவாக்கிக் கொண்டு திரு.

156 7 ஆரூர் கட்டளைச்சாமி யருந்தமிழ் வேதத்தை
ஆதியிற் சொல்லவவர் தொனி யேதத்தை
பாருமெனவே பார்ப் பாரு மூரைத்தத்தை
பகரும்வே ளூர் கட்டளை சாமித னதுவித்தை
காட்டு மாறெண்ணி வரவேற்புப்பத்திரப்
பாட்டு மேநண்ணி சீதாராம.

157 8 அய்யர் பிடி லுடனே யமர்ந்து வீணைகானம்
ஆரம்ப மாகவே ஆடியன்லி வர்வானம்
மெய்யர்க ளானோர்கள் மேன்மைச்சன் னியதானம்
மேலுஞ் சபேசரிடத்திலபி மானம்
வைத்த விதத்தை சாஸ்திரிகள்பிரசங்கம்
அத்து விதத்தை நன்றாய்.

158 9 சொன்னார் வித்வான் சட்டநாதத் தம்பிரா னாலே
சொன்னயம பொருணயம் சுரக்குமொழி களாலே
கன்னரசங் கலந்த தேனின்மழையைப் போலே
கண்டவர் கேட்டவர் களிக்கச்சபை யாராலே
ஆசிர்வதித்தார் பத்திவிற்பத்தியைப்
பேசிமதித்தார் திரு.

159 10 ஆவடுதண்டுறை ஆசியக்கவிச் சிங்கம்
ஆனதியாக ராஜபிள்ளையின் பிர சங்கம்
மேவவிகடகவி டில்லி சொல்லுயர் தங்கம்
மேதினி யெங்கினு நிறைசொக்க லிங்கம்
தன்னளியாலே அய்யாவரொழுந்து
சொன்மொழியாலே உயர்ந்த.

160 11 பட்டமவர்க் களித்த பாக்கியமே பாக்கியம்
பாரிலவ ரடைந்த பலன்மகா யோக்கியம்
இட்ட முடனேயவ ரியம்பின வாக்கியம்
இடத்துக்கமைந்த ஈறில்லாச்சி லாக்கியம்
மடம்சுற்றிக்கண்டார் விடைசன்னிதானத்தி
னிடம்பெற்றுக்கொண்டார் தொண்டர்.

161 12 தீர்த்தக் கரைக்குச் சென்று சந்தியாவந் தனம்
செய்யவுஞ் சைவர்கள் கூட்டமனுட் டானம்
நேர்த்தியாய்ச்செய்த பின்னிமலனுறையுந் தானம்
நெறியில் நடக்கையில் தெரியுமூலஸ் தானம்
தூவியைக்கண்டார் பலன்பெற்றார்விந்தைஸ்ரீ
தேவியைக்கொண்டார்.

---

"வன்னத்தினைமாவைத் தெள்ளியே" என்னும் வர்ணமெட்டு.

---

162 1 கொண்டு மேலக்கோயி லேகவே—அவர்
கூடக்கார் பார்சுவாமி போகவே—கை
கூப்பித்தெரிசனை யாகவே—அந்தக்
காணுதிகள் முராணுதுயர் பராணுகிய குருநாதனைக்
கண்டானந்தங்களுண் டாகவே—நீறு
கொண்டார் பலன் பெரிதாகவே.

163 2 கிழைக்கோ வில்வலம் சுற்றியே—நல்ல
காலத் துறுவழி பற்றியே—அய்யர்
கருத்திலிருந் தன்புமுற்றியே—உயர்
கமலாசனன் முதலாகவே யமராசனு முறையாகவே
கண்டாரடி நீழல் நிற்றியே—யென
விண்டார் துதிகளு நற்றியே.

164 3 மாதரு மாநகர் வாசனை—மோன
மாதவன் ஞானப்பிர காசனை—குரு
மாமணியைப்பர மேசனை—தினம்
மறவாதொரு மலைமேலுறு குறமாதொடு வருநாதனை
மாணிக் கத்தைமுரு கேசனை—துதி
பேணிக்கொள்ளுங்குருகேசனை.

165 4 சுப்ர மண்யக்குரு நாதனை—உயர்
செந்தாமரை மலர்ப் பாதனை—மறைச்
சொல்லுக்குரை சொல்லும்போதனை—நல்ல
சுபகாரிய மெதுவாகினு முபகாரமே யிதுபோலவே
செய்யு மனுநெறி நீதனை—துதி
செய்ய விலகுமே வேதனை.

# கும்மி.

166 கும்மியடி பெண்கள் கும்மியடி யிரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாள் ஞானசம் பந்தனிருபாதம்
நாடிக் கும்மி யடிப்போமே. 1

167 பொன்னின திப்புனல் மன்னிவ ளம்பெறு
பூழியர் வாழும் புகழ்நாடு
செந்நெலுங் கன்னலைப் போல்வள ருமந்தக்
கன்னல் கமுகின் வளர்நாடு. 2

168 பாக்குந் தாழையள வாக்கி யுயர்ந்திடும்
பாவனை யெதென்று பார்க்கையிலே
நோக்கிய வானுல கத்தி னுழைவதற்
காக்கிய மாடிப்படி போலும். 3

169 புங்கவர் போற்றிப் புகழ்நாடு உயர்
பூசுரர் வாழ்க்கை புரிநாடு
தங்கமும் வெள்ளி தருநாடு தமிழ்ச்
சங்க மருவிய சோணாடு. 4

170 நாடுத னக்குயர் நாயக மாய்ப்புகழ
நீடு த ருமபுர நகரில்
வீடுத ருந்திரு ஞானபு ரீசனை
வேண்டிக் கும்மியடிப்போமே. 5

171 திருக்கை யிலைப்ப ரம்பரை யிற்றிரு
தேவன்மெய் கண்டான்சந் தானமதாம்
இருக்கைக் காணமெய் சிலிர்க்கு தேஜெக
தீசனைப் பாடி யடிப்போமே. 6

172 சுத்தாத்து விதசித் தாந்தக் குருஞான
சுப்பிரமணிய தேசிகராம்
இத்தா ரணிக்கொரு வித்தாய்மு ளைத்தாரை
ஏத்திக் கும்மியடிப்போமே. 7

173 நியாய பதிஉத்தி யோகமு றைமையில்
நல்ல பெயர்பெற்று நாடுபுகழ்
ஆயவராங்குப்பு சாமி அய்யருக்கு
அரசர் பட்ட மளித்தாரே. 8

174 பட்டம் "திவான்பக தூர்" என்னவே சொல்லும்
பாரிலுயர்ந்த பதவி தந்தார்
இட்டர்க்கு நங்குரு வின்னமு தூட்டவே
யெண்ணி விருந்தொன் றளித்தாராம். 9

175 அந்த விருந்துக் கழைத்த பெருமையும்
அன்னமளித்த விவரமெலாம்
முந்தக் கவிகளில் சொல்லி வந்தேன்வேலை
முறையைக் கேளடி தோழிகளே. 10

176 செப்பினேன் குமாரசாமித் தம்பிரானும்
சேருமொர் டுக்கமிருக்காராம்
எப்பொழு துத்தர வென்று வாய்பொத்தியே
எழுந்து நிற்பதைப் பாருங்கடி. 11

177 ஏஜண்டு கிர்ஷ்ணய்ய ரின்விடே ஷன்விட
எல்லாரும் வந்தனர் தோழிகளே
மாசன்னி தானத்தி னுக்கிணை யின்படி
மதித்து வேலைவிதி த்தாராம். 12

178 ஆகும் பறியலி ராமலிங் கவுடை
யாரின் முயற்சியைப் பாருங்களே
போகவரக் கார்கள் சப்பிளை செய்கிற
புகழைப் பாடியடிப்போமே. 13

179 குமர னருள் விளங்கும் மயூரநகர்
கவுன்சிலர் ஜெகநாத பிள்ளை
அமரச் சொல்லியங் காதரவு பெறு
மறிவைப் பாரடி தோழிகளே. 14

180 ஆதீனத்துக் கொரு மானேச ராயந்த
அய்யர் பெருமையைப் பாரடியே
மாதினத் தன்றுவந் தார்க் குப சாரஞ்செய்
மாதிரி பாடியடிப்போமே. 15

181 நிருவாக முத்தையா செட்டியார் நேரிலே
நின்று புரிவதைப் பாரடியே
வருவாரை யேற்று வழியனுப் பும்விதம்
வார்த்தை யினிமையைப் பாரடியே. 16

182 முன்னிரா மானுச முதலியா ரினிய
மொழி யுரைப்பதைப் பாருங்களே
சன்னிதா னத்தின் சமய மறிந்துரை
சாற்றுகிறவிதம் பாரடியே. 17

183 புத்திமி குத்தவன் இரத்தினம் பிள்ளையாம்
பெரியகு மாஸ்தா வவர்தானும்
அத்தினஞ் சன்னிதா னத்தினி டத்தினி
லருகினிற்பதைப் பாரடியே. 18

184 ஆங்கிலச் சொல்மொழி வாங்கித் தமிழாக்கி
யத்தைரி கார்டு தனிலாக்கும்
ஓங்கறி வுள்ள வுயர்குண சாலியா
முத்தமன் பேரையுங் கேளுங்களே. 19

185 முத்துக்குமர முதலியாராம் வாயைப்
பொத்தியே நிற்பதைப் பாருங்கடி
சுத்தன்சம் பிரதி முத்தையா முதலியார்
சூடும் பனுவலைப் பாடுங்களே. 20

186 வெள்ளிப் பாத்திரங்கள் வெற்றிலை பாக்குகள்
வேண்டிய கந்தவ கைகளெல்லாம்
புள்ளிக் கணக்கிற் குறையாது வைத்தவர்
புகழைப் பாடி யடிப்போமே. 21

187 அட்டவணைச் சுப்ரமணிய அய்யரா
மவருஞ் சேகர அட்டவணை
அட்டவணை ரொக்கத் தட்டவணை நெல்லுக்
கானவிவர்க ளனைவோரும். 22

188 எச்சமய மென்ன வேலை வருமென
வெதிரில் நோக்கி யிருந்தார்கள்
கச்சணியுந் தனபாரக் கருங்குழல்
காரிகை காளிதைப் பாருங்கடி. 23

189 சாரப்பு ராசகோ பால முதலியார்
சார்ந்து கைகொண்ட குறிப்புடனே
இராப்பக லாய்நின் றெழுதுவ தைக்கண்டு
இரைந்து கும்மி யடிப்போமே. 24

190 வெங்கட்ட ராமய்யர் சங்கரய்ய ரிரண்டு
வேதிய ராயசக் காரருண்டு
பங்கிடாய்ப் பந்திவி சாரணை செய்கிறார்
பார்த்துக் கும்மியடிப்போமே. 25

191 சுந்தரே சய்யர்மா லிங்கய்யர் பந்தியினைச்
சுத்திவி சாரணைக் கர்த்தர்வாம்
இந்த விருந்துக் கிணையெங்கு மில்லையே
என்று சொல்லியடிப்போமே. 26

192 கடவூ ரந்தணக் காரியஸ்தர் வேளூர்க்
காரியஸ் தர்களும் பந்தியிலே
இடையூ றில்லா தியற்றி வருகின்ற
இடததைப் பாரடி தோழிகளே. 27

193 மணியம் வைத்திய லிங்கம் பிள்ளையுடன்
மணக் குடிசாமி நாதய்யரும்
அணியா யாட்களை நிறுத்தி வேலைக
ளதட்டி வாங்குவார் பாருங்கடி 28

194 சட்டியக் காரன்முன் னேயிருக்கச் சிப்பாய்
சத்திதுப் பாக்கிசம் கையெடுத்துக்
கிட்டி ஒருவரும் வாராமற் காக்குமெய்
காவலைப் பாரடி தோழிகளே. 29

195 காந்த விளக்கி னொளிப்பிர காசத்தைக்
கண்டு களித்து அடிப்போமே
சாந்த குணம்புகழ் வாய்ந்தவர் நற்குரு
சன்னிதி நின்று துதிப்போமே. 30

---

## நொண்டிச்சிந்து.

[ தந்தின—தின—தினனா. ]

196 திருத்தருமா புரத்தில்—விருந்து
தினத்திலே செய்தபல வினத்தையெலாம்
உரைத்துவருவே னானும்—அதன்
உண்மையதி னுண்மையெலாம் நன்மையெனலாம்
கோசுமல்லி யெட்டு தினிசு—திராட்சைப்
பழத்தில் பூ வந்திமலைப் பழத்திலேயும்
பாசிப்பயர் கடலை பம்பிளிஸ்—தேங்காய்ப்
பூத்திருகல் வாழைத்தண்டில் சேர்த்தியுடனே
தொட்டுச் சாப்பிட்டவருக்கு—தினந்
தோறுமதன் ஞாபகமுண் டேறுமெனலாம்
சட்டினியில் நாலுவகையாம்—தேங்காய்
சாதகஞ் செய் கத்தரிக்காய் பேதமிலையே
பீர்க்கு உருளைக் கிழங்கு—விதம்
பருகப் பருகமன முருகிவிட்டதே
சேர்க்கு ராயத்து விதமே—ஆறுவரிப்
பிஞ்சு புடலைப் பூந்தி பிஞ்சு வெண்டைக்காய்
டாங்கர் நாரத்தம் பழத்தில்—செய்தவேலைப்
பாட்டை யெண்ணி வானமுங்கை நீட்டுமெனலாம்
வாங்குகறி யானவகையில்—மூன்றுவிதம்
வாழையவ ரைக்கோசு வாசமுடனே
கத்தரிக்காய் ரசவாங்கி—அவியல்
ஆகவிரண் டாம்வருக லஞ்சதினி சாம்

சேனைக்கிழங்கு பூவன்— பாகல்
　　சேமக்கிழங்கா முருண்ட சீமைக்கிழங்காம்
ஆமவடைதயிர் வடையாம்—பஜ்ஜி
　　அஞ்சு வகையாம் பரங்கிப்பிஞ்சு மிளகாய்
நாமறிந்த வாழை கத்தரி—காய்போண்டா
　　நாட்டிலுளார் தின்னருசி மீட்டுவருமே
குழம்பிலே நாலுவகைதான்—போண்டாமோர்
　　குழம்பு வெங்காயமுருங்கைக் குழம்புடன்
தூதுவிளங்கொட்டுக் குழம்பு—எரிசேரி
　　தூய ரசமஞ்சு தினி சாயதுகட்டு
ரசமைசூரோர் சில்ரசமாம்—மருக்கொழுந்து
　　ரசஞ்சீ ரகத்துரசப் பசந்துரைக்க
ஆறுரச முள்ளதென்னலாம்—செய்த
　　அஞ்சுவகை யூறுகாயா மிஞ்சிமிளகாய்
வேப்பிலைக்கட்டி மாங்காய்—கிடாரங்காய்
　　வேறுவகை யேதுமனங் கூறுவகையே
மாங்காய் வடுகு தொக்கு—நெல்லிக்காய்
　　மற்றுமொரு தொக்குளது சற்றுகவனி
சங்கைப் பிரதமமாம்—பாயசம்
　　சேமியாவி லானதிந்தப் பூமியிலுள்ளார்
மிக்கவுண்டவருக்கிந்த—பிறப்பின்றி
　　மறுபிறப்பு மேயினிக்குந் திருவருட்செயல்
சித்ரான்னம் நாலுவகையாம்—பங்காள பாத்
　　சக்கரைப் பொங்கல் தேங்காய் மிக்கபழமே
பக்ஷணங்களஞ்சு தினிசு—ஜாங்கிரி
　　போளிலட்டு சோமாசா பாலடு பாக்காம்
பச்சையரி சிச்சமயல்—உருக்கு நெய்
　　பருப்புட னப்பளமும் விருப்புடனே
தாட்டெலைகள் போட்டுப் படைத்தார்—தாகத்துக்குத்
　　தண்ணீரு நாலுவகை வெந்நீருமாம்
கர்ப்பூரங் குங்குமப்பூ—வொடுசுக்கு
　　கண்டுயேலக் காயில்வாச முண்டு பாருமே
கேட்டவர்க ளாராகிலும்—வெள்ளிக்
　　கிண்ணநிறை யக்கொடுத்தா ரெண்ணநிறையச்

சாப்பிட்டெழுந்த பின்பு—நல்ல
சந்தன தாம்பூலமுடன் கந்தமளித்தார்
ஒப்பில்லாத உபசரிப்பு—எனச்சொலி
ஒருவர்க் கொருவர்முக மன்களுரைக்கப்
பற்பல விதம்புகழ்ந்து—தங்கள்
பதிக்குச் சென்றார் மனம்புதுக்கிச் சென்றார்
இத்தனைக் காரியமும்—ஞானபு
ரீசனருள் கொண்ட குருதேசிகனுளப்
பாங்கின்படியே செய்த—கார்பார்
பாருலகி லேயிரண்டு பேறும் பெறுவார்
ஆங்கதையறிந்தபடி—கடலூர்
ஆலயத்திலே சாப்பு வேலைபெற்றவன்
ஷண்முகசுந் தரன் சொன்ன—சிந்துச்
சந்தமதில் வந்ததுறை யுந்தவிர்ப்பீர்காள். (தந்தின)

வாழ்த்து.

197 ஆரணம் வாழ்கசைவ வாகமம் வாழ்க அருள்வளரும்
காரண ஞானக் குருநாதன் வாழ்க கழல்பரவும்
பூரண மெய்த்தவத் தொண்டரும் வாழ்கப் புவிமிசையே
சீரண வுந்தண் டருமையும் வாழ்க திருமிகவே.

---

உ

## சிறப்புப்பாயிரம்.

### திருக்கைலாய பரம்பரை—தருமபுரம் ஆதீனம் அடியார் குழாங்களி லொருவராகிய வித்வான் தரு. ஞா. சட்டநாதத் தம்பிரான் ஸ்வாமி அவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

198 பேராருந் தருமையிற்சுப் பிரமணிய தேசிகனும் பெம்மா னுள்ளத்
தோராரு மன்பதனுற் சட்சிகுப்பு சாமியய்யர்க் கினிமை யாகப்
பாராரும் விண்ணாருங் களிசிறப்ப வோர்விருந்து பாங்கா நல்கச்
சீராரு மதன்சிறப்பைத் தனித்தனியாகப் பகுத்துநல சிந்தாச் செய்தான்
அன்னவனு ளென்னின்முத் துச்சாமிப் புலவரினி தளித்த மைந்தன்
சொன்னகட வூர்த்தேவஸ்தான சாரப் வேலையினிற் றுலங்கு கின்றோன்
கன்னனவ சாரமெனச் சந்தவிசைப் பாக்கள்பல காண்போர் தம்மின்
முன்னவன்சண் முகசுந்த ரப்பெயர்க்குந் தனிப்பொருளா முன்னிற்
[போனே.

### தருமபுரம் ஆதீனம் வித்துவான் கொடூர் பூ. ஆ. சிதம்பரநாத முதலியார் இயற்றியது.

பதினான்குசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

199
பூமேவு தண்பொழிற் றருமையம் பதிமருவு புண்ணியச் சைவ மணியாம்
புகழோங்கு சுப்ரமண் ணியஞான தேசிகர் பொருந்துமன் போடு புவியின்
மாமேவு வேதபுர மறைவாணர் திருமரபில் வந்தவ தரித்த மகிபன்
மாண்புபெறு சட்சியாங் குப்புசா மிக்குரிசில் வரவேற்பும் வரிசை மிக்க
தேமேவு சங்கீத வுபசியா சாதியாம் செவியமு தளித்த செயலும்
தேவர்தெள் ளமுதென்ன யாவரு மகிழ்ந்துணச் செய்விருந் தின்பெரு
நாமேவு கவிமுத்து சாமிநா வலனீன்ற நம்பி சண்முக சுந்தரன் [மையும்
நற்றமிழ்ச் சுவையொழுகு கும்மியொடு சிந்துபல நயமுற நவின்றனன
[ரோ.

யஜ்ஞவராஹாய நவிஶ்வஞாராயணஶாஸ்த்ரிவிரசிதா

நவரத்நமாலிகா ।

200
கஜயத கஶ்ரஜம் பாஜஃஶ்ரீநாதாரகரோ ஸவதஃ । ஷஷ்
டு ஸகந்த ரஞ்ஜிக்ஷாவலீ ஶரவணவாவலீ தவலி நிவாவலீ ॥௧॥

201
ஶ்ரீஸம்பந்நாநாஜ யோகீந்த்ரஸ்த்ரயம் விராஜதே ஸத
த்ர । வாதிதபோமேஶாஜ வஞ்ஜா பத்ஸாதவாதி ஶிவ
யஜ்ஞ: ॥ ॥௨॥

202
ஶாஶ்வதஜநேக்ஷ்யகஜநாஃ த்ரிவியாக்ஷ்யேக்ஷ்வஷணா ஜநித்ய
தயா । ஶ்ரீஜந்ஸ்ரஜீ க்ஞு ஸதகம் ஸ்வந்தேய நிவேஶ்ய
ஸம்வஜநேஷ்த ॥ ॥௩॥

203
ஶ்ரீஜஶ்ரீ ஜ்ஞாநஸம்பந்தயோகீந்த்ராணாஜநஜ ஸ்வாஜ ।
மேஶஜயஜேஷ நிரதா ஸ்ஞயாஸ்வம்ஶாஶ்வதீஸ்வஜ: ॥௪॥

204
ஶ்ரீயஜ்ஞவீமே ஸததம் ஜவஞம் வித்நஜிதாஜம் க்ருத
ஸ்வஸ்வஷ்டு । கபோள கஷாயம் விநிர்தீதாக்ஷம் ரக்ஷாக்ஷஜாஜ
வஶிவஞ்ஞக்ஞஞ் ॥ ॥௫॥

205
கஜேஜள ஹி ஜநேக்ஷ்ய ஶிவயஜ்ஞ வநக: கதஜ்ஞவ்ய ஜதேத்ய
வ ஸம்பேவாயஞ்ஞ் । ஸஞ்ஜ்யக்தகாமேஜஸ்வஸ்வ ஶிஷ்ய வமேமஜ:
ஶ்ரீஜ்ஞாநஸம்பந்தஜவாவலிதாரம் ॥ ॥௬॥

206
ராஜ்ஞா விநீதேந ஹி வாதவதேஜ ஶ்ரணாஜவேஞ்ஞவஜம்
ஶிவயஜ்ஞஜநமேவ்யத்ய । ஸம்ஶ்ராயஜ்ஞ்யஜாநம் தத வநவயஜ்ஞவா
யஜ்ஞம் வஸஞம் ஸஸ்வஶிஷ்யவமேமஜ: ॥ ॥௭॥

207 [illegible]
[illegible] ॥ ௮ ॥

208 [illegible]
[illegible] ॥ ௯ ॥

நவரத்நமாலிகேயம் ஸமாப்தா ।

---

## சூரியனார்கோவிலாதீனம்
## பரமானந்தசிவத்தம்பிரான் பாடியது.

209 சிவனே நீயெனச் சிந்தித் திருக்க
அடியற் கன்னமு மாடையு மளித்துக்
கற்கப் புத்தகம் கருணையாற் றந்து
நின்னடி யாரொடு நித்தமு மிருத்தி
ஆணவ மலத்தா லார்த்த நாயினை
எவருங் காண வினியநற் சொல்லால்
கருங்கன் மனமுங் கனிந்தே யுருகச்
செம்மலர் வாயாற் றிருமு மழைக்கும்
தருமையம் பதிவாழ் சற்குரு தேசிகா
நின்னடி பணிய நிதமும்
அடியனேன் வருக ஆர்வமுற் றனனே. (௧)

# தருமபுரம் ஆதீனவித்துவான் காழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

210 திருநா வரையர்பிரான் செப்பியசித் தாந்த
மிருநா வலந்தன்னி லென்ற—மொருநாவி
னேத்த வியலளிக்கு மென்றுந் தருமைவளங்
காத்தசிவ ஞானக் கன்று. (க)

211 யாது மாதவம் புரிந்ததென் மனனம் யாதினு முதலாதேன்
போது போக்கிய பிறவியி னிடையிடைப் போதமர் புனற்சோலைத்
தாது வண்டுணத் தண்மது வருத்திடுந் தருமையிற் குழுவின்கண்
மாது பாகராஞ் சுப்பிர மணியர்தம் மலரடி நினைத்தற்கே. (உ)

212 வேத வாகம முதல்வர் விண்ணவர் மண்ணவர் தலைவர்
நாத னுமமே நவில்வார் நாமுயப் பற்பக லேத்தும்
பாத தாமரை யுடையார் பைந்தமிழ்க் காமரம் பாடுங்
காத லார்தரு தருமைக் கண்ணுதல் மாதவர் தாமே. (௩)

213 ஆழி நெஞ்சமே வந்திவ ணினைதியா லாகமத் துறைவேந்தர்
வாழி மாதவர் தருமையின் மாதவர் தாண்மலர் வழுத்தின்வெவ்
வூழி வல்வினை யாவையும் வீட்டிடு மூவின ருறு தூயர்
கேழி லங்கிய மேனியர் ஞானியர் கிளர்தரு மவர்சீரே. (௪)

214 இந்திரை கேள்வ னியைந்தன்பி னிட்டமலர்
வந்த மணமுவக்கும் வண்டெனுளம்—விந்துவின்
மானந்தத் தேநடஞ்செய் மாதவன் றாட்சலச
மானந்தத் தேனல்கு மாங்கு. (௫)

## கும்பகோணம் பாரதமித்திரன் பத்திராதிபர்
## ஆ. சத்திவேற்பிள்ளை பாடியது.

215 உலகமெலாந் துதிகைலைப் பொருப்பின் கண்ணே
யுயர்தருகல் லாலடியி னமர்ந்து மேய
மலவலிதீ ரொருநால்வர்க் குண்மை ஞான
மார்க்கநிலை தனைத்தனது கரத்தாற் காட்டி
யிலகுறுசுத் தாத்துவித சைவந் தன்னை
யெழின்மிகுமிப் புவியில்வளர்ந் தோங்கச் செய்த
வலமுறுசற் குருவினருள் பெற்று நிற்கு
மாண்புயர்சந் ததிவிளங்க வந்து நீண்ட. (௧)

216 பூந்துடவை புறஞ்சூழ்ந்து பொலியக் கொம்பர்
பொருந்துமெழிற் பூவைகிள்ளை யொன்றுக் கொன்று
தீந்தமிழ்ச்செம் மொழியதனாற் சிறந்த சைவ
சித்தாந்த சாத்திரச்செம் பொருளை யுள்ளம்
போந்தமயல் புறம்பாகப் புகலப் பூவிற்
பொருந்தியவல் லியமெண்கம மொழியைக் கேட்டுச்
சாந்தமுற்று விடக்குணவை நீக்கி வாழுந்
தனிவளஞ்சா லெழிற்றரும புரத்தின் மேவி. (௨)

217 கண்டவர்கட் புலவிருந்தா யுயர்மெய்ஞ் ஞானக்
கலைகளுக்கோ ருறைவிடமாய்க் காலகாலன்
றொண்டர்பெருந் தவநிலையாய் வீட்டின் பத்தைத்
தொழுதடைந்தார்க் களிப்பதுவாய்த் தூய்மை வாய்ந்த
கொண்டறவ ழுயர்மாட மாலயத்திற்
கோதின்மெய்ஞ் ஞானகுரு மூர்த்தி யாகி
மண்டலத்தோர் மலவிருளைப் போக்கி யாளு
மாதவசுப் பிரமணிய வள்ளற் றேவே. (௩)

218 பொய்கண்டு மனமகிழ்ந்து புலன்க டம்மைப்
பொறிவழியே போக்கியுழல் புவியி னோர்க்குக்
கைகண்ட நெல்லியென வுண்மை கண்டு
கடைப்பிடித்தே யுய்திபெறக் கருணை செய்யு
மெய்கண்ட சந்ததிக்கோர் பானு வாகி
விளக்கமிகும் புகழ்விரிக்கு மணியே நின்ற
மைகண்டன் மலரடிகண் மறவா வுள்ள
மாதவதே சிகசிந்தா மணியே நின்றன். (௪)

219 பொற்பாத மனத்தகத்து முடியின் மீதும்
பொருந்தக்கொண் டருணிறைசந் நிதியின் மேவி
யற்போங்க வரவிடுமிந் நிருபந் தன்னை
யாதரித்து வரைவிடய மதனை யோர்ந்து
நற்பாரி லுயர்சுத்தாத் துவித சைவ
நற்சமயத் திறனறியாக் கயவர் செய்யு
முற்பாதச் செயன்மாற்றி யுலகிற் சைவ
முயர்வுபெற நீகருணை யுவந்தீ வாயே. (ரு)

---

தருமபுர ஆதீனவித்துவான்

## கொடுவூர் அ. சிதம்பரநாதமுதலியார் பாடியது.

செல்வமுத்துக்குமரனிரதவிழா.

220 புள்ளிருக்கு வேளூர்வாழ் செல்வமுத்துக் குமரன்
பொற்றடந்தேர் புகல்விபவ வற்சரந்தை மதியிற்
கள்ளிருக்கும் பொழிற்றருமை யாதீன குருவாங்
கனம்பெறுசுப் பிரமணிய தேசிகனார் நெஞ்சத்
துள்ளிருக்கு மன்பெனுநீண் மணிவடம்பூட் டிதனு
மொருநொடியில் விரைந்தோடி நிலைவந்த தம்ம
வள்ளிருக்குஞ் சுடர்வேலோ னிரதவிழாக் காட்சி
வைபவநா மொருநாவால் வகுத்தற்பாற் றன்றே. (க)

---

மதுரைக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

## சு. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் பாடியது.

221 சீர்கொள் கைலைத் திருமர பேய்ந்த
பேர்கொள் தரும புரந்திகழ் பெரும
சுப்பிர மணிய குருவே சூழ்ந்த
இப்புவி யோர்க்கருள் எழிலார் தேவே
நின்பா லடியேன் நிகழ்த்துவ துண்டால்
என்போற் சிறுவர் தம்முன் மேவி
இம்மா மதுரையிற் றிகழுறு மெழிலார்
செம்மா சங்கத் தேனார் பொழிலில்
இனிய பயின்றும் எமக்கு மினிய
அல்வா வளித்தும் சொல்வா வென்றும்
நல்வாழ் வருளிய நம்பிநின் நலத்தினைச்

சேயோர் கூறக் கேட்டுளேன் தூயோய்
நின்வாழ் வதனை நேரினிற் கண்டேன்
கொண்டேன் பெருமை விண்டேன் சிறுமை
யானறி யின்பம் தேனறி வண்டே
யாமென வறைய லாகுமே யண்ணல்
அருளால் முன்ன மளித்ததே போலத்
தெருளால் நல்லன சேர்ப்பதுன் கடனே. (க)

வெண்பா.

222 கோத்தருமை மேவுங் குணக்குன்றே நின்பெருமை
பார்த்து மகிழ்ந்தேன் பலநாளால்—எத்தரிய
இம்மா மதுரை யிடங்கொண்டோ யின்றுமுன்னும்
அம்மா வடியேற் கருள். (உ)

---

தருமபுரம் ஆதீனவித்துவான் காழி
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்
இயற்றியது.

223 சைவ சமய மெய்ச்சம யந்தனி
லுய்வகைச் சமய வுயர்நிலைத் தவரையு
மெய்ப்பில்சந் தானத் துய்ப்பவர் தமையு
மவர்வழிக் குழீஇய தவர்தமை யுஞ்சால்
பரம்பரை யவரையுஞ் சிவனெனப் பேணி
யாங்கவர் வழங்கிய பாங்கமை வழக்கம்
வழிவழி சிறப்பப் பழியிலா மரபி
னிலையிற் பிரியாக் கலையொடு சிவணி
நன்மை கைப்பிடித்து ஞான நெறியின்
றன்மை மாந்துதல் சான்றோர் கடனே. (க)

குறள்.

224 தேற்ற முடையார் சிவமுறுவர் மெய்ஞ்ஞானத்
தேற்ற முடையா ரிவர். (உ)

வெண்பா.

225 மாயை கழன்றிடுமால் மன்னுவினை தீர்ந்திடுமால்
நோயை விளைக்குமலம் நோலாது—நேயை
புரமணியர் சேயரலர் போற்றுதரு மைச்சுப்
பிரமணியர் பாதம் பெரிது. (௩)

---

## திருவாரூர் ஸ்ரீதியாகராஜஸ்வாமி ஆலயத்திற்றிருவருட்டிருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசுப்ரமண்யஸ்வாமிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தி ஆழித்தேர் நிர்மாணத்துக்கு 5000 ரூபாய் கொடுத்தும் நூதன வெள்ளிப்பல்லக்கு வெள்ளி யானைவாகனம் முதலியது செய்துவைத்தகாலத்தில்

**கமலை கண்ணுதேசிகர் அவர்கள் பாடியது.**

226 தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானப்ர காச னல்லருள் பெற்று
வருபுகழ் ஞானத் தருமைய பதியைத்
திருநக ராகத் திகழ்ந்திடக் கொண்டே
அரசுவீற் றிருந்தே யாருயிர்க் கெல்லாம்
வெம்பவ மறுத்து வீடருள் ஞான
சம்பந்த குரவன் சந்நிதி யதனில்
இப்புவி புகழ விலங்கிடு மாசான்
சுப்பிர மணியத் தூயவர் சிகாமணி
முன்னைத் தொடர்பின் முறைமையை மனதி
னன்னய மாக நாடினர் கொண்டு
பிறந்திடு முயிர்க்கெலாம் பெரும்பே றருளிச்
சிறந்திடு மாரூர்த திருநகர்க் கேகிச்
சித்தந் தெளிந்த மெய்த்தவர் போற்றும்
அத்தலத் தமர்ந்த வாடர வக்காற்
பெம்மா னுறையும் பெருந்தளி யதனில்
அம்மான் மகளுட னுமைமா மகளையுந்
தன்னருட் சத்தியாய்த் தயங்கக் கொண்டு
மன்னிய செவ்வேண் மலரடிக் கன்பாய்
அஷ்ட பந்தன மமைந்திடச் செய்தே
மட்டுறு விபவ வத்சர மதனிற்
றிருந்திய சோன்மதி தேதிபத் தொன்பதில்
வருந்தி வாகர வாரநன் னாளில்
ஆகம விதிப்படி யாதிசை வர்க்கொடு
மாகமும் புகழ வயங்கபி டேகஞ்
செய்து முடித்துத் தியாகப் பெருமாற்கு
நைவேத் தியத்துட னலந்திக ழருச்சனை
முசுகுந்த வேந்தன் முறைமையா னுலகில்
வசிவளம் பெருக வண்மையா யியற்றி

வெண்பொனிற் றீபமும் விளங்கெழிற் சிவிகையும்
பண்பொடு புரிந்தே பாறு ரூரும்
ஆழித் தேர்ப்பணிக் கையா யிரம்பொருள்
வாழிக் குவலய மகிழத் தருவதாய்த்
திருவாக் களித்த தேசிக வள்ளல்
வாழி வாழி வண்மையால்
வாழி வாழி மன்பதை யுலகே. (க)

வேறு.

227 தருமையம் பதியி னூருந் தனியர சாளும் வள்ளல்
திருமகள் பூசித் தேத்துந் திகழ்செல்வத் திருவா ரூரில்
அருமையாங் குமாரப் புத்தேட் கட்டபந் தனமுஞ் செய்து
பெருமையோ டபிடே கித்துப் பெற்றனர் சீர்த்தி மாதோ (உ)

துலங்குகோன் மதிசேர் தேதி யிருபதிற் சோம வாரத்
திலங்கிடத் தியாக ராஜற் கெழின்முசு குந்த பூஜை
வலங்கொள வியற்றுஞ் சுப்ர மணியதே சிகராம் நாதர்
நலங்கிளர் கவிகள் போற்ற நீடூழி வாழ்க மன்றே. (ங)

---

தருமபுரம் ஆதீனம் வித்துவான் காழி
ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்
ஸ்ரீகண்டசந்தான சாம்பிரதாய அவிச்சின்ன ஞானபீடாரூட
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## எண்குணப்பெருமை.

சுவதந்திரத்துவம்.

228 உரியநல் லோர்தேத் தறிவதற் குளதா
மூயரிய ஞானத்தைப் பொருத்தி
யரியதோர் சிவத்தி னொளியினைப் பெருக்கி
யான்றமுத் தாந்தாச் செய்வாய்
பெரியவிப் புவிக்கட் டன்வயத் தினனாய்ப்
பேசருஞ் செயலெலாம் புரியுந்
துரியமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (க)

### விசுத்ததேகம்.

229 கரிசறு சகச மலமது மருந்தாற்
கண்டனை யுறும்விட மென்ன
வுரியதன் சத்தி கெட்டுத்தான் கெடாம
லுள்ளவந் நிலையினைக் காட்டாய்
பருமிதத் தறிஞர் தூயநல் லுடம்பிற்
பருணித னெனவுரை பகருந்
துரிசறு ஞானத் தருமையெம் பெரும
சுப்பிரம ணியசற் குருவே. (உ)

### நிராமயான்மா.

230 கருதிய முளையுந் தவிடுமி தாமுங்
கழன்றிட வரிசிகே டின்றிப்
பருதியின் வேறோர் நெல்லது தோன்றாப்
பண்பினை யுணர்த்தினை யெமக்குள்
வருதிவா கரனு மியற்கையி னுணர்ந்து
வான்மொழி மூர்த்திமா னருளுஞ்
சுருதிமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (ந)

### சர்வஞ்ஞத்துவம்.

231 பெத்தமே முத்திப் பெருந்தசை யதுவே
பேசிடு மெவற்றினு நின்றே
யுத்தம வருளை யன்றியே யாங்க
ளுஞற்றுமெக் கருமமுங் காணேஞ்
சத்தர்க மாட்டுச் சருவமு முணர்த்திச்
சந்ததங் குருபர னருளுஞ்
சுத்தமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (ச)

### அநாதிபோதம்.

232 சடமது வெனினுஞ் சித்தது வெனினுஞ்
சார்தரு மெவற்றினு நிறைந்து
திடமகத் துவங்கள் செறிதரக் காட்டிச்
சேர்நலம் பலவளித் தனையாற்
கடமயப் பாசப் பசுவியல் கடிந்து
காட்சிசால் போதமே நிலைப்பச்
சுடருமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (ரு)

அலுப்த சக்தி.

233 சாற்றொடு தேன்பால் கனியமு தெல்லாங்
கலந்தவக் கலவையின் சுவையை
வேற்றறி தாயவண் ணமெம் முளத்து
விரவினை துரிசறுத் தருளிக்
காற்றிடை நுழையாக் ககனமே யருளின்
காட்சியே யனைத்துயிர்க் களித்துத்
தூற்றுமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (௬)

அனந்தசக்தி.

234 பாயநீர் கலந்த வுப்பது சுவையைப்
பாரித்த வாறுநின் குணங்கள்
நேயர்தம் மாட்டு நிகழ்தரக் கூட்டி
நின்மலா தீதத்தை யளிப்பாய்
வாயபூ தலத்தே வாய்ந்ததோர் சத்தி
வண்ணமெஞ் ஞான்றுமே வயங்குந்
தூயமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (௭)

திருப்தி.

235 வேதவா கமத்தும் விரியுநற் கலைகள்
விரித்தநன் னூலவை யகத்து
மோதுசித்தாந்த வுண்மையை யுணர்த்தி
யுயரிய குருவென வந்தாய்
ஏதமில் லாத வரம்பிலா வின்ப
மெங்களுக் கிசைபா ளுகுஞ்
சூதமெய்ஞ் ஞானத் தருமையெம் பெரும
சுப்பிர மணியசற் குருவே. (௮)

குருபாதம் வாழ்க.

நாகபட்டணம் நீலலோசனி பத்திராதிபர் சதாசிவம்பிள்ளை மாணுக்கர்

## கி. ரெ. கல்யாணசுந்தரமய்யர் அவர்கள் பாடிய

# வாழ்த்துப்பா.

236 அருள்பழுத்த தருமையிற்சுப் பிரமணிய
தேசிகநின் னடிமை யான
தெருள்பழுத்த சதாசிவபண் டிதனிடத்திற்
செந்தமிழைச் சிறிது கற்றேன்
பொருள்பழுத்த சமுகமதிற் புகுந்தவுடன்
கலியிருளும் போயிற் றந்த
மருள்பழுத்த காரிருள்தான் வான்சுடர்முன்
னின்றிடுமோ வண்மை யோனே. (க)

கோலுச் சிறப்பு.

237 இலவுவிரி நவமணிக ளிழைத்த பீடத்
திசைவல்லோ ரிசைபாட நேயத் தொண்டர்
குலவுதிரு வடிபரவக் கோதில் சைவக்
குழாமெலாம் தமிழ்வேதங் கூற வென்றும்
நலமதார் தருமபுரந் தனிற்கு ணக்கு
நன்முகமா யமர்ந்துகொலு வீற்றி ருக்கும்
பலர்புகழ்சுப் பிரமணிய தேசி கேந்த்ரன்
பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்க மாதோ. (உ)

---

நாகை நீலலோசனி பத்திராதிபர்

## சதாசிவம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

பஞ்சரேத்னப் பாமாலை.

238 திருவளருந் தருமையம் பதிவளரும் ரெத்னம்
செழுஞ்சைவ சித்தாந்த ஜெகத்குரு ரெத்னம்
மருவளருங் கழுநீரின் மாலையணி ரெத்னம்
மாதவமே யுருவாகி வந்தருளும் ரெத்னம்
தருவளருஞ் சந்தான கற்பக ரெத்னம்
தயாரச பூரித தருமகுண ரெத்னம்
தெருவளர்சுப் பிரமணிய தேசிக ரெத்னம்
ஜெகமதனில் நீடூழி சிறந்துவா ழியவே. (க)

239 வெள்ளிமலை விட்டிருந்த மேதினியாள் ரெத்னம்
வியன்றருமைப் பதிபுரந்து வீற்றிருக்கும் ரெத்னம்
கொள்ளைகொள்ள வீடுதவுங் குருராஜ ரெத்னம்
குணமென்னுங் குன்றேறி நின்றருளும் ரெத்னம்
தள்ளரிய பெருநீதி சாந்தவுரு ரெத்னம்
தமிழ்ச்சங்கத் தினிதிருந்து தமிழாய்ந்த ரெத்னம்
வள்ளல்சுப் பிரமண்ய மகராஜ ரெத்னம்
மகிதலத் தெந்நாளும் வாழிவா ழியவே. (௨)

240 மெய்கண்டான் றிருமரபு விளக்கவந்த ரெத்னம்
மேன்மைபெறு ஞானோப தேசஞ்செய் ரெத்னம்
பொய்கண்டா ரறுகாத புண்ணிய ரெத்னம்
பூதேவி சீதேவி பொருந்திவாழ் ரெத்னம்
கைகண்ட நெல்லிபோற் கதிகாட்டும் ரெத்னம்
கவிராஜர் புவிராஜர் கைதொழூஉம் ரெத்னம்
மைகண்ட கண்டனடி மறவாத ரெத்னம்
மகிதலத் தெந்நாளும் வாழிவா ழியவே. (௩)

241 கல்லா லிருந்துகை காட்டிய ரெத்னம்
காசினியோ ருய்யக் கால்காட்டும் ரெத்னம்
வெல்லாத பகையெல்லாம் வென்றிட்ட ரெத்னம்
மேவினோர்க் கருள்புரியும் வித்வ ரெத்னம்
அல்லாருங் களமறைத் தவனிவந்த ரெத்னம்
அடியார்கள் புடைசூழ வமர்ந்தருளும் ரெத்னம்
செல்லாரும் பொழிற்றருமைத் தேசிக ரெத்னம்
ஜெகமதனில் நீடூழி செழித்துவா ழியவே. (௪)

242 சொக்கேசர் பதமலர் சூடிசிரோ ரெத்னம்
தொண்டருளஞ் கோயிலாக் கொண்டருளும் ரெத்னம்
பக்குவந் தனிலாளும் பரஞ்சோதி ரெத்னம்
பாசமோ சனஞ்செயும் பண்புள்ள ரெத்னம்
தக்கவா லயமெலாந் தாணாளும் ரெத்னம்
தண்டமிழ்ப் பாமாலை கொண்டருளும் ரெத்னம்
திக்கெலாம் போற்றுசுப் பிரமணிய ரெத்னம்
ஜெகமதனில் நீடூழி செழித்துவா ழியவே. (௫)

## திருவையாறு சமஸ்கிருத காலேஜ் தமிழாசிரியர்
## பண்டித இ. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள்
## இயற்றியது.

243 நாவலந் தீவினி லோவலில் வளமுறும்
சான்றோ ருடைத்தெனு மான்றோர் மொழிபெறும்
தொண்டை நாட்டிடைத் தொண்டைமேற் கொளீஇச்
சைவத்தின் மேலுஞ் சமயம் பிறிதிலைச்
சிவத்தினை விட்டாற் பவத்தினை யறுக்க
வொண்ணா தென்னுந் திண்மை கைவந்த
வேளாண் குலத்திடைத் தாளாண் மையொடு
வாணாட் பலவும் வீணா ளாக்கா
தில்லற நெறியே நல்லற மாக்கொளும்
மறுவிலீர் குரவ ருறுபெருந் தவத்தான்
வந்து தோன்றினை செந்தமிழ் புரக்கும்
பாண்டித் துரைமுனம் வேண்டி நிறுவிய
மதுரையம் பதியில் மாண்பொருங் குடைய
நான்காஞ் சங்கம் மேன்மை யுறுமார்
இருமொழி வல்லுநன் றிருநா ராயணன்
செந்தமி ழாசான் சிந்தை மகிழ்வான்
வீற்றிருந் தனைநீ! மாற்றருஞ் சீரொடு
ஓதா துணர்ந்த போதனு மிருந்துங்
கல்வி பயின்ற காரண மெவனோ
கற்றதன் பயனே நற்றவ மெனக்கொடு
செஞ்சடை முடியுடைத் தேசிக னாயினை
கல்லாடை தரித்துக் கண்ணுதற் பரமனை
யிடையறா துன்னு நடையுறு மொழுக்கினை
செப்பருங் குணமார் சுப்பிர மணிய
ஞான குரவ ஞானசம் பந்தன்
தத்துவங் கடந்த அத்து விதப்பொருள்
முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றிய
சொக்க லிங்கமாஞ் சோதியை முன்னாள்
பெற்று நிறுவிய பிறங்கற மடந்தனில்
பின்னிய சடையுடைப் பன்னரு முனிவரர்
சமயஞ் சாத்திரந் தண்டமிழ் தழைப்புற
நின்று வாழ்ந்தனரே நின்று வாழ்ந்தனரே
செந்தமிழ் நூல்களும் நந்தலில் சைவமும்

மறைந்துறு மோவென மயங்குமிஞ் ஞான்று
அன்னவை தழைப்பவும் அன்னவை நிலவவும்
அப்பெரு மடந்தனக் கதிபனா யமர்ந்தனை
இப்பெரு மைதனை யியம்பவொண் ணாதென
எம்மனோ ரறிவ ரென்பது மெய்ம்மை
ஆரூர்ப் பெரும்பதி யதிட்டிப் புடைமைக்
கைவரப் பெற்றுத் துய்யனாய் விளங்கித்
தருமைபம் மடத்திற் றகுதிசால் தலைவனாய்
எய்திய மரபா லியம்புவ தொன்றைச்
செந்நெறிச் செல்வநின்! செஞ்செவி யுறுமார்
செய்தருள் புரிமதி செய்தருள் புரிமதி
யதுவே, மாற்றருஞ் சிறப்பி னேற்ற மிக்குறூஉம்
குமரனை யுன்னுங் குமர குருபரன்
ஆசிலா மறையுணர் மாசிலா மணிக்கு
முன்னாட் பகர்ந்த மும்மணிக் கோவையில்
மதுரை யாரூர் மாண்புறு தருமையாம்
மூவூர்ப் பொலிந்த மூர்த்தி யென்பது
நின்மாட் டுறூஉம் நின்மாட் டுறூஉம்
என்பதே யாகு மென்பது கண்டனம்
ஐம்முக வன்றன் ஐந்தக் கரத்தின்
நுண்பொரு டனையு மெண்பொரு ளாகச்
சொல்லு நன்மை நல்கும் பெரும
செந்தமி ழறிஞர்க்குச் சீரிய மதிப்புக்
கொடுத்தருள் புரிந்து மிடுக்கண் களைவோய்
இந்நில வுலகினி லிருந்தவம் புரிந்த
முன்னோர் பலரும் பின்னோர் பலரும்
நண்ணாப் பெருமை நண்ணும் புனித
அரனமர் கோயிலும் அறவோர் சாலையும்
பன்னா ளீட்டிய பண்புறு தவத்தோய்
எக்கொள்கை யினரு மெய்க்கொள் கையென
நடத்திக் காட்டு நாயக துறவின்
நிலையிற் றிரியா தடங்கியான் றேற்றம்
மலையினு மாணப் பெரிதெனு மொழிதனைக்
கியல்வரம் பானோய்! இயல்வரம் பானோய்!
அன்புடை யவர்க்கே யின்புரு வாகுஞ்
செம்மால் மெய்ம்மொழிச் சீருறு புலவர்கள்
நின்னடி பரவிப் பொன்பல பெறுமார்
என்று நின்று நன்று வாழியரே.

## ஸ்ரீமத் மௌன சச்சிதானந்தசுவாமிகள் அருளிய

# பஞ்சரத்தின திருவிருத்தம்.

244 தருமையம் பதியிற் றங்கிவீற் றிருந்து
தனிப்பெருங் குரவரா யெவர்க்கும்
உருமைய தாகி வந்தவர்க் கருளும்
உயரும்லௌ கீகவை தீகப்
பெருமைஞா னத்தைப் பிரிவிலா துணர்த்தும்
பேரருட் சுப்பிர மணியே
அருமையாங் குரவ நின்னடி யடைந்தார்க்
கடைக்கலம் புகவும்வே றுளதோ. (௧)

245 ஞானசம் பந்தக் குரவனை யடைந்தார்
நலமில ரெனினுமவே றலக
ஊனசம் பந்தக் குரவனை யடைந்து
உளமயக் குறுதலு முளவோ
மோனசம் பந்தத் தருமையம் பதியில்
முதல்வரா யரசுவீற் றிருக்கும்
பானுசம் பந்தச சுப்பிர மணியப்
பரமசற் குரவனே வருளாய். (௨)

246 உன்னுட னிருந்தும் உன்னுடன் வசித்தும்
உன்னுடன் சுகித்துமே யிருந்த
என்னுடன் வார்த்தை இசைந்தினி திருந்த
வெழிற்பெருங் கமலையம் பதியில்
தன்னுடன் நானுஞ் சகசமா யிருந்த
சச்சிதா னந்தனும் மவுனி
பின்னுடன் வார்த்தை வருவதை யுளத்தில்
பெற்றிடுஞ் சுப்பிர மணியே. (௩)

247 மாபெருங் கருணைச் சுப்பிர மணிய
வள்ளலே தேசிக மூர்த்தி
தாபெரு மயக்கத் தம்பிரான் சுப்பு
தாளடைந் துன்னுட னிருக்க
வேபெரு வெண்ண மெண்ணியா னிருக்கும்
எண்ணம துணர்ந்து நீயெனக்கு
தூபெரு வெண்ணம் எண்ணியாங் குணர்த்துந்
துரிசிலாச் சுப்பிர மணியே. (௪)

248 இக்குறை முடித்துத் தம்பிரா னுனது
இணையடித் தாளைவந் தடையப்
பக்குவ முரைத்துத் திருமுக மனுப்பாய்
பரமசற் குரவனே ஞானத்
திக்குவே ரறியாச் சிறுவர்கள் செய்யுஞ்
சிறுபிழை யாகினும் பொறுத்தல்
எக்குர வருக்கு மியல்பதாம் ஞான
வெழிற்பெருந் தேசிக குருவே. (ரு)

---

யாழ்ப்பாணம் கதிர்வேல் நாவலரவர்கள் குமாரர்

## திருநாவுக்கரசுபிள்ளை அவர்கள் இயற்றியது.

249 பொன்னி வளமுறு நன்னா டதனில்
திருவமர்ந் துறையுந் தருமையம் பதியில்
மருக்கிளர் சோலைத் திருக்கயி லாய
பரம்பரை யதனில் வரம்பினற் றவத்தான்
வான முறுபுகழ் ஞானசம் பந்தன்
சைவ மாதவர் தழைத்தினி திருப்ப
நாடற் கரிய கூடற் பிரானைக்
கையகத் திரீஇக் காட்சிசால் திருத்தளி
நாட்டுவித் தனனே நாட்டுவித் தனனே
அத்திருத் தளிதனில் அமர்ந்துள குரவர்
நல்லுரை பெற்ற செல்வர்கள் தாமே
சமயந் தழைப்பச் சமைத்தனர் மடங்கள்
இங்ஙன நாட்டிய வெழிலுறு மடங்கட்குத்
தலைமை யாயது தலைமை யாயது
தருமையம் மடமே தருமையம் மடமே
செந்திற் பதியார் கந்தன் றிருவருள்
கைவரப் பெற்ற சைவப் பெரியராம்
குமர குருபரர் குருவருள் பெற்றே
பண்டார மும்மணிக் கோவை பகர்ந்தனன்
என்னில் யாம்புகழ்வ திகழற் பாற்றே
யித்தகை வாய்ந்த மெய்த்தகை மடந்தனக்
கறிவின் குரவனா யமர்ந்தினி திலகுறூஉம்
சுகுணமார் பெரியோய்! சுப்பிர மணிய
தேசிக! மாசிலா தேவே! நாவலர்
புகழும் நன்மை பொருந்திய புனித!
எண்மையே னியம்பு மிழிவுரை கேண்மோ

கதிரை வேற்பிள்ளை கண்ணிய தவத்தான்
பிறந்தனன் பின்றை யறந்தனக் கென்றே
மாசிலா மணியார் மாண்புற வளர்த்தனர்
ஆரியம் ஆங்கில மருந்தமிழ் பயின்றேன்
வித்துவப் பட்டம் வேண்டினன் பெறுமார்
நாவலர்கல் லூரியில் நாலாண் டிருந்தனன்
சிற்சில தடையால் சிதம்பரம் விட்டு
ஐயா றதன்மிசை யண்மினை னிந்நாள்
வடமொழிக் கல்லூரியில் வந்துசேர்ந் தனனியான்
உணவு முறையுளும் உதவுவர் கல்லூரிப்
பொருள்காப் பாளர் புத்தக முதலிய
பெறுதற் கேற்ற பிறங்குநிலை யின்றே

அதனால்

சமயஞ் சாத்திரம் சைவஞ்செய் தவத்தான்
வந்து தோன்றிய நந்தலில் குரவ!
இப்பெரு மூன்றுநீஇ யுய்வகை பெறுமார்
ஏழையேற் கருண்மதி யேழையேற் கருண்மதி
எம்போன் றோர்க்கே யீந்தருள் புரிந்து
நச்சினர் தமக்கும் நடுக்குற் றோர்க்கும்
அச்ச மொழித்தே யகவிரு ளகற்றி
நாட்பல கழிய நீநன்று வாழியரோ. (க)

---

திருநெல்வேலி இந்து கலாசாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

மே. சொ. சுப்பிரமணிய கவிராயரவர்கள் இயற்றியது.

250
சீரார்கயிலைவரைநீத்துத் திகழுஞ்சனகாதியர்பொருட்டா
ஏரார்வடபாற்கல்லாலி லிருந்தகுருவேதென்பாலும்
நாராரடியார்க்குபதேசம் நல்கத்தருமைவருமுன்னைப்
போராசையிற்சுப்பிரமணிய பெருமாவணங்கவந்தேனே. (க)

251
கல்லாலாதிகரந்துலகிற் கருணையுடனேயுபதேசம்
எல்லாவுயிர்க்குஞ்செயத்தருமை யிருந்தாயென்றுசொலக்கேட்
சொல்லார்ஞானசம்பந்த வுன்னைக்கண்டுதுதித்தலுமே [டேன்
கல்லாலாகிமடமிருந்த காட்சிகண்டின்புற்றேனே. (உ)

252
கங்கையுடனேபணியணியுங் கண்டேன்குறைந்தமதிநீத்துப்
பங்கமறநீநிறைமதிகொள் பரிசும்ஞானசம்பந்த
துங்கமுறுசுப்பிரமணிய தூயோயறிந்துன்னடிபணிந்தேன்
அங்கட்கருணைகொண்டென்றும் அடியேன்றனக்கிங்கருளுகவே.

---

அமராவதிபுத்தூர்

வயி. நாக. ராம. அ. இராமநாதச்செட்டியார் அனுப்பிய

## திருப்பணி விண்ணப்பக் கவிகள்.

253 திருக்கயிலா யத்திருந்து வந்தபரம்
பரையாகிச் சிவஞா னத்தின்
பெருக்ககலாத் தருமபுரத் தெழுந்தருளிப்
பெரியர்குழாம் பெரிதும் சூழக்
குருக்கிளர்எம் சொக்கலிங்கம் பதந்தொழும்சுப்
பிரமணிய குருவே நீநெஞ்
சிருக்கையிலெங் களுக்குமொரு குறைவருமோ
சுகக்கடலில் இருக்கின் றேமால். (க)

254 துஞ்சாத புகழ்மதுரை மீனாட்சி
யிறைசோம சுந்த ரேசர்க்கு
எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி
பொருட்செலவால் இயற்றி யுள்ளோம்
அஞ்சாத படியிருபத் தெட்டாண்டு
கமிட்டியினில் அரசு செய்தேன்
செஞ்சாலி வயல்அமரா வதிபுத்தூ
ரினிற்பிறந்து சிறந்துள் ளேனால். (உ)

255 திருவாத வூர்கண்ட தேவிதிருப்
பரங்குன்றம் திருப்புத் தூர்பொன்
ஒருவாத விருத்தகிரி திருவாப்ப
னூர்ஒற்றி யூர்கே டென்றும்
மருவாத கானப்பேர் காழிவ
டகம்அமரா வதிமுன் னாகப்
பெருவாரி சிவஸ்தலங்கள் திருப்பணிசெய்
தேம்தருமைப் பெருமை வேந்தே. (ங)

256 மாவடுவின் வகிரனைய கண்ணிசிவ
காமிமணா வாளன் செம்பொற்
சேவடியை நாடோறும் அன்போடு
பூசிக்கும் சிறப்பு வாய்ந்த
ஆவடுதண் டுறைமடத்திற கதிபதிஅம்
பலவாணர்க் கன்பு பூண்டேன்
நாவடுவில் லாதகவி அ. இராம
நாதன்என்பேர் நவில்மர் மாதோ. (௪)

257 நல்லவன மூலைக்கருணைச் சௌந்தரநா
யகிகேள்வன் நாடு போற்றும்
பல்லவன நாதனுறை பழங்கோயில்
மிகப்புதிதாய்ப் பண்ணு வித்தேம்
தொல்லைவளம் பெறுந்தரும புரத்துறைசுப்
பிரமணியத் தோன்றல் கட்டி
வெல்லமெனத் தரும்அடியேன் விண்ணப்பம்
கேட்டருள வேண்டு மாதோ. (௫)

258 வேயூரும் பச்சிளங்தோட் கன்னிஅப
யாம்பிகைக்கும் வேத மோதும்
மாயூர நாதருக்கும் குமரவே
ளுக்கும்வையம் மதிக்கச் செய்த
தீயூரும் மறைவேள்விப் புகைமலியும்
கும்பாபி ஷேகங் கண்டு
மீயூரும் சடைமுடியோய் கூட்டத்துன்
னையும்தொழுது மீண்டேன் மாதோ. (௬)

259 திண்ணியவெள் விடையூரும் திருக்கடவூர்
மயானத்துத் தேவ தேவன்
புண்ணியநற் கும்பாபி ஷேகமுங்கண்டு
உள்ளமிகப் பூரித் தேனால்
மண்ணியலொண் மணியனையாய் கயிலாசம்
பிள்ளையெல்லாம் வழங்கக் கேட்டேன்
எண்ணியவா றுபகரித்தால் இன்னமிகச்
சிறப்பாக இருக்கு மாதோ. (௭)

260 காவிரிதண் கடலோடு கலக்குமிடத்
திருந்தமுக்கட் கடவு ளார்க்கும்
நாவிரியும் தமிழ்க்கரசாம் அகத்தீசர்
தமக்கும்மிக நயந்து செய்த

தீவிரியும் கும்பாபி ஷேகமுங்கண்
டேன் அதற்குச் சிரத்தை யோடு
நீவிரியும் படிஉய்த்த அபிஷேகத்
திரவியந்தான் நிகழ்த்தற் பாற்றே. (அ)

261 பூதலத்தில் ஓர்இருநூற் றெழுபத்து
நான்கென்னப் புகலு கின்ற
சீதளத்தண் பொழிற்பாடற் சிவஸ்தலத்திற்
பெரும்பாலும் தெரிசித் துள்ளேன்
காதலித்துத் தொழும்இருபத் தேழுநின்கோ
யிலும்பலகாற் கண்டு போந்தேன்
ஆதரவற் றுக்கிடக்கும் அவைகளைநான்
நாவொன்றால் அறைய'லாமே. (௯)

262 இடிந்ததிரு மதில்கள்தான் எத்தனையோ
செடிகளின்வேர் இறங்கிச் சாய்ந்து
மடிந்ததிருக் குளங்கள்தா னெத்தனையோ
வௌவாலின் மலத்தால் மேடு
படிந்ததிரு மாளிகைதா னெத்தனையோ
சுதையெல்லாம் பாழாகிப் போய்
ஒடிந்தசிலை மலிந்ததிருக் கோபுரந்தா
னெத்தனையோ உரைப்ப தம்மா. (௰)

263 இருட்டுகின்ற மண்டபந்தா னெத்தனையோ
பத்தியுடன் இறைஞ்சு வாரை
வெருட்டுகின்ற கருங்காடும் செடியும்நெரிஞ்
சியுர்முளைத்து விளக்கில் லாமல்
இருட்டுவினைக் காகின்ற பிராகார
மெத்தனையோ ஜகத்தைச் சுற்றி
உருட்டுகின்ற அருட்டிருசசக் கரமேந்தித்
தருமபுரத் துறையும் தேவே. (௰௧)

264 பாராண்டு ஜெயங்கொண்ட சோணாட்டு
வேந்தர்கள் கும்பாபி ஷேகம்
நீராண்ட சடையார்க்கு நாடோறும்
செய்தன்றோ நெடிது வாழ்வார்
சீராண்ட தருமபுரத் தரசேநின்
கோயிலெல்லாம் திருந்தப் பண்ணி
ஓராண்டுக் கொவ்வொன்றாய்ச் செய்தாலும்
கீர்த்திமிக ஓங்கு மாதோ. (௰௨)

265 கருமைக்கு வெள்ளையினைக் கரைத்தடித்து
நீர்வர்ணங் காட்டிச் சும்மா
பெருமைக்குக் கும்பாபி ஷேகம்செய்
வதுநின்போற் பெரியார்க் குண்டோ
இருமைக்கும் நலமாக ஏதேனும்
திருப்பணிசெய் தியற்றில் நன்றாம்
தருமைக்கு வேந்தேசுப் பிரமணிய
குருவேசெந் தமிழ்வல் லோனே. (௯௩)

266 படமொன்றும் அரவசைத்த பரமர்திருக்
கோயிலெல்லாம் பணிசெய் கின்ற
திடமொன்றும் நகரத்தார் மாயூரம்
கும்பாபி ஷேகந் தொட்டு
மடமொன்றும் அதிகார வரம்புள்ள
கோயில்செய வரவே மாட்டார்
குடமொன்றும் முனியனையாய் தருமபுரத்
தினைவாழ்வு கொண்ட தேவே. (௯௪)

267 பொருளைச்சே கரித்துவைத்த வீரப்பன்
குபேரனையே போலும் சீமான்
அருளைச்சே கரித்துவைத்த மாயூரம்
கோயில்பணி ஆற்றி யன்றோ
இருளைச்சே கரித்துவைத்த கண்டர்அருட்
சமாதியினில் எய்தி வாழ்வான்
தெருளைச்சே கரித்துவைத்தோய் திருப்பணிபோல்
உயிர்க்குறுதிச் செயல்வே றுண்டோ. (௯௫)

268 ஆதலால் மீண்டும்உன தடிகட்கு
விண்ணப்பம் அறைவேன் நன்மைக்கு
ஈதலால் ஒருகுறையும் எய்தாது
வளம்சுரக்கும் என்பர் மேலோர்
காதலால் நின்கோயி லனைத்தையும்நீ
யேதிருத்திக் காண்பா யானால்
ஈதலாற் புண்ணியமும் புகழும்வே
றிலைஊழிக் கிருப்பாய் மாதோ. (௯௬)

269 எண்ணற்கு மரியபுகழ்க் குமரகுரு
பரமுகில்வந்து இறைஞ்சிப் போந்து
விண்ணிற்கு மரிதாய கவியமுதம்
பொழிதருமை வேந்தே சேந்த

வண்ணப்பொன் னனையவடி வுளகுருகப்
பிரமணிய வள்ளால் இந்த
விண்ணப்பங் கண்டருளி விரைந்துவிடை
வரைந்தருள வேண்டு மாதோ. (௰எ)

270 என்போல்வார்க்கு அஞ்ஞான இருளகற்றி
ஒளிபரப்பும் இரவி யான
நின்போல்வார்க்கு ஒன்றைஎடுத் துரைத்திடல்உத்
தமசிடர் நிலையன் றேனும்
மின்போல்வார் சடையுடையான் அபராதம்
வருங்கொலென விண்ணப் பித்தேன்
பொன்போல்வார் செறிதரும புரத்தரசே
குற்றமெனில் பொறுத்தாள் வாயே. (௰அ)

271 கருப்பறிய லூர்வேளூர் ஐயாறு
நள்ளாறு காழி மாமன்
திருப்பறிய லூர்பனந்தாள் விழனகர்பே
ரளம்எறிச் சென்றால் வெள்ளிப்
பொருப்பறிய லாந்திருக்கற் குடிதிருக்கோ
ளிலிஆச்சா புரம்குத் தாலம்
கருப்பனெரி புகுங்கொறுக்கை திரிபுவனம்
தருமபுரம் கடவூர் மன்னோ. (௰௯)

272 கருங்குயினா தன்கோயில் வள்ளலார்
கோயில்மணங் கமழ்கா வெங்கும்
அருங்குயினா தம்புரியும் திருநின்றி
யூர்கடலின் அலைநீ ருண்டு
பெருங்குயினா தஞ்செய்யும் திருமுல்லை
வாயில்பொன்னிப் பெருநீர் வெள்ளம்
நெருங்கெயில்சூழ் விசுவநா தன்கோயில்
மணக்குடியின் நிகழ்த்தின் மாதோ. (௨௰)

273 திருவாரூர் இராஜாங்கக் கட்டளைசென்
றடையாத செல்வ மோங்குந்
தெருவாரும் சிராப்பள்ளி மலைக்கோட்டைக்
கட்டளையிச் செகத்தோர் போற்றுந்
திருவாரும் இடைமருதூர்ப் பிச்சைக்கட்
டளைபொன்னித் தென்பால் மன்னி
மருவாரும் புகழ்மாயூ ரங்குமர
கட்டளையும் வயங்கு மாதோ. (௨௧)

274 தருமத்தே விருப்புடைய தருமபுர
வேங்கேமேற் சாற்றி வைத்த
இருபத்தேழ் கோயில்களும் இருபத்தேழ்
தாரகையாய் இருப்ப மிக்க
பருவத்தே தோன்றுகின்ற பூரணமா
மதியாகிப் பாரி லுள்ளோர்
துருவத்தே வுடன்வைத்துப் போற்றஎல்லாத்
திருப்பணியுந் தொடங்கு வாயே. (உஉ)

275 என்பாட்டுக் கொருவிடையு மில்லாமற்
கல்லாலி னிறையே போன்று
நின்பாட்டுக் கிருந்தனையம் முனிவரைப்போற்
குறிப்பறியும் நிலையெற் குண்டோ
முன்பாட்டுச் சுவைகேட்க ஆருயிரீந்
தாருமுளர் முளரிக் கோயிற்
றென்பாட்டு வண்டினங்கள் செறிபொழில்சூழ்
தருமபுரத் தினில்வாழ் வோனே. (உ௩)

---

[illegible]

[illegible] ।

276
[illegible] ।
[illegible] ॥

277
[illegible]
[illegible] । [illegible]
[illegible] ॥ ॥௨॥

278
[illegible] ।
[illegible] ॥௩॥

279
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍁𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌸𑌨𑍍 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌦𑌿𑌦𑍇𑌶 𑌮𑌯𑌿 ॥ ॥௪॥

280
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌂 𑌶𑍍𑌰𑍀𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 ।
𑌪𑍍𑌰𑌵𑌿𑌤𑌾𑌗𑌮𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑌜𑍍𑌞𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑌤𑌂 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌂 ।௫।

281
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌨𑌿𑌜𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍁𑌰𑍁𑌦𑍇𑌶𑌿𑌕𑍇 ।௬॥

282
𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌥𑍇 𑌵𑌿𑌧𑌿𑌵𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌂 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌮𑍇𑌵
𑌨𑌯𑌨𑌾𑌮𑍃𑌤𑌮𑍍 । 𑌵𑌿𑌜𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌗𑍁𑌰𑍁𑌦𑍈𑌵𑌤𑌂 𑌸𑌦𑌾
𑌹𑍃𑌦𑌯𑌸𑍍𑌥𑌂 ॥ ॥௭॥

283
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌗𑍁𑌰𑍁𑌵𑌰𑌂 𑌸𑍁𑌖𑌦𑌂 ॥ 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍁𑌰𑍁𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥ ॥௮॥

284
𑌶𑍍𑌰𑍀𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌗𑍁𑌰𑍁𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌵𑌂 𑌗𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 ॥ ॥௯॥

285
𑌶𑌿𑌵𑌾𑌗𑌮𑌪𑌠𑌿𑌤𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀 ॥௧௦॥

286
𑌵𑌿𑌹𑌾𑌯 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑌂 𑌵𑍃𑌷𑌭𑍇 𑌸𑌾𑌨𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 ।
𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌸𑌾𑌧𑌨𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌿𑌤𑌤𑌮𑍍 ॥௧௧॥

𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾 ।

சென்னை அரசாங்க மந்திரியும், நியாயவாதியும், தொண்டைமண்டல
வேளாளகுல திலகரும் நம் சோணாட்டிற் றோன்றியவருமாகிய
செல்வச் சிரஞ்சீவி ஆனரபிள்

**S. முத்தையா முதலியார் B.A., B.L., அவர்களுக்கு,**

திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
திருக்கூட்டத் தம்பிரான்கள் சார்பாக ஷை திருக்கூட்டத்
தம்பிரான்களிலொருவராகிய ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான
வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை

**இராமலிங்கத் தம்பிரான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம்**

திருவுளப்பாங்கின்படி எழுதி வாசித்துக்கொடுத்த

# வரவேற்பு வாழ்த்துப் பத்திரம்.

287 பொன்னாட்டவரு நன்னாடெனப்புகழ்
தென்னாட்டி னில்வளந் தேசு றவிளங்குஞ்
சோணாடென் னுந் தொல்பதியதனிற்
சேணுறவோங்கும் செவ்வியசோலைசூழ்
திருக்கிளர்ச்சேரி செய்தவமுதிர
மருக்கிளர் தொண்டை மண்டல வேளாண்
மரபதன் மேன்மை மண்டல மோங்க
வரமதா னுதித்த வள்ளல் முத்தைய
சென்னைநன் னகர்வாழ் சீருயர் மன்றத்து
நன்னயமாக நியாயம் வாதித்த
நின்னயங்கண்டு நீணிலத் துள்ளோர்
உன்னையே நாடி உவந்தனர் நிற்கத்
தன்னிக ரில்லாச் சாமர்த்தி யத்தைக்
கண்டனர் கண்டு களித்திடப் பின்னும்
விண்டனர் நின்புகழ் விண்டல மட்டு
முன்னா ளிராசாங் கத்தினி லளித்த
சின்னஞ் சிறுசீர் திருத்தந் தன்னிற்
றஞ்சை ஜில்லாச் சனங்களுக் குள்ள
வாஞ்சை தன்னை வாதித் திடவே
சட்ட சபைக்குத் தக்கவர் மூவருள்
இட்ட மிகுந்தே யிரண்டு தடவையுஞ்
சந்தேக மின்றித் தங்களை அனுப்பிட
இந்துவாழ் சடையெம் மிறைவ னருளா

னீர்வள நிலவள நிதிவள முதலிய
பார்வளக் குறையெலாம் பண்புட னோதி
கிஸ்தியைக் குறைக்கக் கிளர்ச்சிகள் செய்தனை
சொஸ்தியாய்த் தூங்கிய சுயநலப் புலிகள்
செட்டில் செய்த செட்டில் மெண்டைத்
திட்டஞ் செய்யச் சிரம மெடுத்தனை
கட்டம தென்றுங் கைவிடா தின்னுஞ்
சிட்டர்க ளுடனே சேர்ந்துழைத் திடுநாட்
டோர்த்தன ராய்ச்சில ரார்ப்பரித் தெழுந்து
தோற்பன செய்யத் துஜங்கட்டி நிற்க
இதுவெலா முகைத் தியற்கைய தென்றே
முதுமொழிக் கரும முயற்சி கைவிடாது
இந்தியர்க் களித்த இராசாங்கத் தந்திர
மந்திரிப் பதவியை மனமுவந் தேற்று
மனச்சாக்ஷிப் படியே வள்ளனீ நிற்கமுன்
இனக்கக்ஷி யாளர்க ளேதேது புகலினும்
நன்மையே செய்யு நல்லுணர் வுடனே
தின்மையொன் றறியாத் தென்னாட் டவர்க்கு
எதுவெது செய்ய இயலுமோ வதையெலா
மிதுவே சமையமென் றிசைவுடன் புரிந்து
கொண்ட கொள்கையின் கோலம் விடாது
திண்டிற லுடனே தீரமாய்ப் புரிவாய்
எண்டெள மெண்டெனு மிசைவிலாச் சட்டங்
கண்டபி னதனைக் கண்டித் தனைநீ
இப்போ தாவ திசைந்தஉன் சகாக்கள்
தப்பிதஞ் செய்ததைச் சமயத் துணர்த்தி
மடமுதற் பதியா மற்றதே வாலயத்
திடமுள தருமத் தாபனச் சொத்தை
எடாதி ருந்திட விசைத்துன் கவர்ண்மெண்
டடாது செய்யா தறிவிக்க வேண்டுங்
குடிகளைக் கெடுக்குங் குடிகள் சாராய
முடியு மளவில் முயன்றதை யொழிப்பாய்
இத்தனை செய்கையு மியற்றிட வல்ல
முத்தைய நாம முதன்மையோய் வருக
சேக்கிழார் மரபின் செவ்வியோய் வருக
தாக்குத லில்லாத் தகமையோய் வருக
தொண்டை மண்டலத் தோன்றலே வருக
கண்டவர் கனிவுறுங் கருணையோய் வருக
திண்டிறற் செல்வச் சீமான் வருக
வண்டிறல் வாய்மை வாக்கோய் வருக

தந்திர மந்திரிச் சமர்த்தோப் வருக
தேசஞ் செழித்திடச் செய்வோய் வருக
நேச மிகுந்திடு நினைவோய் வருக
வருக வருக வளர்தரு மைக்குத்
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந்
திருநகராக அரசு வீற்றிருக்கு
மெங்க ளாதீனத் திசைநந்தி மரபாந்
திங்க ளணிந்திடுஞ் செஞ்சடை மூர்த்தி
தான்மெய் கண்ட சந்தான வழியின்
வான்புகழ் ஞானப் பிரகாச தேவ
ஞான சம்பந்த சற்குரு ராயனின்
தான சம்பந்தத் தலமாந் தண்பொழிற்
செண்ப காடவியுஞ் சேணுயர் சநதனக்
கண்கவர் வில்வக் கானகத் தழகு
மெப்புலத் தவர்க்குந் திப்பியம் பயக்கும்
மெய்ப்பதித் தருமைச் சுப்பிர மணிய
ஞான சம்பந்த நற்றவக் குரிசிலாய்
ஆதீ னத்தமர் அருட்குரு வுடனுஞ்
சுவாதீ னத்திருக் கூட்டத் துடனும்
கண்டு களித்துக் கலந்தினி திருந்து
இண்டை சூடு மெம்மிறை மதுரைச
சொக்க நாதன் றாமலர்த் திருவடி
மிக்க வாதரவுடன் மிகைபட வணங்கி
வரம்பல பெற்று வாழ்ந்திட வருக
ஞான சம்பந்த னன்மலர்க் கழல்க
ஹீன சம்பந்த மிலாதிடப் போற்றி
பன்னாள் வாழ்ந்து பாரம் பரியமாய்
மன்னர்கள் மெச்ச மகிழ்வுடன் வாழ்க
திடசரீ ரத்துடன் செல்வச் சிறப்பு
மீடம்பொரு ளேவல் எல்லாப் பெருமையு
நலமுடன் பெருகி நன்மையாய் வாழ்க
வாழ்க வாழ்க சற்குரு வாழ்க
வாழ்க அடியார் வளர் திருக் கூட்டமும்
வாழ்க அந்தண ராணிரை வானமும்
வாழ்க வாழ்க வளர்சை வத்துறை
வாழ்க வாழ்க மன்னவர் பெருமான்
வாழ்க சட்ட சபையு மந்திரியும்
வாழ்க எஸ் முத்தையா முதலியார்
வாழ்க மற்றுள மன்பதை யுலகே.

திருஞானசம்பந்தக்குரவர் திருவடி துணை.

சென்னை அரசாங்க மாஜி சட்ட மெம்பரும் பிரபல நியாயவாதியும்,
அந்தணகுலதிலகரும் ஆகிய ஸ்ரீமது ஐயரவர்கள்

# ஸர் C. P. இராமசாமி அய்யர் K. C. I. E.
# அவர்கள்

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்திற்கு மாட்சிமைதங்கிய
மைசூர் மகாராஜா அவர்கள் மனமுவந்தனுப்பிய
மகாராஜாவின் திருவுருவப்படத்தைத் திறந்துவைக்க
விஜயஞ்செய்தகாலத்து
தருமபுரம் ஆதீனம் திருக்கூட்டத்தம்பிரான்கள் சார்பாக
திருக்கூட்டத்தம்பிரான்களில் ஒருவராகிய ஷை ஆதீனத்துக்குச்
சொந்தமான வேளூர் தேவஸ்தானம் கட்டளைவிசாரணை

## இராமலிங்கத் தம்பிரான்
## ஸ்ரீ-ல-ஸ்ரீ
## மகாசன்னிதானத்தின்

திருவுளப்பாங்கின்படி வாசித்துக்கொடுத்த

## வரவேற்பு வாழ்த்துப் பத்திரம்.

288 பூவினிற் பொலிவுறும் பொன்னக ரென்னக்
காவிரித் தண்புனற் சங்கையொத் திலங்கச்
செய்வள நிறைந்த தென்னா டதனில்
உய்வகை பெற்றெவ் வுலகமுங் களிக்கத்
தெய்வத் திருவருட் செகமெலா மோங்கத்
திருக்கை லாயத் திருப்பரம் பரையிற்
றருமையம் பதியைத் தலைநக ராகத்
திருவருட் செங்கோற் செலுத்திட வமர்ந்த
சற்குரு ஞான சம்பந்தப் பெருமான்
அருள்பெருந் தோன்ற லாறது வாகுந்
திருஞான சம்பந்தத் தேசிகன் றனில்
அருள்பெறுஞ் சீடரு ளருள்வடி வாய
சம்பந்தசர ணாலய முனிவரர்
ஒப்புயர் வற்றெவ் வுலகமுஞ் சிறக்கக்
கல்விநல் லருளுங் கருணையுந் துறவு
மொழுக்கமும் பொறையு மோங்கமெய்ந் நிட்டை

விழுப்பமு மெய்தி மேவிடு மந்நாட்
பொன்னிநன் னதிபுகப் புண்ணிய நிறைந்து
நன்னதி யாவு நல்கிடச் சிறக்கு
மலைவள மண்வளம் வனவள மெல்லா
மோங்கப் பொலிந்திடு முத்தம நாடதா
மைசூ ராசரா மாபெரும் பூபதி*
சைவ முதற்பல சாத்திரக் கேள்வியால்
உய்வகை யுணரு முணர்வுமீக் கூர்ந்து
மன்றபொன் றமைத்து மாபெருஞ் சமயத்
தலைவர்கள் யாரையுந் தன்மையோ டழைத்தனர்
அப்போ தெங்க ளருட்குரு மூர்த்தியு
முப்பொருள் தெளிந்த முனிவரர் தம்மைச்
சென்று வரவெனத் திருவருள் புரிந்தனர்
ஆசா னருளிய வருண்மொழிப் படியே
சென்றுமுன் மைசூர் சிரர சவையிற்
பற்பல தேசப் பாஷைவல் லுநரும்
விற்பனக் கவிதை மேவுநற் கவிகளுந்
தர்க்க வியாகரணத் தன்மையோர் பலரு
நீதிநூற் கற்ற நியாயவா திகளும்
ஓதுபல் சமயத் துண்மைகண் டோரும்
இன்னதன் மையர்பல ரீண்டிய குழுவில்
நின்றவர் வியப்புற நிமலன்வீற் றிருக்கக்
கண்டன ராசர் கவின்பெருந் துறவைக்
கொண்டனர் மனதிற் குறிப்பிற் புகழை
எண்டிசை புகழு முனிவரர் வண்ணம்
அண்டங் காக்கைபோல் யாவிர் நீரென்ன
மண்டலத் தரசே யஃதலைம் யாம் நீர்
அண்டங் காக்கை யாகுவீர் தொழிலால்
என்றுரை யுடனே யியம்பினர் விநய
நன்மொழிச் சொன்னயம் நரபதி யுணர்ந்து
ஆன்றதொல் கீர்த்திச் சான்றோர் பலருடன்
முனிவரர் பெருமையை முழுது முணர்ந்து
தரும புரத்துறைஞ் சற்குரு மூர்த்திதன்
அருமைச் சீடர்க ளியாதுணர் வாரெனத்
தப்பிலா தவர்செயல் சாற்றிடர்க் கரிதா
மாயினுஞ் சிறிதே அறைகுவன் கேண்மோ

*1637-ம் வருஷம் பட்டத்திற்கு வந்த இரணதீரகந்தருவ நரசராஜ உடையார் அவர்கள். இவர் இப்போதிருக்கும் மகாராஜா அவர்களுக்கு 12-வது பாட்டனாரும், இவவரசவம்ச முற்றோன்றலாகிய யதுராஜவிஜய உடையார் அவர்களுக்கு 12-வது பேரருமாவார்.

முப்பொரு ளாய்வார் முத்தமி ழோய்வார்
எப்போ துஞ்சிவத் தின்பமே தோய்வார்
என்றனு மாச னின்புற் றெழுந்து
முனிவரர் தம்மை மும்முறை தொழுது
கனிவுறு நின்னருட் கட்டுரை யதனால்
மைசூர்க் கருளிய கைவேற் கடவுளின்
காந்த புராணக் கடலினி னமுதைத்
தோய்ந்தினி தருந்தச் சுருக்கித் தரவென
ஆகென முனிவர ரமுதநன் மொழியால்
கோவெனப் புலவோ ருச்சிமேற் கொள்ளக்
காந்தக் காதையைக் கவின்பெறச் சுருக்கிச்
சொன்னயம் பொருணயம் தூயமெய்ப் பத்தி
நன்னய முடன்பல நல்லிலக் கணமுந்
துன்னுற வமைத்துத் தூயமெய்ம் முனிவரர்
தந்தனர் அரசர் சந்தோ ஷித்துச்
சுவாமிகள் பிக்ஷை சூட்சம தறிந்து
உபாயமாய்ச் சுவாமிக ளுண்டிடச் செய்து
முனிவரர் விரும்புவ தியாதென வினவ
எமக்கென வென்று மியாதும்வேண் டிலம்யாம்
ஆயினு மருட்குரு அரனடி யார்கட்
கேய்வன வாக வினியதுன் பொருளென
விரும்பிடு பொருண்முதற் றிடம்பட அளித்தால்
ஆங்கவர்க் களித்து அகமகிழ் வோமெனத்
தாங்கவே வேண்டுவ தனமெலா மளித்துத்
தருமையம் பதிமுதற் சற்குரு மூர்த்திதன்
காதலத் தமர்ந்த கடவுண்மா மணியாஞ்
சொக்கலிங் கேசச் சுயம்புநா தற்குத்
தினமுமே பூசனை திறம்பட வியற்ற
வேண்டுவ வெல்லாம் விருப்புட னளித்தும்
ஆனைந் தினையாற் காட்டுதல் வேண்டிக்
கபிலைப் பசுபல கன்றுட னீந்துச்
சம்பந் தசர ணாலயர் தம்மைக்
குருவருள் கூடக் கூட்டி யனுப்பினர்
அந்நாள் தொட்டுப் பன்னாள் வரையிலும்
வருடந் தோறு மன்னவர் பெருமான்
கோதன முடன்பொருள் கொடுத்துவந் தனரே
அரசர் மகிழ்ந்திடு மம்முனி வரர்பின்
பரசிவா னந்தப் படிவமே யாயினர்
எனப்பல சரிதம் பலப்பலக் கூறு
மறிந்தவர் யாரு மறிந்தது மஃதே

இந்நாள் மைசூர் இராசாங் கத்தமர்
பொன்பொலி மவுலிப் பூபதி மகிழ்ந்து
சஞ்சீவி யின்றிறத் தன்மையோ வன்றி
மூன்றாட் டொடர்பின் முனிவர ருளோ
இந்நா ளமர்ந்திடு மெங்குரு வருளோ
ஞானசம் பந்த னற்றிரு வருளோ
எனப்பல ரிசைக்க விந்தனர் தம்படம்
அப்படங் கண்டநம் மருட்குரு நாதச்
சுப்பிர மணிய தூயநற் றேசிகர்
இப்புவி புரக்கு மிந்நா ளுவந்து
தக்கநல் லரசர் தந்தமெய் யுருவை
மிக்கவா தரவுடன் மேன்மையா யேற்றே
அரசரே யிங்குவந் தமர்ந்தன ரென்ன
ஆர்வமிக் கூர்ந்தே அன்புட னினைத்தே
ஆசிகள் கூறி அரசர்வாழ்ந் திடவே
பூசனை யாற்குப் புரிந்தத னோடும்
இச்செயல் யாரு மினிதறிந் திடவே
அரசர்நற் படமதை அலங்கரித் தினிதாய்த்
திறந்துவைத் திடவோர் சீர்த்தியர் தாமும்
யாரென மனதி லருளொடு நினைக்கத்
தக்கவர் பலருள் மிக்கதோர் கீர்த்திச்
சென்னைமா நகர்வாழ் சீர்மிகு தலைவருள்
உயர்குலத் துதித்திடு முத்தம ராகியும்
ஆங்கில மாரிய மருந்தமிழ் முதலா
ஓங்கிய பாஷைக ளுணர்ந்தவ ராகியு
நீதிமன் றத்து நியாயம்வா திப்பதில்
யாரு மிவர்க்கிணை யாகா ரென்னவும்
பிரசங்க மாரி பொழிந்திடும் பெருமையும்
அரசாங்க தந்திர அறிவினுண் ணறிவும்
பொருந்திய கௌரவப் புகழெலாங் கொண்டு
சென்னைமா காணச் சீர்கவர்ன் மெண்டில்
சட்டமெம் பருமாய்ச் சயம்பெற விருந்து
மிட்டமா யிப்போ திருந்திடு மெங்கள்
சர். சி. பி. இராம ஸாமிப் பெயரா
மய்ய ரவர்களை அன்புட னழைக்க
அவர்களும் வருதற் கார்வமோ டிசைய
முப்பது மொன்பது மிருபதி னெட்டா
முறையுள தேதிநன் மாதமும் வருடமுஞ்
செப்பும் பகல்நாண் மூன்றரை மணிக்கே
ஒப்புயர் வில்லா மைசூ ராசரின்

உயர்திரு வுருவப் படமதைத் திறக்கச்
செப்புநல் வளஞ்செறி திப்பிய தருமைச்
சற்குரு வாழுந் தரும மடத்திற்
பண்டாரக் கட்டெனும் பழம்பதி யதனின்
வைத்தே யாவரும் மகிழ்ச்சிமீ தூர
ஓதுவா ரெல்லா முயர்மறை யோதவுந்
திருக்கூட்டத் தாரெலாஞ் ஜெயஜெய வென்னவு
அந்தணர் பலப்பல வாசிகள் கூறவும்
இன்னிசைப் புலவர்கள் நல்லிசை பாடவும்
இங்கித மாம்பல சங்கீ தத்தொடு
வந்தவர் யாவரும் வாழ்த்துகள் கூறவு
மைசூர் அரசரின் மாண்புறுந் திருவுருப்
படமதைத் திறக்கப் பண்புடன் வருக
வருக வருக வளர்த ருமபுரம்
சென்னையம் பதிவாழ் செல்வனே வருக
நியாயவா தத்திற னிபுணனே வருக
அந்தணர் தம்மு ளருமையோய் வருக
ஆங்கிலர் புகழும் அறிவோய் வருக
பட்டாபி ராமப் பாலகா வருக
இராமஸா மியெனும் பேரனே வருக
தேசம் புகழ்பலச் செய்கையோய் வருக
செகமெலா மெச்சிடுந் திறனே வருக
ஆங்கில தந்திர மறிந்தோய் வருக
பொதுவா ழியஞ்செயப் பிறந்தோய் வருக
தேசம் பலப்பலச் சென்றங் கிருக்கு
முண்மையு முபாவு முணர்ந்தோய் வருக
எவரெவ ரெத்திற னெப்படி யுரைக்கினு
மவரவ ருண்மையு மறிந்தோய் வருக
இநகர் புரக்கு மெங்களா தீனத்
தரும புரமெனுந் தண்பொழி லிடமும்
ஆரூர் மதுரை யாகிய பதியுந்
தம்மிட மாக்கித் தனியருட் செங்கோல்
செலுத்திடுந் திருவருள் தெய்வ சிகாமணி
ஞானப்பிர காச ஞானசம் பந்தநன்
மாசிலா மணிப்புகழ் தேசிக ராயரும்
பேசிடுங் குருவருட் பிரபல வடியார
மொவ்வொரு வரும்வள ருயர்பதி யிதனில்
மைசூ ரரசரை மகிழ்ந்துதங் தருளு
நின்வர வதுவே நல்வர வாருக
அந்தண ரரசர் ஆனிரை வானமுஞ்

சந்தத மோங்கித் தழைத்திட வாழ்க
வாழ்க வாழ்க மைசூ ரரசர்
வாழ்க வாழ்கஅம் மன்னவர் சந்ததி
வாழ்க வையகம் வளர்தரு மைப்பதி
வாழ்க சுப்பிர மணியதே சிகருள்
வாழ்க மற்றடி யார்திருக் கூட்டமும்
வாழ்க சர். சி. பி. ஆரெனு மய்யரும்
வாழ்க மன்பதை மற்றுள வுலகே.

---

சென்னை அரசாங்க மாஜி சட்ட மெம்பரும் பிரபல நியாயவாதியும்
அந்தணர் குல திலகரும் ஆகிய
ஸ்ரீமது சர். C. P. இராமசாமி அய்யர் K.C.I.E. அவர்கள்
திருக்கைலாய பரம்பரை தர்மபுரவாதீனத்திற்கு மாட்சிமைதங்கிய
மைசூர் மகாராஜா அவர்கள் மனமுவந்தனுப்பிய
மகாராஜாவின் திருவுருவப் படத்தை
(30–9–28) திறந்துவைக்க விஜயஞ்செய்தகாலத்து ஷை தருமபுரம்
ஆதீனம் சந்தக்கவிராயரும் ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான
திருக்கடவூர் தேவஸ்தானம் பொருள் வரவு செலவாளருமாகிய
மு. சண்முகம்பிள்ளையால் வாசித்து
ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்தின்
திருவடித்தாமரைகளில் சமர்ப்பித்த

## வாழ்த்துப்பாக்கள்.

289 திருக்கைலைப் பரம்பரையிற் றருமைநக
ராதீனந் தன்னி லேயா
வருக்குமுயர் குருவாய திருஞான
சம்பந்தர் வதியு நாளில்
பெருக்கமுள திருவடியர் குழுக்களிலே
புகழன்பு நிறைகல்வி புத்திசீலம்
இருக்குமினந் தேடறிய வீசனடி
மறவாத விருத யத்தார். 1

290 இந்தவுல கதுசெழிக்க வதுளது
வெனமனதி லெண்ணி வேற்கைக்
கந்தனது புகழ்தனையே கருத்திருத்திப்
பூசனைசெய் காத லாளர்
பந்தமறுத் தாட்கொண்ட குருநாதன்
பதமிரண்டும் பரவி வாழ்சம்
பந்தசர ணாலயப்பேர் படைத்தவரே
மைசூராம் பதியி லேகி. 2

291 அரசன்மன முவந்தழைப்ப அவைசென்றே
அமைத்ததம தாச னத்தில்
பாவியிருந் திடும்பொழுது பார்வைக்கு
நிறங்கறுத்த பான்மை யாலே
விரசமொடு நீரண்டங் காக்கையே
யெனவேந்தன் விளம்புங் காலை
சிரசசைத்து நானலநீர் தானென்று
மதன்விவரம் சிறக்கச் சொன்னார். 3

292 சொன்னவர்தம் குணத்தினையும் நிறைகல்வி
மணத்தினையும் சுருக்கில் கண்ட
மன்னனவ ரிடத்திலதி பக்தியுடன்
மகிழ்ந்தவனை யிருக்கச் செய்தே
என்னபசு பதிபாசத் தியல்பெனக்கேட்
டுளந்தெளிந்தங் கீச னன்பர்க்
குன்னதமா கியகபிலைப் பசுக்கள்பல
உதவிசெயத் தருமை மீண்டார். 4

293 அன்றுமுதல் வெகுகாலம் சொக்கலிங்கத்
தபிஷேகத் தாமா னைந்து
நன்றுபல திரவியமன் றொட்டிருந்து
தந்துபெரும் புகழே பூண்டார்
சென்றசில வாண்டுகளாய்ச் சினேகமுறைக்
கிடையூறு சேர்ந்த தாலே
நின்றிருந்த ததனையுயர் சஞ்சீவி
யெனவுயர்ந்த பெரியோன் றன்னால். 5

294 மஞ்சூறு மாடமலி மைசூரின்
மன்னருக்கு மருங்கி லெங்கும்
செஞ்சாலி வளமிகுந்த திருத்தரும
புரமடத்துத் தேசி கற்கும்

அஞ்சாறு தலைமுறையா யகன்றிருந்த
நேசமதை யனுசச் செய்வித்
துஞ்சான்றாய் அவர்வுருவப் படமதனை
ஆதீன மனுப்பி வைத்தார். 6

295 அந்ததிரு வுருவபட மதையேற்றுக்
கொண்டதனை வைக்க வங்கே
தந்தவர்த மனமகிழத் தனது திரு
வுளமகிழத் தகுதி யுள்ள
இந்தியரில் எவருயர்ந்தா ரெனவெண்ணி
மறையோனாய் எழில்மிக் கோனாய்
முந்தியதோர் பொருத்தமிந்த இடத்தினுக்கு
முள்ளதொரு முதியோ னானோன். 7

296 தஞ்சைஜில்லா தனக்குயர்வு தரப்பிறந்த
தயவாளன் தாமார் மன்றத்
துஞ்சிறந்து புகழுடைந்தோன் உயர்சட்ட
சபைமெம்ப ராக உற்றோன்
மிஞ்சுபுகழ் சர்பட்டம் கே. சி. ஐ.
யீ. யுடனே மகிழப் பெற்றோன்
விஞ்சைமொழி புகல் C. P. இராமசா
மிப்பெயர்கொள் விசால ராலே. 8

297 வேந்தனருந் திருவுருவப் படமதனை
மடத்திலோ ரிடத்தி லேதான்
சேர்ந்திருக்க வவர் அருமைத்
திருக்கரத்தாற் றிறம்படவே திறந்து வைத்தார்
சார்ந்தபல பெரியோரும் சூழ்ந்திருக்கு
மவையதிலே சகல ஞானம்
ஆர்ந்தகுரு வாம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்ர
மணியகுரு அருளே வாழ்க. 9

தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருவையாறு
ஸ்ரீ தர்மாம்பிகை அம்பாள் பாலாலய கும்பாபிஷேகத்தின்பொழுது
ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடையூர் தேவஸ்தானம்
பொருள் வரவு செலவாளர்
மு. சண்முகசுந்தரம்பிள்ளையால் இயற்றிய

# பாலாலய கும்பாபிஷேக வைபவச்சிந்து.

### விநாயகர் துதி.

### வெண்பா.

298 மாலயனும் போற்ற மகிழ்தரும நாயகிபா
லாலயமுங் கும்பா வபிடேகம்—ஞாலமதில்
செய்தருளுஞ் செய்திதனைச் செந்தமிழாற் செப்புதற்கு
கையொருவைந் துள்ளவனே காப்பு.

### குருவணக்கம்.

299 அன்னமலி வயற்றருமை யம்பதியி லகிலவிரு ளகற்றும் பானு
என்னவெழுந் தருளியென திருதயம்விட் டகலாமே யிருந்தே ழைக்கிங்
கின்னபடி இதுபுத்தி எனவுரைத்திட் டெனையாண்ட வீச ஞான்
பன்னருஞ்சுப் பிரமணிய தேசிகனார் பதமிரண்டும் பணிதல் செய்வாம்.

### ஒயில்கும்மி வர்ணமெட்டு.

300 சீர்பர வுந்தரு மாம்பிகை மேற்கும்மி
செந்தமி ழோங்கித் தழைப் பதற்குச்
சிவனார்தரு மஞனார்கஜ முகனுமொளி பவனாகிய
செல்வக் கணபதி காப்பாமே. 1

301 தர்மசம் வர்த்தனி யம்பிகை மேற்கும்மி
தாரணி யெங்குந் தழைத்தோங்கத்
தனதத்தன தனதத்தன வெனநிர்த்தன மிடுமுச்சித
தங்கமயில் கந்த னைப்பணிவாம். 2

302 தென்றமிழ்நாடு தனிலிருபத்தேழு
தேவால யங்களை யாண்டுவரும்
தருமாபுர வருமாபெரு குருநாதனி னிருதாளினைத்
தலைமேற் கொண்டு துதிப்போமே. 3

303 அய்யாற்றி லேயறம் வளர்த்த நாயகி
யம்பிகை கோவில் திருப்பணியை
அதிதீவிர முடனேபல புதுமாதிரி யிடமேசெய
அந்தரங் கத்தில் நினைந்தாராம். 4

304 ஆரெனிற் றேவ நகர மதிலுள்ள
அன்பனும் சேவுகஞ் செட்டியாராம்
அணிகொள்தன வணிகர்க்குளே மணியிப்பெரு பணியைச்செய
ஆவலுட னேமுன் வந்தாராம். 5

305 ஆண்டொரு பத்துடன் மூன்றுக்கு முன்னமே
ஆதீன கர்த்த ரவர்களிடம்
ஆரம்பம் தேறும்மதி காரம்பெறு வாரம்பதி
அம்மன் திருக் கோவிற் கானதெல்லாம். 6

306 ஐம்பதி னாயிர மேற்பொரு மானமே
ஆகுஞ் செலவுகள் செய்துபின்னர்
அம்பாள்தனை பாலாலய கும்பாவபி டேகஞ்செய
ஆனநன் னாளைக் குறித்திடவே. 7

307 குருக்கள் மார்களின் கூட்டங் களிற்சிலர்
கூடிக்கொண்டு பொருள் நாடிக்கொண்டு
குறையேவரு மெனவேபல முறையேசொலி விரைவாகவே
கோர்ட்டில் பிராது கொடுத்தாராம். 8

308 நெஞ்சுக்கு ஈரம தில்லாம லேயவர்
இஞ்சங் ஷன் நோட்டீ செடுத்தாராம்
நியாயம்மிது வாயென்றொரு பாயஞ்செய நாளின்றியே
நிறுத்தி விட்டாராம் பாருங்கடி. 9

309 வாதிகள் பிராது படியொரு தீர்ப்பினை
வாதிமுன் சீபுகொடுத் தாராம்
வகையாயிலை யெனவேசொலி மிகமேலுறு மதிகாரிபால்
வாதித்து அப்பீல் கொடுத்தாராம். 10

310 தீர்ப்பினை மாற்றியே தஞ்சை ஜில்லாசட்ஜ்
திருப்பணிக் கார்டர் கொடுத்திடவே
பார்ப்பார்சிலர் கோர்ப்பாய்பணம் சேர்ப்பாரென ஆர்ப்பாட்டமும்
பற்றிஐக் கோர்ட்டிலப் பீலும் செய்தார். 11

311 ஆதீன கர்த்த ரவர்கட்குத் தானெலா
அதிகாரமன்றியங் குள்ளவர்க்கு
யாதுஞ்செய லாகும்வகை யேதும்மிலை ஓதும்மென
ஐக்கோர்ட்டிலே தீர்ப்பளித்தாராம். 12

312 தீர்ப்பின்படியே பாலாலயமுஞ் செய்து
திருப் பணியைத் தொடங்குதற்கு
திருவாதியி லருமாதவ குருநாதனும் வரவேயெழு
தானத்திருவிழா தேர்ந்ததுவாம். 13

" வன்னத்திணைமாவைத்தெள்ளியே " என்ற வர்ணமெட்டு.

313 சத்த தலங்களுஞ் சுத்தியே—நம்பஞ்
சாபி கேசனிடம் பத்தியே—செயில்
சன்மம்விலகும்தரு முத்தியே—திருப்
பழனமோதன வனமும்வேதியர் குடியுமேலயன் றலையுமே கொய்த.
கண்டியூரும் பூந்து ருத்தியே—நெய்
கண்டிடுதான மி ருத்தியே. 1

314 வித்தகனய்யாற்றி லே வர—மேல
வீதியிலெங்கினு மே யர—கர
சத்தமுமேயெழுசா கர—வொலி
தானெனும்படி வானடுங்கிட வேநெருங்கிய மாசனங்களின்.
கூட்டமும் பல்லக்கு மீ சுர—மான
ஆட்டமும் ப்ராகாசமுந் தர. 2

315 உத்தர வீதியில் வந்ததும்—போலீசு
உத்தியோகஸ்தர் நி றைந்ததும்—பாரா
சுத்தியே மற்றவர் நந்ததும்—அந்தத்
தெருவேவரு கிறபோதுநம் குருநாதனு மருகேவர
பார்த்துக் குதித்துக் கூத்தாடினர்—கை
கோர்த்துத் தேவாரங்கள் பாடினர். 3

316 இத்தரையில் முத்தி க்ஷேத்திரம்—அதை
யிருதயத்தெண்ணின மாத்திரம்—நமக்
கெல்லாப்பலனும்தருந் தோத்திரம்—மொடு
கோவிலுக்குள் போவதற்குமுன் பாவைபுட்ப மாலைபோட்டிடப்
போகும்போதுபார்க்கு நேத்திரம்—யென
லாகும் மதுவேயந்த சாத்திரம். 4

---

" வெள்ளிமலையொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு."

317 கும்பாபிஷேகம் செய்ய வேளை—பார்த்துக்
குறித்தார் வைகாசியிலே நாளை—அதற்
குற்றபல பாத்திரங்கள் மற்றெவையுஞ் சாத்திரத்தின்
படியாய்—வைத்தா—ரெடியாய். 1

318 கோவிலின் வடக்குப்பிர காரம்—கீழக்
கோடியிலே யாகசாலை ஓரம்—நல்ல
கொட்டகையுஞ் சுத்துப்பந்த லிட்டழகு மெத்தத்தந்த
தாக—செய்தா—ராக 2

319 நாற்புறமுஞ் சன்னல் வைத்த தட்டி—கட்டி
ஞர்கள் பல சித்திரமேல் கட்டி—அரு
கிட்டபல தொட்டியினீர் கொட்டியதி லாம்பலுடன்
கொட்டி—விட்டுக்—கட்டி 3

320 உன்ளை பரிவாரயாக    சாலை—அதில்
ஓவிய மெழுதி வைத்த    வேலை—கண்
ணுற்றவர்கள் நற்றவமே பெற்றனமென் பாரிதனை
பாரே—அமைந்த—சீரே. 4

321 மலையத்துவஜன் செய்த    வேள்வீ—இது
. மாதிரியிருக்குமென்று    கேள்வி—அந்த
மன்ன னம்பிகைபெறநான் சொன்ன தம்பிகை பெறவே
தானே—சொல்லு—வேனே. 5

322 நாலுபுறம் வேதியர்க    ளோதும்—வேதம்
நாலுமுகன் லோகமெயில்    மோதும்—தமிழ்
வேதமதை யோதுவர்கள் நாதமிரு காதவரை
நாடும்—புகழைப்—பாடும். 6

323 வேளூர் பனசை    மாயூரம்—பெரிய
மேளத்திசையினா    வாரம்—பியாண்டு
வாத்தியமுஞ் சேர்த்திருந்த நேர்த்தியதை பார்த்திடுவாய்
மானே—சொல்லு—வேனே. 7

324 வேதாரண்யத்தய்யா    பிரசங்கம்—டில்லி
விகடகவியாவரிலும்    சிங்கம்—அவர்
வேடிக்கையாய்ப் பாடினதும் கேளிக்கை போலாடினதும்
கண்டார்—மகிழ்ச்சி—கொண்டார். 8

325 சிங்காரத்தின்    சின்னமேளச்செட்டு—அதை
சொல்ல என்னாலாகுமோவாய்    விட்டு—பாத
சாத்திரத்தோடாடினதும் தோத்திரப் பாப் பாடினதும்
பாரு—கடவை—யூரு. 9

326 மலைக்கோட்டை    நாகநாதக்குருக்கள்—பெரிய
மைந்தனும் நமது அய்யாக்    குருக்கள்—ஆறு
சுப்பிரமணியக்குருக்கள் செப்பிய சாமாக் குருக்கள்
இவர்கள்—முன்னின்—றவர்கள். 10

327 எல்லாருஞ் சேர்ந்திருபத்    தொன்றும்—தேதி
ஈஸ்வரியை யாகர்ஷிக்க    நன்றும்—என்று
எகமனத்தோடிருந்து யாகமத்திலே யிருந்த
படியே—செய்தா—ரடியே. 11

328 பஞ்சாபிகேசக் குருக்கள்    வந்து—ரெக்ஷா
பந்தனஞ்செய்து    கொண்டாரிருந்து—தந்த
பத்தாறிலே ஜோடி வேட்டி பத்தா தென நாடிக்கேட்டுக்
கொண்டார்—வாயை—விண்டார். 12

329 திங்கள் முதலாக ஐந்து — காலம்—பூசை
தினமுநடந்து வரும் — சீலம்—அதனை
திண்ணமெது வாய்க்கெடுக்க எண்ணம் பெலமாய்க் குருக்கள்
பலரும்—வேறு—சிலரும். 13

330 ஐக்கோர்ட்டிலே மனுவைக் — கொடுத்தார்—தரும
அம்பாளைப் பேர்க்காதே யென்று — தடுத்தார்—அதன்
அர்த்தமதிகாரிகள் தப்பர்த்தமோ டெலாத்தடையும்
செய்தார்—சிலரும்—வைதார். 14

331 தாமதமிலாம லெங்கும் — விட்டார்—தந்தி
ராமலிங்கசாமி — புறப்பட்டார்—சென்னை
ஜட்ஜ் யிட்ட தீர்ப்பதனை தக்ஷணத்தில் மாத்தியங்கு
வந்தார்—கையில்—தந்தார். 15

332 நன்மையுள மாஜிஸ்டிரேட்டைக் — கேட்க—நூற்றி
நாற்பத்தி நாலுதனை — மீட்க—முடி
யாதெனவே வேதவேயப் போதுஎடி எம்மிடத்தில்
போனார்—சொல்ல—லானார். 16

333 தஞ்சைவக்கீல் கே எஸ் — சீனிவாச—அய்யர்
தந்தமனுக்காசராகிப் — பேச—அந்த
தாக்கலெல்லாஞ்சொல்லி வெகு சீக்கிரத்திலுத்தரவு
கேட்டார்—ஆர்டர்—போட்டார். 17

334 தக்ஷணத்திலபிஷேகம் — செய்ய—அவர்
தந்த வுத்தரவுதனைப் — பைய—அதி
காரிகள் பால் தந்துதவி கோரியே யெல்லாரும் சூழ
நின்றார்—பகையை—வென்றார். 18

335 ஞாயிற்றுக்கிழமையி — லனேகம்—ஜனம்
நாடவே — செய்தார்களபிடேகம்—இதனை
நாட்டிலுள்ளார் யாவருமே கேட்டுஆரவாரமே
செய்தாரே—உய்—தாரே. 19

336 சங்கமலி யூர்கடவை — வாசன்—முத்துச்
சண்முகச்சுந்தரக் கவி — ராசன்—சொன்ன
சந்தமதி லெந்தபிச குந்தவிர்ப்ப துங்களது
பாரம்—நமஸ்—காரம். 20

## கும்மி.

337 ஆர்வள ருந்தரு மாம்பிகை தேவியா
லாலய கும்பாபி ஷேகத்திலே
சீர்வள ருங்காரி யஸ்தர்கள் நேமகம்
செய்தவி தத்தையே பாருங்கடி. 1

338 கட்டளை மடத்தில் சன்னிதா னம்மிட்ட
கட்டளையைச்சிரமேலேகொண்டு
திட்டமாய் கார்பார் ராமலிங்க சாமி
தாக்கீது தாராராம் பாருங்கடி. 2

339 வேளூர் கட்டளை ராமலிங்க சாமி
வித்துவ ரெத்தின சிங்கமடி
மூளு மன்புட னெல்லாங் கவனித்து
முன்னே நிற்கிறார் பாருங்கடி. 3

340 குவளைக் கந்தசா மிச்சாமி யுந்திருக்
கூட்டத் தம்பிரான் மார்களெல்லாம்
கவனத் துடனுத் தாவத் தனையும்
களித்துச் செய் கிறார்பாருங்கடி. 4

341 தலத்துக் கட்டளைச் சாமியவர் குணத்
தண்மையைப்பாடியடிப்போமே
பலத்த துன்பங்க ளத்தனை யுங்கீழ்
படுத்திநிற் கிறார்பாருங்கடி. 5

342 ஒடுக்கம் குமாரசாமித் தம்பிரானும்
ஓர்புறம் பெட்டி யுடனிருந்து
விடுக்கும்சீட்டு க்கும் வாயுத்தாவுக்கும்
வித்தம் தருவதைப் பாருங்கடி. 6

343 முத்தையா செட்டியார் நிர்வாகம் செய்கிற
முறையைப்பாரடி தோழிகளே
புத்தியறிந்து தெரிவித்துப்பக்கத்தில்
புகழ்ந்துநிற் கிறார்பாருங்கடி. 7

344 முத்துக் குமார சாமிமுத லியாரு
முகத்தி னோக்கம தையறிந்து
சுத்தியுள் ளார்களுக் குத்தாவுசெயுஞ்
சுகத்தைப் பாரடி தோழிகளே. 8

345 கோர்ட்டிற் கேஜண்டு சுந்தரே சய்யரும்
குறித்த யிரங்கி தேதியிலெக்ஸ்
பார்ட்டி தீர்ப்பினை மாத்திவந்தார் புகழ்
பாடிக்கும்மியடிப்போமே. 9

346 சங்கரய்யருடன் வெங்கட்டராமய்யர்
சார்ந்த யிரண்டுபிராமணர்கள்
எங்களைப் போன்றவர்க் குத்தரவுதினம்
எழுதிவைக் கிறார்பாருங்கடி. 10

347 பாருநடேசமுதலியா ரென்பவர்
பையார்டர் போட்டுத் தரச்சீட்டு
ஆருக்கு வேண்டு மானாலுங்கொடுத்திட
அருகில்நிற் கிறார்பாருங்கடி. 11

348 மீனாக்ஷிசுந்தர முதலியார் பண
முடிப்புங் கையில் குறிப்புடனே
மானேஜ் செய்யுங்கார் பார்சாமி சொல்படி
மகிழ்ந்துதாராராம் பாருங்கடி. 12

349 அட்டவணை முத்துப்பிள்ளை யறையிற்செய்
அரேஞ்சு மெண்டையும் பாருங்கடி
தட்டுபட்டசாமான்யில் லையென்னுமலே
தருவித் துத்தரார் பாருங்கடி. 13

350 கடவை வெங்கட்ட சுப்ரமணி யய்யர்
காலஙகளைக் கவனித்து யிந்த
தடவை யாகசாலைதனைக் கார்த்திட்ட
தன்மையைப்பாடி யடியுங்கடி. 14

351 கார்பார் முத்தையா பிள்ளை மட்டியூருக்
கணக்கு நடேச பிள்ளையந்த
ஊர்ஆட் களுடன் வந்து யிருந்தங்
குதவி செய்தாராம் பாருங்கடி. 15

352 பேசிடுமந்தணைக்குறிச்சி நடேச
பிள்ளையக் கோவில்மெய் காவலடி
யோசித்துப் பார்த்துநல் லுத்தமன் யென்று
ஒருத்துச் சொல்லி யடிப்போமே. 16

[illegible]

[illegible]

[illegible]

353 [illegible]

[illegible]

தருமபுரம் ஆதீன வித்துவான்

## கொடுவூர் அ. சிதம்பரநாதமுதலியாரவர்கள் இயற்றியது.

354. சீர்மேவு கலிசகம் பஞ்சா சகஸ்திரஞ்
செல்லவரு திரிதசத் திற்
றிகழ்விபவ நாமசம் வத்சரத் திரசிதச்
சித்திர மணித்தேர் தனைக்
கார்மேவு பூங்குழற் றேகைஞா னம்பிகா
காதலன் கூவிள வனங்
காதல்கூர் ஞானபுரி யீசன்மேற் கொள்பவனி
காணப் புரிந்தன னரோ
பார்மேவு தருமையா தீனமமர் கயிலைப்
பரம்பரையின் வந்த ஞான
பானுவா யிலகுசுப் பிரமணிய தேசிகன்
பாவலர் வழுத்து மேலோன்
தார்மேவு மக்கமும் பூதியுஞ் செந்துகிர்ச்
சடைமகுட முந்திகழ் தருஞ்
சாத்விகத் தன்மையன் றண்ணளிகொள் விண்ணகத்
தருவனைய பரம குருவே.

மற்றொரு சமயம்.

355 திலகஞ்சேர் நுதன்மடவார் பொழிலெங்கும்
விளையாடித் திரிந்து தெண்ணீர்ச்
செங்கமலத் தடமெங்குஞ் சென்றாடு
மரசிலிவாழ் சிவனுக் கன்பாற்
குலகங்கை வேளாளர் வளமன்னும்
கொடுவூர்வாழ் மழவ ராயர்
கோத்திரத்தில் வந்த சிதம்பரநாதன்
கூறிய வந்தாதி மாலை
யுலகெங்கும் புகழ்பொங்கு தருமைமடா
லயச்செங்கோ லூரிமை பூண்ட
வுத்தமரி லிருபதின்மே லொருமூன்றாங்
குருவாகி யோங்கு செல்வத்
திலகுஞ்சற் குணமணி சுப்பிரமணிய
தேசிகனு ரிசைந்த வன்பா
லீந்தபொரு ளுதவியைக்கொண் டச்சிடப்பெற்
றுலவுமுல கெங்கு மாதோ.

தருமபுர ஆதீன வித்வசிகாமணி

## காழி. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

356 திங்களஞ் சடிலத் தண்ணல் திகழர சிலியின் கோமா
னங்கள விலியாற் கன்பி னமுதுறழ் தருமங் தாகி
மங்களம் பொலியச் சாற்றி மகிழ்ந்ரவக் குரிசில் தொண்டை
நங்களங் கொடுவூர் தேத்து நற்ரவந் துதித்த தோன்றல். (க)

357 சிதம்பர நாத ரென்னத் திருந்திய நாவ லோரும்
இதம்பர மாக வேத்து மியற்றமிழ்க் கவிஞர் வாணுட்
சதம்பரம் யாவு மீயுங் தருமையா தீனத் தான்ரோர்
விதம்பர வணிந்த வேணி விமலனல் லருள்யாங் தேற. (உ)

358 அறங்கிளர் தருமை சார்ந்த ஆதீன கர்த்தர் ஞானம்
பிறங்கிய ஞேய மாஞ்சுப் பிரமணி யப்பெம் மானுர்
சிறந்தபல் வளத்தா னைய்ந்து திரவிய முதவி யச்சுத்
திறங்கெழு தரச்செய் வித்தார் சீர்த்தியெங் நாளும் வாழ்க. (ங)

---

தருமபுரம் ஆதீன வித்வான்

## கொடுவூர் அ. சிதம்பரநாதமுதலியாரவர்கள் இயற்றியது.

வெண்பா.

359 நதியுந்தண் பொன்னி நதியே சிறந்த
பதியுந் தருமைப் பதியே—யதிலமருந்
தேசிகனுஞ் சுப்ரமண்ய தேசிகனே நெஞ்சேநீ
பேசிலவன் மெய்ப்புகழே பேசு.

கட்டளைக்கலித்துறை.

360 கருதார் புரமொரு மூன்றும் பொடித்த கடவுளுக்கன்
றொருதா ரகவுப தேசம் புரிந்தரு ளுத்தமனே
விருதார் தருமை யமர்ஞான தேசிக மெய்த்தவத்தோ
யிருதா வுனையன்றி வேறுமுண் டோபுவி யேழினுமே.

361 கலிவெண்பா.

க மட்டவிழுஞ் செந்தா மரைமலரும் வாவியிடைக்
கொட்டியுமோர் பான்மலருங் கொள்கைத்தா—மெட்டுணையுங்
உ கற்றறியா யான்முற்றக் கற்றோர் கழகத்தென்
சிற்றறிவாற் பேசுந் திறமெனினு—மெற்றுதிரை
ங யாழிதனை மந்தரத்தா லன்றுழக்கு மந்தரத்தார்க்
காழிதனைக் கைக்கொண்டாற் காரமுதை—யாழிவிழிச்
ச செந்திருவைத் தந்ததன்றோ சீரியர்மற் றெஞ்ஞான்றுந்
தந்தகைமை குன்றுவரோ தாம்சிறிதும்—பந்தப்
ரு பவமா வினையகலப் பத்தர்க்கு நல்குஞ்
சிவஞான தேசிகமெய்த் தேவே—தவமேவு
சு மாமணியே தென்றருமை வாழ்வேநற் சுப்ரமணியக்
கோமணியே பொங்குமத குஞ்சரமே—தோமகலுஞ்
எ சிந்தா மணியேயென் சிந்தா குலந்தவிர்க்கும்
நந்தா வொளிகூர் நவமணியே—கொந்தாரும்
அ பூங்கற் பகமே புரிசங்க நன்னிதியே
தீங்கற்ற கோகனகச் செல்வமே—யோங்குசுவைத்
கூ தீங்கனியே சித்தத்துட் டித்திக்குந் தெள்ளமுதே
பூங்கரும்பே கற்கண்டே புண்ணியனே—பாங்குடைய
ய தண்டமிழ்ச்செம் பாமாலை சாத்துந் தடம்புயத்தோய்
கொண்ட கருணை கொழித்தொழுகும்—புண்டரிகச்
கக செங்கட் டிருநோக்கஞ் செயதிங் கெமக்கருளுந்
தங்கத் தனிமலையே தாணுவே—சங்கையறப்
கஉ பன்னூன் குலவும் பாவியநின் சீர்த்திதனை
யென்னூன் மொழிதற் கெளிதேயோ—வின்னாத
கங ஜென்மச் சனியாற் செறியும் வறுமைநோய்
வன்மைக் கருணன் மருந்து.

---

தருமபுர ஆதீன வித்துவசிகாமணி

## காழி. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களின்

# திருமுன் விண்ணப்பம்.

362 நின்பாற் செறிந்தவர் தேனுவுந் தாருவு நீணிலத்து
மன்பாற் கதியு மதித்திலர் மற்றியான் வாழ்தரற்குப்
பொன்பாற் றிருவுநற் சாலியு மீந்தருள் பொற்புறுவேன்
தென்பாற் றிகழ்தரு மைச்சுப் பிரமண்ய தேசிகனே.

363 நெற்கலம் நூறும் பற்பக லுண்ணப்
பெற்றனன் தருமை நற்சிவக் கொழுந்தே.

---

சென்னை உயர்தர நீதிமன்ற நீதிபதியும்
ஆந்திர நாட்டந்தணகுலதிலகருமான

**Hon'ble Justice**

# Sir. V. இராமேசம் பந்துலு Kt.

அவர்களுக்கு

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம்
திருக்கூட்டத் தம்பிரான்கள் சார்பாக
ஷ௸ திருக்கூட்டத் தம்பிரான்களிலொருவராகிய

**இராமலிங்கத்தம்பிரான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின்**

திருவுளப்பாங்கின்படி வாசித்துக்கொடுத்த

## வரவேற்பு வாழ்த்துப் பத்திரம்.

364

பூமலி கற்பகப் பொன்னாட் டவரு
நாமகள் பதியுறை நன்னாட் டவரு
மாதவ னுறைபெரு மாபதி யவரு
மாதிய தேவ ரருந்தவர் முனிவர
ரியாவரு மெய்ம்மை யெய்துதல் வேண்டி
யோவரும் பூசை புரிமையிற் புரிதரற்
கரிதி னமைந்தவிப் பரதகண் டத்திற்
றரமலி பல்வளத் தண்சோ ணாட்டி
னிலகுறு நகர்க்கெலாந் திலகமாய் விளங்குந்
தலமெனுஞ் சென்னையிற் புலமலி நியாய
வாதம் புரிவதி லாதவ னிகரெனப்
பூதலம் புகழ்பெற வோதிடு மறிஞ
ஆந்திர தேசஞ் சார்ந்த மெய்த் தவத்தாற்
போந்தவ தரித்தர சாந்திற மறிந்த
வேதிய வுயர்தர நீதிமன் றத்திற்
கியாதி மிகுந்தநன் னீதி பதியாய்ச்
செம்பொருண் மைபிநியா யம்புவி யவர்க்கருள்
நின்பெருஞ் சிர்த்தியை நம்பெரு மரசர்
மனமுவந் தருளியே தினங்களி சிறந்து
சனங்க ளறிந்திடக் கனம்பெறும் சர் எனும்

பட்டம தொன்றை யிட்டமா யளித்தனர்
சட்ட நிபுணத் திட்டம துடைமையால்
இராமேச மெனும்பெயர் தாமே பந்துலுவுடன்
சர்இரா மேசமேனத் தரம்பெற வழங்கினர்
நிற்பெருங் கீர்த்தியைச் சற்சனர் புகழ்ந்தனர்
மேவுமித் திறமெலா மேன்மையிற் கொண்டு
தாவிலா துயர்ந்த தன்மையோ யின்று
விற்பொலி தவள வெற்பெனுங் கயிலை
நந்திநன் மரபெனுஞ் சந்ததி யதனில்
வந்தவ தரித்தே மாநில மகட்கொரு
வதனமாய் விளங்கும் வண்டருக் களினிடை
சதனமார் கிளைதொறுஞ் சார்ந்துறுங் குயில்கள்
பதிபசு பாசப் பான்மையுறப் பொருளும்
துதிபெறப் பேசுஞ் சொல்வளம் நிறைந்த
தருமைக் கரசாய்ச் சைவப் பயிரெலாங்
கருமுகி லெனவே கருத்துவந் தளித்தே
யூனசம் பந்த மொழித்துயிர்க் கருள்புரி
ஞானசம் பந்த நற்குரு ராச
னற்புத பீடத் தொப்பிலா தொளிர்தருஞ்
சுப்பிர மணியத் திப்பிய குரவர்முன்
னற்றவக் குழாங்க ளூற்றன ரழைப்ப
மற்றவர் தங்களு மனமுங் குளிர்தர
வந்தநின் வரவ துயர்ந்ததே யாகுக
சந்தநான் மறையின் றன்மையோய் வருக
பூதலம் புகழ்தரு புனிதனே வருக
மாதவம் விளங்கும் வண்மையோய் வருக
மாறுபா டில்லா வுண்டி மறுத்துணி
யூறுபா டின்றென வுணர்ந்தோய் வருக
நியாயம் புரிதரு நிபுணனே வருக
சந்தத மாஸ்திகச் சிந்தையோய் வருக
ஆந்திர தேசத் தாண்மையோய் வருக
ஹைகோர்ட் ஜட்ஜெனு மதுலனே வருக
வருக வருக வளர்தரு மைக்கே
தருமைப் பதியுய ரருமைச் சற்குரு
உரிமைபி னுயரிய திறமா ரருளால்
நின்றனக் கின்னு நிறைந்துயர் பெரும்பதம்
என்றும் பெருகி யினிதுநீ வாழ்க
வாழ்க வாழ்க வண்புக ழறமே.

OUM SIVAYA NAMAHA

365

THE REVERED PEETATHIPATHY OF

AN

EVERGREEN GARLAND OF SONG

Sung on the 16th VAIKASI of Sukla Year.

THE GRAND GURUPUJA DAY IN HOLY

**DHARMAPURAM.**

TROCHAIC PENTA METRE.

| | | |
|---|---|---|
| **S** | Sacred is the saiva mutt yet odd and old | **D** |
| **S** | Sung by sages holy, headed by their kith | **H** |
| **E** | Ever and anon blessed from ancient days ultra | **A** |
| **N** | None the less descent of Great Nandhi, the seer, | **R** |
| **I** | Interpreting Dharma from Lord made Agamam | **M** |
| **L** | Lo! The saivite flock to learn the Tamil Veda | **A** |
| **O** | Ornament of religious singers Four at top | **P** |
| **H** | High a priest of siva Bakthas and pure Hindu | **U** |
| **S** | Selfishness and greed of wealth approaching never | **R** |
| **I** | Innate love of Divine service, true to dharma, | **A** |
| **H** | Hoping attain moksha by worship God in form, | **M** |
| **S.** | Safe in satya, free from harm and learned in shastra | **A** |
| **S** | Sympathise the poor, and patronize the great, | **D** |
| **E** | Ever is the motto in this mutt of learning, wealth | **H** |
| **L** | Long ago this institution did arise | **E** |
| **B** | Blest by siva, Devi, Nandhi, Rishis Divine, | **E** |
| **D** | Darling is the present Head to Gods in Heaven | **N** |
| **O** | Onward may His progress be is will of Siva, | **A** |
| **G** | Great the joy Gurupuja day in Dharmapuram. | **M** |

NOTE:—1. Reading up your left head '**red letters**' passing through the curve, and reading down your right hand red letters, you will get the sentence.

**'God bless His Holiness the Revered Peetathipathi of Dharmapuram Atheenam.'**

2. The detached red letters on both sides are first and last letters in the lines.

BY

**T. Ganapathy Pillai,**

PENSIONER, EAST CAR STREET, TIRUVARUR

**29-5-1929.**

## திருவாரூர் முத்தையாதேசிகரவர்கள் பாடியது.

விருத்தம்.

366 தருமையம் பதிவாழ் தத்துவப் பொருளே தற்பர ஞான
சம் பந்தப், பெருமையார் பிரபு பெருந்தகைப் பிரானே
பேசுதற் கரியபே ரின்பந், தருந்தவ மூர்த்தி தருமமார் நிதியே
தனியனேன் தன்வினை தீர்த்த, இருமையம் பேறே இனியசற்
குருவே யெளியனேற் கருள்புரி யெந்தாய்.

வெண்பா.

367 குருஞான சம்பந்தக் கோபானே காழித்
தருஞான முண்டருளெந் தந்தாய்—அருள்ஞானம்
தந்தருளு மாரூர்க் கலைத்திப்சித் தீச்சரத்தில்
எந்தை யிருந்தருளி னீர்.

368 தாதாதா தாதாதா தாதாதா வென்னுமதை
ஓதாதா ருண்டோ வுலகத்தில்—நீதாதா
சொன்னேன்சொக் கேசா சுவர்ண கலாநிதியே
என்னை இனிப்பெறுவ தென்.

---

திருக்கடவூர் தேவஸ்தானம் ஷராப்

## மு. சண்முகசுந்தரம்பிள்ளை பாடியது.

369 மங்களகல் யாணகுண சீலன்—அன்பு
மன்னுமடி யார்கட் கனுகூலன்—தமிழ்
மாதுபுரி மாதவந்தான் ஓதுவடி வாயமைந்த
யோகன் மதி—யூகன்.

370 கண்ணிய மிகுந்ததவ ராஜன்—வெகு
காவிய முணர்ந்தநல போஜன்—சைவம்
காசினியெ லாமிளிர ஆசையுட னேயருளும்
கத்தன் குண—சுத்தன்.

371 கண்டிகைவெண் ணீறுதவழ் தேகன்—எங்கள்
தொண்டுநிதம் கண்டுமகிழ் தியாகன்—வெகு
காதலுடனே யடியார் மேவுசுக மேதமதாய் காண்பா
னிசை—பூண்பான்.

372 மன்னு சுப்ர மண்யகுரு நாதன்—புவி
மன்னும்மக ராஜர்பணி நீதன்—புகழ்
நீடுந்தரும புரம் பீடு பெறவு தித்த
நித்தன் நல—சித்தன்.

373 தருமையா தீனமினி தூழி நன்கு
தரணிதனி லேநிலவ வாழி—புவி
யோதுசைவ மாநெறியோ டோங்கு சன்னி
தானமென் றும் வாழி பல—வூழி.

---

# விளநகர் கும்பாபிஷேகம்.

## திருவாரூர் முத்தையாதேசிகரவர்கள் பாடியது.

பட்டினப்பிரவேச வெண்பா.

374 சீரார் விளநகரிற் றேவசுப்ர மண்யகுரு
பேரா ரபிடேகப் பிற்றைநாள்—நேராகப்
பட்டினப் பிரவேசம் பண்பாய்ச் செயப்பெற்றான்
சிட்டரிற் சிட்டவள்ள லே.

---

தருமபுரம் ஆதீனம் மகாசந்நிதானம் திரிசிரபுரத்துக்கு
எழுந்தருளியபோழுது

## பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய வாழ்த்துப்பா.

375 ஊழிதோ றோங்கும் உயர்நொடித் தான்மலை
வாழி ஆலமர் மறைமுதல் முன்னும்
குருமரபு தழையும் தருமை ஆதீனப்
பெருமையார் தலைவ அருமைசால் குரவ
௫ எம்மைப் புரத்தற்(கு) அம்ம! இவ் வுலகிலோர்

மானிடம் காந்(து) யர் மானிடம் பூண்டே
ஊனிட ரொழிக்கும் ஞானப் பிரகாச
வானமும் தொழுதகை ஞானசம் பந்த
முன்னீ வளர்த்த முதற்பெருஞ் சமயமாம்
சைவம் இஞ்ஞான்று தாங்குநர்ப் பெறாது
நிலைதளர் தல் காணூஉ நெஞ்சழிந் தயரும்
சிறியேன் இடரொழுஞ் செய்மையி னகலச்
சிரபுரம் எழுந்தருள் செய்திகேட் டுவந்தனம்
வருக பெருமான்! வழங்குக இன்னருள்!
திப்பிய ஞான சுப்பிர மணிய
தேசிக மணியே செய்தவ மணியே!
வருக! வருக!! வள்ளால் வருக!!!
வாழி, வாழி!! ஊழிவாழியவே!!!

---

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் மதுரைக்கு எழுந்தருளியகாலத்து
மதுரைத் தமிழ்ச்சங்கவித்துவான்
**மூ. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பாடியது.**

---

376 திருக்கயிலை நிகர்த்திடுகோ மலைக்கொடியைச் சிறுமதியைச் சேர்ந்தார்க் கொல்லிந், திருக்கயிலைத் தருநிகர்கைம் மழுப்படையை யகற்றியிந்தச் செகத்தின் மேலாந், திருக்கயிலை யெனுந்தருமை யுறுசுப்ர மண்யகுரு செயுங்கூற் றின்றித், திருக்கயிலை யெனநமக்கு மனமேயன் னோன்பதத்தைத் தெரிசி நீயே. (க)

(மற்றொரு சமயம்.)

377 விட்டுவந்த வெள்ளிமலை யினுமதிக மாப்புகழே மேன்மே லோங்க, நட்டுவளர்த் திடுந்தருமை யகலாச்சுப் பிரமணிய நங்கோ மானே, கட்டுகவி யரசர்புவி யரசரா கச்செயுநின் கழலிற் பூக்கள், இட்டுவந்தித் தருகிரா திங்குவந்தேன் மடமைதா னென்னே யென்னே. (1)

378 சாதனங்க ளின்றியொன்றைச் சாதிப்பா ரொருவருமித் தறையி லில்லை, ஆதலினு லரோகதிட காத்திரமில் லாமையினு லகன்றிங் குற்றேன், பேதைமையீ தன்றென்ன வொருவாறு தெளிந்துன்சீர் பெரிதும் வாயா, லோதலுற்றும் நின்கருணைத் திறநினைந்தும் பேருவகை யுற்றேன் மன்னே. (2)

379 ஆயினுநின் மெய்யடியார் குழாத்தோடு மளவளாய் அருகிருந்து, தாயினுமின் னருள்புரியு நினைப்புறத்திற் றரிசியாத் தவறு போமோ, நீயினுமுன் போற்கருணை புரியிலஃ தென் செய்யு நீர்பெய் மாரி, யோயினுமோ யாதகொடை யமைதரு சுப் பிரமணிய வுயர்கோ மானே. (3)

380 மதுரைநகர்ச் சங்கத்திற் கலைபயின்று குருவரசாய் வந்தே யந்தச், சதுரமைபுஞ் சங்கத்துக் குயர்புகழுண் டாக்கிவைத் தாய் தமிழ்நூல் வல்லார், இதுதுணையென் றிடுஞ்சங்கம் நீவந்து கற்கஅற மியற்றி நின்ற, ததுபெரிதோ விதுபெரிதோ சற்குரு சுப் பிரமணிய வருட்கோ மானே. (4)

381 மன்றற்கா லத்தகத்தி யனைவிடுத்துத் தமிழ்வளர்க்க வைத்த நாமே, இன்றற்கா வியல்பிற்று யதுவளர்ந்த தாவெனப் பார்த் தெழுவோ மென்று, தென்றற்கால் தோன்றுதிசைக் கெழுந்தனைசுப் பிரமணிய தேவே யீதில், லென்றக்கால் வேறுகா ரணமுளதே லின்னதென வியம்பு வாயே. (5)

---

மதுரை

போடிநாயக்கனூர் ஜமீன் மாளிகையில் எழுந்தருளியகாலத்து

அமராவதிபுத்தூர் வித்துவான்

**வயி. நாக. ரும. இராமநாதஞ்செட்டியாரவர்களியற்றிய**

# திருமுன்னர் விண்ணப்பம்.

382 கண்சுமந்த வொருநெற்றிக் கருணைநெடுங் கடலன்பிற் கனிந்தா ளாகி, மண்சுமந்த வைகைநதி மருங்கொருகன் மண்ட பத்தில் வதிந்தா னாக, விண்சுமந்த நெடுமாட மதுரைநகர் முழு துமிந்த மேன்மை கேட்டுப், பண்சுமந்த மொழியாரா டவர் மக்க ளொக்கலொடு பரவி னாரால். (க)

383 பிட்டுக்கு மண்சுமக்க ஆவணித்திங் களிலன்றே பெயர்வா னந்தக், கட்டுக்கு மீறியிந்த ஆடியிற்சுந் தரன்போந்த கணக் கென் னென்பார், மட்டுக்கு மிஞ்சியவிக் கூட்டம்வர வறிவிப் பார் வரைந்த தென்பார், நெட்டுக்கு மிடமில்லை நின்றபடி நின் மினென நிகழ்த்து வாரால். (உ)

384 சுருட்டியசெம் பொற்சடையி னழகுகண்டார் மண்சுமக் கச் சுந்த ரேசன், தெருட்டியசெம் பொற்கூடை கட்டிவந்தா னெனப்பல்லோர் செப்பச் சில்லோர், மருட்டியசிந் தையிர் எல்லா முடையானைத் தவிர்த்திங்கு வருமோ வென்பார், உருட்டியகண் ணுனைக்கிக் கல்லாலி னிருந்தவனே யுவனென் பாரால். (ஈ)

385 கங்கைகோ தாவிரிகா விரியமுனை வேகவதி கமழுந் தெண் ணீர்த், துங்கபத்தி ராசரசு வதிநரும தாமுதலாத் தூய்மை யுற்றுப், பங்கமற்ற நதிகளெல்லா மிவன்சடையிற் பாய்ந்தாலும் பற்று தங்கை, மங்கையொருத் தியைச்சடையில் வைத்தல்வியப் போவென்று மகிழு வாரால். (௯)

---

மதுரையில் ஸ்ரீசோக்கநாத சுவாமிக்கு அபிஷேகமானதைக் கண்டு தெரிசித்த

## ஷை செட்டியாரவர்கள் இயற்றியது.

386 பரவுமிசைத் திருமதுரைச் சொக்கநா யகற்குமிகப் பழ மை யான, தருமைச்சுப் பிரமணிய தேசிகரே ரபிடேகந் தகவே செய்தான், அரவுமதி யமும்நதியு மதில்நனைந்து மிகக் குளிரால் அஞ்சி யன்னே, இரவிகதிர் வேண்டுமென வலதுவிழி மலர்ந்தனனவ் இடர்நீங் கிற்றால்.

---

ஆதீனவித்துவசிகாமணி

## காழி. ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர்கள் பாடியது.

387 இந்தூரு முடிப்பெருமா னீயெனவே யிருந்தோமுக் கினி யும் யாமே, நந்தூரு மேரகத்தா னுமமதைப் பெற்றமையால் ஞான நாட்ட, முந்தூரு மவனுருவு மவன்செயலுங் காட்டுவாம் முன்ன மென்று, செந்தூரு மருவினையாற் கமலையினுந் தருமை யினுந் திகழுங் கோவே.

வேம்பத்தூர், சிலேடைப்புலி பிச்சுவையர் குமாரரும்
மதுரைக் காலேஜ் தமிழாசிரியருமான

## பாஸ்கரையர் அவர்கள் இயற்றியது.

388 துங்கக் கரிமுகனைத் தோகையனை வந்தித்தேன்
எங்கள்குரு வாழ்கவென வே.

389 1 மானைப் பிறையை மழுவைப் புலித்தோலை
ஆனைப் பினாகத்தை யாவையும்விட்—டேனையுள
பூதிருத் திராக்கமணி பூண்டுலகின் வந்தடியார்
ஓததுதி கொண்டா யுவந்து.

390 2 பாடலிலே தேர்ந்தசங்கப் பண்டிதர்க்குத் தேசிகராய்க்
கூடலிலே முன்புவந்த கொள்கையினை—யேடதனில்
வாசித்தே னின்று மகிழ்ந்தனன் வந்ததற்பின்
நேசித்தேன் கண்டே னினை.

391 3 ஆந்தருவை மேகத்தை யம்புயத்தைச் சங்கத்தைத்
தீந்தமிழோ ரிகைக்குட் செப்புவரோ—எந்தருமைப்
பீடத்து வாழ்சுப் பிரமணிய னீந்தருள்வி
சேடத்தைக் கண்டுமதித் தே.

392 4 நடையிற் சிறந்தவன் மாருதிமைந்த னவில்தருபொன்
னாடையிற் சிறந்தவன் மாதவனாகு முறுகணைவிற்
படையிற் சிறந்தவன் சவ்வியசாசி பசுந்தமிழ்க்குக்
கொடையிற் சிறந்தவன் சுப்பிரமண்யக் குருபரனே.

---

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

## P. சிவசாமிசேர்வை இயற்றியது.

393 நன்றுநின் னாடற் கூடலிப் பதிக்கே நாற்பது மூவிரு நான்கும், அன்றுசெய் துவந்த கருணையங் கடலே யருள்விளை யாட்டிவ ணின்று, மின்றுறு மடியர் கண்டுகண் களிக்க வியற்றுதல் குறித்தெழுந் தனையோ, துன்றுமெய்த் தரும புரத்தினி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (க)

394 பற்றிடு மரவுங் கங்கையு மதியும் பதைத்திட மண்ணுடுந் துலங்க, வற்றிய விறகும் விதிமறை யறியா வளருநின் றலைமிசை யெடுத்துச், சுற்றிய மறுகின் றிருவினு மொருகாற் சூழ்ந்து நோக் கிடத்திரு வுளமோ, சொற்றிடுந் தருமபுரத்தினி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (௨)

395 அடியவர் வினையை முதலறப் போக்கி யரும்பெருங் கருணையா லவர்க்குப், படியினி லுவந்தே யிடையறு வின்பம் பரிந்துவந் தருள்செயு மாடல், மடிமிகு மிந்த மன்பதைக் குணர்த்த வலிதெழுந் தனைபிது புவியின், சுடிகையாந் தரும புரத்தினி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (௩)

396 மன்னருங் கலையை வருந்தியே பயின்ற மாண்பினுக் குறுபய னின்னைச், சொன்னிறை கவியாற் றொடுத்துள மகிழ்தல் தூயநற் பரிசுமற் றதுவாம், பன்னிய பிறரைப் பாடுதல் தாலம் பன்றிமுன் னிட்டது கடுக்குந், தொன்னகர் தரும புரத்தினி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (௪)

397 மன்னிய ஞான சம்பந்த விமலன் மரபுபல் லூழியும் வாழ்க, பன்னிய வுனதா மைந்தெழுத் தோதிப் பரவுக வுலகங்க ளனைத்து, முன்னிய சைவ சமயமே யோங்க வுவந்துநின் னடியவர் வாழ்க, துன்னிய நின்சீர் வாழ்க நீவாழி சுப்பிர மணியதே சிகனே. (௫)

---

## வேம்பத்தூர் பி. மகாதேவபாரதி அவர்கள் இயற்றியது.

398 ஒத்த மறையோர்க்கு முண்மையறி யுத்தமர்க்குஞ்
சித்தமகி ழக்கொடுக்குஞ் சீமானே—நித்தியமும்
அற்பகலாத் தொண்டற் கருள்சுப் பிரமணியக்
கற்பகமே நன்மங் களம்.

399 திருவுங் கலைமகளுஞ் சேருந் தருமை
மருவும் புகழ்சேரும் வள்ளல்—பெருமைமிகும்
தக்கவர்கொண் டாடத் தகுசுப் பிரமணியர்
பக்கத்தே சொக்கனிருப் பன்.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை உபாத்தியாயர்

## சு. நல்லசிவம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

400 கல்லாலி னீழலிலன் றொருநால்வர்க் கறமுரைத்த கடவு
ளேயிங், கெல்லார்க்குங் கதிதருவா னின்றுமருள் சுரந்துலகி
லெய்திற் றென்னச், செல்லாரும் பொழிற்றரும புரத்திருபான்
மூன்றாந்தே சிகனே யென்னுஞ், சொல்லார்சுப் பிரமணிய
ஞானசம்பந் தக்குருவாய்த் தோன்றிற் றன்றே. (௧)

401 பாணினியுங் குறுமுனியும் போல்வடசொற் றென்சொ
லெனும் பரவை யாடிக், காணரிய பொருள்களெலாங் காணருங்
காணும்வணங் காட்டி யாரும், பேணினிய குருமூர்த்த மாகவெ
ழுந் தெனையாளப் பெரிது மெண்ணி, மாணரிய விம்மதுரை
வந்துதரி சனந்தந்தாய் வாழி வாழி. (௨)

402 எண்ணரிய சிவதலங்க ளிருபானேழ் கட்டளையு மெய்தி
யென்றும், புண்ணியமே வுருக்கொண்டு போந்ததெனப் புவி
புகலும் புனித மூர்த்தி, தண்ணியநின் னருளமுதந் தனையருந்
திப் பவப்பிணியைத் தவிர்க்கும் வண்ணம், பண்ணியல்சுப் பிர
மணிய குருவேநின் சரணடைந்தேன் பாலிப் பாயே. (௩)

வேறு.

403 சிந்தாமணியுந் தேனுவுநற் றேவதருவுஞ் செழுமுகிலு,
நந்தாதளிக்கு நலம்போன்றெந் நாளுங்கவிஞ ருளமகிழத், தந்
தாதரிக்குங் குருவேநின் றட்டாமரையைச் சார்ந்தபினும்,
எந்தாயிலம்பா டெனக்குண்டோ வியலார்தருமை யெழிற்
குருவே. (௪)

404 சைவந்தழைக்கத் தவந்தழைக்கத் தருமந்தழைக்கத் தரு
மையினில், மெய்வந்தனைசெ யடியவர்க்கு வேதாகமத்தின்
பொருளருளி, யுய்யுந்திறனு முபதேசித் துண்மையுணர்த்து
முயர்குருவே, தெய்வந்தருநின் வரவெளியேன் சிறுமை
யொழித்துத்திகழ்ந்திடுமே. (௫)

அமராவதிபுத்தூர் வித்துவான்

## அ. இராமநாதஞ்செட்டியாரவர்கள் இயற்றியது.

405 கலி வெண்பா.

க தருமையா தீனத் தலைவாநின் பாதப்
பெருமையாற் சேமம் பெரிதே—திருமங்
உ கலத்தி லுனைநேற்றுக் கண்டுசே வித்து
நலத்துன் விடைகொண்டு நாளும்—பலத்த
௩ ரெயில்வேய்க்கு வந்தேன் நினைத்தவண்டி போயிற்
றயில்வேற்கைச் சுப்ரமண்ய அண்ணல்—கையிலியற்றும்
ச பூசையின்றி வந்ததனாற் பொங்குஞ்சோற் றாகாரத்
தாசையின்றி யாங்கே யமர்ந்திருந்து—நேசமொடு
ரு வந்தா ருடனே மணிமூன்றுக் கேறிஐய
நந்தா மதுரை நணுகியே—ஐந்து
சு மணிக்குக் குளித்துச்சி வார்ச்சனையுஞ் செய்து
பிணிக்கு மருந்துசாப் பிட்டுத்—தணிக்குமன்னம்
எ வாயார வுண்டு மறைஞான சம்பந்தர்
தாயா விருக்குமடஞ் சார்ந்தனனால்—ஆயாகேள்
அ கோயிலதி காரமெலாங் கொண்டவொரு பாண்டியனும்
மேயசூப் பிரிண்டெண்டு வேதியனுந்—தூய
கூ திருவாகம் வைத்தசொக்க லிங்கனுமன் றான்போல்
வெருவா இராமையரு மேன்மை—மருதமுத்துப்
க0 பிள்ளை கணபதியா பிள்ளைதுரைப் பிள்ளைகுற்றந்
தள்ளுகவிக் கோவிந்த சாமிஅய்யர்—உள்ளமிக
கக வீறுசிறு வாலைச் சமீன்முத்துச் செட்டியார்
தேறுபண்டா பீஸ்த்தலைமை சேர்ந்துள்ளார்—ஈறிலிவர்
க உ எல்லாருங் கூடி யிருக்கையிலே வஞ்சமிகும்
பொல்லாக்கல் யாணபட்டன் போந்ததுவுஞ்—சொல்லாத
க௩ * * * * * * *
* * * * * * *
* * * * * * *
* * * * * * *
கச கேட்டிருந்த வாய்மைமிகுங் கேடில்சபை யோரவன்வாய்
பூட்டிருந்த தென்றடக்கிப் போட்டார்காண்—நாட்டுமொரு
கரு வேலிபயிர் தின்றால் விளையுமோ ஆசிருதப்
போலியிது சொல்லப் பொருந்துமோ—சீலமிகும்

௧௬ பாட்டுத் தலைவுனைப் பண்ணும்நிந்தைக் காய்த்தக்கன்
ஆட்டுத் தலைபெற்றா னல்லவோ—நாட்டிற்
௧௭ றிரியுந் திரிபுரத்தைச் செவ்வாய் மலரா
தெரியும் படிசிரித்தா யெந்தாய்—விரியுமிந்தக்
௧௮ காலத் ததிற்சிறிதுங் காட்டா விடிலிந்த
ஞாலத் தவர்மதியார் நம்பியே—ஓலமிட்டுக்
௧௯ கூச்சமுறக் கொட்டிற்றேள் கொட்டா விடிற்பிள்ளைப்
பூச்சியென்பா ரைய்யா புவியோரே—தாக்ஷணியம்
௨௦ இல்லாதப் பட்ட னினியாதீ னப்பெயரைச்
சொல்லா திருக்கச்செய் சூழ்ச்சியுடன்—பொல்லாத
௨௧ துர்ச்சனற்கு நல்ஞானந் தோன்றும் படிமடத்தின்
அர்ச்சனையை மாற்றி யருள்.

---

திருக்கடவூர் தேவஸ்தானம் ஷராப்

**மு. சண்முகசுந்தரக்கவிராயர் பாடியது.**

406 சீர்மேவு தருமைசுப் பிரமணிய குருநாதன்
சிந்தைகளி கூர்ந்து வெற்றிச்
செந்திநகர் வாழ்கந்த னைக்கண்டு போற்றுதல்
செய்துவர வெண்ணி யிந்தப்
பேர்மேவு சுக்கிலநல் லாண்டானி மாதமே
பதினொன்ற தாம்நாளையில்
பிரயாண மாகிதிரு வையாறு திருசிரா
புரம்நெல்லை வழியாகியே
ஊர்மேவி சண்முகற் கபிஷேக மதுமிக்க
உயர்வதாம் படிசெய்ததை
உரைத்திடில் அபிஷேகப் பாலோடி கடல்நிறம்
ஒருபுறம் வெளுத்த தன்றி
நீர்மேவு தேனொடு பழச்சாறு மொருபுறம்
நீக்கின வுவர்ப்பை யய்யா
நீலமயில் வாழ்முருக னருள்கொண்டு குருநாதன்
நீடூழி வாழ்க மாதோ.

திருச்செந்தூர்கோவில் திருப்புகழ்ப்பணிவிடையாளரும்
யாழ்ப்பாணம் வண்ணமார்பண்ணை சுவாமிநாதபண்டிதரவர்கள்
மாணுக்கருள் ஒருவருமாகிய
**விநாயக ஓதுவார் இயற்றியது.**

407 ஏற்றினை நீத்து மாவினை யோட்டி யெழிலுறு மெங்கடா யுமையைப், போற்றிட வெற்பன் புதல்வியாக் கொடுத்துப் புகன்றிடு மாசைகண் முற்றும், மாற்றிய பொருளே மலர்ந்திடுந் தருமை மாண்புறத் தோன்றியே யென்றும், வீற்றினி திருக்கு ஞானசம் பந்தன் மெல்லடி வணங்குதும் விழைந்தே.

எண்சீர் விருத்தம்.

408 அப்பர்பெருந் தேவாரத் தொருசொல் லன்றி நால்வர்களி லாருற்றூர் செந்தூர்க் கென்று, செப்புகின்ற வகையின்றே சிதைந்து போன செயல் தெரிக்கச் செவிகொடுப்பீர் செகத் துளோரே, துப்பலைகள் கரைகொழிக்கும் பொன்னி சேர்ந்த துலங்குதரு மைப்பதிய னடியார் போற்ற, இப்புவியிற் செந் தூரில் யாமும் வாழ வெழுந்தருளிக் காட்சிதந்தா னென்னே யென்னே.

கட்டளைக் கலித்துறை.

409 கார்கொண்ட கண்டன தாலயங் கோடிசெங் கைதொழுதால்
சீர்கொண்ட சிங்மயன் செய்வன் கருணை தெரிந்திடுமின்
பேர்கொண்ட செவ்வித் தருமைக் குரவன் பிறங்கடிகள்
ஏர்கொண்ட செல்வமு முத்தியு மீந்திடு மெங்களுக்கே.

410 அலையே யலைகொண்ட வாற்றேடு தும்பை யணிமதியன்
சிலையே சிலைகொண்ட செங்கரத் தான்பின்னுஞ் செப்புதுஞ்சீர்
துலையே துலைகொண்ட தொல்பதங் காட்டிய தோன்றல்கவிக்
கிலையே யிலையென்று கூறுன் தருமைக் கிறையவனே.

வெண்பா.

411 காளகண்ட மின்றிக் கவின்றார் சடையுடனே
யாளவந்த வைய னவனைவோர்க்கு—மாளவில்லாச்
செல்வங் கொடுத்துச் சிவகதியுங் காட்டிடுவன்
ஒல்லுங் கவிகண் டுழி.

குருபாதமேதுணை.

---

ஆறுமுகநேரி தமிழ்ப்பண்டிட்

## K. விசுவநாதம்பிள்ளை அவர்கள் பாடியது.

எழுசீர் விருத்தம்.

412 சந்நிதா னத்தின் திவ்யசாக் ஷத்தைச் சண்முகச் சாமி யாற் றெரிவேன், முன்னமே யாண்டு சிலவற்றின் முனமென் முதுதவத் தாற்றெரி சித்தேன், பன்னிரு கரத்தா னறுமா முகத்தான் பதியினி லதிதவஞ் செய்தேன், என்னிரு கண்ணாற் றெரிசிக்குந் தவத்தை யென்னென வியம்புவேன் வள்ளால். (க)

413 மாசிலா மணிக்கோர் மாசிலா மணியாய் மரபினில் வருதவ மணியே, பேசிய தவத்தாற் கல்வியா லொழுக்கமன் பினுயர் குருதவ மணியே, ஆசிலா வாசான் வடிவுகொண் டெழுந்த வதிசய மதனையே நோக்கில், ஈசனுர் பரம சிவமெனு மிறையே யிணையிலா வெங்கள் மாதவமே. (உ)

414 மன்னவ தவத்த ராசசந் நியாச மாதவ சுப்பிர மணிய, கன்னிய ரிருவர் கள்வினை யுகந்த கருணையங் கடலிறை செய்ய, தன்னிரு பாத பங்கய மன்பாற் சார்ந்தனை யடியவ ரோடும், இந்நகர் வந்தாய் தானமுந் தவமும் இயற்றினை யேவர்க்கு மரிதே. (ந)

---

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம்

ஸ்ரீவைகுண்டம் கைலாசபுரத்தில் எழுந்தருளியகாலத்து

கார்னேஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்போதகாசிரியர்

## நல்லகுற்றாலக் கவிராயரவர்கள் இயற்றியது.

415 திருக்கைலைப் பதியாச்சீ வைகுந்தைப் பதிதிகழச் சிவிகை யூர்ந்து, கருக்கருக வடியர்துதி கதுவப்பல் லியங்கறங்கக் கவின் வெண் ணீற்றி, னுருக்கஞலு மொளிபிறங்க வுலாப்போந்த கோலமுளத் தொளிரு மாற்றா, லிருக்கொலிசெய் தருமைபிற் சுப் பிரமணிய குருமணியே யா முய்ந் தேமால். (௧)

416 சிந்தனையாற் றிருநோக்காற் செய்யதிருக் கைம்மலராற் றிகழு மும்மைப், பந்தமற மெய்ஞ்ஞான பந்தமுற வருள்செய் தெம் பவத்தைப் போக்கச், சந்தமலி பொழிற்றருமைச் சற் குருசுப் பிரமணிய சாமி யீங்கே, வந்தருடற் கேதெமது மாதவமோ நின்னருளோ வகுக்க மன்னே. (௨)

417 உருத்திரிபா லுண்ஞான சம்பந்த னுயர்காழி யுரவோன் றன்னைக், கருத்துறுசுப் பிரமணிய கருத்தனென நுவன்றிடு நூற் கருத்தைத் தேற்ற, வருத்திகொண்மா தவக்கோலத் தவ்விருபே ரொடுங்குருவா யவனி போற்றத், திருத்தருமை யமர்ந்தனைசுப் பிரமணிய ஞானசம் பந்த தேவே. (௩)

418 நீர்வேட்கு மொருவனன்னீர் நிலைபுக்கங் கினிதாடி நிலவ லேபோற், பார்வேட்குங் குமரகுரு பரமுனிவன் பரஞானப் பயனை வேட்டே, யோர்வேட்கு நினையண்மி யின்புற்றான் பெற்ற தென்னீ யவன்பா லெய்திச், சீர்வேட்குந் தருமைபிற்சுப் பிர மணிய ஞானசம் பந்த தேவே. (௪)

419 மெய்யடியார் வேண்டாமை மேற்கொண்டா ராயினுமற் றவர்வீட் டின்ப, மெய்தவேண் டுவதுனக்கிங் கியல்பாகு மவ் வியல்பா லெய்தி வேணடுஞ், செய்குறைதேர்ந் தருளியது தீர்த்துமென வுளங்கொண்டு செய்யப் போந்தாய், தெய்வத மார் தருமைபிற்சுப் பிரமணிய ஞானசம் பந்த தேவே. (௫)

நெட்டூர் புராணசிரியரும் திருச்செந்தூர் சிலேடை வெண்பா, வானமாமலை கலம்பகம், கதிரேசன் பிள்ளைத்தமிழ், தெக்ஷிணாமூர்த்தி பதிகமுதல் கo பதிகங்கள், தெக்ஷிணாமூர்த்தி அந்தாதிமுதல் கரு அந்தாதிகள், கதிரேசன் விசித்திர நான்மணிமாலை முதல் ரு விசித்திர நான்மணிமாலைகள், தச்சநல்லூர் நெல்லையப்பர் அலங்கார பஞ்சகம், நசரேயன் திருவவதார நாடகமுதலிய நூல்கள் இயற்றியவரும், பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டரும், மாட்சிமை பொருந்திய ஸ்ரீமாசிலாமணிதேசிகரிடம் மனமுவந்த நண்பரும், சிந்துபூந்துறையிலிருப்பவருமாகிய

**B. B. நாராயணசாமிநாயுடு அவர்களியற்றிய**

## விண்ணப்பம்.

விருத்தம்.

420 *தருமைவளர் பண்டாரச் சந்நி தானச் சாமியே நிற்காணச் சார்போ தெல்லாம், ஒருமையுட னின்றன்பா லோது தற்கோ ஒருவரையு மடத்தின்கண் ணுதவி காணேன், அருமையுட னினைவணங்க வெத்தனை நாள் ஆகுமோ வடியனே னறியகில்லேன், பெருமையுட னினைக்காண வுத்தர வொன்றைப் பிறப்பிப்பா யடியனிடம் பிரியம் வைத்தே.*

வெண்பா.

421 *வாகமர்வி சித்ர வகவலொடு வண்ணவட்ட*
*நாகபந்தம் பின்னிரட்டை நாகபந்தம்—பாகண்*
*இரதபந்தம் நின்மே லியற்றியுளே னத்தா*
*வரதனென நின்னை மதித்து.*


குறள் வெண்பா.

422 *தரும புரவீச சைவரிசை யைய*
*வருக வருணல்க மா.*

*இக்குறள் வெண்பாவிலுள்ள ஒவ்வோரெழுத்தையும் கீழ்க்கண்ட விசித்திரவகவலின் ஒவ்வோரடியி னீற்றிலமைத்திருக்கிறது.*


## விசித்திர அகவல்.

423 வருக வருக தருமபுர வரத
பண்டார சந்நி தானமாப் பலரு
மேத்து மிறைவ வருக விம்ம
ணல்ல லுறவிழை யசுரர்சேர் திரிபு
ரந்தனை யெரித்தவ ரன்றன் சீர
தமர்ந்த சைவ சமய மவனிவீ
ரியமுற வொளிரவி ரியைய வருகச
ராசரத் துளசைவ ராசிகட் குரையிசை
தேசிக வருக சீவர் களுக்கிவ
ணவல மொழித்துநல் லமுத மருள்புரி
ஞானசம் பந்த வருக நனிநசை
கொண்டினி துலகங் கொளத்தமிழ்க் கல்வியை
யன்புடன் விருத்தி யமையச்செய் யாரிய
வின்புடன் வருக வியைந்தவிச் சைவ
மடத்திலோர் தம்பிரான் வைக்க வருடரு
மத்தவருக வகில மிசை மிக்க
புகழ்கொடே சிகர்தமிற் பெருமை வாய்புங்கவ
மகிழ்ந்திவண் வருக கல்வி வாயொரு
மன்றளி மாதவ வருகநல் லருண்மண
மடியேன் பாலுநின் னடிமலர் சொல்லால்
வாழ்த்து மன்பர் பாலுமகிழ் மிக
வாய்ந்து தந்து காத்தனின் மாண்பமா
மேற்சொல் லடிகளில் விளங்கிய வீற்றி
லுளவக் கரங்களை வுவப்புட னிசைக்கில்
தருமபுர வீச சைவரிசை யைய
வருக வருணல்க மாவென வேயொரு
குறள்வெண் பாவருங் குலவிய
மனதி னேற்று மகிழ்வு கொள்கவே.




வெண்பா.

424 தருமபுரமட மேயவென் சாமி
யிருமையா சாணுமே யெற்கு—ளிருளை
யரிமன மூளின் புலனைமை மணுற்றி
னருளை யளிமா லறி.





வெண்பா.

425 தரும புரசுப் பிரம ணியதா
யருமறை நாளு மறைப—னருளா
சுதாவ ளிபுனி தவித சொருப
பிதாம திமதிதா பி.

உ

# இரதபந்தம்.




வெண்பா.

426 நம்புவனஞ் சீர்தான்சேர் மெய்நிலைத்தெண் ணற்சாந்தம்
பம்புவித்தஞ் சன்மார்க்கம் பத்திரச மம்பொ
னிருமை புணரமொழி யேமமுட னேருந்
தருமபுர சந்நிதா னம்.

## கலித்துறைகள்.

427 தருமையா தீன முறவற மாற்றுந் தருமபுரி
தருமையா தீன மடியர்க் குதவு தலைவவனத்
தருமையா தீனவெம் பண்டார சந்நிதி சாமியிப்போ
தருமையா தீன் சிவவரைக் காசிறை தந்திடலே.

428 சுப்பி ரமணிய தேசிக தர்மை சுயவயநச்
சுப்பி ரமணிய ரேத்து முதல்வ துதிபெறுதே
சுப்பி ரமணியச் சொற்சொற் குரவவெண் டேய்த்தமிழ்பேண்
சுப்பி ரமணிய சாமி யெனநினைச் சூழுவனே.

சற்குருசரணாரவிந்தாப்பியாங் நம :

---

## இஃதியற்றிய வித்துவான் பெயர் தெரியவில்லை.

429
பூமலர் குருந்த நீழலி லீசன் போதனை புரிந்ததா லொருவர்
மாமல மற்று மகிழ்ந்தனர் கல்லான் மரத்தருள் செய்ததா லல்வர்
தேமறைப் பொருளைத் தெரிந்தனர் நீயோ செகமெலாந் தெரிந்திடத் தெரி
தூமலர்ச் சோலைத் தருமையில் வந்த சுப்பிர மணியதே சிகனே. [ப்பாய்

430
செந்திலி லமருஞ் சண்முக னருளாற் செறிந்திடு மூமையுந் தீர்ந்து
பைந்தமிழ்ப் பனுவல் பற்பல பகரும் பாக்கியந் தன்னையும் பெற்றார்க்
கைந்துபே ரறிவுமெ னுங்கவிப் பொருளை யருளிய மாசிலா மணிப்பேர்
சுந்தரன் நீயென் றறிந்தனன் றருமைச் சுப்பிர மணியதே சிகனே. (உ)

431
மின்னொளி பரப்பு முடிக்கண மதனை வெண்மதி நாதனு மிருந்து
நன்னய மாக நடத்துதல் போல நம்பனு மொழுந்தருள் புரியும்
பண்ணுமூ வொன்பான் கோயிலுக் குரிய பதியென நடாத்துநின் னருமை
துன்னுநின் புகழை விளக்கிடுந் தருமைச் சுப்பிர மணியதே சிகனே. (௩)

432
பண்டைய நாளிற் பாலரு வாயர் பருமணிச் சிவிகையி லிவர்ந்து
கண்டவர் களிக்கக் காட்சிதந் தருளிக் கண்ணுத லாலய மடைந்து
வண்டமிழ்ப் பாடல் வழங்கிய வுண்மை மாதவ நின்னுழிக் கண்டோம்
தொண்டர்கள் நாளும் பரவிடுந் தருமைச் சுப்பிர மணியதே சிகனே. (௪)

433
சாத்திர மனைத்துந் தலைதடு மாறிச் சாய்ந்தது நின்றிரு வுளத்துப்
பூத்தத லன்றோ பொறுக்கெனக் கிளம்பிப் பூதலம் போந்தருள் செய்யும்
ஆத்திர முடைய நின்னிக ராவா ரரிதரி தவனியி லடியார்
தோத்திரம் புரிய வருள்புரி தருமைச் சுப்பிர மணியதே சிகனே. (௫)

434
வாக்கினாற் பத்தி வழியினை யுரைக்கும் வகையுட னமைந்திடா ததனை
யாக்கிய செய்கை தன்னிலுங் காட்டு மருமையை நின்வயிற் கண்டோம்
தேக்கிய வன்பு மருளுமே கொண்டு சீவரைக் காத்தருள் செய்து
தூக்கிய புகழைத் தாங்கிய தருமைச் சுப்பிர மணியதே சிகனே. (௬)

குருதிருவடிக்கே சரணம்.

---

திருநெல்வேலி அறம்வளர்த்ததேரு பேன்ஷன் சப்ரிஜிஸ்தரார்

## R. S. சுப்பிரமணியபிள்ளை B. A., அவர்கள் இயற்றியது.

### கலி வெண்பா.

435
1 சீராட்டும் நெல்வேலி சேர்ந்து திருக்கடைக்கண்
பேராட்டி யன்போடு மேபெய்து—பாராட்டும்
2 தர்மம் எலாந்தழைக்குந் தர்மபுரம் விட்டெங்கள்
கர்மங் கழற்றவந்த கண்ணுதலே—பர்வமதிற்
3 செந்தி னகரனேர்ச் செந்தினகர்ச் செவ்வேளின்
எந்தையருள் பெற்றுய்ந்த எங்கோவாம்—விந்தைக்
4 குமர குருபரனைக் கோதாட்டிக் கொள்ள
அமருமா சில்லாமணியாய்ப்—பவமகற்ற
5 வந்த குருவின் வழித்தோன்றி வான்பதத்தைச்
சிந்தை களிக்கச் செய்துவக்கு—மெந்தையாய்த்
6 தித்திக்குந் தேனே தெவிட்டாத தெள்ளமுதே
பத்திக்கும் வித்தாக்கும் பண்ணவனே—முத்திக்
7 குடையானே யெம்மையாட் கொண்டானே எண்டிக்
குடையானே யெம்மையுடை யானே—கடைபோகா
8 தெங்களை யுங்காட்டி யெங்கள் மலமறுத்து
மங்களமெல் லாமீயும் மாதேவா—துங்கமுடன்

9 உன்னடியா ரிவ்வுலகில் உண்டுடுத்தி யேயுறையப்
பன்னரிய பட்டாடை பல்பொருளும்—உன்னரிய
10 ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லென்றறிந்தே
ஏற்பாடு செய்தருளு மெங்கோவே—ஊர்ப்பாடா
11 ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திருவெனவே—வோரப்
12 பசித்துண்டு பின்னும் பசிவருதல் தேர்ந்து
நசிக்கும் அறமதனை நாடாப்—புசிப்பரிய
13 கேடில் விழுச்செல்வங் கேட்டறிய வைத்தவா
நாடியே நின்புகழின் நாடதனிற்—றேடரிய
14 சுத்தாத் விதசைவ சித்தாந்த சாரமிர்த
புத்தி புகட்டும் புது நூலாம்—வித்தகமாய்ப்
15 புண்ணிய ராற்றுப் படையுடனே ருத்திரமும்
எண்ணு மெழில்ஞான பூசையதும்—உண்ணின்ற
16 பொய்யும் இருளும் பொருந்தாதே போயகலச்
செய்தின்றுன் சேவடியிற் சேர்ப்பித்தேன்—எய்யாது
17 எல்லோரு மேபெற்றும் ஈடேற எண்ணியே
வல்லாளா நீவாங்கி வாழ்த்தியே—நல்லார்கள்
18 நூற்றுக் கணக்காயின் நூலதனை யேபெற்றுத்
தேற்றிப் பிறவாத் திறனளிப்பாய்—நாற்றமுடை
19 சேற்றிலழுந் தாவகைநீ செய்துவக்கச் சீரேறுங்
கோற்றேனே என்றன் குரம்பைக்கூத் தாட்டமினி
20 ஆற்றேனே யென்றரற்று மன்பருடன் ஏற்றருளிப்
போற்று மவருடனே புன்சொலெனை யும்வைத்து
21 நாற்றமல ராக்கியிந்நா ளொன்றதனில் வேற்றின்றி
ஏற்றி யிடர்களைந்து இன்பமுட னேகடைக்கண்
22 பார்த்துப் பவமகற்றிப் பண்பாய்ப் பரனடியில்
ஈர்த்துவந் தேயதனை யீ.

## வாழ்த்து வெண்பா.

436 தர்மந் தழைத்தோங்கத் தாரணியோர் தாம்வாழ்க
மர்மமிகு நம்சைவம் மாண்பாகச்—சர்வமுமே
கண்டோர்கள் கேட்டோர்கள் காதலித்தோர் தாம்வாழ்க
தண்டாரணித் தர்மபுரந் தான்.

437 பாவின்க ணெய்போற் பரந்தெங்கும் நிற்குமே
நூலின்க ணீச னுழைந்து.

# நெல்லை காருடை சு. மூர்த்திப்பிள்ளையவர்கள் மகாசந்நிதானத்தின் திருமுன் மிகத் தாழ்மையாகச் செய்துகொள்ளும் விண்ணப்பம்

ஆசிரியப்பா.

438 பூவார் வண்டொலி தேவா ரத்தொலி
நாவா ரப்பயில் கோவார் மாளிகை
பலப்பல சூழ இலக்குமி மருகியோ
ருலப்பிலா தமரும் குலத்திரு வளங்கொள்
தருமையிற் றவத்தோர் அருமையிற் குருவாய்
இருமையுந் தரவரும் பெருமையை நீயே
சடைமறை யாதே இடைஇடை மருவிய
படவர வொடுமதி தடைஎன அகற்றினை
முக்கணில் நுதற்கண் மிக்கவே வேமென்
றொக்க மறைத்தனை கைக்கொளு மான்மழுக்
காட்டா னாகிக் காட்டுறும் புலியதள்
வீட்டினைகாவியே கூட்டும் உடையினை
ஞானமார் கையும் மோனமார் நீறும்
தானமும் வகைவகை யானபக் குவமார்
அறவோர் சூழவந் துறவோ னாகி
மறமே வீயும் திறமே காட்டி
உயிர்த்தொகை உயவருட் பயிர்க்குவை காத்தனை
அயர்ப்புரு தேவர்க்கும் வியப்புற அறிவருள்
அடிகேள்
வேண்டுவ வேண்டுழிக் காண்டகு மியற்கையை
நல்வழி யறனை வொல்லெனச் செய்குவை
ஆதலின் திருமுனம் மேதகு மனுவிதை
ஓதினன் அன்பருள் நீதிய குரவ
சிந்துபூந் துறைஎன்று யர்ந்தவர் போற்றும்
எந்தைநின் மடாலயம் முந்தைநாள் வாழ்ந்து
மாணவர் எண்ணிலார்ப் பேணித் தமிழையும்
ஆணி முத்தென்ன நீணிலத் தேத்தும்
முத்தி நிச்சயமெனும் புத்தக மினும்பல
வித்தக நூலுரை விளம்பிய வெள்ளி
யம்பல வாணத் தம்பிரான் கலைக்கடல்
உம்பரும் உவக்கும் செம்பொற் கோயிலை
நலமிக நாட்டுதல் வேண்டித்
தலைவநின் அடியிணை சார்ந்துநின் றேனே.

## ஸ்ரீவைகுண்டம் கார்னேஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்போதகாசிரியர்
## **நல்லகுற்றாலக் கவிராயரவர்கள் இயற்றியது.**

### எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

439 *அருட்பெரு நிதியே யானந்த வமுதே யாரண மழை
பொழி முகிலே, தெருட்பெறு பாகே தெவிட்டுறாத் தேனே
தித்திக்குஞ் செய்யதீங் கரும்பே, மருட்கெடுத் தாளு மாசிலா
மணியே மதியகத் தொளிர்தரு சுடரே, பொருட்படுத் தெனையு
மென்றுகொ டருமைச் சுப்பிர மணியபுண் ணியனே.* (௧)

440 *இன்றுநீ யடியார் புடையெலாஞ் சுலவ வெழுந்தருள்
சிவிகையூர் கோல, நன்றுமற் றெங்கண் விட்டகன் றிலதெந்
நாவைவிட் டகன்றில நுன்சீ, ரொன்றுமிப் பவம்போன்
றுறுபவ மேனு முறுமெனி னுளமிக மகிழ்வேந், தொன்றுறு
தருமை ஞானசம் பந்த சுப்பிர மணியதே சிகனே.* (௨)

441 *வேதவாய் திறந்து விளம்பிய வருளின் மெய்ம்மொழி
கேட்குமா தவங்கள், காதுசெய் துளவென் றகங்களித் திருந்
தேங் கண்களு மேனைய வுறுப்புந், தீதின்மா தவங்கள் செய்
துள வென்று திருமுக தரிசனத் துணர்ந்தேனுஞ், சூதமார்
தருமை ஞானசம் பந்த சுப்பிர மணியதே சிகனே.* (௩)

442 *நெல்லையை யடைந்து தில்லைநா யகனை நெருநலிற் கலந்
துடன் போய்க்கை, வல்லசீர்ச் சிற்பன் மனையினை யடைந்து
மற்றையோன் வகுத்திடு வடிவ, மொல்லையிற் கண்டு கண்களி
கூர்ந்தங் குவகையங் கடலினு ளமிழ்ந்தேன், றொல்லையே
யடிமை கொண்டரு டருமைச் சுப்பிர மணியதே சிகனே.* (௪)

443 *பொடிபடி பிணியுடற் றிரண்டுநா ளுளவாம் போயபின்
சாலையிற் பொலியு, முடிவுறக் குறித்த நாள்வரை யறையா
முன்னவ நின்னருட் பலத்திற், படியெலாம் புகழும் மார்கழித்
திங்கள் பயிலுநாண் முப்பதிற் பரவு, மடிகளார் தமது சிலைத்
திரு வுருவை யகங்குது கலிக்குமா வடைவேம்.* (௫)

444 *அன்றுவை குந்தக் கையிலைமா நகருக் கன்பினி லெழுந்
தருள் வித்து, மொன்றுமந் நகரிற் றிருவுலாச் செய்து முயரிய
வடிகளுக் கமைத்த, நன்றுறு மடத்தில் வைகுமா செய்வே
னாயடி யேஞ்செய விதுவாந், துன்றிமெய் யடியார் சுலவிடுந்
தருமைச் சுப்பிர மணியதே சிகனே.* (௬)

445 சுக்கிர னத்த மித்திடு பொழுதிற் றுணிகிலர் சுபகரு
மங்க, டக்கவா லயவா ரம்பங்க ளட்ட பந்தனத் தகுஞ்செயல்
யாவு, மிக்கண்வாழ் வுறுவார் செய்திடு வதற்குன் னின்னருட்
பணிதலைக் கொள்வேந், தொக்குறு துறவோர் சூழ்ந்திடு
தருமைச் சுப்பிர மணியதே சிகனே. (எ)

446 விமானமெய் வனப்பை விளக்கிய படமும் வேலையின்
கூலியும் விளக்கி, யுமாகரந் துறையு மாசந்நி தான மோர்ந்து
கொள் பொருட்டு முன் னின்னை, யமாவென வடைந்த வன்பின்
விண் ணப்ப மங்குள ததனை யோர்ந் தருள்க, சுமாவமர் தருமை
ஞானசம் பந்த சுப்பிர மணியதே சிகனே. (அ)

447 சிலைத்திரு மேனி யடிகண்மூ வைராத் திகழுவர் தாம்பிர
மேனிக், கலைக்கடல் வைகக் கருதுமண் டபத்திற் காப்புறு
மிடஞ்செயல் வேண்டு, நிலப்பயில் கதவு சாளரந் தெற்றி நிலைவு
மற்றியாவு மோர்ந் தருள்வாய், சொலைப்பெறு தருமை ஞான
சம் பந்த சுப்பிர மணியதே சிகனே. (கூ)

---

திருநெல்வேலி

சிந்துபூந்துறை இந்து காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

448 பொன்னவிர் மருமனயன் முதற் றேவர் போற்றிடுந் தரு
மையா தீன, மன்னுகை லாய பரம்பரைச் சைவம் வளர்த்திடு
சித்தாந்த குருவாய்ப், பன்னரும் புகழ்சீர் சுப்பிரமணிய தேசிக
பரிந்தருள் புரிந்து, துன்னிய நின்னைச் சிந்துபூந் துறையிற்
றொழுதிடும் பேறுபெற் றிலனே. (க)

449 பேறுறு நினைந்தே னுனதருட் டுணையைப் பெறவருள்
வான்குக னென்று, தேறுறு வடியேன் செந்திலா திபன்முன்
சென்றுநிற் கண்டன னருள்வா, யாறுமா முகத்தோன் காட்
டிய குமர குருபரற் கன்றுமெய்ஞ் ஞான, மாறிலா தருண்மா
சிலாமணி நீயே சுப்பிர மணியதே சிகனே. (உ)

450 நிலமெலாம் பணிநீ பிறையரா மலைவில் கங்கையை நீத்து
வந் தனையென், றுலகுளோர் சொல்வ துண்மையன் றன்பே
ரருளுரு ருணர்வரோ வடியேன், கலைபிலா மதியுந் துதிகள்
பன்னகமுங் கைக்கொள்வாய் கனமுறு கையாய், மலைவிலா
யன்றி வரனதி கமுளாய் சுப்பிர மணியதே சிகனே. (௯)

451 மாநில மதனிற் குருவருள் ஞாய மார்ச்சால மர்க்கட
மென்ப, ஆநல முடைய மர்க்கட ஞாய மடியொடும் போயவிக்
காலங், தீநிலை யகற்றி மார்ச்சால ஞாயந் திகழ்வுறத் திருநெல்
வேலியிலே, தூநிலை யருள்வா னீவர னிங்கே தென் சுப்பிர மணி
யதே சிகனே. (௰)

452 தந்தையுந் தாயு நீயருள் கெனநிற் றாழ்ந்தவெற் கருள்புரி
யாயே, னிந்தைமுன் செய்த சுந்தரர்க் கருளுநன் னீர்மையென்
னெஞ்சுதித் திடுமுன், சிந்தையி னிரங்கித் திருவருள் புரிவாய்
தெளிவிலேன் புன்சொலும் பொறுப்பாய், துந்துபி யியம்புந்
தருமைவாழ் வுகந்தாய் சுப்பிர மணியதே சிகனே. (௧௧)

## மற்றொருநாள் பலவித்துவான்களுடன்.

453 பெருமையம் பதியின் பசுவின்பா சத்தின் பெற்றிதேர்
சாத்திரங் கற்றுப், பொருமையம் பதியன் செய்புங்கா மாதி
போக்கிய வடியவர் சூழத், தருமையம் பதிவாழ் சுப்பிர மணிய
சற்குரு சரணங்கள் போற்றி, வருமையம் பதியா வடியவன்
சுப்பிர மணியனென் வரையும்விண் ணப்பம். (௧)

454 முன்னதா மதியி லுன்னையோர் நாளிற் றரிசன முற்றியே
பிரிந்தே, னென்னதா மதியா தேகுகின் றாயென் றருளினை
யெளியனேன் கருமஞ், சின்னதா மதியிற் பிடர்பிடித் துந்தச்
சேர்ந்திவ ணெய்தினேன் றவப்பே, றன்னதா மதிக வினையி
னேன் சுப்பி ரமணிய வருட்குரு மணியே. (௨)

455 சாதரா வாகா ரெனவுல கென்னைச் சாற்றநீ யருள்புரிந்
ததனாற், நீதரா வாகா ருனைத்தரி சித்தோ ரென்பது தெளிந்
துளே னிதயப், போதரா வாகா சுப்பிரமணிய குருவெனப்
போற்றுவேற் கருள்வாய், கோதரா வாகா ரத்தினி னீத்துத்
தருமைவாழ் குணப்பெருங் கடலே. (௩)

## நெல்லைத் தளவாயரண்மனை வித்துவான்

தெந்கரண்மனையில்

(ஸ்ரீசோக்கநாதசுவாமிக்கு சுவர்ணபிஷேகம் செய்தபோது பாடியது.)

456 சுக்லமா வாண்டிற் சுபகடக முப்பதின்மேல்
எக்கணமும் போற்றுஞ்சொக் கேசருக்குப்—பொக்கணமார்
பொன்னு ரபிடேகம் பூந்துறைநெல் வேலிவளர்
தென்னுர் தளவாய்செய் தார்.

## மேலரண்மனையில் மற்றுநாள் பாடியது.

457 சுத்தசுக்ல வாண்டு சுகமா ரரண்மனையிற்
றக்க வரித்திங்க டருநாளி—லெக்கணமு
மீசனரு ளோநாடு மெங்கடளா வாச்செய்த
பூசையபி டேகப் புகழ்.

தருபாதமேகதி.

திருநெல்வேலி இந்து காலேஜ் தமிழ்ப்பண்டிட்

## வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளை அவர்கள் பாடிய

# பஞ்சரத்தினத் தோத்திரம்.

458 செம்பொனம் புயத்துத் திகழ்தரு தேவுந் திருநெடு மாலுமுன் னிகலித், தம்பெருஞ் செருக்கா லடியுடன் முடியுஞ் சார்கிலா தலமர விங்கா, ளிம்பரில் யாஞ்செய் தவப்பய னுக வெங்கள்பா லெழுந்தரு ளினையே, நம்புகழ்த் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (க)

459 சீர்திகழ் மாடக் கூடலம் பதியுஞ் சிறந்திடு கமலையம் பதியும், பார்திகழ் தருமைத் திருநெடும் பதியும் பாடிவீ டெனக் கொளு மாபோ, லேர்திகழ் நெல்லை வளச்செழும் பதியு மின் றுநீ பாசறை கொண்டாய், நார்திகழ் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (உ)

460 வலந்தரு மரவும் புனலும்வார் முடிமேல் வைத்திடா யம்முடி யதன்மேற், புலந்தரு மதியுங் கொன்றைமா லிகையும் புனைகலா திருப்பதிங் கென்னே, சலந்தரு புரங்கண் மூன்றும் புன் முறுவற் றழலிடைக் குளிக்குமா றருளி, நலந்தரு தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௩)

461 விண்ணவர் தாமுங் குழாங்குழா மாகி வீற்றுவீற் றுன்முனம் படர, வண்ணல் வெண்ணீறு புனைந்த மெய்யடியா ரருகணைந் தேத்திட வடியேங், கண்ணலங் கனியத் திருவுலாப் போந்த காட்சியிங் கென்னென வுரைப்பே, நண்ணருந் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௪)

462 உற்றநற் சகநான் குறழ்ந்த நானூற்றே டோங்கறு பத்து மூன் றதனிற், றுற்றசுக் கிலவாண் டாடியீ ரெட்டிற் றாயநற் புந்திவா ரத்திற், கற்றமெய்த் தவத்தோர் கனிந்த மெய்யடியன் களிப்பவிங் கெழுந்தரு ளினையே, நற்றமிழ்த் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௫)

---

## திருநெல்வேலி சு. அருணாசலப்பிள்ளை அவர்கள் பாடியது.

### எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

463 தேனமர் கொன்றைச் சடிலமண் டிலமுந் திங்களி னொளிர்திரு முகமும், வானமர் முகிலி னருண்மழை பொழியு மலர்த்திரு விழிகளு மயறீர், மோனமுத் திரையு மும்மல முறுக்கு முறுவலுங் கொண்டெனைத் தருமை, ஞானசம் பந்த தேசிக ஆண்டாய் நன்றுநன் றுனதருட் செயலே. (௧)

464 அண்ணனின் மற்றுனதின் னருளினைப் பெறுதற் களவிலாப் பிறவிக டோறும், பண்ணிய வுண்மைத் தவம்பல வேண்டும் பகர்ந்திடி லையினுஞ் சிறிது, புண்ணிய முடையே னுதலி னின்றுன் பொன்னடி புனைந்தன னிங்கு, நண்ணிய தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௨)

465 எப்பிற வியுமே லிலதெனத் தெளிய வின்றுநின் றிருவடி மலர்கள், வைப்பென வடியேன் முடிமிசைப் புனைந்தாய் வள்ளலே மாசிலா மணியே, இப்பெரும் பேறிங் களித்தநின் னருளுக் கியற்றுகைம் மாறுமற் றெவனோ, செப்பருந் தருமைச் சுப்பிர மணிய தேசிக ராசசின் மயனே. (௩)

## ஸ்ரீ-ல-ஸ்ரீ

மகாசந்நிதானம் தென்காசியில் எழுந்தருளியிருந்தபோழுது
தஞ்சாவூர் ஜில்லா அகத்தியாம்பள்ளி
**இராம. வயித்தியநாத சர்மா அவர்கள் இயற்றியது.**

### சீட்டுக்கவி.

466 பூவிற்சி றந்தபதி புண்ணிய மிருந்தபதி புகழ்மேவ லாமொருபதி
புனிதபசு பதிவழிகொ ளினியகுல பதிதரும புரமுயர்வு தருமதிபதி
பூபதிம டாதிபதி சீபதிசு யாதிபதி புலவர்கவி திகழுயர்பதி
பூசுரர்கள் மெச்சுபதி மாசுரர்க ளுக்குதவி புரிமுருக னருணிறைபதி
புனைந்தர னிருந்துயர் தருந்தல மிருந்துள புகழ்ந்துறும வைக்குளுயர்வார்
புண்ணிய தலங்களா யண்ணு மிருபத்தேழு புரிகளுக் கான பதிசீர்
பொருந்துபதி நந்தரும புரதரும பதியெம புலந்திகழ வருநீறினைப்
பூசுசுப் பிரமணிய தேசிகப் பதிதனது புகழ்மிகத் திகழ்கவி யிதே
பாவிற் சிறந்தகவி பாடற்கெ மம்மையருள் பாலிக்க வருகவிஞனிப்
பார்புகழு மெந்தேவி பாகவத கவியுலது பரவிட வியற்றி வருவோன்
பாவலர்க ளாவலர்கள் காவலர்கள் மெச்சிட பாடிநேயங் கொள்பண்பன்
பண்ணிரிய தருமமிது புண்ணியமெ னக்கல்வி பயில்கழக தருமமதிலே
பதியமன மதுநிறைவு தரவியார் பதியெனப் பலவித நினைந்து பாடிப்
பாடியவர் முன்புயர்வை நாடிப் பெரும்பரிசு பார்மதித் திடுமடாதி
பதியரச பதிஜமீன் பதிநிதிகொள் பதிகளுயர் பண்பினட் புறு புலவனும்
பண்வயித் தியநாத சன்மனென் பவனியான் பகர்வதனை யறிகநலமே
தேவிற் சிறந்தவுமை திவ்விய சரிதங்களைச் செந்தமிழ்க் கவிகளாகச்
செய்துவரு பவனதாலெய்துமெந் தேவியருள் செய்ததிது போலுமிந்தத்
தென்காசி யாலயத் தென்காத லேறியெத் தினமுமகிழ் பிரபுவாகத்
திகழ்சுப்ர மணியனற் றேசிக சிகாமணி சிநேகமிக வாசவுற்றேன்
செகத்குருவி டம்பல விதக்கவிகள் பாடிச் செகம் புகழுறும் பரிசதாய்ச்
சேரவிரு சால்வைகள் சிரவாஜியிரு சால்வைகள் சிறப்புறக் கொண்டன
மினித்
திருவாடு துறைமேவு குருசாத ராவுமெந் தேகமணியப் பெற்றனம்
திகழ்தரும புரமகிப னகமகிழ வும்பாக்கள் செய்துகண் டுறுவமெனவே
சாவிற்சி றந்திடுங் காசலப் பிரபுநேர் காணவரு நாளெது வெனக்
கண்டுறும் போதியா னண்டுமூர் விட்டிருங் காரியமதாக் குடந்தை
காணும் பரஸ்பரச காயநிதி வந்துமுட் கார்ந்தநே ரப்பலனுயர்
கந்தனடி கண்டுறச் செந்தில் வருவாயெனக் கழறியே யிராம நாதக்
கன்னனிகர் தேவைநகர் மன்னனழைத் தறவுமது கண்டுகுற்றால மிதுவும்
காணெனப் பெற்றருட்சி மாணுற வழைத்ததுங் கருதியூர் வருபோதுதென்
காசியை யடைந்ததும் கதைசொல நிகழ்ந்தது காண்டரும புரவாதீனக்
காவலற் கண்டதுங் காசினிமிதும் பரிசு காண்பதுங் கமலை யருளே.

சுபம். சுபம். சுபம்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும் தருமபுரம் ஆதீன வித்வானுமாகிய

**மூ. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள்**

திருப்பரங்குன்றத்தில் இயற்றிய

## சிவக்ஷேத்திர யாத்திரைத் தோத்திரப் பதிகம்.

467 உலகமெலாந் தானாகி நின்றவுளப் பூசைபுரிந் துண்மை யன்பர், இலகுமருள் பெற்றிடுதற் கிலிங்கவுருப் பலவாகி யிருந்தா யந்தத், தலமெலாங் காண்பமென்றே சற்குருசுப் பிரமணிய சாமியே நீ, அலகில்புகழ்த் தருமையினின் றெழுந்தி யாத் திரையாயிங் கடைந்தா யன்றே. (க)

468 பயிர்ப்பருவங் கண்டுநீர் பெய்யவரு மழைபோலப் பற்றற் றுள்ள, உயிர்க்குபதே சம்புரியச் சுப்பிரம ணியகுருவே யுற்றா யந்தப், பயிர்க்கருகே நின்றபுற்கள் பயன்பெறல்போல் நின்ன டியைப் பரவியந்த, உயிர்க்கருகே நின்றயாங் களுமேநற் பய னடைந்திங் குய்ந்தா மன்னே. (உ)

469 மதுரைநகர்ச் சங்கத்தில் முன்னொருநாள் வாதுசெய்நா வலனைப்போல, இதுபொழுது முளரேல்வென் றிடுவமென வரல்போலிங் கெழுந்தா யுன்றன், பதுமமல ரடியின்கீழ்ப் படி தலினால் நெற்றிவிழி பாராதுய்ந்து, குதுகலித்தோஞ் சற்குரு சுப் பிரமணிய பெருங்கருணைக் குன்றாந் தேவே. (ந)

470 ஒருமுனிக்கு வடமொழியு மொருமுனிக்குத் தென் மொழியு முபதேசஞ் செய், தருமையினில் வருகுருசுப் பிர மணிய சாமீயத் தமிழா லுன்சீர், அருமையினைப் பாடிவந்தே னந்தமிழீ தென்றேலா யாயிற் றந்த, பருவதரா சன்மகளை யவன்றரநீ முன்கொண்ட பான்மை யென்னே. (ச)

471 மலைமலையா வெள்ளிசெம் பொன்னுடையவனை யவ்விரண் டால் மகிழ்ச்சிசெய்தல், இலையெவர்க்கும் வேறெதனா லதுசெய லா மெனப்பலகா லெண்ணி யெண்ணி, யுலைவில்மனத் தெழு மன்பை யுன்னடிக்குச் சமர்ப்பித்தே னுவந்து கொள்வாய், கலைநிறையுங் கவிவாணர் சூழ்தருசுப் பிரமணிய கருணைக்கு ன்றே. (ரு)

472 சீர்பூர்த்த கையிலாய தானத்தோ டிருத்தலாற் சிவனே யென்ன, நேர்பூத்த சற்குருசுப் பிரமணிய தயாநிதியே நின்

னைக் கண்டேன், ஏர்பூத்த நின்னருளா வென்பணியை யேன்று கொள்வா யேலாயென்றாற், போர்பூத்த யுகாந்தத்தி லென் பணியை யேற்றதென்னோ புகலுவாயே. (௬)

473 இடையன்பா லுவந்திலிங்க வுருவாகி வெளிப்பட்ட இடத்திற்கற்றோர், தொடையன்பாற் கொண்டநீ யவ்விலிங்கந் தொழுதுவந்தாய் துலங்கும்வையை, யுடையன்பால் மருகனாய்த் தன்னைத்தான் பூசித்த உறுதிகொண்டோ, கடையன்பா தகனெனினு மெனக்கருள்சுப் பிரமணிய கருணைக்குன்றே. (௭)

474 பண்டுசத்தி தனைவிடுத்துத் தடிந்தசூர் மாக்கிடமீ பரவை தன்னைக், கண்டுதடிந் திடுவமென்றோ நீயே தானாய்வந்த கந்தனன்பு, கொண்டுறையுந் திருக்கோலங் காண்பதற்கோ திருச் செந்தூர் குறித்துச்சென்று, தொண்டுசெயு முனிவரொடு வந்தனை சுப்பிரமணிய தூயதேவே. (௮)

475 யாத்திரையின் சிரமமெலா மிகந்திடச்சுப் பிரமணிய இறைவனையும், மூர்த்தியாய் நீயிருந்த குற்றாலத் தெய்தி யந்த மூர்த்திதன்னைச், சீர்த்திமிகுந் தமிழ்மணத்தோ டெய்து தென்றல் திருமேனி தீண்டநேரே, பார்த்திவண்வந் தாயார்க்கும் பழக்கவா சனைவிடாப் பான்மைத்தாமே. (௯)

476 இன்னுமுள பிறசிவா லயங்களெல்லாங் கண்டுநீ யெழுஞ் சீர்முற்றும், பன்னுவதற் காபிரநாச் சேடன்போல் விசேடமாப் படைத்திலேனென், றுன்னுதலா லியன்றமட்டுஞ் சொல்லி யிந்த மட்டிலே யொடுங்கிக் கொண்டேன், மன்னுபுகழ்த் தருமையிற்சுப் பிரமணிய குருமணிநீ வாழி வாழி. (௰)

ஸ்ரீ ஞானசம்பந்தகுரவே நம:

---

## பலவான்குடி சிவதேசன் பத்திராதிபதியர் அவர்கள் இயற்றியது.

477 பெருமையார் கைலாய பரம்பரையை விளக்கவந்த பெரியோய் ஞானத், தருமையா தீனத்துக் குருமணியாய்ச் சகம்புகழத் தழைத்து வாழ்வோய், ஒருமையா மனச்சுகுண சுப்பிரம ணியப் பெயர்கொ ளுறுவநின்சீர், அருமையா லெடுத்துரைக்க வல்லார்நின் னருட்கடலுக் களவுண் டேயோ!

### வெண்பா.

478 சைவ சமயந் தழைக்கத் தமிழ்செழிக்கத்
தெய்வம் சிவமெனவே தேசமெல்லாம்—ஐயமறப்
போற்று முறைசெய்யும் பொருவில்பணி மேற்கொண்
டாற்றுமெமை யாதரித்தாள் வாய்.

479 எங்க டிருத்தொண்டுக் கிருந்துணையா யிந்நாளிற்
பொங்கு மருள்புரிந்து பூதலத்தில்—மங்களமாய்
ஊழி மலிய உயர்சுப் பிரமணிய
வாழி மகிழ்வாய் மதி.

---

வேளூர் காரா‌ள சற்குணசபை

## அ. பொ. இராமையாபிள்ளை அவர்கள் பாடியது.

### யாத்திராமான்மியம்.

480 தென்னவன் மதுரைச் சொக்கன் தன்னூடு யாத்திரை
செய்த, மன்னவன் சுப்ர மண்ய வள்ளல்தன் வருகை காண்
போர், முன்னம்நற் றவத்தோ ராவர் முயல்தவஞ் செய்தி லார்தா,
மின்னமெத் தனைதான் சென்ம மெடுக்கினும் காணார்தாமே.

481 வானவர் முனிவர் தேவர் மாமறை யயன் மால்போற்றத்,
தானவ னான தன்மை தருமைநற் பதிவாழ் சொக்கன், மீனவன்
நாடு சென்று மீண்டநல் வருகை காண்போர், ஞானமாங் கட
லில் மூழ்கி நற்கதி பெறுவா ரன்றே.

---

தருமபுர ஆதீன வித்துவசிகாமணி

## காழி. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

482 பாண்டிவள நாடதுவும் நும்விஜயப் பெற்றியினாற் பண்புற்
றோங்கிப், பூண்டகைய சிவசின்னப் பெருக்காலுஞ் சிவஞானப்
பொலிவினாலும், மாண்புறலாற் பிறமண்ட லங்களெலாம் நும்வர
வின் மாட்சி நோக்கும், ஆண்டகையீர் தருமைவளம் பதியணைந்
தீ ரருள்புரிவீ ரார்வத் தோர்க்கே. (க)

சுபம்.

உ
குருபாதம்.
சித்திவிநாயகர் துணை.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம்
சுத்தாத்துவித சைவசித்தாந்த மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய வரிய**
மகாசந்நிதானம் திருச்சேந்தூர் யாத்திராவிஜய தோத்திரப்பா.

இஃது
அமராவதிபுத்தூர்வாசியும் ஷை ஆதீன வித்துவசிரோன்மணியுமாகிய
**வயி. நாக. ராம. இராமநாதஞ்செட்டியார் அவர்கள்**
**இயற்றியது.**

காப்பு.

483 *சீர்த்திவளம் பெருந்தருமைச் சுப்பிரமண் ணியகுருதே சிகனே? யாமல், ஆர்த்தகடற் றிருச்செந்தூ ராண்டவன்முன் போற்றிடுவான் அதரி னுள்ள, மூர்த்திதலம் தீர்த்தமுறை யாய்த்தொழுத யாத்திரைப்பா முற்றும் வண்ணம், வார்த்திடு மும் மதச்சித்தி வாரணத்தாட் டுணைதுணையா வைத்துள் ளேனே.*

தருமபுரம்.

484 *நிருத்தருமை மணவாள ராளான வடியவர்கள் நெகிழ்க் குஞ் சிந்தைக், கருத்தருமை யறிந்தவர்க்கு வேண்டுவதந் தருள்கருணைக் கடவுள் வாழ்பூ, மருத்தருமை முகில்வளரு மெழில்பொழில்சூழ் தருகைலை மலையே போன்று, திருத் தருமை ஞானதீ னம்புவிக்குத் திலகமெனத் திகழு மாலோ.*(க)

485 *இருட்சிந்தா குலஞ்சிந்த இருபதின்மூன் றும்பட்டத் தினில்வாழ் வுற்றுத், தெருட்சிங்கா சனத்தேறிச் சுப்பிரமண் ணியகுருதே சிகன்மா சின்றி, அருட்செங்கோ லோச்சியிந்த அகிலமெல்லாங் குணக்குடைக்கீ ழாளும் நாளிற், றிருச்செந் தூர் தொழும்எண்ணம் திருவருளாற் றிருவுள்ளம் செனித்த தம்மா.*
(உ)

486 எம்பிரா னதிகார நந்தியைப்போற் கார்பார்செயி ராம லிங்கத், தம்பிரான் றிருவுள்ளக் குறிப்பறிந்து நாட்குறித்துச் சாற்ற லோடும், நம்பிரான் சொக்கநா தரைப்புறப்பா டாற்று வித்து நாட்ட நெற்றிச், செம்பிரான் கைலையினின் றிறங்குதல் போ லடியர்குழாஞ் செறிய மாதோ. (௩)

487 அருள்வளரும் கன்னியில்வாழ் சித்திவிநா யகன்பொற்றா ளணுகிப் போற்றித், தெருள்வளருங் குருஞான சம்பந்தன் கழலிறைஞ்சிச் சென்னி சேர்த்திப், பொருள்வளருந் தரும புரீசனையருச்சித் தன்போடு புகழ்ந்து வாழ்த்திச், சுருள்வள ருந் திருமாலை பூதியா தியபெற்றுத் துலங்கி னாரால். (௪)

488 வார்கள்பல விசித்தபல விசித்திரமா முரசொலிகார் வரைக்கும் போக, ஊர்கள்பல சென்றுதிரும் புங்காறும் வேண் டுவகொண் டுயர வேற்றுங், கார்கள்பல தொடர்ந்துவரும் விசை யோசை யாற்கடல்கள் கலங்கு மென்றாற், சீர்கள்பல செறிந்த பிர யாணத்தின் வைபவத்தைச் செப்பற் பாற்றோ. (௫)

489 கொடிகள்மறை யாதமின்னற் கொடிகளென மிடைந்தன விண் குழுமுந் தேவர், இடிகள்புவி யினிலிருந்து வானில்வந்து வீழ்தல்கேட் டிலமென் றேங்க, வெடிகள்தீர்ந் தனநாக சுரம் விச்சா தரருலக மேவிற் றென்றால், அடிகள்எழுந் தருள்புறப் பாட் டினைத்திறப்பாட் டெத்தனையா லறைவ தம்மா. (௬)

490 வேல்வைத்த கட்டியங்கள் மயில்வைத்த கட்டியங்கள் விளங்கி நீண்ட, சேல்வைத்த கட்டியங்கள் விடைவைத்த கட் டியங்கள் செம்பொன் னாலும், பால்வைத்த நிறத்தசுத்த விர சிதத்தா லுஞ்செய்து பன்னூற் றெண்ணின், மேல்வைத் தோர் தாங்கிவிண்ணும் வெதிரிடஎச் சரிக்கைகளும் விளம்பி னாரால். (௭)

491 இருபத்தைந் தாறிருபத் தொன்பதில்மங் கலநாளில் எவ ரும் போற்றுந், தருமைத்தம் பதியிலிருந் தெழுந்தருளி மாயூ ரஞ் சார்த லோடும், உரிமைக்கு மிகச்சிறந்த வள்ளலா ரருளிப் பா டுடனே தீராப், பெருமைக்கு நிற்கும்விசு வேசன்அரு ளிப்பாடும் பெற்று மாதோ. (௮)

## மாயூரம்.

492 மாயூரந் திருக்கோபி லபிடேகக் கட்டளைநீள் வடிவே
லேந்திக், கேயூர மணிமகுடம் புனைகுமர கட்டளையிற் கிளர்ந்து
போந்த, தாயூரு மருளிப்பா டுகள்பெற்றுத் திருத்துருத்தித்
தலத்தி னோடு, மீயூருந் திருவாலங் காடருளிப் பாடுபெற்று
விளங்கினாரால். (௯)

## திருவாவடுதுறை.

493 செழித்தபொழில் சூழ்திருவா வடுதுறையா தீனத்தார்
சிறந்த முத்தம், கொழித்ததிருக் காவேரிக் கரைமருங்கோர்
பூம்பந்தர் குயிற்று மாங்கட், சுழித்தபுனற் சடைமுடியார்
மாசிலா மணிப்பெருமான் சூடி நன்கு, கழித்ததிரு மாலையுடன்
அருளிப்பாட் டினைப்பெற்றுக் களிப்புற் றாரால். (௰)

494* வானூறும் புகழுடைய மேற்படியார் கூடவே மகிழ்ந்து
போந்த, நானூறு பேர்களுக்குந் திருக்கூட்டத் தார்களுக்கும்
நாவா லுண்ணத், தேனூறும் சிற்றுண்டி தானூறும் கட்ட
முதும் சிறக்க வைத்தார், பானூறு சொன்னாலும் அதன்பெரு
மை பகருதற்குப் பற்றா தன்றே. (௰௧)

495 தந்தையார் செயும்வேள்விக் கம்பொன்னா யிரம்பெற்ற
தக்க நன்றிச், சிந்தையார் தருமைவளர் சம்பந்தர் மீண்டந்த
க்ஷேத்திரத்தின், முந்தையார் பரிசனங்கட் களவில்லாப் பொற்
காசு முற்றன் போடு, விந்தையார் தரத்தந்த முறையிரண்டா
யிரம்நாவே விளம்பற் பாற்றால். (௰௨)

## திருப்பனந்தாள்.

496 ஆடுதுறை யினிற்பனந்தா ளருணஜடே சுரர்விடுத்த வரு
ளிப் பாடும், நீடுதுறைக் காவேரி மத்தியார்ச் சுனப்பெருமா
னிறையுஞ் செல்வப், பாடுதுறைக் குரித்தாகு மருளிப்பா
டுமாடம் பரத்தோ டெய்த, நாடுதுறை யினிற்போற்றிப் பெற்
றுவிடை பொருளோடு நல்கி னானால். (௰௩)

## திரிபுவனம்.

497 திரிபுவனம் கம்பகரே சுரர்அருளிப் பாடுபெற்றுச் சேர்ந்
து மிக்க, விரிபுவனம் புகழ்பூசை மகேசுவரபூ சையும்புரிந்து
வேணி மீது, சொரிபுவன முடையசர பேசனடி முடியாரத்
தொழுது வாழ்த்தி, எரிபுவனம் கால்நிலம்நீ ரானான்பால்
விடை கொண்டா ரிணையில் லாரே. (௰௪)

## கவிஸ்த்தலம்.

498 செவித்தலத்திற் றந்தையார்க் கரியபிர ணவப்பொருளைத் தெரித்துப் பூவுற், பவித்தலத்திற் கிடப்பாருக் கருள்சாமி மலையருளிப் பாட்டைப் பெற்றுப், புவித்தலத்தில் நிகரில்லாப் புகழ்படைத்த நிலைவளத்தைப் பொருந்து மேன்மைக், கவித்தலத்தில் மூப்பனு ராலிருபூ சையுஞ்சிறக்கக் கண்டான் மாதோ. (கரு)

## திருவையாறு.

499 பஞ்சநதத் தலமொருநா ழிகைத்தூரத் தினிலருளிப் பாடும் பெற்று, விஞ்சுபுகழ் பெறும்பெருங்கட் டளைச்சோம சுந்தரப்பேர் மேலோன் யாரும், அஞ்சுதிற லான்செயும்பட் டினப்பிரவே சங்கொலுக்கொண் டருளி னுன்என், நெஞ்சுவலி யிலதொருக்காற் கம்பன்வரி னதன்மகிமை நிகழ்த்து வானுல் (மசு)

500 அறம்வளர்த்தா ளொடுமைய்யா றகலாச்செம் பொற்சோதியரனைப் போற்றித், திறம்வளர்த்த சேவகன்சேய் திருப்பணியை மேற்பார்த்துத் திருத்து வைத்து, நிறம்வளர்த்த பூசையுமா கேசுவரபூ சையுமநன்கு நிகழ்த்தி யன்பாற், புறம்வளர்த்த நெடுஞ்சடையார் தெரிசிப்பார்க் கருள்வெள்ளம் பொழிந்துற்றூரால். (மஎ)

## திருக்காட்டுப்பள்ளி எறும்பியூர்.

501 புரண்டுகரை பொரும்பொன்னிப் பூலோக கைலாசம் போலு மாங்கண், இரண்டுதின மெழுந்தருளி யிருந்துநெடுங் கோயிலடிக் கெய்திச் செல்வந், திரண்டுவளர் திருக்காட்டுப் பள்ளியிறை வனைச்சேவை செய்து நீண்டு, சுருண்டசடை யார் எறும்பி யூர்அருளிப் பாடுபெற்றுத் துலங்கி னூரால். (மஅ)

## திருச்சிராப்பள்ளி.

502 திருச்சிராப் பள்ளியினிற் சென்றடையாத் திருவுடைய தேவை மாதைப், பிரிச்சிராப் பெருந்தகையைத் தாயுமா னவனைநெஞ்சிற் பெரிதும் போற்றித், தரிச்சிராத் தொழுதுசிந்தா மணித்துறைபி லனுட்டானந் தழையச் செய்து, விரிச்சிரா மௌனகுரு மடாலயத்தி லெழுந்தருளி விளங்கி னூரால். (மகூ)

503 முத்தலையுங் காருடலும் பெறுமரக்கன் உயர்பூசை முற்றுங் கொன்றைத், தொத்தலையுஞ் சடாமுடிமேற் றிலதயிலங் குடங்குடமாய்ச் சொரிந்து வெள்ளை, நத்தலையுங் கடல்போலப் பால்தயிர்தேன் பழச்சாற்று நனைத்து மாவின், கொத்தலையுங் கும்பநிறை மஹன்யாசப் புனலாட்டிக் குளிர்வித் தானால்.(உ௰)

504 சந்தனமே பனஞ்செறித்து மிகநீண்ட பொன்னுடை சரியச் சாத்திச், சுந்தரவா சனைமாலை பலதிருமே னியிற்புனைந்து துகளில் லாத, மந்திரமா மறையவராற் சகஸ்திரநா மார்ச்சனையும் வழாது செய்து, சிந்தைபுவந் திடப்பணிவே தனஞ்செய்து பதிகமுற்றித் திரும்பி னாரால். (உக)

505 ஓர்நாளிற் சொல்லமுடி யாதபல வுலாப்போந்தும் உலகம் போற்றும், ஓர்நாளி லுய்யக்கொண் டான்மலைக்கற் குடிவணக்கம் உற்று மற்றும், ஓர்நாளிற் றிருவானைக் காவுடையார் பதம் பணிந்தும் ஒழிவில் லாமல், ஓர்நாளிற் றிருப்பராய்த் துறைமூழ்கித் தெரிசனமும் உஞற்றி னாரால். (உஉ)

506 இவ்வண்ணம் திருச்சிராப் பள்ளியில்நா ளொன்பதுகண் டெவரும் போற்றும், மைவ்வண்ணப் பொழில்சூழு மரவனூர் மணற்பாறை வளக்கல்ப் பட்டி, செவ்வண்ண வடமதுரை திண்டுக்கல் அம்மையனூர் சென்று செய்ய, கைவ்வண்ண மானுடையா ருறைதிருவே டகத்தலத்தைக் கண்ணுற் றாரால். (உ௩)

## திருவேடகம்.

507 ஆடகத்திற் செய்ததிரு வம்பலத்திற் கொடும்புலியு மரவுங் காணும், நாடகத்திற் சிறந்தானைத் திருமகனா ரேடுசைவம் நாட்டுந் தெய்வ, வேடகத்திற் பொலிந்தானை யருளிப்பா டேற்றிறைஞ்சி யிருந்து நான்கு, நாடகத்தங் கினரென்றா லதன் வளத்தின் பெருமையெம்மா னவிலற் பாற்றே. (உ௪)

508 *திருமுகம்பற் பலமதுரைப் பதிவதியும் பெரியார்க்குச் செலுத்தப் பெற்றுக், குருமுகமா யுபதேசங் கொண்டபெருஞ் சைவரெல்லாங் குழுமிப் போற்றி, யொருமுகமாய்த் திரண்டெதிர்கொண் டுபசரித்து வரவேற்கு மொழுங்கை நன்கு, பெருமுகமாய்ச் செய்துதெரிவித்தனரா னதற்கு வகை பெரிதுற் றாரால். (உ௫)

மதுரை.

509 பத்தொன்பா னேழிருபத் தொன்பதிற்சுக் கிரநாள்பிற் பகலிற் கல்வி, வித்தென்பான் திருவேட கத்திருக்கு மவர்க் கெலா மேன்மை நோக்கம், வைத்தன்பால் விடைநல்கி யங்கயற் கட் பெருமாட்டி மருவி வாழு, மத்தன்பான் மொய்த்ததிரு வுளத்தோடு கூடலைவந் தண்மி மாதோ. (உசு)

510 கண்சுமந்த வொருநெற்றிக் கருணைநெடுங் கடலன்பிற் கனிந்தா ளாகி, மண்சுமந்த வைகைநதி மருங்கொருகன் மண்ட பத்தில் வதிந்தா ளுக, விண்சுமந்த நெடுமாட மதுரைநகர் முழு துமிந்த மேன்மை கேட்டுப், பண்சுமந்த மொழியாரா டவர்மக்க ளொக்கலொடு பரவி னூரால். (உஎ)

511 வானாட்சி புரிகுலிசா யுதனும்நாற் கோட்டயிரா வதவு லாவு, மேனாட்செய் பூசையினு லுயர்ந்தபதம் பெறும்பெருமை மேவுங் கூடல், மீனாட்சி சுந்தரே சுரர்கொண்ட விண்டையொடு விளங்குங் காழிக், கோனாட்சி செயுந்திருநீ ருரருளிப் பாட ணிந்து கொண்டார் மாதோ. (உஅ)

512 திருஞான சம்பந்த ராதீனத் தார்வேலைத் திறமிக் காரால், வருஞான சம்பந்தர் தமையெதிர்கொண் டுபசரித்தார் வளருங் கல்விப், பெருஞான்ஞ் செல்வமுள வுத்தமபா லையமுதன்மை பெற்று ரோடும், அருஞானம் பெறுநகரத் தத்தனைபே ருங் கும்பிட் டருள்பெற் றுராரால். (உகூ)

513 பிட்டுக்கு மண்சுமக்க வாவணித்திங் களிலன்றே பெயர் வா னந்தக், கட்டுக்கு மீறியிந்த வாடியிற்சுந் தரன்போந்த கணக் கென் னென்பார், மட்டுக்கு மிஞ்சியவிக் கூட்டம்வர வறிவிப் பார் வரைந்த தென்பார், நெட்டுக்கு மிடமில்லை நின்றபடி நின் மினென நிகழ்த்து வாரால். (ஙய)

514 சுருட்டியசெம் பொற்சடையி னழகுகண்டார் மண்சுமக் கச் சுந்த ரேசன், தெருட்டியசெம் பொற்கூடை கட்டிவந்தா னெனப்பல்லோர் செப்பச் சில்லோர், மருட்டியசிந் தையிர் பிரியா வுடையாளைத் தவிர்த்திங்கு வருமோ வென்பார், உருட் டியகண் ணுனேக்கிக் கல்லாலி னிருந்தவனே யுவனென் பாரால். (ஙக)

515 கங்கைகோ தாவிரிகா விரியமுனை வேகவதி கமழுந் தெண்ணீர்த், துங்கபத்தி ராசரசு வதிநரும தாமுதலாத் தூய்மைம யுற்றுப், பங்கமற்ற நதிகளெலா மிவன்சடையிற் பாய்ந்தாலும் பற்று தங்கை, மங்கையொருத் தியைச்சடையில் வைத்தல் வியப் போவென்று மகிழு வாரால். (௩௨)

516 குவிகையரா யிவ்வாறு பற்பலர்பற் பலபகரக் குளிர வட்டக், கவிகைகளெண் ணிலநிழற்றக் கவரியிரு மருங்கிரட்டக் கமலப் போதுள், ளவிகைபெறும் படிசெய்திரு வடிகடிருப் பாதுகைகொண் டருளச் செம்பொற், சிவிகையினி லெழுந்தருளிச் செபவடங்கைக் கொண்டருளித் திகழ்ந்தார் மாதோ. (௩௩)

517 அடுக்குமொரு சிறந்தநிலை யடைந்தணுக்கத் திருத்தொண்டை யாற்றிப் பாக்கள், தொடுக்குமுயர் திறமையுற்றுத் தூய்மையும்வாய் மையும்பெற்றுத் துணிந்தேற் றார்கள், நடுக்கமுறச் செயுஞ்சட்டை நாதமுனி வன்றெளிந்த ஞான மேவும், ஒடுக்க முள வுயர்குமர சாமிமுனி வன்பின்னு முரைப்பக் கேண்மோ. (௩௪)

518 திரிபுவனங் கட்டளைச்சுப் பிரமணிய முனிவன்வளஞ் செழிக்கும் வேளூர், மருவியகட் டளைக்கந்த சாமிமுனி வன்சோலை வானின் முட்டி, யுருவியநள் ளாறுறையு மிராமலிங்க முனிவன்மிக வுயர்சீ காழித், திருவியலு முத்துவயித் தியலிங்க முனிவனின்னுஞ் செப்பு வேனால். (௩௫)

519 தில்லையினி லபிடேகக் கட்டளைதா யானவன்பொற் சிகரம் விண்ணின், எல்லையினிற் போய்ப்புகுது மலைக்கோட்டைக் கட்டளைசென் றெய்தின் யார்க்கு, மொல்லையினிற் பயனளிக்கு மையாற்றுக் கட்டளையிவ் வொருமூன் றுக்கும், சொல்லரிய முச்சோம சுந்தரப்பேர் முனிவரின்னுஞ் சொல்லு வேனால். (௩௬)

520 கொறுக்கையினி லுறையுஞ்சுந் தரலிங்க முனிவனுறுங் குற்றம் யாவும், பொறுக்கையினி லுயர்தருசுப் பிரமணிய முனிவன்வரும் பொல்லாங் கெல்லாம், அருக்கையினிற் சிறந்த வருணந்திமுனி யொடுக்கத்தி லடிக்கு மேலோன், வெறுக்கையினிற் சிறந்தசிலர் தமையடுத்த பாவினன்கு விளக்கு வேனால். (௩௭)

521 சூரனார் கோயிலென்னு மாதீனத் தலைவர்முதற் றொடர்ந்து சைவ, வீரராய்ப் புறமதங்கள் வீழ்ந்தழிய வாதவாள் வீசி வென்று, தீரரா யிருந்தனர்க ளிருக்கின்றார் பின்றுங்கச் செனித்த புத்திக், காரரா கியபரமா னந்தசிவ யோகிமழ களிறு மன்றே. (௩௮)

522 திருவாரூ ரிற்பிறந்த வகத்தியமுத் தையாதே சிகர்விண்
ணூடும், பொருவாத வெழிற்றிருவா வடுதுறையா தீனத்தின்
பொறுப்பில் விட்ட, கருவாரு முகிற்காரத்துத் தானப்ப முதலி
யார் கருத்துக் கேற்ப, உருவார்கட் டளைநடத்து மாறுமுக
முனிவனின்னு முணர்த்து வேனால். (௩௯)

523 அந்தமடத் தினிலிருந்து வந்துமது ரையைத்திரமா யடை
ந்து வாழ்ந்து, சந்ததமும் மீனாட்சி சுந்தரர்பொற் பாதபங்க
சங்க ஞானஞ், சிந்தையில்வைத் தாகமத்தின் முறையாகச் சிவ
பூசை செய்யுஞ் சீலச், சுந்தரசங் காலிங்கப் பெயர்கொள்முனி
வனும்தொடர்ந்து சூழ்ந்தான் மாதோ. (௪௰)

524 இத்தகைய முனிவரெலா முருத்திரநேத் திரந்திருநீ றில
ங்கச் சென்னி, வைத்தகைய ராய்மெல்ல வருஞ்சிவிகை மருங்
கிற்சூழ் வரவண் டெல்லாம், மொய்த்தநறு மணமாலை நான்று
துயல் வரல்விழுதின் முறைமை காட்டும், பைத்ததளி ரிலைக்
கல்லா லசைவேபோன் மென்றுரைப்பார் பார்த்தோர் மாதோ.
(௪௧)

525 திருஞான சம்பந்த தேசிகர்வந் தாரென்னுஞ் சிலசின்
னங்கள், திருநாவுக் கரசர்செல்வாக் குடையார்வந் தாரென்
னுஞ் சிலசின் னங்கள், திருநாவ லூரில்வராச் சுந்தரர்வந் தா
ரென்னுஞ் சிலசின் னங்கள், திருவாயின் மாணிக்க வாசகர்வந்
தாரெனுஞ்சில் சின்னந் தானே. (௪௨)

526 தோரணங்க ணிழற்கிட்ட பந்தரெனத் துலங்கினநந் தூய
நால்வர், ஆரணங்கள் பண்ணோடு மமுதமழை பொழிந்தன
நல் லழகு வாய்ந்த, வாரணங்கள் சூற்கொண்டு மழைமுகில்போ
னடந்தனசவ் வாது சேர்ந்த, சூரணங்க டெருவெல்லாந் தூர்த்
தனநாம் மிகவிரித்துச் சொல்வ தென்னே. (௪௩)

527 இப்படியற் புதமான பவனிபிட்டுத் தோப்பினின்று மெழு
ந்து வேகத், துப்புடைய விருப்புப்பா தையின்வாசல் கடந்தெ
வருந் தொழுஞ்சீ ராளன், தப்படைய இல்லாத தானப்பன்
றெருவழிபோய்த் தழைபூஞ் சோலை, மைப்படியுந் துறைசை
மடத் தீபாரா தனைபெற்று மகிழ்ந்து மாதோ. (௪௪)

528 மாமாட்சி பெறுமந்தத் தானப்ப முதலியார் வமிச முத்
துக், காமாட்சி முதலியார் தமதுமுன்றி லலங்கரித்துக் கனிந்து
வாசப், பூமாட்சி பெறப்பந்தர் புனைந்தாரா தனம்புரிந்த பொற்
புங் கண்டு, தாமாட்சி செயும்போடி மன்னனரண் மனைவந்து
சார்ந்தார் மன்னோ. (௪௫)

529 சனிவார மிளைப்பாறி ஞாயிறுநாட் சந்தையினிற் சாற்றும் பற்பல், கனிவாரிக் குவிப்பித்துப் பால்தயிர்தேன் சுத்தோத கங்கங் காநீர், பனிவாரி தருவித்துச் செம்பொற்பாத்திரநிறையப் பண்ணி மிக்க, கனிவார மீனாட்சி சுந்தரருக் கபிடேகங் கண்டார் மன்னோ. (௪௬)

530 பரவுமிசை யிசைமதுரைச் சொக்கநா யகற்குமிகப் பழைமை யான, தருமைவளர் தருசுப்பிர மணியகுரு வபிடேகந் தகவே செய்தான், அரவுமதி யமுநதியு மதினைந்து மிகக் குளிரா லஞ்சி யின்னே, யிரவிகதிர் வேண்டுமென வலதுவிழி மலர்ந்தனனவ் விடர்நீங் கிற்றால். (௪௭)

531 மதிநாறுஞ் சடையுடையார் புலானாறுந் தோலாடை மாற்றிச் செம்பொற், பொதிநாறும் வத்திரங்கள் போர்த்திநறு மணமாலை பொற்பச் சாத்திப், பதினாறு வகையான வுபசாரங் களுநிறையப் பண்ணு வித்துத், துதிநாறுந் தேவாரப் பதிகங்கடோத்திரமுந் தொடங்கி மாதோ. (௪௮)

532 ஒருநாம மோருருவ மொன்றுமிலாற் குலகமெலா முவந்து போற்றுந், திருநாம மாயிரங்கொண் டருச்சனையும் புரிவித்துச் சென்ம மாற்றுங், கருநாம மாற்றுகின்ற கற்பூரம் பொற்பூரக் காட்டக் கண்டு, செருநாமஞ் செயும்போடி வேந்துமனை போந்திருந்தார் சிறக்க மாதோ. (௪௯)

533 மற்றைநாட் டிங்களிற்கா லையிற்றிருமஞ் சனமாடி மறைசொல் வாயாற், சொற்றவா கமவிதிபி லனுட்டான முதலியன தொடங்கிப் பூசை, முற்றிமுதற் றினமெஞ்சி வைத்ததிருத் தேவார முடிப்பான் கங்கைக், கற்றைநெடுஞ் சடைச்சுந்தரேசனா லயம்புகுதக் கருதி னனால். (௫௰)

534 பட்டிபங்கு விசிறிகளும் வெண்பொற்கை விளக்குகளும் பழிப்பில் தங்கக், கட்டிகளி னீட்டியகட் டியங்களும்பற் பலர் முன்பு காவிச் சூழ, மட்டலங்கல் முப்புடைக்காய் வாழைநறுங் கனியாதி வரிசை கொள்ள, அட்டகயஞ் சுமந்தானைத் தொழுது பதி கம்பூர்த்தி யாக்கி னனால். (௫௧)

535 ஆப்புடையார் கோயிலென வழங்குதிரு வாப்பனூரடைந்து சென்னிப், பாப்புடையா ரகிலசரா சரங்களெல்லாந் தோற்றுமுன்னுற் பவித்து நீண்ட, மூப்புடையார்க் கபிடேகார்ச் சனைபுரிந்து திருப்பதிக முற்றிப் பச்சைக், காப்புடையார் பரங்கிரியைத் தொழுதுபதி கம்பாடிக் களிப்புற் றாரால். (௫௨)

536 வட்டநெடுங் கடல்புடைசூழ் நிலவுலகிற் பன்னூறு வருட
மாகச், சிட்டர்களாய் வாழ்ந்துவரு முத்தமபா ளையநகரிற் செனி
த்துக் கற்றுச், சட்டநிரு மாணசபை யங்கமுள பீட்டூரா சனும்
பெற் றான்போ, லிட்டமுள சிறியதந்தை சோமசுந்த ரனும்
போந்தங் கிறைஞ்சி மாதோ. (௫௩)

537 எங்கள்பொரு ளாற்பூசை பவனியுங்கொண் டருள்கவென
யிசைந்து பிள்ளைத், திங்களணி முடியார்பூ சனைமகே சுவரபூசை
சிறக்கச் செய்து, வெங்கள்விம்மு பொழில்சூழா வணிமூல வீதி
யிலெள் விழாத வண்ணம், நங்கள்தரு மைப்பெருமா னுலாப்
போந்து கொலுக்காட்சி நல்கி னானால். (௫௪)

538 சிரசுசெறி செழுஞ்சடிலத் தருகினினீற் றுக்கீற்றுத்
திங்களெங்கும், பரசுகல்வி மான்களொடு பரசிவமாய்க் காட்சி
யருள் பாலித் தானால், அரசுகொடு தருமபுரத் தினிலுறைசுப்
பிரமணிய வண்ண லேயா, முரசொலிசெய் தனதிருப்புக்
கைலாயப் பொருப்பென்னல் முறைமை யாமால். (௫௫)

539 கலைபுணர்ந்த புலவோர்க்குக் கலைகளுஞ்சங் கடப்பட்டுக்
கற்றுள் ளோர்க்கு, விலைபுயர்ந்த வெண்பட்டுஞ் சால்வையும்பீ
தாம்பரமும் விதிபி னீந்து, தலைசிறந்த தமிழருணா சலக்கவிரா
சனைத்தலைமை சாற்றி யேற்றி, யலைமலிந்த கடலென்னச் சபை
கூட்டி யரியணைமீ தமர்ந்து மாதோ. (௫௬)

540 அருமையா யெனதுவிண்ணப் பக்கவிக ளத்தனையு மன்
பாய்க் கூறிப், பெருமையா யென்முன்னோர் செய்தவறங் களை
யெடுத்துப் பேசி யெற்குத், தருமையா தீனமகா வித்வசிரோ
மணிப்பட்டந் தந்தெல் லாரு, மொருமையாய்க் களித்திடவி
பூதியும்பீ தாம்பரமு முதவி னானால். (௫௭)

## திருமங்கலம்.

541 தலத்தார்க்குங் கோயிலதி காரமிகும் பாண்டியப்பேர்
தாங்கு மேன்மைக், குலத்தார்க்கு முத்தமபா ளையத்தார்க்கு
மடத்தார்க்குங் குறித்து வைத்த, நலத்தார்க்கு மவரவருக்
கேற்பவிடை பட்டாடை நல்கி மேலைப், புலத்தார்க்கும் புகழ்த்
திருமங் கலத்தார்க்குக் காட்சிதரப் புறப்பட் டானால். (௫௮)

## அகத்தியான்பட்டி, சூலக்கரை, சாத்தூர்.

542 செகத்தியான் றொழுங்குருதே சிகன்றிருமங் கலம்பூணைச் சிறக்கு மாசெய், தகத்தியான் பட்டிசூ லக்கரைவச் சைக்கார னூரகன்று நெஞ்சில், மிகத்தியா னஞ்செயுஞ்சாத் தூர்நகரத் தார்விரும்ப வெறுந் துரும்பும், புகுத்திடாத் தகையுளபட் டணப்பிரவே சமுமிசைந்து போந்தான் மாதோ. (௫௯)

## கோயிற்பட்டி, தளவாய்புரம், கெங்கைகொண்டான், சிந்துபூந்துறை, நெல்லை, அருளிப்பாடு.

543 வந்துவீ ழருவிமலி கோயிற்பட் டியுமிரக்கம் வைத்து பார்க்குந், தந்துவாழ்ந் திடுந்தளவாய் புரமுநன்கு தடந்து போய்த் தகுசீர் வாய்ந்த, இந்துவாழ் சடையானைக் கங்கை கொண்டா னிற்போற்றி யிறைஞ்சிப் பூக்கள், சிந்துபூந் துறை யினெல்லை யருளிப்பா டேற்றுவுலாச் சிறந்தான் மாதோ. (௬௰)

## செய்துங்கநல்லூர், ஸ்ரீவைகுண்டம் ஆனையப்பபிள்ளை சத்திரம்.

544 செய்விண்ட கமலநிறை செய்துங்க நல்லூருஞ் செறியுஞ் சீர்ச்சீ, வைகுண்ட மும்மானை யப்பபிள்ளை சத்திரமும் வழியு ணோக்கிக், கைகொண்ட நெடுவடிவேற் சண்முகசுந் தரப்பெரு மான் களித்து வாழ, மையுண்ட சீரலைவாய்க் குளிர்புனிதக் காற்றெறியும் வழிக்கொண் டானால். (௬௧)

## திருச்செந்தூர்.

545 பெருமயில்சூழ் திருச்செந்தூர்த் தலத்தார்நம் பிரான் வருகை பெரிதுங் கேட்டங், கொருமயிலி லருளிப்பாட் டுடன் போந்து முகமனுரைத் துடன்கொண் டுற்று, ரருமயிலிற் சுப் பிரமண் ணியனையெதிர் காணல்மிக வருமை யன்றோ, தருமை யில்வாழ் பெரியாருக் கெதுசெயினு மதுமிகவுந் தகுதி யாமால். (௬௨)

546 தெண்டிரைத்தீர்த் தாடனத்தைத் திருக்கூட் டத் தாரு டனே சிறக்கச் செய்து, வண்டிரைக்கு மலர்க்குன்றுற் சொக் கநா தப்பெருமான் வழிபா டாற்றி, யுண்டிரைக்குக் காத்திருக் குங் குருகுசெறி கடற்கரையி லுலவா வாழ்க்கை, கொண்டிருக் குஞ் சண்முகனைக் கும்பிட்டின் பக்கடலுங் குளித்திட் டானால்.

547 பாகசா தனன்சூர்வேர் பறித்தனான் றபிடேகம் பண்
ணக்கேட்டோம், யோகசா தனமிகுந்த தருமையதீந் திரனுலக
முவக்கு மாறு, சேகசா தனமெல்லாஞ் சேகரித்தாட் டியமிகுதி
செப்ப வென்போல், மூகசா தனமுடையார்க் காகுமோ
வொன்றைமட்டு மொழிகிற் பேனுல். (௬௪)

548 மாற்கடலா ழியையீந்த தெய்வநா யகன்குமரன் மணிமு
டிக்கு, நாற்கடல்சூ ழுலகிலுயர்ந் தனகாரிற் கொணர்ந்தாட்ட
நறும்பா லோடிச், சேற்கடலா கியலவண சமுத்திரத்திற் பாய்ந்
தினிக்குந் திறமை வாய்ந்து, பாற்கடலா கியதென்றால் வேறெ
ன்ன மிகவிரித்துப் பாட லாமால். (௬௫)

549 அம்போதி அன்றுநீங் கருப்பஞ்சாற் றுக்கடலே யாகு
மென்பார், செம்பாதி மறைச்சிறார் ததிபெருகு மகோததியே
செறிந்த தென்பார், நம்பாதீர் குடித்தறிமி னிதுபிரச நரலையே
நன்றி தென்பார், வம்போது வீர்கிருத சாகரமே யீதெனயார்
வறிந்து மாதோ. (௬௬)

550 ஐயாறு தருமையார் கோபில்களி லொன்றென்றே யறிந்
துள் ளேன்ஆன், நெய்யாறு பாலாறு தயிராறு தேனாறு நீண்ட
நாமச், செய்யாறு செழுங்கருப்பஞ் சாறாறு மீறுகச் செப்பு
மிந்த, ஐயாறு முடையானென் பதைபின்று தான்றெரிந்தே
னறிவுள் ளீரே. (௬௭)

551 செந்திலா திபனையெங்கள் தெய்வநா யகிதழுவுந் திருத்
தோ ளானைக், கந்தசா மியைத்திருமஞ் சனமாட்டி மணக்கோ
லங் கனியச் சாத்திச், சுந்தரா னந்தமிகும் பவளக்காற் சப்பரத்
திற் றேகை மீதில், இந்திரா தியரிறைஞ்ச யெழுந்தருள்வித்
துலாத்தெரிசித் தின்புற் றானுல். (௬௮)

552 வெடித்திட்ட சூரலசுர குலமுழுது மடியோடும் வீழ
ஆவி, முடித்திட்ட நெடுவடிவேற் சண்முகநா தன்கோயில்
முழுது மோர்நாட், படித்திட்டஞ் சிறிதேனுங் குறையாமற்
சொந்தத்திற் பண்ணு வித்தான், வடித்திட்ட புகழ்த்தரும புர
குருசுப் பிரமணிய வள்ளல் தானே. (௬௯)

553 முக்காணித் திருமறையோர் முருகவே ளுடன்போந்து
முன்றிற் செந்தூர், புக்கார்நம் சிவபூத கணத்தலைவர் வழிவந்த
புனித ரென்று, தக்கார்க ளேயறிவீ ராதலினை யாயிரம்பேர்த்
தடத்தின் மூழ்கச், செக்காடி வைத்தஎண்ணெய் முழுமுழுக்கா
யபிடேகஞ் செய்வித் தானுல். (௭௰)

554 புவியிலுயர் தருமவர்க்கோர் போசனசா லையைவகுத்துப்
புதிய தாய, குவியல்செயுங் கறிகள்பல கொணர்ந்துநலந் தெரிந்
தரிந்து கூட்டி யாக்கி, அவியலொடு பச்சடிகிச் சடிபொரி
யல் புளிங்கறிநீ டாணங் கூட்டுச், செவியில்முனங் கேளாத
குழம்பிரசம் மோர்க்குழம்பு செறிந்து மாதோ. (௭௧)

555 புளியன்னம் அக்கார வடிசில்ததி யோதனம்வெண் பொங்
கல் சம்பாக், களிமன்னும் பாற்சோறு கேசரிபாத் தெலிமிச்சங்
கனிச்சா தம்தேன், தெளிவென்னும் மலையாளப் பிரதமன்மா
ஷாபூபஞ் சிலேப்பி போளி, ஒளிதுன்னும் பதர்போணி ரவா
லாடு குஞ்சாலா டுயர மாதோ. (௭௨)

556 விண்டலத்தார் களும்விரும்பும் ஆனைக்கொம் பாவெனப்
பேர் மேவும் பச்சைத், தண்டுலத்தாற் றியாமற் குழையாமற்
கஞ்சிசற்றுஞ் சாரா மற்பூ, வண்டலர்த்தா முல்லைஅரும் பினைப்
போலச் செழுஞ்சோறு வடித்து வீசுங், குண்டலத்தார்க் கன்
போடு வட்டித்துப் பொற்பருப்புக் குவித்து மாதோ. (௭௩)

557 மொய்யாறு முகனடிக்குத் திருத்தொண்டு புரிகின்ற
முறையின் மிக்க, பொய்யாறு முள்ளத்தா ரிலைநிறையும் படி
கூடப் போந்த சொந்த, நெய்யாறு முதலான ஐயாறும் மடை
திறந்து நெடுக விட்டான், துய்யாறு கட்டிதிருச் செவியணியுந்
தருமபுரத் தோன்றல் தானே. (௭௪)

558 அப்பளம்வா ழைப்பழம்ப லாப்பழம்மாம் பழமென்ன
வவனி கூறும், முப்பழமுஞ் செறிவித்துப் பலவூறு காய்வாட்டு
முதிரச் செய்தான், உப்பளஞ்சூழ் திருச்செந்தூர் தெய்வநா
யகன்மணத்தி லுயர்ந்து பற்பல், ஒப்பளவில் லாதமணஞ் செரிந்
துவிளங் கியபெருமை யுரைக்க லாமோ. (௭௫)

559 உண்டெழுந்தார் சிலர்அரைக்கால் வரிசைவைத்துக் கண்
டமட்டு முண்டெ ழாரைக்,கொண்டெழுந்தார் சிலர்கழித்த கோ
தைமட்டு மொருபுரத்திற் குவித்தா னந்தங், கண்டெழுந்தார்
சிலர்உச்சிக் கடலெழுந்தார்த் தெனவெழுந்து கந்த நாமம், விண்
டெழுந்தார் சிலர்இந்த விதம்நன்று முற்றிற்றிவ் விசேட மாதோ.
(௭௬)

560 பைவைத்த பொன்னணியுந் தெய்வத்தின் றிருவாக்காற்
பகர்ந்த தொன்மை, சைவத்தை மேற்கொண்ட மநேகசுவரபூ
சையினைநிரந் தரஞ்செய் தாலும், மெய்வைத்த மறையோருக்
கன்றுசெயல் போற்சிறந்து விளங்கச் செய்தான், செய்வைத்த
விளங்கரும்பும் விண்குத்துந் தருமபுரச் செல்வன் றானே. (௭௭)

561 சொல்லற்கு முடியாத தருமபுரத் திறைச்செந்தூர்த் தூயோர் வேண்டப், பல்லக்கில் வீற்றிருந்திந் திரனும்வியந் திடச்சிறந்த பவனி போந்தான், வெல்லக்கு நிகர்கிளவி யருங் காளை யரும்தொழுது வீழ்ந்து நோக்கும், பல்லக்கு மிடைத னினா லாகுபெய ரதன்பெயராய் பரவிற் றன்றே. (எஅ)

562 காவினிலெங் கணுங்காதச் சுற்றளவு மொருதுளிருங் காணா வண்ணம், மாவிலையின் றோரணங்க ளிடைவெளிச்சற் றில்லாமல் மறைத்து நட்டார், வாவியனங் காவேரித் துறைபடி யுந் தருமையிறை மகிழ்ந்து காண, மாவிலைதந் ததுகொணர்ந்த தாலதுவு மாகுபெயர் மருவிற் றம்மா. (எகூ)

563 படைகொண்டு சூரறுத்த செந்திலா திபன்றிருத்தாள் பரவிப் போற்றி, விடைகொண்டு புறம்போந்து திருக்கண்க ணீர்ததும்பி வீழ நெஞ்சம், தடைகொண்டு சிந்தித்துத் தெளிந் துதிரு வருள்பெற்றுத் தழைந்து மேலோர், புடைகொண்டு சூழ்ந்துவரத் திருமடத்திற் கெழுந்தருளிப் பொலிவுற் றானல். (அ௰)

564 தொழுவார்க்குந் துணையிருந்த பெரியார்க்கும் திருக் கோயிற் றொண்டில் நாளும், வழுவார்க்கும் செந்திலா திபன் பூசை யாசையொடும் மாண்பிற் றாகக், கழிவார்க்கும் பிரிவஞ்சி நெஞ்சுருகிப் பேரன்பு கனிந்து கண்ணீர், பொழிவார்க்கும் உடையும்விடை யுந்தந்து பிரயாணம் புரிந்திட் டானல். (அக)

## ஸ்ரீவைகுண்டம்

565 அமரர்குலந் தினந்தொழுஞ்சீ வைகுண்டத் தினைத்தெரி சித் தன்பின் மிக்க, குமரகுரு பரமுனிவன் கோயில்திருக் கண்ணுற்றான் குதூ கலித்துத், தமரமிக நமரெல்லா மொரு பவனி கண்டின்பந் தழையப் பெற்றார், பமரமலி சிந்துபூந் துறையிலெழுந் தருளியருள் பாலித் தானல். (அஉ)

## சிந்துபூந்துறை.

566 திருக்குறுக்கந் துறைமுருகப் பெருமானுக் கபிடேகஞ் செய்து பேரன், பருக்குருக்க மிகப்பீதாம் பரம்சாத்தி யலங் காரம் பண்ணிப் போற்றி, தருப்பெருக்குங் குளிர்சாலைக் குமர னடி வணங்கியன்பிற் றாழ்ந்தான் வெள்ளிப், பொருப்பிருக்கும் படியருள்சீ கைலாச நாதனையும் போற்றி னானல். (அ௩)

உ
தருமபுரம் ஆதீனம்
இலவச வெளியீடு

திருநெல்வேலி.

567 நெற்குழுள்ளு வேலியிடா நெல்வேலிச் [...]ழைப்பு நிகழ்த்
தற் பாற்றோ, தெற்கரண்ம னைத்தளவாய்த் திருமலைப் பப்
பெரியோன் செறிந்த கட்டை, விற்குமது ரைச்சொக்க நாத
ருக்குப் பார்த்தோர்கள் வியந்தன் னோர்நெஞ், சிற்குவகை
மிகவும்வரக் கனகாபி ஷேகம்நன்கு செய்தான் மாதோ. (அச)

568 **இந்தனத்தைச்** சுமந்தபுண்க ளாறுதற்குக் கருப்பூர
**மிழைத்துக்** கூட்டிச், சந்தணத்தை யப்புதல்போன் மெனப்
பற்ப லபிஷேகந் தகச்செய் வித்து, வந்தனத்தை நெடிதாற்றி
சோதியைக்கண் டிலைப்பூதி வாங்கிப் பூசித், தந்தனத்தை நிக
ரிண்டை பெற்றுயர்ந்தான் திருமலைப்பேர்த் தளவாய் தானே.
(அரு)

569 வெண்காட்டு வளர்திருவா வடுதுறையா தீனமடம் விள
ங்கு கின்ற, கண்காட்டுஞ் செயல்மாகே சுவரபூசைக் கிணற்
றருமை காதினுற் கேட், டெண்காட்டும் தருமபுர மகேசுவரபூ
சையைத்தளவா யேந்தல் ஓர்ந்து, பண்காட்டுங் கோமுத்தி
ஈசான மடத்தியற்றிப் பணிவுற் றுளுல். (அகூ)

570 உலங்கொண்டு திரண்டதடம் புயத்தளவாய்ப் பட்டப்பேர்
உற்றோன் மாறு, நலங்கொண்டு சிறந்தகுணத் திருமலையப் பேந்
திரனுல் நாறு தானே, சலங்கொண்டு வளர்ந்துநெல்லை நிறைக்
கின்ற தருமபுரத் தலைவன் நெல்லை, வலங்கொண்டு சூழ்வரல்கு
ரியரோரா பிரவர்சுற்றி வரலொப் பாமால். (அஎ)

திருப்புடைமருதூர்.

571 திருப்புடைய மருதூரிற் குருநாதன் செறிந்தவுடன்
சிறந்த சிந்தை, விருப்புடைய மந்திரத்தா ரருளிப்பா டேற்று
ஒளிபின் விளங்கி னுன்வெண், பொருப்புடைய தலத்திறைமுன்
கொண்டருளும், நெய்மணக்கும் புனித வேள்வி, நெருப்புடைய
கும்பாபி ஷேகநாள் இன்றென்று நிகழ்த்தி மாதோ. (அஅ)

572 கங்காபி ஷேகங்கொண் டானுக்கா யிரமென்னக் கணித்து
வைத்து, சங்காபி ஷேகஞ்செய் கின்றோங்கண் டருள்கவெனச்
சந்தோ ஷித்து, மங்காத படியதனை நஞ்செலவாற் செய்தி
ரென்று வழங்கி முற்றிச், சிங்காரஞ் செய்திடபா ரூடராய்த்
தெரிசனமுஞ் செய்தார் மாதோ. (அகூ)

573 நண்புபெறு முயர்திருவா வடுதுறையா தீனத்தார் நாடத் தக்க, பண்புமிகும் பூசையும்மா கேசுவரபூ சையும்சிறக்கப் பண்ணு வித்துத், திண்புவிக்குத் திலகமெனத் திகழ்தரும புரக் கருணைத் தெய்வ வாழ்வைக், கண்புதுமை யிதுவென்னத் திரு வுலாக் கொலுக்கண்டு களிப்புற் றூரால். (கூய)

## பாபவிநாசம்.

574 கோபவிநா சஞ்செயும்நஞ் சுப்பிரமண் ணியப்பெருமான் கூட்டத் தோடு, பாபவிநா சஞ்சார்ந்து நதித்தீர்த்தா டனம்புரி ந்து பலந்தந் தென்றும், தாபவிநா சஞ்செயுமக நியாசபூர் வக மாட்டித் தாழ்ந்து போற்றிச், சாபவிநா சங்காணு மிடபவா கனக்காட்சி தழைந்தான் மன்னோ. (கூக)

## விக்கிரமசிங்கபுரம்.

575 விக்கிரம சிங்கபுரத் தினில்வேதா சலன்பத்தி விளைந்த மேலோன், அக்கிரம வயிற்றுவலி யிற்றுயிலா காரமிலா அல்லல் நீங்கி, சக்கிரமுன் கொசுகெனப்போய் நந்தருமை யாதீனத் தலைவன் செங்கைச், சுக்கிரவி பூதியினைப் பெற்றுடலி லணிந்தவுடன் சுகமுற் றானால். (கூஉ)

576 ஆற்றலடல் விடையேறு மாலவா யான்றிருநீ றள்ளிப் பூசித், தேற்றிமுனந் தென்னவன்வெஞ் சுரந்தீர்த்தான் விக்கிர மசிங்கைக் கின்று, தோற்றிவே தாசலத்தென் னவன்சூலை தொலைய எங்கள் சொக்கநாதர், நீற்றினைத்தந் தருள்செய்தான் றருமைச்சம் பந்தன்வலி நிகழ்த்தற் பாற்றோ. (கூங)

577 உண்டிருக்கு மவ்வேதா சலமுதலி யார்சூலை யொழிந்து வாழ்வு, கொண்டிருக்கும் படிசெய்த சுப்பிரமண் ணியதேவ குருவை வாழ்த்தி, வண்டிருக்கு மலர்ப்பூசை மகேசுவரபூ சையைசிறக்கும் வண்ணஞ் செய்து, பெண்டிருக்கு மாடவர்க் குங் கண்டிருக்குங் கனியுலாப் பெயர்வித் தானால். (கூச)

## ஆழ்வார்குறிச்சி, பார்ப்பான்குளம், சிவசைலம்.

578 தவசயில மனையான்ஆழ் வார்குறிச்சி யிற்பவனி தழைந்து மாற்பிற், றுவசயில முடையார்வாழ் தருபார்ப்பான் குளதது லாச் சூழ்ந்து போந்து, சிவசயில மடைந்தபிஷே கம்புரிந்து தெரிசித்துச் சிவபி ரானை, நவசயிலம் நேருட்வா கனத்திற்கண் டுயர்மடத்தில் நண்ணி னானால். (கூரு)

## குற்றாலம்.

579 வற்றாத நெடுங்கங்கை பெருஞ்சடையில் வைத்துநித்தம் வழிந்திட் டாலும், பொற்றாது நிறையருவி மலிகயிலை மலை வாழ்க்கை புரிந்திட் டாலும், முற்றாத மதியநுதற் கிரிராஜ சுதையோடு முன்னோன் சாரற், குற்றால மலையருவி படிகாற்றுக் கேவந்து குடிபுக் கானால். (௯௬)

580 தெள்ளாறு புனைந்தசடைப் பரமன்போல் வான்தருமைச் செல்வன் மிக்க, நள்ளாறும் ஐயாறுங் காவேரி யென்றுலக நாட்டும் பேரைக், கொள்ளாறு முடையானா யிருந்தாலுங் குற் றாலங் குதித்து வீழும், வெள்ளாறு படிவதற்குத் திருவுள்ளம் பற்றிமிக விருப்புற் றானால். (௯௭)

581 வீழ்கின்ற குளிரருவிக் கணித்தாக கையிலாகு மேலோர் கொள்ளத், தாழ்கின்ற பொற்கதிர்போற் சடையவிழ்த்து நெடுகவிட்டுத் தலையிற் றாங்கி, ஆழ்கின்ற பெரும்பள்ளம் நிறைந் தோட நிற்கின்ற அரிய காட்சி, சூழ்கின்ற கங்கையினைப் பகீர தற்கு விடுத்ததெனுந் தோற்றத் தாமால். (௯௮)

582 காறாத உழக்காத மருந்துபல கலந்துவைத்த கஷாய மும்கூ, டாறாத வாசமலர்த் தைலமுமநித் தியமுங்கொண் டருளித்தேவர், தேறாத குற்றாலக் கிழவருக்குப் பலவிரசஞ் சேர்த்திச்சீதம், யேறாத பட்டாடை புனைந்துகற்பூ ரமுமேற்றி யிறைஞ்சி னானால். (௯௯)

## தென்காசி.

583 மன்காசி னித்திலத முதன்மைக்குற் றாலலிங்க மன்னவன் றென், தென்காசி யிற்பூசை களும்பவனி யும்செய்து சேகரஞ் செய்த, பொன்காசு களைமாலை யாகப்பொற் சங்கிலியிற் புனை ந்து சாத்தி, நன்காசி பெற்றுயர்ந்தான் சில்லறையை யொன் றுக்கல் நன்று தானே. (௱)

584 முன்பராக் கிரமபாண் டியராஜ சேகரனார் முற்றி முன்பு, பின்பிராத் திருப்பணியை விசித்திராற் புதஞ்செய்து பிறங் குங் கோயிற், கன்பராய்த் தொண்டுபுரி திருக்கூட்டத் துடன் காசி யண்ணலாரை, முன்பராய்த் தொழுதெழுந்து வலம் போந்து திருவிருப்பை முன்னினாரால். (௱௧)

## லவணசமுத்திரம், புளியங்குடி.

585 தித்திக்கும் பழம்புளியங் குடிலவண சமுத்திரத்திற் சிறந்து வாழும், சத்திக்கு மறைக்குலத்துச் சுப்பிரமண் ணிய சர்மா தழைந்த வுள்ளத், தெத்திக்கும் புகழ்ச்சொக்க நாதருக் கும் மகேசுவரர்க்கும் இனிமை யாக, முத்திக்கு வழிகாட்டும் பூசைக்குச் சிறக்கவெல்லாம் முற்றி னுல். (௯௨)

## சங்கரன் கோயில்.

586 சங்கரநா ராயணர்கோ யிலேயடைந்து திருக்கூட்டத் தவர்க ளோடும், பொங்கரவா யனுசாரம் புரிவார்க்குப் பய முறுத்தும் புனிதக் கோயில், அங்கணனு ரையுமவரை பெருந் தவஞ்செய் தடைந்துலக மனைத்து மீன்ற, மங்களகோ மதிமாதா வையுந்தொழுது மரியாதை வழங்கி னுல். (௯௩)

## கருவைநல்லூர்.

587 சிறந்தகரி வலம்வந்த நல்லூர்க்கோ பிலேயடைந்து தெய்வ மன்னுன், பிறந்ததிரு நாள்த்தலைநா ளசுவதியா தலின்மிக்கப் பெருமை யாகக், கறந்தபால் கலங்கலமாய்க் கொண்டுபால் வண் ணருக்குக் கனிய வாடித், துறந்தமா தவன்பெருமான் யெழுந் தருளிப் பாடுகண்டு துதிசெய் தானுல். (௯௪)

588 கற்றவர குணராம னதிவீர ராமனெனக் கடல்சூழ் ஞா லர், துற்றபுகழ்ப் பாணடியசோ தரர்அரிய பணிசெய்து துலங் குங் கோயிற், குற்றபல பழமையெல்லாம் மிகப்புதுக்கிச் சீர் திருத்தி உகளலெக்கம், பெற்றதிருப் பணிசெயருணுசலன்மா ளிகைவதிந்து பெயர்ந்திட் டானுல். (௯௫)

## இராஜபாளையம்.

589 இராசபாளையத்திருக்கு இராஜாக்க ளால்மிக்க ஏற்றத் தோடு, நிராசையுளான் உபசரிக்கப் பெற்றவர்க்கு விபூதியினை நிறையத் தந்து, பராசனைப்போ லுயர்ந்தவிண்டு சித்தபெரி யாழ்வானூற் பவித்த மேன்மைச், சராசனவாழ் சீவில்லி புத் தூரை யடைந்தின்பந் தழைந்திட் டானுல். (௯௬)

## ஸ்ரீவில்லிபுத்தூர்.

590 ஆண்டாளை நீண்டாளை யலங்கரிக்கப் பட்டர்பிரான் ஆற்று மாலை, பூண்டாளை யாற்றரங்க னல்லாமற் பாற்றரங்கன் பேர்க் கிட்டாலும், வேண்டாளைத் தூண்டாத விளக்காளைத் தனைப் பணியார் வீட்டிற் செல்வங், தூண்டாளைக் கடற்பிறந்த இளை யாளைத் தொழுதுகளி தூங்கி னுல். (ருஎ)

591 மிக்கூர்வண் புகழுடைய திருமலைநா யக்கரன்பு மேலிட் டோடி, வைக்கூர்மை மதியோடு செய்ததிருப் பணிபிருளின் மறைதல் போக்கி, திக்கூர்செல் வாக்குடைய சி. க. ரு. சிதம் பரம்செய்தவம் செனித்த சீலன், ஒக்கூர்சிந் தாமணிசெய் மூன்றிலக்கத் திருப்பணிகண் டுவந்து மாதோ. (ருஅ)

## மடவார்வளாகம்.

592 வானசம்பந் தஞ்செறியும் பொழில்மடவார் வளாகத்தை மன்னிக் கண்டார், ஈனசம்பந் தந்தவிர்க்கும் முக்கணு தனை யிறைஞ்சி யிவ்வா தீன, ஞானசம்பந் தத்தலைவன் றிருவவதா ரஞ்செய்த நன்மை மிக்க, தானசம்பந் தம்பெற்ற திருமனையை யொருமனதாய்த் தரிசித் தானுல் (ருகூ)

593 நின்றிசைக்கும் புகழ்மிகுந்த தருமபுரத் துறையுமிறை நெடிதிவ் வாறு, தென்றிசைக்கு விருந்தாகி யிருந்தானென் பதுதெரிந்தோம் செல்வ மிக்க, நன்றிசைக்குந் தண்மையுள சோணுட்டு மாக்களுக்குக் கறவைக் கோவே, யென்றிசைக்கும் பெருந்தகையான் வடதிசைக்கிச் செல்லமன மிசைந்திட் டா னுல். (ருயி)

## திருமங்கலம், திருப்பரங்குன்றம்.

594 முன்னர்உறுங் கல்லுப்பட் டியைக்கடந்து கடலுலக முழு து மீன்ற, தென்னர்குலக் கொழுந்துபசு வாய்க்கொடும்பா வியைமுத்தி சேர்க்கச் சென்ற, நன்னர்வயல் சூழ்திருமங் கல த்திருபூ சையும்புரிந்து நண்ணு வோர்க்குப், பின்னர்வரும் பிறப்பறுக்குந் திருப்பரங்குன் றினைக்கண்டான் பெருமை யோ னே. (ருயிக)

595 சங்கத்திற் பழந்தமிழ்நூ லாராய்ச்சி புரிதொழிலிற் றலை மை பெற்றுச், சிங்கத்திற் பொலிஅருணு சலக்கவிரா சப்பெரி யோன் சிறக்கப் பாடும், பங்கத்திற் பிறவாயாத் திரைப்பதிகச்

செழுமலர்த்தேன் பருகிக் காய்ந்த, தங்கத்திற் சிறந்தான்முத்
தினமிருந்து பிரயாணந் தழைந்திட் டானால். (௱௰௨)

596 மேலூரி லிருந்துமேல் பால்மூன்று மயில்வழியில் விளங்
கு கின்ற, சேலூரு மோடைவிநா யகபுரத்திற் கருணைநல்லூ
ர்த் திருப் பணிக்குக், காலூரும் படிசெயுமா நகரிஅரு ணசல
னுட் களித்துக் காணும், சாலூரும் வயல்புடைசூழ் வசதியில்
வீற் றிருந்தானந் தருமை வாழ்வே. (௱௰௩)

597 உருப்பணியை யுச்சிமுத லுள்ளங்கால் வரையும்பூண் டுல
கந் தாங்கும், பொருப்பணியுஞ் சொக்கநா தப்பெருமான்
பொழிற்கருவா புரியி னேடிவ், இருப்பணியும் வீற்றிருந்து
மகேசுவரபூ சையுஞ்செய்தற் கெய்திற் றென்னே, திருப்பணி
செய் திருக்குமந்த வருட்பெருக்கின் பயனென்றே செப்ப
லாமால். (௱௰௪)

598 கூறுவிநா யகபுரத்தைக் கடந்துசெழுங் கருங்காலக் குடி
க்குச் சென்று, தேறுபூ சைகளிரண்டுஞ் செய்துபிரான் மலைக்
கெழுந்து செல்லுங் காலை, ஏறுமுகிற் குழாங்குமுறிப் பெயல்
புரிந்து பல்லக்கோ டெல்லா மும்நீர், ஊறுகின்ற கிணறுயிற்
றப்பெருமை செப்புவதற் கொண்ணு தன்றே. (௱௰௫)

## பிரான்மலை.

599 கலையுடைய கோட்டுமுனி யுத்தான பாதநகர் கழல்வைத்
தாங்கே, அலையுடைய பெருவெள்ள முகில்பொழிந்த கதைய
றிந்தோம் அஃதே போலோர், நிலையுடைய தவமுனிவ ரெவ
ரோஎய் தினர்இதுவே நிபம்இல் லாமல், விலையுடைய இந்த
மழை பொழிவதில்லை காண்டுமென வெளிப்போந் தாரால்
(௱௰௬)

600 செடிகளெல்லாம் வேர்பறிந்து புனல்பரந்து மதகெல்லாந்
திகுதி கென்னக், குடிகளெல்லா மானந்த வெள்ளத்தோ டிழி
ந்தவெள்ளங் குளித்துப் போந்து, கொடிகளெல்லா மறநனைந்து
குடைகளெல்லா மிகச்சுருங்கிக் குளிர்ந்த கோலத், தடிகளெல்
லாஞ் சூழ்ந்துவர முனிவர்பிரான் எய்துதல்கண் டச்சுற்று ரால்.
(௱௰௭)

601 ஆற்றிலிருந் தினியபுனல் பெருகுதல்போல்த் திருமுகத்தி
லமுத வெள்ளம், ஊற்றிருந்து மடமடென வோடுதல்கண் டச்
சமெலா மொருவி நின்று, காற்றில்விழுந் திடுமரம்போ லனைவ
வரும்பொன் னடிவணங்கிக் கைவாய் பொத்திச், சேற்றில்நின்ற
படிவிழுந்தார் எழுகவென வாய்குழறிச் செப்பு வாரால். (௱௰௮)

602 ஐயாண்டாய் மழையென்ப தையோகண் டறிந்திலம்நல் லறத்தை நீயே, கையாண்டா யென்பதுநின் பொற்காலே யிங் ஙன்னவைத்த காலே யேநன், செயாண்ட புனல்பெருக மழைபொ ழிந்த செயலொன்றே சிறக்கக் காட்டும், மையாண்ட பொழில் சூழுந் தருமபுரம் நீயிருக்கும் வாழ்க்கை யாமால். (௱௰௯)

603 அஞ்சுகோ யில்கள்திரு வண்ணுமலே யாதீனத்திற் கரசர் முன்னர், நெஞ்சுதீ வரமுடனே விட்டுவிளை நிலம்பலவு நிலவத் தந்தார், மஞ்சுதாழ் வுறினும்நிரு வாகமுற்றுப் படித்தரங்கள் வழங்கி னுலும், அஞ்சுகோ யில்களாக நேற்றுவரை யிருந்ததி ன்றோ டகன்ற தாமால். (௱உ௰)

604 என்றுமின்ன போற்பலவும் விண்ணப்பஞ் செய்திடக் கேட் டிரங்கி நீவீர், ஒன்றுமின்ன லுறமாட்டீர் குளிற்சாரற் கொடுங்குன்ற முள்ள மட்டும், என்றுதிரு வாய்மலர்ந்து நீற ளித்தா தீனத்தா ரெதிர்கொண் டேற்கச், சென்றுயருந் திரு வண்ணு மலேமடத்திற் கெழுந்தருளித் திகழ்ந்திட் டாஞல்.

605 செஞ்சுவர்க்க மார்புடைய திருவனைய அரம்பையர்கள் செறிந்து வாழுந், குஞ்சுவர்க்க மிகுங்கிளிக ளொடுங்கொஞ்சு மஞ்சுசெறி குளிர்பூஞ் சோலே, அஞ்சுவர்க்க மத்தியபா தாள மெனுங் கோயில்களே யடைந்து வாழும், நஞ்சுவர்க்கும் படிகுடி த்தார்க் கஞ்சமுது மாட்டியன்பு காட்டி மாதோ. (௱உஉ)

606 மாசிகந்த சந்தனஞ்செந் தழன்மேனி முழுதுமுற மறை யச் சாத்தி, வீசுகந்த விலம்பகம்க ரோடிகைவா சிகையாதி விளங்க வீக்கி, கோசிகம்செம் பொன்னுடை மடிப்பகற்றி விரி த்தழகு கொள்ளப் போர்த்தி, தேசிகம்செய் நாணயந்தந் தருச் சித்துச் சோதிதெரி சித்து மாதோ. (௱உ௩)

607 விருப்பதிக முறுஞ்சைவ சமயகுர வோர்திருவாய் விளே தே வாரத், திருப்பதிக மந்தந்த க்ஷேத்திரத்திற் சந்நிதியிற் செழித்து நீண்ட, கருப்பதிகம் பிழிந்தகொழுஞ் சாறுவழிந் தோடுவழக் கப்போற் பண்ணின், உருப்பதிகந் தரமுடைய அருணந்தி முனியாற்கேட் டுவந்தான் மாதோ. (௱உ௪)

608 சித்தர்செறி தருதிருவண் ணுமலேயா தீனத்தைச் சிறப் பிற் றுங்கப், புத்தமுதாய் வந்திடும்பொன் னம்பலதே சிகனுணே புரியச் சென்னி, வைத்தவதி காரவிறற் றெழிலாளர் திருத் தருமை வள்ள லுள்ளம், மெத்தவுவந் திடப்பூசை மகேசுவரபூ சையுமுலாவும் விளேத்திட் டாரால். (௱உ௫)

609 பிரான்மலைவிட் டெரியதம் பிரான்மார்கண் முதலாகப் பெரிதும் பால்கொள், குரால்காளை யிருக எல்லாவற் றிற்கு மொரு குறைவில் லாமல், வரால்பாயும் வயல்சூழ்ந்த ஆளுடையார் கோயில்செல்லு மட்டும் மெய்யன், பரால்வேண்டு வன வெல்லாஞ் சேகரித்து வழியெல்லாம் பரப்பி னரால். (௫௨௬)

## திருப்புத்தூர்.

610 கூன்மலிந்த பிறைசேருங் குளிர்சாரற் கொடுங்குன்றங் குலவி வாழுந், தேன்மலிந்த செழுங்கொன்றைத் திருமாலைப் பெருமானைச் சிந்தை வைத்து, மீன்மலிந்த வயிற்றிருப்புத் தூர டைந்து சிவகாமி மேவுஞ் செங்கை, மான்மலிந்த திருத்தளிநா தனைவடுக நாதனொடும் வணங்கி னானல். (௫௨௭)

611 தேரோடும் நெடுவீதித் திருப்புத்தூ ரினிலிரவு சிறக்க வைகி, ஆரோடும் நட்புடைய எஞ்சிறிய தந்தையா ரன்பாற் செய்த, சீரோடும் பொலிகின்ற சிவகாமி கோயிலையுஞ் சீதளிப் பேர், நீரோடு மடைசிறந்த திருக்குளத்தை யுங்கண்ணு னிறைத்திட் டானல். (௫௨௮)

612 போராரும் நகரவயி ரவன்கோயி லையுமூத்த பிள்ளை யாராந், தாராருங் கற்பகவி நாயகமூர்த் தியையும்வழி தனிற் கண் டேத்திக், காராரு மயிலாடு பாறையினைக் கடந்துமுழக் கத்தி னோடு, சீராரும் அருளிப்பாட் டினையேற்று வீதிவலஞ் சிறந்து மாதோ. (௫௨௯)

## குன்றக்குடி.

613 பண்ணுக்கு ளடங்காத பாண்மிழற்றுஞ் செழுஞ்சரும்பர் பயிலுஞ சோலை, விண்ணுக்கு ளடங்காத படியுருவிப் போஞ்சிகர மேவு மேன்மை, எண்ணுக்கு ளடங்காத பலமடங்கள் மறுகிடங்க ளெல்லாஞ் சூழ்ந்து, கண்ணுக்கு ளடங்காத காட்சிமயூ ராசலத்தைக் கண்ணுற் றானல். (௫௩௰)

614 மருதுபாண் டியதீர மஹாராச னரண்மனைக்கு வடக்கே மிக்க, விருதுசே ரிந்திரன்மா ளிகைபோன்ற ஒருமடத்தில் மேலோர் நெஞ்சம், கருதுதூய் மைகண்மிகுந்த தருமபுரக் கருணைநெடுங் கடல் தடாரி, பொருதுமேல் கரையெறிய மலை கடல்போல் முழங்கவந்து புகுந்த தம்மா. (௫௩௧)

615 அக்கணு வினுந்தேவர் கண்டறியாச் செழுஞ்சுடரை யருளின் மிக்க, சொக்கநா தனையன்பர் துயர்களைக்கண் டறிவ்தற்குச் சூழ்ந்து வைத்த, முக்கணு யகனைமுழு முதலையறஞ்

சொலுங்குருவின் முறைமை யென்னத், தெக்கணா முகமாகப் பொற்பீடத் தெழுந்தருளச் செய்து மாதோ. (௱௰௨)

616 பூசையினை யன்போடு முறையாக வழுவாது புரிந்து கண் டோர், ஆசைதலை மேற்கொண்டு பரவசமுற் றென்னை தவம் ஆற்றினோ மென், றோசைசெறி கடல்போலக் குன்றைநக ரெங்கணுமுற் றொலிப்பத் தெய்வத், தேசையுடை யான்றொ ழுதார்க் குயர்திருநீற் றினையருளிச் செய்தான் மன்னோ.

617 கங்கையாள் பாலகனைக் கார்த்திகைமீன் வளர்த்தநெடுங் கருணை வாழ்வைச், செங்கையாள் வேலவனைத் தேவர்சிறை மீட்டுவந்த சிங்க வேற்றைக், கங்கைநீ ருடன்வேறு பலஅபி டே கங்களுமுட் கனிய வாட்டித், தங்கவா டைகள்சாத்தி அருச்சித்த நீறுவந்து சண்ணித் தானால். (௱௰௪)

618 விற்பனர்வாழ் தருதிருவண் ணாமலையா தீனம்நன்கு விள ங்க வந்தோன், சிற்பரவா காசவெளி யாந்திருச்சிற் றம்பலத் திற் செகஞ்சீ விக்கப், பொற்புடைய திருநடனஞ் செய்தரு ளும் செழுங்கழலை போற்று கின்ற, அற்புமிகு மகேசுவர பூ சையினைவிம ரிசையொடும் ஆற்றி னானால். (௱௰௫)

619 புவனேசன் றலையின்மேற் றலையுடையான் புகழ்விரித்துப் புவியெல்லாம் போஞ், சிவனேசன் பத்திராதி பன்றுணையா சிரியனொடு சேர்ந்து போந்து, தவனேசன் தருமபுர வாசன டிக் கடியுறைந் தகவே வைத்து, நவனேசம் பூண்டுசில கவிகூறிக் குருவருளை நண்ணி னானால். (௱௰௬)

620 நற்குடிகள் கல்வியறி வாற்சிவஞா னப்பேறு நண்ணி வாழுங், கற்குடியிற் காநிசா சான்போற்றும் பெருவாழ்வு கண்ட மேன்மை, அற்குடிசெய் கந்தரனா ராலயத்தின் றிருப் பணியை யாற்ற வாய்மைச், சொற்குடிகொள் மனமுவந்து வாய்மலர்ந்து வற்புறுத்திச் சொல்லி னானால். (௱௰௭)

621 சுக்கிலவாண் டினிற்கன்னி பத்தொன்ப தாந்தெய்தி தூய்மை மேவிப், புக்கவுயர் சுக்கிரவா ரத்திரவு பலவிருது புடைசூழ்ந் தேகத், தக்கதிருத் தண்டிகையிற் கண்டவர்கண் டிகைகொள்ளத் தழைவுற் றேறிச், செக்கரனை யானடிவா ரத் திறங்கி மலையெறிச் சென்று மாதோ. (௱௰௮)

622 வெயின்மலையு மிருள்செறிந்த பொழில்சூழ்ந்து மேகமிக மிடைந்த தெய்வ, மயின்மலையுச் சியிலாறு முகத்தோடு முளை த்தவொரு மருந்தை மாவின், குயின்மலையு மொழிவள்ளி குஞ்

சரிசஞ் சரிகக்கண் குடிக்குந் தேனை, மயின்மலையும் பெருமான்
முக் கண்களிக்க விளைகரும்பை எதிர்கண் டானால். (௬௩௯)

623 ஓராறு மதிமுகமண் டலங்களுந்தொண் டர்கள்கண்டின்
புறுமா றேவா, ஈராறு கருணைமது வழிந்தொழுகு செழுங்க
மலத் தினமுஞ் சீறும், போராறு மீராறம் புயங்களுங்கண் டுள்
ளமிகப் பூரித்துக் கண், ணீராறு விழுந்தோட நிறைந்ததிருப்
புகழ்பாடி நின்றான் மாதோ. (௬௪௰)

624 பழுத்தமனத் தடியருட னடியேனுங் குருபாதம் பற்றிப்
போந்து, கொழுத்தவருட் செல்வமிகும் சன்னிதியில் முறை
யீடு கூறி நின்றேன், செழித்ததரு மையன்பிறர்க்கு மடியேற்
கும் பிரசாதஞ் சிறக்கத் தந்தான், முழுத்தஒரு இரசிதநா ணய
மதனோ டென்னைவந்து முகிழ்த்த தம்மா. (௬௪௧)

625 குருவருளோ மயின்மலைவாழ் ஆறுமுகக் கருணைநெடுங்
குளிர்நீர்ப் பௌவத், திருவருளோ எளியேன்பாற் றிருமட
ந்தை கோடியென்று செங்கை கொண்டு, தருமருளோ அறி
யேன்எந் தருமைவள்ளல் திருக்கரத்தாற் றந்த மேன்மை,
ஒருவருளோ அறியும்அஃ தொன்றேபல் கோடிகளாய் ஓங்கு
மாதோ. (௬௪௨)

626 பஞ்சநதத் தம்மைதிருக் கோயில்பணி செய்யுமெய்யப்
பன்போந் தன்பால், எஞ்சலிலா வெந்தேவைக் கெழுந்தருள
வேண்டுமென விரந்து கூற, அஞ்சொலினால் நாம்புறப்பட் டொ
ருநூறு நாளாயிற் றதனாற் சென்று, விஞ்சுதுலா நதியாட விரை
வோமென் றருள்செய்து விடைதந் தானால். (௬௪௩)

627 ஆதவன்கா தலனாட்கா லையிற்றிருமஞ் சனமாடி யகிலங்
கண்ட, போதவன்கண் டறியாத சொக்கநா யகன்முடிக்குப்
புனல்கொண் டாட்டி, மாதவன்கண் டறியாத மலர்களுக்கு
நறுமலரான் மணஞ்செய் வித்துப், பூதவன்சே னையன்பூசை
மகேசுவரபூ சையும்நன்கு புரிந்து மாதோ. (௬௪௪)

## பாதரக்குடி, கோவிலூர்.

628 அண்டர்களு யகனைமயின் மலைவாழும் பெருமானை அக
த்தே வைத்துக், கொண்டுநர வாகனமேற் கொண்டெங்கட்
குபதேச குருவாழ் கின்ற, பண்டைவளம் பதியான வுயர்தரு
பா தரக்குடியும் பயில்வே தாந்தம், விண்டுவிளங் குங்கோவி
லூரும்பா தையிற்கண்டு மேற்போந் தானால். (௬௪௫)

## காரைக்குடி, கண்டனூர்; சாக்கைக்கோட்டை.

629 காரைநக ரினிற்செல்வம் பொழிகல்லுக் கட்டியினுற் கரையும் பார்த்துச், சீரையுறுங் கோட்டையூர் கண்டனூர் புதுவயலுஞ் சென்று நோக்கி, வீரசே கரனுமையாம் பிகை யோடு வீற்றிருந்து விளங்கு மேன்மைப், பேரைவாங் கியசாக் கைக் கோட்டையிற்சத் திரத்தில்வந்து பெரிதுற் றுனல்.

630 சத்திரத்தார் செயுமுபசா ரத்தினுக்கு மிகவுமுள்ளந் தழைந்துவாழ்த்தி, யுத்தமவா சிகள்புரிந்து கோயிலரு ளிப்பா ட்டை யுவந்து கொண்டான், சித்திதரும் திருக்கண்ணூர் கோ யில்திருப் பணிசெய்யும் சிறப்பு வாய்ந்த, பத்திஅரு ணாசல னும் பின்னவன்மைந் தனும்வந்து பரிந்து மாதோ. (௬௪௭)

631 தக்கபடி திருப்பாத காணிக்கை வைத்துயர்வந் தனங் கள் செய்யப், புக்கயிரு வரிற்சிறுவன் இராமநா தனைக்கல்விப் பொலிவு நோக்கி, மிக்கவிருப் புடன்மதித்துத் தந்தைமைந்தன் முறைப்படியே மேன்மை செய்து, சொக்கநா யகனருள்வி பூதி யுடன் விடைகொடுத்துத் துலங்கி னுனல். (௬௪௮)

632 துக்கம்வைத்து வருவார்க்குச் சுகத்தைவைத்துச் செல்ல அருள் சுரக்கும் லெக்க, லெக்கம்வைத்த வருள்ச்செல்வன் எளி யேன்பா லுருக்கம்வைத்து நினைப்பு நீங்காப், பக்கம்வைத்து மனமுவக்கப் பலவினிய மொழியெங்கும் பரக்க வைத்துப், பொக்கம்வைத்துப் போர்த்தாத உள்ளம்வைத்து விடையளித் துப் புறப்பட் டானல். (௬௪௯)

633 சடையுடைய முனிவர்தலை மேற்போகுஞ் சொக்கநா தனையுங்காவி, உடையுடைய முனிவர்பலர் உடன்சூழப் பல் லக்கி லொழியா வேக, நடையுடைய போகிகள்தோள் மேற் போகுங் குருநாத னையும்நீள் போகுந், தொடையுடைய பா தையிற்கண் மறையுமட்டுந் தொழுதுநின்றார் சூழ்ந்தேன் மாதோ. (௬௫௰)

634 முட்செறிவு மணற்காடு முதுமேடும் பள்ளமுமோர் முடி விலாத, புட்செறிவு மிகும்பெரிய நீர்நிலையும் பொறும் புளின முஞ்செம், மட்செறியுஞ் சதுப்புகளுந் தாண்டிப்போய் நீண்ட பொழில் வளர்வுற்றோங்கி, விட்செறியுங் கோபுரஞ்சூழ் பெருந் துறையைக் கண்ணுற்றான் வினையற் றுனே. (௬௫௧)

பிறபாகம் பின்வரும்

ஸ்ரீசொக்கலிங்கம் துணை.

தருமபுரம் ஆதீன வித்துவான்

## கொபேர் அ. சிதம்பரநாத முதலியாரவர்கள் இயற்றியது.

635 இந்தூருஞ் செஞ்சடிலத் தீசன் பதிபலவுஞ்
செந்தூருஞ் செல்லப் பெறுவிடினு—நந்தூருஞ்
சீதப் பழனத் தருமையநின் செங்கமலப்
பாதத்தில் வீழ்ந்து பணிந்தெழுந்தேன்—மேதக்க
பண்புறு நும் மாதீனப் பாவலனு மென்மிசைநின்
கண்ணருளைச் செய்தல் கடனன்றோ—விண்புகழு
நற்சுப் பிரமணிய ஞானசம் பந்தநின்பால்
அற்புற் றடைந்தே யடியனேன்—பொற்புறுநின்
பாதார விந்தம் பணிகின்றே னென்றுமென்
ஆதார நீயெனக்கே யாம்.

தருமபுரம் ஆதீனவித்துவ சிரோன்மணி அமராவதிபுத்தூர்

## வயி. நாக. ராம. இராமநாதஞ்செட்டியாரவர்கள்

## விண்ணப்பம்.

636 காடில்லா வாழ்கின்ற பெருந்துறவோர் தொழுங்கருணைக் கடலே யெங்கும், ஈடில்லாத் தருமபுரத் துறைதருசுப் பிரமணிய இறையே சார்ந்தோர், கேடில்லா வீடிருப்பக் கடைக் கண்பார்த் தருடியெனக் கேட்டுப் போந்தேன், வீடில்லா எளி யேனுக் கில்லையில்லை யெனுதளித்து விடை யீவாயே.

சற்குரு திருவடியே சரணம்.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதர் அவர்கள் விண்ணப்பம்.

திருப்பெருந்துறை.

வெண்பா.

637 கண்மணியே பொன்மணியே கண்மணியே காண்மணியே
விண்மணியே யொண்மணியே வெண்மணியே—கண்மணியே
சற்குருவே சொற்குருவே சத்தியமே நித்தியமே
அற்புதமே பொற்புறவே யாய்.

## பனையூர் சு. செல்லப்பமுதலியாரவர்கள் இயற்றியது.

அகவற்பா.

638 திருவளர் கைலைப் பரம்பரை தன்னிற்
றோன்றியெஞ் ஞான்று மிகுசிறப் புற்ற
பெருவளத் தரும புரவா தீனச்
செல்வனாகி யறவே துணை யெனச்
சிவத்தைப் போற்றும் பணியைத் தாங்கி
யன்பர்கட் கின்பச் சுவையார் மோனச்
சீலனு நாதனைச் சார்பா யானு
மடைந்த தன்மையா லென்பா லன்புற்
றையா றெனும்பதி யடுத்த பனையூர்
வசிக்கும் தொண்டை மண்ட லத்தனு
யுதித்தில் வாழ்க்கை தன்னிலே யொன்றி
நல்லோ ரிணக்கமு நாடின னிவனென
வெண்ணி யெனக்குச் செய்த பேருதவி
யுரைக்கிற் பெருக்க முறுதலாற் சுருக்கிச்
சொல்லே னதனைச் செவியுறக் கேண்மின்
சுக்கில வாண்டுசேர் மகரமா மதியிற்
றெய்தி யொன்பான் சுவாதியா மீனச்
சுபதினத் தன்று நடந்த சஷ்டி
யப்த பூர்த்தி யாயநற் சாந்திக்
கறிவுடை யோரு மாங்குள சுற்றமுங்
கண்டு களித்திடப் பெரும் பொருடன்னை
யீந்து சிவாலயத் திம்மண முடித்தனன்
முற்றுமுன் னையா றப்பர்க் கன்னை
தன்னொடு மபிடே கந்தனை யெற்கா
நன்மைக் காக நடத்தின னதனால்
ஆண்டா னாகி யடிமையுங் கொண்டான்
அருளைப் பெறச்செ யன்னோன் வாழ்க
அன்றியு மென்குல மென்று மோங்கச்
சிந்தை கொண்ட சிவகுரு பாதஞ்
சிரமீ திருத்திப் பணிசெல் லப்பன்
புகழொடு மின்பம் பெற்றுநின் றேனே.

சு. செல்லப்பன் விண்ணப்பம்.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

639 என்னுடைய கண்மணியே யின்னுயிரே யென்றனக்கு
நன்மைபுரி நற்குருவே ஞானவொளிப் பெரும்பிழம்பே
பொன்னகரர் இன்னமிர்தே பொற்றருவும் புரிவள்ளால்
கன்னனவன் போய்மறையக் கண்டமணி யிதுகாண்க.

மற்றொருசமயம்.

640 தருமையென் றுரைக்கு மந்தத் தலத்துறு மடத்துக் கென்றுந்
திரமுறு சந்நி தானத் திருவருட் செல்வம் பெற்று
விரவுறு மன்பி னாலே விளம்புவிண் ணப்ப மீது
திருமலி செவ்வி வாய்ந்த தேசிக மணியே தேர்க. (௧)

641 வரவினை யேற்றல் காட்டும் வளமுறு பத்தி ரந்தான்
காமுறு காலங் கூறிற் கவின்பெறு கும்ப மாதம்
விரவுறு மிருப தாக விளம்புறு தேதி யாகும்
பரவுறு பத்தி மிக்க பளகறு குரவர் கோவே. (௨)

642 வாழிநீ யடியா ரோடும் வரத்தினைப் பெற்று வாழி
வாழிநீ செல்வத் தோடும் வள்ளலாய் வழங்கி வாழி
வாழிநீ யன்பி னோடு மாநில மதிக்க வாழி
வாழிநீ யருளி னோடும் வானருள் பெற்று வாழி. (௩)

643 அழைப்புறு பத்தி ரத்தை யனுப்பினே னுய்ந்து வாழி
பிழைப்பினை யார்க்குஞ் செய்யும் பிழைப்பிலா யென்றும் வாழி
தழைத்திடத் தமிழை யெங்குந் தந்திடு வள்ளல வாழி
உழைக்கரத் துமைகோன் பததி யோங்கிட வாழி வாழி. (௪)

மற்றொருசமயம்.

644 திருவோங்குங் கருவாகிச் சிவமோங்கு முருவாகி
மருவோங்கும் பொழிலோங்கி மதிதாங்கிப் பலம்வீங்கித்
தருவோங்குந் தானமுறச் சண்முகனேறச் சேனைகண்டு
கருவோங்கு நற்பலங்கள் காதலிக்குந் தருமைதன்னில். (௧)

645 ஆதீன பதியாகி யமர்ந்தமகா சந்நிதியா
மாதீர குருமணியே மனக்குவந்த திருமணியே
நோதீரென் றெல்லவர்க்கு நுவன்றுதவி செய்துவக்கும்
போதீரென் றுலகுரைத்துப் போற்றிசெயும் புகழமிர்தே. (௨)

646 முற்குருவே போலாது மூதறிவின் மேலாய
சற்குருவே பொற்குவையே தற்பரமே பார்த்திருக்கும்
பொற்குருவே சிற்சுகமே புண்ணியநூல் போற்றிவரும்
சொற்குருவே கற்கண்டே துன்றுமிது தனைத்தேர்க. (௩)

---

தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி

## ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

647 நெல்லை யுயிரெனக்கு நீரே யுயிரெனக்குக்
கல்லே யகத்துக் கடையனேன்—வில்லேயும்
ஞானச் சுடர்விளக்கே நற்றருமை நாயகமே
ஈனத் தடைநீக் கெனக்கு.

மற்றொருசமயம்.

648 ஞானம் வேண்டினர் ஞானமே பெறுவர் நளின மன்னநின்
சேவடி வாழ்த்தி, மோனம் வேண்டினர் முத்தரா குவரால்
முன்னம் வேண்டிய நெல்லினைப் பெற்றேன், வானம் வேண்
டிய வரமருள் தேனு வளருந் தாருவா மென்றிட ஞான, தான
மீந்தருள் சுப்பிர மணிய தருமைத் தேசிக மாசிலா மணியே.

---

மாயவரம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர்

## பண்டிதமணி S. வேலாயுதமுதலியார் அவர்கள்

இயற்றிய

# திரு இரட்டைமணிமாலை.

காப்பு.

வெண்பா.

649 பொன்னிவளர் செல்வப் புகழ்சால் தருமைநகர்
மன்னிவளர் சுப்ரமண்ய மாதவன்சீர்—உன்னிவளர்
பாமாலை பாடப் பதந்தருவான் பைங்கொன்றைத்
தேமாலை யானளித்த சேய். (க)

## நூல்.

### நேரிசை வெண்பா.

650 மாமேவு கைலை மரபாரு நற்றருமை
தாமேவு சுப்ரமண்யச் சற்குருவை—நாமேவ
வுன்னிப் பணிவார்க் குறுகவலில் நெஞ்சே நீ
பன்னித் துதிமாலை பாடு. (உ)

### கட்டளைக்கலித்துறை.

651 பாடுறுஞ் சைவத் திருமுறை யாதிய பன்னிரண்டுந்
தேடுறு மோர்பதி னொன்குமெய் கண்டசித் தாந்தமொடு
வீடுறு மானந்த மும்விளை வெய்திநல் வீறுதரக்
கூடுறு வான்தரு மைப்பதி ஞானக் குருமணியே. (௩)

### வெண்பா.

652 குருமணியே சைவக் குலமணியே தெய்வத்
திருமணியே யென்றறிஞர் தேடும்—பெருமணியே
சொன்னபுரி யாந்தருமைத் தூமணியே யேழைக்குன்
இன்னருள்தந் தாள விசை. (௪)

### கட்டளைக்கலித்துறை.

653 இசையே பரந்து விரிந்துங் குயர்ந்த வெழிலறிஞர்
நசையே கொடுவந்து நின்று சமூகம் நணுகுமவர்
மிசையே யொழிந்து பலநல மொன்றி விளக்கமுறப்
பசையே யளிக்குநற் சுப்ர மணியசம் பன்னவனே. (௫)

### வெண்பா.

654 பன்னடைமெய்ஞ் ஞானம் பரிவுபொறை யீகையொடு
நன்னடைசேர் சுப்ரமண்ய நாயகமே—யுன்னடைவில்
பூமகளும் நாமகளும் போந்துநிதம் வாழ்கநனி
ஏமநலம் பெற்றுய்ந்தா ரேற்று. (௬)

### கட்டளைக்கலித்துறை.

655 ஏற்றூர் தமக்குத வாதபுன் லோபரை யேத்திநிதம்
ஆற்று விடுக்கண் மிகவடை பாவலீர் அன்புருவ
வூற்று மெனப் புகலவெப் பொருளையு மோர்ந்தளிக்கும்
பேற்றுந் தருமைநற் சுப்ரமண் யத்தேவைப் பேசிலீரே. (௭)

### வெண்பா.

656 பேசித் துதித்த பெரியோன் குமரகுரு
பூசித் துயர்ந்தவிடம் போற்றுங்கா—னேசமுறுங்
கற்பகநேர் சுப்ரமண்யக் காரணகு ருத்தமர்தாம்
நற்*பகத்தை தந்தருள்வார் நன்கு. (அ)

### கட்டளைக்கலித்துறை.

657 அருள்வேண் டினும்வினைக் கட்டற வேண்டினு மார்ந்த
செல்வப், பொருள்வேண் டினும்நற் புகழ்பெற வேண்டினும்
போற்றுசித்தித், தெருள்வேண் டினுந்தரு மைக்குரு ராஜ சிகா
மணிபால், வெருள்வேண்டு வஞ்சகர்க் கெட்டாத் திருவருள்
வேண்டுவரே. (௯)

### வெண்பா.

658 வேண்டுவது மோர்வாய்நீ வேண்டவெலா மீவாய்நீ
வேண்டுவதீ தென்றுணர்வி வேகியல்லேன்—காண்டகுசீர்
பொற்கமலப் போதடைந்த புண்ணியரைப் போலெனையும்
அற்புகொள வேண்டுகின்றே னைந்து. (௧0)

### கட்டளைக்கலித்துறை.

659 ஆய்ந்தோம் பலகலை யென்றிறு மாக்கு மகதிநெஞ்சே
ஓய்ந்தோய்ந் திறப்பதை யன்றிமற் றொன்று முணர்கிலைசீர்
வாய்ந்தோங்கு தென்தரு மைக்குரு ராயன் மலர்பரவி
வேய்ந்தாங் கலைவறு பேரின்ப வாழ்வு விரும்பலையே. (௧௧)

### வெண்பா.

660 ஏதந் தொலைக்கு மிருவினையுந் தானீக்கு
போதங் கனிந்தெழுந்து பூக்குமே—சீதந்
திருந்துமருண் மேகஞ் சிறக்குந் தருமை
பரிந்தடைந்தார்க் குண்டோ பழுது. (௧௨)

### கட்டளைக்கலித்துறை.

661 பழுதான கங்குலிற் பாயிருள் சீக்கும் பரிதிவரும்
பொழுதா ரிருள்புல ராமலிராது புகழ்த் தருமை
தொழுதாதை சுப்ரமண் யக்குரு சூரியன் றோன்றமல
முழுதா ரருள்புலர்ந் தம்போ ருகக்கண் முகிழ்விள்ளுமே.

---

*பகம்—முத்தி.

## வெண்பா.

662 விள்ளுமலர் கற்பகமோ வித்தகமாற் பொற்பணியோ
தெள்ளுமறை நன்முடியோ தேவமுதோ—உள்ளுமனச்
சிந்தா மணியோ திருத்தருமை சுப்ரமண்யச்
சந்தான விந்தவரை தான். (கச)

## கட்டளைக்கலித்துறை.

663 வரையா தளிக்குந் தருமைச் சரணுற வந்தடைந்தோர்
புரையாவுந் தீர்ந்ததை யாருரைப் பாரவர் புந்திவயின்
அரைமார்புங் கண்டமுங் காதுங் கரமு மழகினடை
நிரையாச் சொலுமன்றி வேறென்ன வென்று நிகழ்த்துவதே.

## வெண்பா.

664 தேசிகப்பேர் கொண்ட சிவஞானச் செம்மலன்று
மாசிகந்து வந்தீந்த வன்மையினாற்—காசினியிற்
பன்மைநல மெய்திப் பரிவுபெறு மெங்கோய்நின்
தன்மையெவ ராய்குவரெந் தாய். (கரு)

## கட்டளைக்கலித்துறை.

665 தாயுந் தமருந் தகுமுற வுங்குரு தந்தையுமுன்
னீயென் றுனையடைந் தேனழி யாதநிறை செல்வமும்
ஏயும் பலவு மொருங்கே யளிப்பா யெழிற்றருமை
வாயும்ப ரேற்று குருசுப்ர மண்யநன் மாதவனே. (கஎ)

## வெண்பா.

666 மாலுக் கொளியும் வன்னிக் கிருஞ்சுடரும்
காலுக் கியக்கமுங் காண்பதுபோல்—நீலநிறக்
கந்தரநேர் நற்றருமைக் கற்பகமாஞ் சுப்ரமண்யச்
சுந்தரனுக் கீகை தொடர்பு. (கஅ)

## கட்டளைக்கலித்துறை.

667 புகமேந்திக் கிந்துசு வர்க்கிநற் கம்பர்க்குப் புண்யதிரு
சகமேந்து வெண்ணெய்ச் சடையன் வியன்காளி தாசனுக்கிங்
கிகமேந்து போஜ னெழிற்சங்க ரர்க்கிங் கிறையவன்போற்
பகமேந்து நற்றரு மைக்குரு தாமெமைப் பாலிப்பதே. (ககூ)

## வெண்பா.

668 பாரியையும் ஓரியையும் பைந்தார் அதிகனையுங்
காரியையும் பாடார் கவிவலவர்—சீரியையுந்
தெள்ளுமறை போற்றுந் திருத்தருமை சுப்ரமண்ய
வள்ளலினைக் கண்டதற்பின் வந்து. (உ0)

### கட்டளைக்கலித்துறை.

669 துணையாகு மைந்தெழுத் தென்னைர முஞ்சிந்தை தோய
வுன்னுந், திணையாள ருக்கிறை யாஞ்ஞான சம்பந்த தேசிகன்
றன், புணையாகுங் கான்மல ரோர்ந்து மலப்பிணி போக்குமு
த்தி, யிணையாங் கரைவிளக் காய்சுப்ர மண்ய மிலங்குமாதோ.

### வாழி வெண்பா.

670 சீர்வாழி சைவத் திருவாழி நற்றருமை
யூர்வாழி வாழி யுலகெல்லாம்—கார்வாழி
சித்தமிழ்த மானசிவ வாகமும் வாழிசெழு
முத்தமிழும் வாழி முறை. (௨௨)

### வாழி விருத்தம்.

671 சீர்வளரும் வேதாக மங்கள் வாழிச் சிவபெருமான் றிரு
வருளுஞ் சிறந்து வாழிப், பேர்வளருஞ் சைவமதப் பெருமை
வாழிப் பேறளிக்கு முத்தமிழும் பெருகி வாழிப், பார்வளருந்
திருத்தருமைப் பதியும் வாழி பன்னுகயி லாயபரம் பரையோர்
வாழி, ஏர்வளருஞ் ஞானசம் பந்தன் வாழி எழில்சுப்ர மண்ய
குரு ஏந்தல் வாழி. (௨௩)

முற்றிற்று.

குருபாதமே துணை.

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

672 பன்னய கன்மம் யாவும் பளகறு முளத்தின் பண்பா
னன்னய ஞான மாக நடாத்திடு ஞான வள்ளா
லுன்னய முணர்வார் யாரே யொருவனே யுணர வல்லன்
மன்னய மமர்ந்த சுப்பிர மணியதே விதனைக் காண்க.

### மற்றொருசமயம்.

673 பொன்னினும் புந்தி யுள்ளாய் பொன்னினும் புந்தி யுள்ளாய்
என்னினு மினிமை யுள்ளா யென்னினு மினிமை யுள்ளாய்
தன்னினுந் தலைமை யில்லாய் தன்னினுந் தலைமை யில்லாய்
முன்னினுஞ் சந்நி தான முன்னினுஞ் சந்நி தானம்.

## மற்றொருசமயம்.

674 *குருமணியே திருமணியே குலமணியே குளிர்மணியே
அருமணியே மலர்மணியே யணிமணியே யமர்மணியே
தருமணியே சயமணியே தலைமணியே தயாமணியே
உருமணியே யொளிர்மணியே யோர்மணியே யுயர்மணியே.

675 அடியே னுள்ளத் தமர்ந்தினி துறைந்தே
மிடிகெடுத் தருளி மிளிர்திருக் கோல
தரிசனஞ் சந்ததந் தந்தருள் புரியும்
தெரிசனந் தெரியா திங்ஙனம் வரைந்த
வழுத்தபுத் தாண்டிடல் வரகுரு வழக்காம்
எழுத்தறி புலவரு மிசைந்தனர் இத்திறம்
ஆதலின்
காதலி னடியன் கட்டுரை வழுத்தபுத்
துதவி புரிந்தே யுனதடி யார்கள்
குழாத்து ளொருவனுக் கொண்டுள மகிழ்ந்தே
விழாது பிறப்பெனும் விரிவரி தன்னுள்
எடுத்தாண் டருளபு தினிதி னூட்டி
விடுத்தருள் பேரின்ப வீட்டினுள் வேந்தே.

---

வடலூர் அருட்பிரகாசம் பத்திராதிபர்

### தி. கோ வரதராசரவர்கள் இயற்றிய

# தோத்திரப்பாக்கள்.

676 பொன்பூத்த மலர்முகமும் அருள்விழியும் புன்னகையும் பொலிந்து தோன்ற, மின்பூத்த வருளணையி லருளாட்சி புரியு மரு ளரசே மிக்கத், தென்பூத்த தருமைதிருக் கைலாய பரம்பரையிற் சிறப்புற றோங்கும், இன்பூத்த சுப்ரமண்ய திருஞான சம்பந்த விறைவா வாழி. (க)

677 தென்னாடுந் தமிழ்மொழியுஞ் சித்தாந்த சைவமுமே திகழ நாளும், பன்னாடுந் தொழுதேத்தப் பார்த்திலக மெனுந் தருமைப் பதியில்வாழ்ந்து, சொன்னாடும் புலவர்பயிர் தழைத்திடப் பொன் னீர்சொரிந்து சோகம் நீக்கி, யென்னாளுங் காத்தருளு மெழின்ஞான சம்பந்த வின்பே வாழி. (உ)

---

* குருமணிப்பாட்டுச் சொற்பொருட் பின்வருநிலை சொற்பின் வருநிலை முதலிய பல அலங்காரங்களையுடையது.

678 குருவருளே சிவனருளைக் கொடுத்திடுமென் றறிஞர்சொலக் கேட்டே னுன்றன், றிருவருளுக் கெதிர் பார்த்தேன் தருமபுரத் தேவாநின் திருக்கழற்கு, ளுருவருளி அருட்பிரகா சப்பெயர்கொள் பத்திரிகை யுலகில் வாழப், பொருளருளிச் சுப்ரமண்ய தேசிகனே நீடூழி பொலிய வாழி. (ங)

679 இவ்வாறே இத்தருமை ஆதீனத் தரசுபுரிந் திருந்து நாளும் தெய்வேவை யறத்தெரிந்துச் சிவபெருமான் திருவருளால் திடம்பெற் றோங்கி, செவ்வேயிக் குருபூசை பலபுரிந்து நீளாயுட் செல்வ மோங்கி, யெவ்வாற்றுங் களிப்படைந்து சுப்ரமண்ய தேசிகயெம் மேந்தால் வாழி. (ச)

680 வாழையடி வாழையென வழிவழியாய் முடிபுனைந்த வள்ளால் என்றும், மாழைமணிப் பொருளனைத்தின் வளம்பெறுனற் றருமைநகர் வதியுங் கோவே, ஏழையடி யார்குறைகள் இடரனைத்தும் போக்கிமிக வெழிலோ ஞகி, ஊழையொளியால்விலக்கி சுப்பிரமண்ய தேசிகயிவ் வுலகில் வாழி. (ரு)

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவானும் தருமபுர ஆதீன
வித்துவானுமாகிய திருப்பரங்குன்றம்

**மு. ரா. அருணசலக்கவிராயரவர்கள் இயற்றியது.**

681 சித்தமா சறத்தெளிந்த சித்தர்கள் சிறந்து சூழுஞ்
சுத்த மெய்ஞ் ஞானனந்த சுப்பிர மணியதூய
நித்தனே தருமைமேய நிமலனே நின்னைப் போற்றும்
பத்தரோ டெனையுஞ் சேர்த்துப் பதமலர் பாலிப்பாயே.

---

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

**P. சிவசாமி சேர்வையவர்கள் இயற்றிய**

# திருப்பதிகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

682 சீரார் தருமையா தீனகுரு மாமணியாந்
தாராருஞ் சுப்ரமண்யன் றன்னடிக்கே—பேராருஞ்
செந்தமிழ்ப்பா மாலைசொலச் செய்யவரு டானளிக்குங்
கந்தனுக்கு முன்னேன் கழல்.

## நூல்.

### எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

683 கோமலி தாளங் கொழித்திடு திரையார் குரைகடன் மரு ங்குடித் தவளின், தாமலி தவமோ தமிழணங் குளுற்று தனி நெடுந் தவப்பய னதுவோ, தேமலி மறையு மாகம நெறியுந் திகழ்தர வுதித்தனை சகத்துத், தூமலி தரும புரத்தினி லமர் ந்த சுப்பிர மணியதே சிகனே. (க)

684 நந்துறு கரத்தான் றேடரு நினது நாண்மலர்ப் பதத்தினி லரும்பு, சிந்தினின் றுழுவ லன்பொடு பணியுந் திருத்தொழும் பிடையறு வடியார், பந்தியில் ஞமலிப் பிறப்பினு மிழிந்தேன் பதிவுறப் பெறுவது முளதோ, சுந்தரத் தரும புரத்தினி லமர் ந்த சுப்பிர மணியதே சிகனே. (உ)

685 மன்னிய தருமத் துறைசொலு மனைத்தும் மாண்புற நனி புரிந் திடிலென், பன்னிய மூர்த்தி வெகுதலந் தீர்த்தம் பார்த்து நின் றேடிவந் ததிலென், சொன்னய மார்ந்த வாகம மோர்ந் தென் றாயநின் னருள்சிறி திலதேல், தொன்னய மிகுந்த தரு மையி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (ங)

686 வணங்கின ருளப்பாங் கமைந்தன தெரிந்து வரைந்திடா தருள்புரிந் துவக்குங், குணங்கெழு தருவே கருணைமா கடலே கோதிலா ஞானமார் நிதியே, நுணங்கிய கேள்வித் துறையி னர் செவியான் நுகருதற் கினியநல் லமுதே, துணர்மலி பொ தும்பர்த் தருமையி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (ச)

687 தருமநல் ஞானந் தவமுறை சீலந் தாமிவை களையதா யமைந்த, திருவுளத் தடத்தி லுண்மையாம் விதைபிற் றிருந்து சே தனமெனுஞ் சேற்றின், மருவுமன் பெனுநீ ரினின்மலர் நினது மாண்பத சேவையு மெளிதோ, சுரும்பிவர் பொழிலார் தருமையி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (ரு)

688 பங்கமார் பிறவிப் பெரும்பிணி தனக்குப் பகர்ந்திடுங் காரண மாய, சங்கையின் மலமா மூன்றெனுங் கொடிய தனி யிரு ளொடுமகத் திடையே, பொங்குறு மடமை யெனும்பெரு மருளும் போக்குமுன் னிருபத வென்றாழ், துங்கமார் தரும புரத்தினி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (சு)

689 சீர்தரு சமய குரவர்க ளுலகஞ் செறிபசு வின்பவீ டடை வான், பேர்தரு கருணைப் பெருக்கினு லுரைத்த பீடுறு தமிழ்

மறை யணங்கு, வார்தரு முலகில் நின்றிருப் புயத்தே வளர்வ
ணன் கிருந்துப ராரைத், தூர்தரு தருவார் தருமையி லமர்ந்த
சுப்பிர மணியதே சிகனே. (௭)

690 தேடரு மகங்கள் பலபல வியற்றல் செயவரு தருநிழ லர
சும், நாடருங் கனக நளினவா தனமும் நலனுறு திருமகள்
புணர்ப்புஞ், சேடரும் போற்றுஞ் செல்வமும் நினது செங்கம
லப்பதச் சீராம், தோடரு மலரார் தருமையி லமர்ந்த சுப்பிர
மணியதே சிகனே. (௮)

691 சொன்னலங் கடந்த நின்பதத் தொழும்பு துகளறுத் தின்
பவீ டளிக்கு, மின்னல முணரார் சுவர்க்கபோ காதி வினிது
றும் நிலையென மருண்டே, யின்னலென் றறியா தியற்றுவர்
தரும மெளிதெனத் தவத்துறை புகுவர், துன்னரும் புகழார்
தருமையி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (௯)


692 கங்கையை மதியை யணிந்திடு முறையுங் கரதலத் தினி
திருந் தொளிருஞ், சங்கையின் மழுவு முழையுந லுடுக்குஞ்
சாற்றுமெண் டோளொடு மரவப், பங்கமி லணியுங் கரந்துநீ
வருவான் பரிந்துல கியற்றிய தவமென், தொங்கலார் பொழில்
சூழ் தருமையி லமர்ந்த சுப்பிர மணியதே சிகனே. (௰)

முற்றிற்று.

விகடகவிபூதூர்

## வைத்தியநாதய்யரவர்கள் இயற்றியது.


கமலபந்த வெண்பா.



693 வாசிசுசி நேசிவசி மாசிஞுசி தாசிவசி
வாசிவசி வாயெனவே வாயுரைசெய்—பூசிதச்சிம்
மாசனத்தி லேயிருந்து மன்னுசுப்ர மண்யசிவம்
சாதனையா லோங்க சதம்.

## மு. சண்முகப்பண்டாரம் அவர்கள் இயற்றிய

### கமலபந்தம்—நேரிசை வெண்பா.





694 ஜோதிமதி பாதிநதி யாதிபொதி வோதிவதி
யாதிபக வானரு ளாகிடவே—மேதினியில்
பொற்புறு சுப்ரமண்ய போதகுரு வாழியவே
நற்றருமை மாமடத்தில் நன்கு.

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

## P. சிவசாமிசேர்வையவர்கள் இயற்றிய

அஷ்டநாகபந்த வெண்பா.




695 சுகுண குருவாழி சுப்ர மணிய
தகுசீ ரணிபகந் தாள— சுகும
மிருந்தவ மின்குல முய்ம்வாக நாதா
தருமபுர வாதா.

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

## P. சிவசாமிசேர்வையவர்கள் இயற்றியது.

# பஞ்சரத்தினம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

696 சீர்பூத்த தருமைமடா லயந்திகழ வவதரித்த தேவ தேவே, பார்பூத்த தவப்பயனே பெருங்கருணை வாரிதியே படர்கல் லாரத், தார்பூத்த திருவுருவே தமிழகத்திற் கரதனமே தமியேற் காகும், பேர்பூத்த சுகநிதியே சுப்ரமண்ய தேசிகநீ பெரியர் வாழ்வே. (௧)

697 பண்டிருக்கு முதலாய மறைமுடிவி லுறுபயனும் பாண் செய் நீல, வண்டிருக்குங் கடுக்கையணி சொக்கலிங்கக் கரதலனே வணங்கு மென்றன், தொண்டிருக்கும் பதங்குலவு சுகுணப்ர வாகரனே தூய வன்பர், கண்டிருக்குங் கிழியீடே சுப்ரமண்ய தேசிகநீ கமலை வாழ்வே. (௨)

698 என்னலமு மடியர்தமக் கினிதருள விவணுதித்த வின்பமான, பன்னலமு மொருங்கமைந்த பெருந்தருவே யருங்கலையும் பகருஞ் செய்ய, சொன்னலமுந் துலங்குதவ னேயருள்வாய் மும்மலத்தின் றுகள றுக்கு, மன்னலமு மார்பரனே சுப்ரமண்ய தேசிகநீ யடியர் வாழ்வே. (௩)

699 மந்தமனத் தடியரக விருணீக்கி யவரிதய வாரி சத்துச், சந்தமலர் நெக்குடைந்து சிவஞான மதுபொழிந்து தழைத்துத் தூய்மைக், கந்தமலிந் திடவுதயஞ் செயுமெல்லி தானெனவே கருதி வையஞ், சந்ததமுந் துதிபரவு சுப்ரமண்ய தேசிகநீ தருமை வாழ்வே. (௪)

700 புகலரிய வாகமத்தின் தாயகம காமந்த்ர புனித ராஜ, செகமுழுதும் புகழ்தருமைச் சம்பந்த பீடநனி சிறக்க வந்த, மகராஜர் பலர்பரவு சிவராஜ போகனே வாழி யென்றும், சகலவிருதுங்குலவு சுப்ரமண்ய தேசிகநீ சகத்தின் வாழ்வே. (௫)

சுபம்.

வாழ்த்து வெண்பா.

701 சாற்று தமிழ்ஞான சம்பந்தர் மாமரபிற்
போற்று குருமணியாய்ப் பொங்குதவத்—தாற்றலுறு
நற்சுப் பிரமணிய நாட்டுபுகழ்த் தேசிகநீ
கற்பமெலாம் வாழி கனிந்து.

மதுரைச்சங்கத்து வித்துவானும் தருமபுர ஆதீன வித்துவானுமாகிய

## ஸ்ரீகாழி ப. அ. மூத்துத்தாண்டவராயபிள்ளை அவர்களியற்றியது.

702 செங்கமல நோக்கஞ் சிவபோக மீன்றருளும்
நங்கடரு மைக்குருமே னற்பதிக—மங்களமா
முன்ன மொழிந்தான் மூகவைச் சிவசாமி
கன்னலெனப் பாடுங் கவி.

---

வீரகேரளம்புதூர் ஜமீன் வித்துவான்

## சீ. ந. மருதப்பபிள்ளை அவர்கள் இயற்றியது.

703 திருவளருந் தருமத்தால் கல்விசெல்வ ஞானமெலாஞ் சேருமென்றே, தருமமெலாஞ் செய்துசெய்து தழைத்ததனாற் றருமபுர மென்று சாற்றிப், பெருமையுறு மித்தலத்தில் வளர்ஞான சம்பந்தப் பெம்மா னுக்கு, அருமையாய்க் குரு பூசை நடத்தியபி ஷேகமன்ன மளித்தல் சொல்வேன். (க)

704 மாவாழை பலாக்கனியால் பன்னீர்சாந் தாதியால் மாதீர்த் தத்தால், பூவாதி வகைகளினு லபிஷேக மலங்காரம் பொழிந்து சாற்றித், தேவார திருவாச கம்பாடி நைவேத்தியஞ் சிறப் பாய்ச் செய்து, நாவாரத் துதிசெய்து நன்னெஞ்சி லிருத்திகர நளினங் கூப்பி. (உ)

705 இத்தரும மென்னுளு மதிவிருத்தி யாகவுமே யீச னேசப், பத்திமிகப் பாரினிலே யருள்கிருபை செய்திடவும் பணிந்த வாற்றால், உத்தமமே பெருகுகின்ற தருமபீ டக்குருவு முள் ளன் பாய்ந்து, சுத்தபரி பூரணத்தின் சுகவருளைப் புரிந்தெவர் க்குஞ் சுகஞ்செய் யென்றே. (௩)

706 அன்னமுமூ விரண்டுசுவைப் பலகார மனேகவகை யாகச் செய்து, யின்னமுமார் வருவரென வெதிர்பார்த்து யாவருக்கு மன்ன மீந்து, பொன்பொருள்தூ சுடன்மறையோர் புலவர் களு மகிழவே புயலா யீந்தான், மின்னுபுகழ் சுப்பிரமண் ணிய ஞான சம்பந்த தேசிகமே லோனே. (ச)

707 தருமமிகச் செய்வோர்க ளழைத்தருமை யாய்ச்செய்வார் தருமந் தானே, பெருமையுற வழைத்தல்கண்டு செய்திடுவா ரப்பெருமை சிறிதும் பேணார், அருமையுட னழையாமல் வந் தாலு மவரைமதித் தறமுஞ் செய்யார், கருணைகல்வி செல்வ மிங்கே கண்டுசெந் நிதிவந்தேன் கருணை செய்யே. (ரு)

திருவடியே சரணம்.

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் இயற்றியது.

708 கற்றவரைத் தாங்குதலாற் காமனையும் வென்றிடலாற்
பெற்றவரைப் பேணுதலாற் பேர்மதியால்—அற்றவராய்
உற்றவர்கட் காக்க முதவுதலா லோர்சிவனைத்
தெற்றெனவே சேத்தகுரு தேர்.

குருபாதம்.

---

பாநுகோயிலாதீனம் அடியார்குழாத்துளொருவராகிய

## முத்துக்குமாரத்தம்பிரான்சுவாமி அவர்கள் இயற்றியது.

709 பொன்னோங்கு பொழிற்றரும புரத்தொளிரு மாதீனம் புகழ்பெற் றோங்கத், தென்னோங்கு சிவநெறியுந் தமிழ்மொழி யும் புலவர்களுஞ் சிறந்து வாழக், கொன்னோங்கு குருபீடத் தெழுந்தருளி வீற்றிருக்குங் குருவே ஞானம், மன்னோங்க வருள்புரிசுப் பிரமணிய மணியேநின் மலர்த்தாள் போற்றி. (க)

710 சீரியல் பாநு கோயிலி னெமையாள் சிவாக்கிர யோகிகள் செய்த, ஏரியல் கிரியா தீபிகை யச்சிட் டெய்திய தெம் பெருமா னின், கூரியன் மதியோர் பரவுசந் நிதிக்குங் கொணர்தரப் படு ஞ்சில பிரதி, பாரிய வருளா லேன்றுகொண் டிதனுற் படுபொ ருட் கவலை தீர்த்தருளே. (உ)

திருச்சிற்றம்பலம்.

## திருக்குவளை தேவஸ்தானம் கும்பாபிஷேகம் நடைபெற்றபொழுது வேதாரண்ணியம்

## ஆ. முத்துச்சட்டைநாதத்தேசிகர் அவர்கள் இயற்றிய வாழ்த்துக்கவி.

குருவணக்கம்.

கலிவிருத்தம்.

711 ஞானசம் பந்தனை நாடொறும் வணங்கி
ஊனடை பிறவியின் உறுதியைப் பெறுவாம். (க)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

712 திருமலி சோலை சூழ்ந்த சென்னிய ஞட்டிற் பொன்னி, வருகரை யதனிற் கௌரி மாயூர மதற்குக் கீழ்பால், தருமமா வரசன் பூசித் தருள்பெறு தலத்தில் வாழும், உருமைசேர் திருக் கைலாய வுயர்பரம் பரையில் வந்து. (உ)

713 அன்பருட் செல்வங் கல்வி யளவிலா மேன்மை ஞானம், நன்மைசே ரீகையாய நலனெலாம் வாய்ந்தெந் நாளுந், தன்னுரிமையினிற் சார்ந்த தகுந்திருக் கோவில் யாவும், பன்னிய முறையிற் பூசை பழுதிலா தியற்றும் வள்ளல். (ங)

714 அரியயன் முதலோர் போற்று மாறுசேர் சடிலத் தண்ணல், பரிவுட னுறையுங் கோயிற் பணிபல புரிந்து போற்றும், பெரியநற் சாந்தி செய்யும் பெருங்கருத் துடைய தோன்றல், உரிமைசேர் கோளி லிக்கு வுயர்திருப் பணிக ளாற்றி. (ச)

715 நலன்றரும் பிரமோ தூத வாண்டினி லைஞ்சேர் திங்கள், பலந்தரு மிடப மாகும் பத்திரண் டாறு சாரும், இலகுறு திகதி யாதி வாரநா ளெழிற் சுவாதி, தலம் புகழ் சித்தயோகஞ் சார்ந்தவ ரிலக்கி னத்தில். (ரு)

716 அண்ணலார் பிரமே சர்க்கு மம்பிகை தமக்குந் தூய, தண்ணருள் தியாகே சர்க்குந் தகையுறைங் கரனே யாதி, நண்ணிய பரிவா ரர்க்கு நற்பெருஞ் சாந்தி செய்தார், புண்ணியர் புலவர் போற்றும் புகழ்சுப்ர மண்ய தேவே. (சு)

717 வாழ்கமனு நீதியொடு மன்னனது செங்கோல்
வாழ்கமறை யானினமு மறையவரும் வாழ்க
வாழ்கவடி யார்பலரும் வானுலகும் வாழ்க
வாழ்கவருள் சுப்ரமண்ய மாதவரும் வாழ்க. (எ)

ஸ்ரீ தியாகேசன் துணை.

## சேதுராமலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றிய
## திருக்கோளிலி
# கும்பாபிடேக வாழ்த்துக்கவி.

718 திருக்கைலை வழிவழியாய் வந்தபரம் பரையாகிச் சிவஞா
னச்சீர், பெருக்கமுள தருமபுரத் தாதீனத் ததிபாநீ பெரி
யோர் போற்றும், உருக்கமருள் சொக்கலிங்கத் துடனெழு
ந்து எங்குவந்து வுறைத லாலே, திருக்குவளைக் கும்பாபி டேக
த்தின் சீரதனைச் செப்பற் பாற்றோ. (க)

719 சீரான காழிகட வூர்வேளூர் திருப்பறிய லாரூ ரையாறு,
பேரான மணக்குடியுந் திருக்குவளை கும்பாபி டேகம் பெற்
றோய், பாராளு மன்னர்கள்நின் பணியேற்றுச் செய்வரெனிற்
பாரில் யார்க்குந், தீராநீ தருமைநகர் சுப்ரமண்ய தேசிகனே
சிவமே வாழ்க. (உ)

720 அஞ்ஞான இருளகற்றி ஒளிபரப்பும் இரவிபோன் றகில
மீதில், மெய்ஞ்ஞான குருவுருவாய் வீற்றிருக்கும் தருமபுரத்
தரசே மேலோய், பொய்ஞ்ஞாலப் பூவுலகிற் புண்ணியமே செய்
கின்ற புனிதா நீதான், சிஞ்ஞான தேசிகனே சிவசுப்ர மாம
ணியே சிவமே வாழ்க. (௩)

---

முருகதாசக் கவிராயர் என்கிற
## சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் விண்ணப்பம்.

வெண்பா.

721 இப்பிரதே சத்தி லெழில்சேர் தருமைநகர்ச்
சுப்ரமண்ய தேசிகனுந் தோன்றலே—சிற்பரையாள்
பேரருள்கொண் டென்றுயர்போய் பேறுமிக வேபெருகுந்
தாரணியி லின்பமுறுந் தான். (க)

## கட்டளைக்கலித்துறை.

722 சீரார் முருகதா சென்பேர் சிவராம லிங்கமென்பர்
நேராகச் சந்நிய தானந் தெரிசிக்க நேரில்வந்தேன்
காராருங் கற்பகம் போல்விளங் கும்கரு ணாநிதியே
ஏராள மாய்க்கைப் பொருள்தந் தருளுவா யிங்கெனக்கே. (உ)

## விருத்தம்.

723 கற்பகமே மெய்ப்பொருளே கைலாய பரம்பரையிற் கா ணுகின்ற, அற்பகமே தருமபுரத் ததிபதியே யடியார்மீ தகக் கண் வைக்குஞ், சிற்பரமே சுப்ரமண்ய தேசிகமே குபேந்தி ரனுய்ச் செப்பு கின்ற, விற்பனமே விகசிதமே யடியனுக்கோர் நல்லவிடை விளம்பு வாயே. (ஙு)

724 திருத்தகுமா தருமபுரத் திற்கரசே சுப்ரமண்ய தேசி கா நின், கருத்துரைகேட் டின்பமுறத் திருக்கைமா றடியனுறக் கருணை வைத்துள், வருத்தமுறு தன்புவந்திங் கருள்புரித லுன் கடமை மறவா திந்நாள், திருத்தமுறச் சைவநெறி தழைத்தோ ங்கக் கிருபைசெயுந் தேவ தேவே. (ச)

725 விளம்புவாய் முருகதா சக்கவிஞன் சிவராம லிங்க மெ ன்று, முளம்பரிவா யுகந்துதுதித் தொருநாளு மறவாதுள் ளன்பு பூண்டு, கிளம்புவதற் கனுமதிதந் திங்கிரங்க வேண்டு கின்றேன் கிருபை சால, வளம்புகுது மாதரும புரநகரின் சிற ப்பினையென் வழுத்து கேனே. (ரு)

726 அருள்பழுத்த பழச்சுவையே யெனநவிலு மொழியுடைய அரசே சித்தத், திருளகற்று மைந்தெழுத்தை மறவாதே தியா னித்திச் செகத்தோர் போற்ற, மருளணுகாச் சிவானுபவ வநு பூதி பெற்றுவளர் சுப்ர மணியக், குருமணியே நினைக்காண வந்ததுவே புதுமையெனக் கூறு கேனே. (சா)

727 செக்கர்வா னெனவேசெஞ் சடையும்வெண் ணீற்றொளி யுந் திகழ்ந்த பொன்போல், அக்கமணி மார்பிலங்க நவமணியா ரமுமசைய வழகார் வேத, மிக்கெனவே நவில்மொழியு மிசை ந்தசுப்ர மணியகுரு வேந்தே யுன்றன், பக்கலில்வந்தடிபணி ந்த வடியவரைக் காக்கின்ற பரிசு ளானே. (எ)

728 கன்னிதிருக் கலைமகளுங் கார்கமுகு தென்னைபுன்னை கலந்தே யோங்கி, நன்னிதியஞ் சேர்தரும புரத்தரசே யன்பர்களுயகமே யென்று, மன்னிதிகா சங்களெலாந் தாமுணர்ந்த சுப்ரமணிய வள்ள லேநின், சன்னிதியைக் கண்டடியேன் றரிசிக்க வெத்தனைநற் றவஞ்செய் தேனே. (அ)

ஸ்ரீசொக்கலிங்கந்துணை.

---

தருமபுரம் ஆதீனவித்துவான் கோடூர்

## அ. சிதம்பரநாதமுதலியாரவர்கள் விண்ணப்பம்.

729 தென்னாட்டுத் திருமுனிவன் செந்தமிழ்தேர் சிதம்பரம்யான் செப்பு மாற்றம், இந்நாட்டிற் றிகழ்தருமைச் சுப்பிரமண் ணியஞான இறைவ கேண்மோ, என்னாட்டக் கருமணிநேரிளம்பருவப் பெண்குழவி யிமையோர் மேவும், பொன்னாட்டுக் ககன்றதன் கடன்புரியச் சிறிதுதவி புரிய மாதோ.

நாகை நாஷனல் ஹைஸ்கூல் வித்துவான்

## தண்டபாணிதேசிகரவர்கள் இயற்றியது.

வெண்பா.

730 நாவலர்கள் கொண்டாடு நற்குணனே செம்பொருளின்
காவலனே தன்மபுரக் கைலாய—மாமரபின்
சிற்குருவே சுப்ரமண்ய தேசிகனே சார்ந்தோர்க்கு
நற்பதமே நீயருள்வை நன்கு. (க)

731 வள்ளலெல் லோரும் வருபவர்க்கு மாநிதியம்
அள்ளிக் கொடுத்தனரே யல்லாமல்—விள்ளரிய
நன்ஞானத் தோடுநிதி நல்கினரோ சுப்ரமண்ய
பன்மாண் குணனுளபூ பா. (உ)

732 மாயை வலியான் மயங்குமடி யாரதனை
டேய வுருமற்றன் னின்னேக்காற்—காயும்
தயாநிதி யேதருமைச் சம்பந்த தேவே
யயாவை யகற்றியெமை யாள். (ந)

பாநுகோயிலாதீனம் அடியார்குழாத்துள்ளொருவராகிய

## முத்துக்குமாரத்தம்பிரான்சுவாமியவர்கள் விண்ணப்பம்.

733 ஏராருந் தருமபுரத் தெழின்ஞான சம்பந்த
சீரார்சுப் பிரமணிய தேசிகநன் மணியே! நின்
தாரார்பொன் னடிக்கமலந் தலைக்கமலந் தரச்சூடிப்
பாராரப் பணிந்தடியேன் பகர்வதுகேட் டருளுகவே.

---

திருநெல்வேலி இந்து காலேஜ் தமிழ்ப்பண்டிட்

## வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளையவர்கள் விண்ணப்பம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

734 சொல்லரும் புகழ்சா றருமையா திபனுஞ் சுப்பிர மணி
யதே சிகநின, மெல்லடி வணங்கி யடியனேன் செய்யும் விண்
ணப்பஞ் செவிமடுத் தருள்வாய், செல்லென ஞானம் வழங்கி
டும் வருணாச் சிரமசந் திரிகைநூ லதனை, யெல்லையி லருளா
லுலகுய்ய வைத்த வெளிமையை யென்னென வுரைக்கேன். (க)

735 வருணமே நிலையே யெனவரு மிவற்றின் மாண்புறு மொ
ழுக்கெலாங் குன்றித், தருமமே சமயா சாரமே யெல்லாந் தரு
பயன் யாதுமிங் கிலையென், றுருவிமா நிரயப் படுகுழி புகு
தற் கொருப்படு வார்க்கருள் புரிந்துன், சுருதிவாய் மையினைத்
தேற்றிட வெழுந்தாய் சுப்பிர மணியதே சிகனே. (உ)

736 திருக்கயி லாய பரம்பரைத் தருமைத் தேசிகர் பலருமிஞ்
ஞாலந், திருக்கயி லாது வாழுமுன் னாளிற் செய்தரு ணூலெலா
ஞானத், திருக்கயி லாகு மாபுரிந் திடுவ சிறிதவை வெளிவரிற்
கலியெ, திருக்கயி லாசில் சுப்பிர மணிய தேசிக கடைக்கணித்
தருளே. (௩)

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

737 உலகமெலாஞ் சிவநெறியே யுயர்ந்தோங்க வொளிர்தருமை யோங்க லேய்க்கும், பலமிருந்த மடாலயத்திற் பத்திமிகு பான்மையுடன் பதியா யோங்கும், வலமிலகு குருராய மாமணி சுப் பிரமணிய மாதவத்துக், குலமணியா மெங்கள்குரு மணி மலர்த்தாள் கொண்டுமுடி மிசைவிண் ணப்பம். (க)

738 எத்தனைபேர் மடாதிபதி யிருந்தாலு மென்னபய னிங்கே யார்க்கும், நித்தபுட னனித்தியமு நன்றாக நெடிதுணர்ந்து நேடி நேடி, அத்தருணமுதற்கொண்டே யறங்கள்பல நனியியற்று பம்மே யப்பா, சித்தநிலை திரியாதென் னுளத்திருந்து செய்வசெயுந் தேவே காண்க. (உ)

வேறு.

739 சித்தநிலை மாறாதென் சித்தத் திருந்துதினம்
பத்திநிலை யிட்டருளைப் பாலித்துச்—சுத்தநிலை
மேற்கொண்டு தூயசெயு மெய்க்குருவே நல்லமிர்தப்
பாற்கடலே பாரென்னைப் பார்த்து. (ங)

740 செய்த திறப்புள்ளித் தேவருமெச் சிட்டனரேல்
உய்த லொருங்குடைய வோர்தாதா—வையகத்தில்
உன்னைப்போல் யாருளரே யுத்தமநற் றேசிகனே
என்னையுனக் கீந்தெனென் றெண். (ச)

மற்றொருசமயம்.

741 வாழி வாழி மாநில நசையிய
ஏழிசை யென்ன யாவரும் நயப்ப
எம்மொரு குருக்க டம்மின மோடு
மும்முர சொலிப்ப முத்தொழி னடாத்தி
உப்பு முலகு முளவரை வாழி
கப்பின் றெவருங் காமுற வாழி
தப்பின் றிம்முனி தான்றரை யெவற்றினும்
துப்புயிர்க் குதவுந் தூய குருமணி
ஆமா மென்றே யகங்குழைந் தேத்தத்
தேமாங் கனியினுந் திகழ்சுவைத் தென்றமிழ்
என்று மினிதுறீஇ நன்று பயன்றர

நன்றித் துறவி யின்றிவை செய்தல்
என்றென் றெவரு மன்றவாழ்த் தெடுப்ப
இன்றமிழ் நூல்க ளின்னு மநேகம்
அச்சு வாகனத் தமர்ந்து லாவர
இச்சை யென்று மிறங்கா தேறக்
குன்றென் குணத்தொடுங் குறையா நெஞ்சொடும்
அன்றென் றறையா தாதர வாக
அவரைப் புரக்கு மரையரை நிகர்ப்ப
இறவா வுடம்புக ளெண்ணி யியற்றி
எச்சம யத்தினு மெய்ச்சம யம்மாம்
கொச்சையில் சைவக் குறிதபு தாவணம்
வளர்த்திட முயலும் வண்டமிழ்ப் புலவர்
உளத்தினின் மன்னி யூக்கஞ் செய்புமன்
மகிழ்ச்சி பெரிதா மாண்பார் செய்கை
திகழ்ச்சி யாகச் செய்துசெம் மாக்கும்
சுப்பிர மணிய வொப்பி றேசிகத்
திப்பிய ராயன் றிருவுள நசைஇ
இந்நிரு பத்தை யெண்ணி னெண்ணி
எந்நிரு பம்மென் றெண்ணு தெண்ணித்
தழுவா நோக்குத ருன்வழக் காமே
தழுவா நோக்காத் தகைமைவழக் காமே.

---

## மற்றொருசமயம்.

742 காவினுட் கற்ப கம்போற் கடலினுட் பாற்க டல்போற்
பாவினுள் வெண்பாப் போலப் பனுவலுட் போதம் போலவ்
வாவினுட் டேனுப் போலிங் கியாவர்க்கும் பயன்பட் டோங்கிப்
பூவினுட் சிறந்த சந்நி தானத்தைப் புந்தி வைப்பாம். (க)

743 வைத்திடும் வாழ்வி னாலே வழங்கிடுங் கருணை யாலே
பத்தியை யெனக்குண் டாக்கும் பண்புசால் சந்நி தான
வித்தக முனியே யேத்தி விடுத்திடு நிருபந் தன்னை
நித்தமும் வாழ்க வென்று நினைந்தரு ளுைக்கஞ் செய்க. (உ)

744 இங்ஙனம் அருளி னாலு மியம்பிய வாசி யாலும
நஙகுரு மணியே க்ஷேமம் நற்றிரு மேனி க்ஷேமம்
எங்ஙன மென்ம தோர வென்றுமே யுழுவ லுள்ளேன்
உங்ஙன மிருந்து போது முயர்திரு முகத்தி னாலே. (ந)

---

திருவாரூர் கீழைவீதி, பேன்ஷனர்

## த. கணபதிபிள்ளை அவர்கள் இயற்றியது.

### வியாச்சிய வெற்றிமாலை.

745 திருநீற்று மெய்விளங்கத் திருநுதற்கண் ணிலகவொரு
கரத்தின் மானு, மொருகரத்தின் மழுவேந்தி யிருசெவியிற்
குழையிலங்க வோங்கல் வேந்தன், றருமடந்தை பசுங்கொடியுந்
தனிவாம பாகத்திற் றழைத்து மோங்க, வொருகோட்டுக் களி
றுமயி லவனுடனே யாறுறையுங் கைலைக் குன்றம். (க)

746 அக்கைலை மரபுதித்தே யந்தராந் தணரவனி யோர்கள்
வாழ்த்தத், தக்கவற நெறிதவறா தரியமறை யாகமங்கள் தந்த
வாறாய்ப், புக்கதுறை வழியொழுகுந் தேசிகமா மணிகள்பல
தருமம் போற்ற, மிக்கபுகழ் சேர்தரும புரமென்னு மேன்மை
யுறு தலமு மீதே. (உ)

747 அத்தரும புரமமரு மரனடியை யன்புகொடு நாளு மேத்
தி, நித்தனருள் பெற்றுப்பல் லறநடத்தி யாநந்த வாழ்வு நேரக்,
கத்தனுறை மடங்காத்த மாசிலா மணிமுனியுங் கைலை மேவ,
அத்தகையோர் பீடமது தனக்குரித்தென் றநியாய வாதிற்
றோற்றோன். (ந)

748 தற்போது தருமமொரு வுருக்கொண்டா லெனப்பெரு
மை பொறுமை தாங்கிச், சிற்போதுஞ் சினமணுகாச் சிறப்பு
கடை நோக்குகுரு நகையுஞ் சேர, வொப்பேது மற்றபெருங்
கொடைவள்ள லெனவுலக மொருங்கே போற்றத், தப்பேது
மறியாச்சுப் பிரமணியர் பதவியையுங் கௌவச் சார்ந்தான்.

749 சாந்தகுண மரனருள்மெய்ச் சத்தியமுந் தருமநெறி நின்
றோர் வாழ்த்து, மேந்தியொரு புறநிற்ப இழிமொழிதீ நெறி
சேர்த லின்னாச் செய்தல், காந்துகுணங் கொடும்பாபம் பொய்
மையிழி வழக்குமெதிர் கலந்து நிற்ப, ஆய்ந்தநன் னீதிபதி
வாதிவழக் கழிவழக்கென் றறைந்திட் டாரே. (ரு)

750 அறம்வெல்லும் மறந்தோற்கு மெனவறிஞ ரறைந்தசொல் லவனி மீதிற், றிறம்வாய்ந்து நிற்பதுமெய் யென்றுணர்ந்த மாந் தர்யாந் தினமுங் கண்டங், கறைகாண விடமுண்டு கருநிறத் தோ ணுதியரை யன்று காத்தப், பிறைச்சடையற் கன்பர்நங் குருநாதற காப்பவெனப் பிராத்திப் போமே. (௬)

751 வாழியங் கைலையக் கைலைதன் மரபும்
வாழியம் மரபினின் வந்தவிப் பதியும்
வாழிவிப் பதியைநாள் வளர்க்குங் கோமுனியும்
வாழியம் முனிவரை வழுத்துவர் பலரே. (௭)

---

தருமபுரம் ஆதீன வித்துவான் கோடேலூர்

## அ. சிதம்பரநாதமுதலியாரவர்கள் இயற்றியது.

வெண்பா.

752 வெள்ளக் கடற்புவியின் மேலவனே வீறழித்துக்
கொள்ளற் கரியபுகழ் கொண்ட—வள்ளலே
ஆசு கவிஞர்க் கருள்சுப் பிரமணிய
தேசிக வாழ்க சிறந்து. (௧)

753 மேனாளிம் மாற்றம் விரவப் பெறுமொருவெண்
பாநான் புகன்றேன் பலர்காண—ஆனாலும்
இந்நா ளதன்பயனை யெய்தக்கண் டின்புற்றேன்
சொன்னே னதனைத் துணிந்து. (௨)

754 நந்தாப் புகழ்ச்சுப் பிரமணிய ஞானசம்
பந்தா பகர்வேன் சிதம்பரன்யான—எந்தாய்கேள்
தொல்வா ரிதியுலகிற் சைவநெறித் தொண்டரெலாம்
நல்வாழ்வு பெற்றார் நயந்து. (௩)

---

தருமபுர ஆதீன வித்துவசிரோன்மணி

**காழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்**

இயற்றிய

# வென்றோர் விளக்கம்.

நேரிசையாசிரியப்பா.

755 முல்லை வெண்முகை வெல்வன வொண்ணகை
மைய வாவிய நெய்பெறு மைம்பால்
வாளுற ழுண்கண் வாளர வல்குற்
செவ்வாய்ப் பணிமொழி யவ்வாய் மயிலை
வாய்வன வாகநம் வாய்மை மன்ற
விமல ஞேய மெய்ப்புலக் குரிசில்
கமலை ஞானப் பிரகாசன் கழல்முன்
கழலும் மலவிருள் கடிப்ப விருண்டு
சேயிழைச் சீறடிச் சிறுகய னாட்டத்துப்
போயிறு மருங்குற் புணர்மகள் காணிய
வெள்ளி மன்றத்து மேலவர் பரவுவா
னாடி யன்ப ரகநெகிழ்ந் துனற்கம்
மனத்திடை யெழீஇய மலர்ப்பதத் தெழீஇ
யெரிமணி குயிற்றிய வெறுழ்வலிக் களிற்றின்
விரிபொலந் தவிசு வீற்றுலா வரூஉம்
ஞானசம் பந்த மோனசிற் குரவன்
விழைவொடு தன்னிழல் விரவுவார்ப் பேணி
முன்னுறு மாயை முறுக்கு முறுவலின்
மின்னி மன்றல் மேவுசெஞ் சலச
மன்னமென் னடையார் துன்னு மாமுக
னோக்கி யலர்தரு நுண்டா தெக்கர்ப்
பொன்னித் தென்கரை புகலுந் தருமை
முகில்தவழ் குடுமி மொய்ம்மணி மாடத்
தசவிரு விசும்பி னருக்கன் மான
விண்ணக மண்ணகம் விளங்கத் தோன்றுஞ்
சுப்பிர மணிய வப்பிர மப்பொருள்

வழக்கினை வென்ற சழக்கில் மாற்றஞ்
சோற்று நிலைகெழூஉ மாற்றலம் தாதலிற்
செவியுறத் தம்ம செவியுறக் கேட்டுத்
தெளிதரு மின்னிசை தெழித்த வியத்திற்
புள்ளிற் கறங்கிப் புதிதன்று கேண்மதி
தங்குறை கூறித் தாங்குநர் கரத்துத்
தங்கஞ் சொரியுமத் தாணுவின் கொடையென
மழைவளஞ் சுரப்பத் தழைத்தெழா நிற்கும்
பொற்றடம் புயத்தவன் புகற்சி கரூலிய
மற்றட மாண்பின் வந்து கூடுவன்
ஈதே யிக்கா ரெழிலி
மாதே மகிழுதி வயந்தந் தனையே.

---

இது முல்லை தலைமகளைத் தோழி பருவங்காட்டி மகிழ்வித்து வற்புறுத்தியது பொதுவியற்கார் முல்லையுமாம்.

மற்றொரு சமயம்.

756 ஆறுமணக்குஞ் செஞ்சலடித் தப்பனுமையோ டெழுந்தருளிச்
சாறுமணக்குந் தருமபுரச் சைவமணக்கு நிலயத்து
வீறுமணக்கு முனிவர்தமை விளக்குங்குரவர் திருநோக்காற்
சோறுமணக்குந் துகில்மணக்குஞ் சுருதிமணக்கு மெனதகமே.

மற்றொரு சமயம்.

757 துகிலுங் கிடைத்தன சோறுங் கிடைத்த
தகிலுங் கமழ்கூந்த லன்னை—நகின்மடந்தை
நாதன் தருமபுர ஞானப் பிரகாச
போதன் கருணையுற்ற போது.

மற்றொரு சமயம்.

758 குரவர்கள் யாவரினுங் குன்றாப் புகழார்
குரவர்க் குயர்ந்த குணத்தார்—குரவ
ரிவர்பெருமை யாவர்க் கியலுந் தருமை
யவர்சுப் பிரமணிய னார்.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாத பண்டிதரவர்கள் விண்ணப்பம்.

759 பொறையினிற் றரும னென்னப் புகழினின் மேரு வென்ன, விறலினின் விசய னென்ன வெஃகிய தளித்த லாலே, குறைவில்கற் பகமே யென்னக் குணத்தினின் மலையே யென்ன, அறைதர நிற்கு மாப்த வருஞ்சந்நி தானங் காண்க.

மற்றொரு சமயம்.

760 செல்வத்துட் செல்வமருட் செல்வமெனச் சிந்தித்துத் திருவார் செல்வம், நல்வித்தை நல்குமென நனிநாடி நாடோறு நவின்று நற்பால், ஒல்வித்த வுணர்வுதவ வொப்பில்லா வுயர் நூல்க ளுலக மோங்கப், பல்வித்தாய்ப் பல்கவச்சிற் பதிப்பித்துப் பரப்புகுரு பார்த்தல் பார்த்தல்.

மற்றொரு சமயம் சிதம்பரமிருந்து.

761 சீர்த்ததிரு வேணியாற் செய்யசெம் மேனியால்
ஆர்த்திமிகு சங்கத்தா லாருளால்—ஆர்த்த
விடையா லடியார் விருப்பநிறை வேற்றும்
நடையார் சிவகுருவே நாடு.

762 "காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே."

---

மதுரைத் தமிழ்ச்சங்கவித்துவானும் தருமபுர ஆதீன
வித்துவானுமாகிய திருப்பரங்குன்றம்

## மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் விண்ணப்பம்.

763 தண்டமிழ்த் தருமை தன்னிற் சற்குரு சுவாமியாகித்
தொண்டரைப் புரக்கவந்த சுப்பிர மணிய தேவே
கண்டவர் பின்னுங்காணுக் கலப்புறு கருணை காட்டி
யெண்டகு பேரானந்தத் திருத்துமெம் மிறையே போற்றி.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாத பண்டிதரவர்கள் விண்ணப்பம்.

764 முப்பாலுங் கற்கண்டுந் தேன்பாகும் பருப்பினொடு மூறு காது காச்சிடினு முன்னைக் கறுக்கும், முப்பாலும் பிறபாலா மிலக்கியமும் வேதாந்த முதனூலுஞ் சித்தாந்த முத்தி நூலும், முப்பாலு மொருபாலு முயர்திணையு மஃறிணையு மொழிகின்ற விலக்கணமு முழுதுங் கற்று, முப்பாலு மெப்பாலு மடங்கநிற் போ னெவன்சிவனே முதல்வனென முடித்தகுரு முற்றுங் காண்க.

---

தருமபுரம் ஆதீனம் அடியார்குழாத்துளொருவராகிய

## வித்துவான் சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள் இயற்றியது.

765 பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்மெய் கண்டான்
திருமர புலகிற் றிகழ்ந்திடத் தோன்றித்
தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநக ராக அரசுவீற் றிருக்கும்
நற்குரு ராஜ ஞானசம் பந்தன்
பொற்பதம் மன்னுறப் புரிவோர்க்
கந்தமி லின்பத் தழிவில்வீ டெளிதே.

766 வைப்பினிற் புகழ்சால் தெய்வ வண்பதித் தருமை வேந் தன், இப்பிறப் பொழிந்து நாயே னெளிதின்வீ டடையும் வண்ண, முப்பொரு ளுண்மை தன்னை மோனவா சகத்தாற் றே ற்றுஞ், சுப்பிர மணிய ஞான தேசிகன் றுணைத்தாள் போற்றி.

### விருத்தம்.

767 சுந்தரத் தருமை ஞான சுப்பிர மணிய தேசன்
சிந்தைகொ ளருளால் வர்ணு சிரமசந் திரிகை யாநூல்
செந்தமி ழுலகி லச்சிற் சிறந்திடப் பெற்ற தாமால்
அந்தமெய்க் குரவன் சீர்த்தி யனுதினம் வாழி வாழி.

## வெண்பா.

768 பேரார் தருமைக் குருசுப் பிரமணியச்
சீரார் தவத்தோன் றிருவடியை—ஆதரித்த
காதலுடன் போற்றுமவர் காசினியின் மும்மலத்தின்
வாதனைபோய் முத்திபெறு வர்.

769 நீர்மன்னுந் திருச்சடையா ருமைபாக ரெமையாளா நிமலர் ஞானச், சீர்மன்னு மடியார்கள் செய்பணிகண் டவர்க்கருளை செய்வா னிந்தப், பார்மன்னும் பலதலத்துந் திருவுருக்கொண் டுறைந்திடுவர் பரமர் தானப், பேர்மன்னு மப்பதியுட்பெருமையினா லருமையினாற் பெரிதை யாறே. (௧)

770 அங்கணா ருறைகபிலை யடைந்திடுமோ திருநாவுக் கரசமூர்த்தி, தங்குடலந் தரைத்தேயத் தளராது மலையூரச் சம்புநோக்கி, யிங்குளதோர் தடமூழ்கென் றிசைத்திடலு மதுசெய்தா ரெழுந்தை யாற்று, துங்கமுடைக் கபிலைதரி சனஞ்செய்தா ரிப்பெருமை சொலவே றுண்டோ. (௨)

771 சித்தாந்தப் பெருநெறிக்கோர் முதற்குரவர் திருநந்தி தேவர்க் கிந்த, மெய்த்தானத் தைம்புனலு மாட்டியரன் குருவியல்பை விளக்கி னால், இத்தான மையாறென் றிசைப்பாதன்மான்மியத்தை யெவருந் தேறச், சத்தான தமிழ்ப்பாவா லியற்றியவன் யாரென்னிற் சாற்றக் கேண்மின். (௩)

772 மெத்தவருந் துன்பமெலாந் தாம்பொறுத்துப் பிறர்க்கிதமே விளைக்கு மேலா, முத்தமரைப் பொரவெயிலின் கொடுமையெலாந் தான்பொறுத்தே யுற்றார்க் கென்றுஞ், சித்தமகிழ்தரக்கனியோ டுறுநிழலுந் தரும்பொழில்சூழ் தெய்வ ஞான, மெய்த்தருமைக் குருஞான சம்பந்தர்க் கோர்மாலை விளம்புமன்பர். (௪)

773 விரும்பருமைச் சித்தியருட் பயனிவற்றி னுரைகண்டார் விபுதர் யார்க்குங், கரும்பிரத மெனச்சேது மான்மியத்தை மொழிபெயர்த்தார் கண்டோ ரெல்லாம், நிரம்பவழ கியரென்னு முனிவரரா மவர்பாலே நித்த மோதிப், பெருப்பயனாற் ஞானக்கூத்தரெனும்பெயருடையார் பேசின் மாதோ. (௫)

774 செப்பேச மான்மியமா மந்நூலைப் பொன்னேபோற் றேடி யிந்நாள், தப்பேது மிலாதாய்ந்த தனிப்பிரதி யுதவினரித் தால மீதில், ஒப்போதப் பிறரிலரு ணாசலப்பேர்க் கவிவாண ருயர்ந்த ஞான, மெய்ப்போதர் தருமைபிற்சுப் பிரமணிய குர வரனை விரும்பி யேற்று. (௬)

775 ஈண்டுபுவித் தலத்தெவரு மறிந்திடுமா றச்சியற்றென் றேவக் காழி, யாண்டகையா ரெப்பொழுது மருங்கலைகள் பல வாயு மன்பர் முத்துத், தாண்டவரா யப்புலவர் தமைக்கொண் டோர் வசனமுடன் சாரச் செய்து, காண்டகைய புத்தகமா வெளிப்படுத்தா னவன்பெயரைக் கழறக் கேண்மின். (௭)

776 திருத்தருமை யாதீன நிருவாகத் திருபத்தேழ் தேவத் தானம், பொருத்தமுறு மவற்றையாற் றரன்றளியிற் செயல் யாவும் போற்றுஞ் சீலன், கருத்தருமும் மலந்துறந்த மெய்யடி யார் குழாத்தொருவன் கருத்தி லென்றும், விருத்தமிலான் சோமசுந்த ரப்பெயர்கொள் தவப்படிவ மேன்மை யோனே. (௮)

சுபம்.

## தருமபுர ஆதீனவித்துவசிரோன்மணி காழி

## ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் பாடியது.

777 உலகமெல்லாங் கவிஞோங்க வுதவுமலர் மகளு முன்னருஞ் சீர்க் கலைமகளு முயர்ஞான மகளும், புலவருரை யறமகளும் பொலிந்திலகு தருமை புடையுடுத்த துடவைவிளங் கனி யொடிலாங் கலியுங், குலமலியு மொருமலத்தா ரிருமலத்தா ரியையக் குலவுமிவர்க் கிருளகற்றிக் காட்சிகொடுத் தருளி, நல மலியு மறிக்கரத்துச் செஞ்சடில நம்ப னரந்தநிகர் மும்மலத் தார்ப் புரந்திடவந் துதித்தோர். (௧)

778 விராவுமியற் றமிழைந்து மிசைத்தமிழும் மூன்றும் விளை வவரு நாடகத்தின் விரிநான்குந் தேர்ந்து, பராவுசிவ சத்தாகிக் குரவரியல் வாய்ந்து பன்னிருசூத் திரகலையின் முப்பொருள் கள் பொதுவு, மிராவடுஞ்சீர்ச் சிறப்புமுருக் காட்சிசுத்தி யொன்பா னினிதுணர்த்திச் சிவரூப முன்மூன்றுந் திகழ்த்தித் தராதிபரும் வியப்பெய்தத் தனிப்போகத் தழுத்திச் சார்பு தீரை யொளிர்விக்குஞ் சைவகுரு ராயர். (௨)

779 குருமலர்ச்செங் கரத்தேந்திக் குறைகழற்காற் பணியுங் குறையில்லா மாணவர்தம் பக்குவந்தேர்ந் தன்னார், தெருமரல் தீர்த் தற்பொருட்டுச் சமயாதி மூன்று தீக்கைமுறை யுஞற்றி யச் சரியாதி நிறுத்தி, யொருகழைவில் லியைச்செற்ற ருலகாதி யுறுவித் தோங்குசிவ தருமநெறி யுய்க்கும்விற் பன்ன, ரிருதி றத்து மொழியானு முத்தேச மிணங்கு மிலக்கணஞ்சோ தனை மூன்ற லனுவதித்துச் சரதம். (௩)

780 எடுத்துரைத்துப் பிறர்கொள்கை கண்டித்துத் தங்கோ ளிசைவுபெற நிறுத்துதல்செய் யவையறிஞர் கண்டின், மடுத் தவதி மதுரமொழிக் கவிஞாரும் பொருளை வளாவியசெம் பொருளாக நாட்டவல்ல கமகர், படித்தபல வேதுவுமேற் கோ ளவையுங் காட்டிப் பரந்தசைவ சித்தாந்தம் பாலிக்கும் வாதி, நடித்தபர னெனத்தரும மாதியவந் நான்கும் நன்னயத்து விரி வாக்கி நாவல வரேறு. (௪)

781 மறிதிரைவா ரிதிவளைத்த புவனியகம் நம்போல் வார்கோ லத் தெழீஇயந்த மலதிமிரம் நீக்க, நெறிமுறைபின் ஞானசம் பந்தரென வீறும் நிலைப்பரமா சாரியரின் பிரசாத ரூப, வெறி மலர்க்கற் பகமாகித் தமையடைந்தார்க் காக்கும் விமலசுப் பிரமணிய தேசிகவுத் தமர்தஞ், செறிவுறுகட் டளைப்படியே சீரியநன் னூலாத் திவன்வருணைச் சிரமசந் திரிகைதனை யச்சின்.

782 நன்புலமைந் தினர்விரும்பிக் கற்றுணரத் தந்த நாயகரா மவர்நாமம் நவின்றிடுவன் கேண்மின், மன்புலவா ணிவேசன மாந் திருப்பனந்தாட் காசி மடாலயத்துத் திருமுனிவர் சொக் கலிங்க சுவாமி, யன்புநனி தவிராத வனுக்கிரக மாரு வார்வத் தாற் றென்கலையும் வடகலையும் நிறைந்து, முன்புரனார் சிவாகம மெய்ப் பெருமறைச்சித் தாந்த முழுதுணர்ந்த சிவஞானி சார் பறுத்த விபுதர். (௬)

783 நிட்டைபுரி வார்தமக்கு நெறிவிளக்கிச் சிவன்பால் நேய முறு வாருளத்து ஞேயமலி விப்ப, எட்டையிரண் டைத்தெளி வித் தெழிலிம்பர் ஞாலத் தென்னையுமோர் நேயனெனத் திருக் கண்ணா னோக்கிப், பெட்டையைந் தியல்தெரித்துச் சீர்பூப்பச் செய்து பேணுவித்து வக்குழுவி லொருவனைச் சேர்த்த, சட் டைநா தத்தம்பி ரான்பெருஞ்சீ ராளர் தனிக்கருணை பருணித ர்தாஞ் சாற்றுவருண் மகிழ்ந்தே. (௭)

## வேறு.

784 பொன்னனைய மலரிதழிப் புரிசடையோன் றிருவருளிற்
பொலியும் பொன்னி, தன்னிகரில் குலையருகர் நித்திலந்தண்
ணிலவெறிப்பத் தவழ்ந்து சங்கம், மின்னிடையா ருறைமாட
மறுகுதொறுங் கருவுயிர்ப்ப விரவு தோற்ற, மென்னனையார்
புகழ்ந்தோதுந் தருமபுர வெழினகர மிலங்கு மென்றும். (க)

785 அரியதொரு பழம்பதிக்க ணுழிசூழ் புவிமாந்த ராண
வாதி, பரிவகற்றிப் பரஞான மெய்திடுவான் றவமுனிவர் பண்
பின் மூற்றப், பரவுதிரு மடாலயமொன் றிறைமலைபோற் கவி
னுற்றுப் பதிட்டை யாயப், புரியிலமர் குருபரர்தாம் பல்லோ
ர்கள் பதிஞானம் பாலிப் பாரால். (உ)

786 நீர்கொண்ட செஞ்சடிலத் தேசிகரா மன்னுரு ணிலவு
வாய்மைச், சீர்கொண்ட சுப்ரமண்ய தேசிக சுவாமியெனுஞ்
சீமான் பாரிற், பேர்கொண்ட வெண்சிறிய மதிதணந்து செம்
பெரிய மதியே பெற்று, ரேர்கொண்ட முப்பொருளு மினிதெ
டுத்துக் காட்டியெமக் கிசைக்க வுற்றார். (௩)

787 சுந்தரத்து மடமாதர் குயேசயத்துக் குயிற்றியவெண்
தொய்யிற் சாந்தைக், கந்தமலர்ப் பகழிமத னன்னகா ளையர்
நகத்துக் களைந்த போது, வந்தவனற் சாலையினூல் சுற்றிய
பொற் கலசமென வனப்புக் காட்டுஞ், செந்தணநீர் நாட்டை
யாற் றுப்புரா ணந்தன்னைத் திகழு மச்சின். (ச)

788 திக்கனைத்தும் புகழ்ந்தேத்து மதுரைநிரம் பியவழகர் சிற
ந்த சீட, னிக்கனைய கவிபாடும் ஞானக்கூத் தன்வாக்கை யா
மெல் லோமு, மிக்கவமு தாப்பருக வருள்செய்தா ரையாறன்
மேன்மைப் பாதச், செய்க்கமல மெமதகத்துஞ் சிரத்தும்நற்
கரதலத்துந் திகழ்க மாதோ. (ரு)

திருக்கைலாய பரம்பரைத் தருமபுரவாதீனம்
அடியார்குழாத்துளொருவரும் ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான
திருநள்ளாறு தேவஸ்தானம்
கொம்மீத்தே மாம்பர்ஙே பிரசிதானும் ஆகிய
இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் இயற்றியது.

# அகவற்பா.

789 கைலையுங் கமலையு மதுரையுந் தருமையும்
பயிலுறும் பதியெனும் பழம்பதி யவற்றுட்
டிருவளர் தருமை செய்தவம் பலிப்பப்
பருவம்வந் தெய்திய பண்பினுன் முன்னு
ளொருவருந் தனக்கென வொப்புயர் வில்லாக்
குருவருள் வடிவாற் குவலய மோங்க
ஞானசம் பந்தனு மற்புதக் குரவர்தந்
தானசம் பந்தமென் நாளுந் தழைத்திட
வருமரிய கருணையை யகில மறிந்திடப்
பெருவழி யறிந்த பெரியரா மதுரை
நிரம்ப வழகிய நெறியுணர் தேசிகர்
வரம்பல பெற்ற மாண்புடைப் புலவர்
குரவரா ஞானசம் பந்தர்தங் குரைகழற்
றிருவடிப் பெருமையுந் தீக்கையி னருமையு
மொருமொழி புரைத்தலி னுண்மையு முண்மையுண்
வருமொழி யனுபவ மதிசயா னந்தமு
மடியிணை யென்முடி யன்றுவைத் தாயெனு
மடியிடும் பாசுரத் தருமையு மருளையுந்
தசமணி மாலையிற் சாற்றிப் பணிந்தனர்
தசமதி னவமதிற் சார்ந்தறிந் திடவும்
தசமணி மாலையிற் சாரார்த்த பாசுர
மாடு மோடுஞ் சரியெனுங் குருவுனக்
கீடா ரெனப்பக ரினிமையா ரறிகுவ
ரித்தகைப் புலவர்த நற்றவச் சீடருட்
சத்தியத் திருவருள் தருஞானக் கூத்தர்

உத்தமத் திருவை யாற்றொரு பூர்ணா
மித்தரை புகழச் சித்தரித் தனரா
லாங்கதை யாங்களு மகிலமு முணரப்
பாங்குட னச்சிற் பதித்திட வருளினர்
தாங்கும் புகழ்வளர் சற்குரு ராயரு
ளீங்கெழுந் தருளிய விருபது மூன்று
மோங்குஞ் சடைமுடி யுத்தம தேசிகச்
சுப்பிர மணியத் திப்பிய குரவர்த
மொப்புயர் வில்லா வுத்தமக் கருணையிற்
செப்பீச் சரமெனுந் திருவை யாற்றெம்
அப்பர்க் கருளிய வருங்கயி லாயப்
பதிப்பதிக் கட்டளை பார்த்திடு முனிவன்
றுதிபெறுஞ் சோம சுந்தரப் பெயரோ
னச்சிடு வித்தை யளித்தன னெவரு
மெச்சிப் படித்துயர் வீடு பெறற்கே.

---

தருமபுரம் ஆதீன வித்துவான் கோவூர்

## அ. சிதம்பரநாதமுதலியார் அவர்கள் பாடியது.

790 சீரோங்கு கயிலாய பரம்பரையுட் டிகழ்தருமை யாதீனத்துத், திருத்தொண்ட ராமதுரை நிரம்பவழ கியர்பாற் செந் தமிழ் பயின்ற, பாரோங்கு புகழ்ஞானக் கூத்தருந் தமிழ்மொழியாற் பாடல் செய்தார், பரமனம ரையாற்று மான்மியத்தைப் புலவரெலாம் பாகோ தேனோ, நேரோங்கு கழைச் சுவையோ வாரமுதோ வெனவியப்ப நிறைந்த வன்பால், நிகழிருபான் மேலொருமூன் றும்குருவாய்த் தருமையமர் நிமலச் செல்வப், பேரோங்கி யிலகுறுசுப் பிரமணிய தேசிகனார் பெய் வித் தச்சிற், பிறங்கவருள் புரிந்தனர்பற் பலருமுணர்ந் துயர் முத்தி பெறுவான் மன்னோ.

சென்னை அரசாங்க மந்திரியும், நியாயவாதியும்,
தொண்டைமண்டல வேளாளகுலதிலகரும், நந்தொன்மைவாய்ந்த
ஸ்ரீசொக்கநாதமூர்த்தியின் பழம்பதியான செந்தமிழ்ப்பாண்டிநாட்டின்
பாரம்பரிய பிரபுவுமாகிய செல்வச் சிரஞ்சீவி

*பொன்னம்பல தியாகராஜ முதலியார்* (**Bar-at-Law**)

அவர்களுக்கு,
திருக்கைலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம்
திருக்கூட்டத்தம்பிரான்கள்சார்பாக ௸ திருக்கூட்டத்
தம்பிரான்களிலொருவரும் ௸ ஆதீனத்துக்குச் சொந்தமான
திருநள்ளாறு தேவஸ்தானம் மாம்பர்நே பிரசித்தானுமாகிய

*இராமலிங்கத்தம்பிரான்*

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானத்தின் திருவுளப்பாங்கின்படி
வாசித்துக்கொடுத்த

# வரவேற்பு வாழ்த்துப் பத்திரம்.

791 *திருக்கை லாயத் திகழ்மர பதன்புகழ்*
*பெருக்கவே யுலகெலாம் பிரபல முறவளர்*
*தரும புரமெனுந் தகுபுகழ்ப் பெரும்பதி*
*அருமைபி னுயர்ந்த வழகமர் திலகமாய்*
*விளங்குவ ததனுள் மெய்கண்ட பரம்பரைக்*
*களங்கொள் விடத்தெங் கண்ணுதற் கடவுளர்*
*மதுரையுங் கமலையு மாபெருந் தருமையும்*
*பொதுவர சாகப் புரிந்தர சாட்சிசெய்*
*தருமையம் பதியாந் தனிப்பெரும் பீடத்*
*திருபெரு நிலத்தே யொருபுகழ் சிறப்பக்*
*குருவருள் விளக்கங் குவலயங் காண்கத்*
*திருவருட் டேசிகத் தெய்வீகத் தோன்றலாஞ்*
*சற்குரு ஞானசம் பந்தநந் தற்பரன்*
*பிற்குரு வழியருள் பேரருட் டயாநிதி*
*ஆனந்த பரவச வருட்பெருங் குணநிதி*
*தானந் தவமிகுஞ் சச்சிதா னந்தரு*

மாசில் பலகலை மாசிலா மணிமுதற்
றேசிகர் வளர்திகழ் திருத்தரு மாபுரத்
திந்நா ளரசமர் மின்னார் சடைமுடி
மன்னுஞ் சுப்பிர மணிய தயாநிதித்
தேசிக நாமத் திவ்ய கலாநிதி
மாசில் குணநிதி வாழுமிந் நாளிற்
செந்தமிழ் நாட்டிற் றிகழ்பதி பலவினும்
பைந்தமிழ்ப் பாண்டிப் பழம்பதிப் பாங்கர்
உத்தம பாளைய நற்றல மதனிற்
சத்திய வுத்தமத் தனிக்குலஞ் சிறப்பத்
தோன்றிய தொண்டை மண்டல வேளாண்
வென்றிகொண் மரபின் விளங்க வுதித்தோய்!
இளமையிற் கல்விக் கிங்கிலாந் தேகி
வளம்பெறப் பயின்று பாரட் லாவெனுஞ்
சட்ட நிபுணத் தன்மை முதலா
மிட்டமார் கலைக ளியாவையு முணர்ந்தோய்!
பஞ்ச பூதப் பரப்பினுட் சிறந்து
மிஞ்சிய முதற்கடைத் தலமமர் கடவுளி
னிருபெரும் பெயரா மொருபெயர் கொண்டோய்!
தருவெனக் கொடையிற் றண்ணளி சிறந்தோய்!
அரசாங்க தந்திர வரும்பெருந் துறையிற்
பிரசங்க மாரி பொழிந்திடுங் கொண்மூ!
பி. டி. இராஜ னெனும்பெயர் கொண்டே
மேட்டிமை யாக விளங்கிடு மேலோய்!
தாட்டிக ஜஸ்டிஸ் தனிப்பெருங் கட்சியிற்
காட்டிய வுழைப்பாற் கவின்பெறுஞ் சென்னை
மந்திரிப் பதவியை மதித்திடப் பெற்றோய்!
இந்தியர்க் களிக்கு மியல்புள சுதந்தரத்
தந்திர மனைத்துஞ் சரிவர வுணர்ந்தோய்!
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தலென்
றெந்தமி ழன்னை யியம்பிய தறிந்தோய்!
இத்தகு சிறப்புடை நற்றவக் குரிசில்! நின்
னற்றகு வரவே நல்வர வாகுக.
சித்தமார் சற்குணச் சிந்தையோய் வருக.
கற்றவர் விரும்பிடுங் கல்வியோய் வருக.
உத்தம பாளையத் துத்தம வருக.
சத்திய சுற்றத் தன்மையோய் வருக.
மந்திரிப் பதம்பெறு வாழ்வே வருக.

திருக்கை லாயத் திருப்பரம் பரைவாழ்
மருக்கிளர் சோலை மாபெருந் தருமையுட்
சகமார்க் கர்முதற் சற்புத்தி ரர்வரை
மிகுநான் மார்க்க மேலவர் திகழ்ந்திடு
மெந்திருக் கூட்டத் துற்றுள யாமும்
தங்குரு வாமுய ரெங்குரு நாதனும்
உந்திரு வருகையை யுயர்வெனக் கொண்டோம்.
சந்திர சூரியர் தரணியுள் ளளவு
நுந்திருப் பெயரு நும்பெரும் புகழு
மன்பெரு வாயுளு மோங்கிட வாழ்த்துவம்.
நின்பெரு மரபு நின்புகழ்க் குடும்பமு
நின்மனை மக்களு நின்பெருஞ் செல்வமு
நின்பெருஞ் சோதரர் நின்பந்து வர்க்கமும்
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க
வாழ்க வாழ்க மதிப்புடன் வாழ்க
வாழ்க வானவர் வாழ்க மறையெலாம்
வாழ்க பசுநிரை வாழ்க புவியிறை
வாழ்க சைவமும் வாழ்க மடங்களும்
வாழ்க சற்குரு வாழ்திருக் கூட்டமும்
வாழ்க மன்பதை வாழுயிர் யாவுமே.

ஸ்ரீசற்குருஞானசம்பந்த சரணாரவிந்தமே துணை.

சுபம்.

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

வெண்பா.

792 கற்றைச் சடையுடைய கண்ணுதலிற் கொண்டிருக்கு
முற்றச் சடையு முழுநீறும்—பெற்றமுடைப்
பெம்மானை யென்றென்று பேசுவிக்க மிக்கொளிரும்
அம்மானை செவ்வேளை யாய்.

யாழ்ப்பாணம் நவிண்டில்நகர்வாசி

*சு. சிவானந்த பாரதிகள்*

திருக்கைலாசபரம்பரையில் விளங்குவதும் நம் அருஞ்சைவ சமயநிலேக்கோர் விசேஷ ஆதார அரசாயமர்ந்து நிலவுவதும், 27 தேவஸ்தானங்களை நன்குநடாத்தி வரும் அதிகாரத் தலைமையுடையதும், ஒருவராலுமளவிடற்கரிய நிதிப்பெருக்குடையதும், ஆதிசேஷனாலும் முற்றப்பகர்தற்கரிய பலதிறமகிமைகளையுடையதுமாகும் தருமபுரம் ஆதீன மகாசந்நிதானம்

*ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானசம்பந்த சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்மேல் இயற்றிய*

## கவிகள்.

நேரிசையாசிரியப்பா.

793 *திருமணி கொழிக்குந் திரைசெறி கடல்சூழ்*
*பெருமைகொள் பூமேற் பெறலரு முயர்வார்*
*வாய்மைச் சைவ வற்றுப் பேறு*
*தூய்மை யோடு துகடப விளங்கப்*
*பலவா முதவி பாங்குடன் புரிந்தும்*
*சிற்பர னெங்கோன் சிவனுறை தலங்கள்*
*பொற்பிற் பொலியப் பொருவில் முறைகள்*
*தவரு நெறியாற் றகவுடன் புரியும்*
*அவமில் மகிமை யதிபதி யாயும்*
*பரனுறு கைலைப் பரம்பரை யென்னும்*
*சிரமுறு துஙகஞ் சிவணி விளங்கும்*
*பூர்த்தித் தரும புரமெனும் புண்யச்*
*சீர்த்தி யாதீனச் சிங்கா வரசாய்த்*
*தங்கச் சிவிகை தகைபெறு வேழம்*
*துங்கக் குதிரை துதைவுறு கவரி*
*அசைவுறு துவச மழகார் கவிகை*
*வசையில் வரிசை மற்றும் பலவும்*
*அட்ட திசையு மறியக் கொண்டுந்*
*துட்ட நெறிகள் தூரத் துரந்தும்*
*நலனுறு நூல்கள் நன்குற வுணர்ந்தும்*
*அலகில் அருஞ்செய லன்பொடு செய்தும்*
*பரமன் பூசை பரிவோடு புரிந்தும்*

நற்றவர் தமக்கும் நலிந்தோர் தமக்கும்
கற்றவர் தமக்குங் கனகம் பொழியும்
மேக மன்ன மேன்மை படைத்தும்
தாகமொ டெவர்க்குந் தண்ணளி யீந்தும்
பல்லா யிரவர் பணிந்தடி பரவச்
சொல்லரு மெழிலார் சோதி யுருவொடு
மன்னவ ரெவரு மதிக்க மன்னிப்
பன்னுந் தரும பாலன முஞற்றும்
தருமகா சந்நி தான மாகும்
மிகுதிரு ஞான மிளிர்சம் பந்த
சுப்பிர மணிய சுகிர்த தேசிகர்
ஒப்பி லரனு ரோவி லருளாளற்
சூழ்குண மென்னுஞ் சுடரொடு
வாழ்க வாழ்க வண்புவி மீதே. (க)

வெண்பா.

794 மன்னுஞ்சீர்த் தர்மபுர மாசந்நி தானமெனும்
பன்னுஞ்சீ ரெல்லாம் படைத்திலகும்—மின்னுமுயர்
சுப்ர மணியச் சுகிர்தமுறு தேசிகனார்
ஒப்பிலரும் மேலவரா மோது. (உ)

795 மன்னவரு மெச்சுபுகழ் மாசந்நி தானமெனும்
பன்னுஞ்சீ ரெங்குமிகப் பற்றியுறு—தென்னவனேர்
மன்னுதிருச் சுப்ர மணியரெனுந் தேசிகனார்
உன்னுமுயர் பானு வுரை. (ங)

796 ஆக்கத்தில் மெய்யழகி லானகலை சேரறிவில்
ஊக்கத்திற் கூர்மதியி லுத்தமராம்—நீக்கமில்சீர்ச்
சுப்ர மணியரெனுஞ் சுத்தமுறு தேசிகனார்
முப்புவனம் போற்று முதம். (ச)

797 பொன்னும் நவமணியும் பொற்பினுறு கண்டிகையும்
மின்னுமுயர் வெண்ணீறும் மீதொளிர—மன்னுருவச்
சுப்ர மணியரெனுஞ் சூழ்புகழார் தேசிகரை
ஒப்பாரே ரீண்டில்லை யோது. (ரு)

798 சென்றோர் மிடியிருளைச் சேதித்துத் துன்பகற்றி
நன்றோ ருதவிபுரி நாயகராய்—மன்றோர்சொல்
சுப்ர மணியச் சுகிர்தரெனுந் தேசிகனார்
எப்போதும் வாழ்கவிவ ணே. (சா)

## யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

799 பூவுல கத்துப் பொருந்திடத் தவஞ்செயாத்
தேவுல கத்துத் தெய்வத நங்கைமார்
இமையா துறங்கா திருந்து நோக்கி
அமையா தேக்கற் றுங்க ணிருப்பத்
தமையா தாரந் தாமெனச் சார்ந்து
குமையா நின்றே யிமையார்ப் பாற்றிக்
கண்டவர் மனத்தைக் கசிந்திடச் செய்பு
முண்டையந் தனங்கள் கண்டிள நீரை
வடிவும் பயனும் வண்ணமுந் தோற்றுக்
கடிதிற் புகுந்து கச்சகத் தொளித்தங்
கிருந்திடச் செய்தற் கெழுந்தாற் போலத்
திருந்திய செம்மைச் செவ்விய விளநீர்த்
தென்னையம் புதல்கள் சேணிடைச் செலீஇ
அன்னவர் கோக்களை யடைந்து நிற்கும்
தருமையாம் பதியி லருமையாங் கயிலைப்
பொருவிலாப் பரம்பரை பொலிதர வந்து
கலையெலாம் பரப்புங் கதிர்மதி போலக்
கலையெலாம் பரப்புங் கதிர்மதி யுடைய
சுப்பிர மணியத் தோன்ற லென்னுந்
துப்புர மணிக்குந் தூய குருமணி
கடிவின் மனத்தா லடியன் செய்யும்
நெடிது நேய நிறைவிண் ணப்பம்.

### மற்றொருசமயம்.

800 என்னா ருயிரா யினிமை பயக்குமிகு
மன்னார் குருமணியே மாதேவன்—பொன்னாரும்
பூங்கமல பாதம் புரியோக மேற்சென்ற
தேங்கமல தேவிதனைத் தேர்.

தருமபுரம் ஆதீன வித்துவ சிகாமணி

## காழி. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் விண்ணப்பம்.

801 இருபான் கலநெல்லு மென்னகத்தா ருண்ணத்
தருபான் மையிற்பெற்றேன் தானுவே—ஒருபானு
மன்ன வருள மகிழ்சுப் பிரமணிய
மன்ன தருமையிறை வா.

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

குறள் வெண்பா.

802 கண்ணுதலா னென்னக் கருதப் படுங்குருவின்
வண்ணவடி வாழ்த்திடுவன் மற்று. (க)

803 இறைவனருள் சந்நிதானத் தின்னருள்க ளாலே
குறைதலிலாச் சேமங் குறி. (உ)

804 உன்னுசந்நி தானத் துருமேனி க்ஷேமத்தை
இன்னதென வேயறிய வெண். (ங)

805 எண்ணிநனி நெஞ்சே யெனக்குதவி செய்திடினப்
புண்ணியத்தை நீயே பொருந்து. (ச)

வேறு.

806 சந்நிதான மன்புமிக்குத் தந்த திருமுகத்திற்
பன்னிபிடு மெழுதலம் பார்த்தருளே—புன்னினனே
ஈரொன்று தாவென்ன வேழுதரு மீகைபிறுற்
காரென்று மோடுறுமே கண்டு. (ரு)

807 கண்டா லெவருங் கறுப்பகலப் பேருவகை
கொண்டே யளவளவிக் கொண்டிடுவர்—பண்டேபோல்
நண்பென்று ஞயகமே நாயேனின் னன்மைதரும்
பண்பென்னை யென்னுரைப்பன் பார். (சு)

808 பார்த்தாலென் னுள்ளன்பு பாடலினாற் பார்த்திடலாம்
கூர்த்தவருள் செய்தலினாற் கொள்ளாமல்—வேர்ப்பேனோ
பார்த்தருள்வாய் சீர்த்தகுரு பண்டே யழைத்துறுதி
யோர்த்துரைத்த தென்னுளத்த தோர். (௭)

வேறு.

809 என்னுடைய கண்மணியே யென்குரவர் சிரோமணியே
பொன்னுடைய புத்தியினும் புகழ்தக்க புத்தியினோய்
கண்ணுடைய கருமணியே கருத்தருள்சிந் தாமணியே
விண்ணுடைய செம்மணியே வினையேனை வேண்டினையே. (௮)

810 பின்னமில்சுப் பிரமணிய பெருந்தகையார் பெருங்குருவே
தன்னமுமன் பிலாவெனக்குத் தந்தையுநீ தாயுநீயே
உன்னமுனம் பிரியமெலா மொன்றுக்குப் பத்தாகக்
கன்னனென வெனக்கம்ம கசிந்தீயுங் கருத்துறலால். (௯)

811 பொன்னுலகோ விஞ்சையராம் புத்தேளிர் தம்முலகோ
நன்னிலமோ நான்மறைய னாடுலகோ நாரணன்மால்
தன்னுலகோ வெனமதனுந் தானிகரா துருக்கரந்தான்
என்னினியா னின்சீரை யெங்ஙனந்தா னெடுத்துரைப்பேன்.

812 ஆதலினா லையாவோ வையாவோ வறைவனெனப்
பாதகனான் கருதுபிழை பன்முறையும் பொறுத்தென்னை
நாதனெனக் காத்தருளி நன்றிபினை மறவாத
போதமிக வுறுமாறும் பூரணமா யருள்புரிவாய். (௧௧)

வேறு.

813 எழுத்துப் பிழையென்ற லென்னெனவே யான்வந்
தழுத்தமறக் கூறிடுவ லங்கு. (௧௨)

வேறு.

814 நீவாழி யுருவாழி நிறைவேட நிதம்வாழி
பூவாழி புகழ்வாழி பொருந்தாரும் பொருந்திவாழி
மாவாழி யருள்வாழி மன்னுகொடை மதிக்கவாழி
தேவாழி திருவாழி செறிதம்பி ரான்வாழி. (௧௩)

815 ஏழுதலத் தினுமிருந்தாங் கெண்குருவின் பணியாற்றும்
ஊழினல மிகவுடைய வுயர்குணத்துத் தம்பிரான்கள்
வாழ்நாளிற் குரவருக்கு மனமகிழப் பணிபுரியும்
காமுறுதம் பிரான்களொங் கருத்தொன்றில வாழிவாழி. (௧௪)

816 போதமிகு நூல்களெலாம் பொருத்தியச்சின் வெளிப்படுத்துங்
காதன்மிகு குரவரெணம் காசினியி னிதம்வாழி
மாதவத்தின் பயனாக மற்றவர்செய் தருமமெலாம்
தீதறவே வளர்ந்தோங்கித் திகாந்தமுற வாழிவாழி. (கரு)

மற்றொருசமயம்.

817 ஏதுமொன் றறியா வென்னை இரக்கத்தா லாண்டு கொண்ட
போதமார் குருவின் பாதப் பூமலர் முடிமேற் கொண்டு
சாதலும் பிறப்பு நீங்கத் தருகவி டதுவு மென்றே
காதலாற் போற்றிக் காணக் கடிதமீ தெழுதா நின்றேன். (க)

வேறு.

818 சீர்பூத்த மகாசந்நி தானத்தின் றிருமேனி க்ஷேம மோரப், பேர்பூத்த வுழுவலன்யான் பிறைபூத்த சடையவன்றன் பெருமைத் தாய, நார்பூத்த வருளதனா னற்குருவி னாசியினா னன்று க்ஷேமம், ஏர்பூதத திருவடிக்கொன் றிசைத்திடுவல் விண்ணப்பம் இனிது மாதோ. (உ)

வேறு.

819 அடியார்க்கு வேண்டுவன வாண்டவனே யார்ந்த
அடியருளா லாய்ந்தாற்ற லன்றான்—நொடிகதைதான்
மன்ற வுணர்த்து மகாசந்நி தானமதை
இன்றுசெய லாவுணர்த்திற் றென். (ங)

திருவாசகம்.

820 "வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந் தருவோய்நீ, வேண்டு மயன்மாற் கரியோய்நீ வேண்டி யென்னைப் பணிகொண்டாய், வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே." (ச)

வேறு.

821 அரதன வாக்கின் மன்ன ரறைந்தவிம் மமுதப் பாவின்
இரதமார் பொருளுக் கேற்ப வேற்றமார் சந்நி தானம்
சரதமார் பரிசு தாமே தயையுட னளித்த தன்மை
விரதமார் பாவ லோர்கள் வியந்திடற் பால தம்மா. (ரு)

### வேறு.

### முதலீரடியும் இராமாயணம்.

822 " அஞ்சி லைம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சி னின்று நிலவ நிறுத்தி"ய
தஞ்ச மாகுந் தனிப்பரி சென்றுமே
விஞ்சு மோகை விளைத்திடு மீமிசை." (௬)

### கந்தபுராணம்.

823 " என்னா மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே." (௭)

### வேறு.

824 இத்திரு விருத்தப் பாவி லியம்புமுன் னீர டிக்கும்
ஒத்திடு மிலக்கி யந்தா னுயர்சந்நி தான மாகும்
உய்த்துணா ரறிவி லாதோ ருரைத்தபி னுலைத்துப் பன்னாள்
தத்திய பின்ன ரீந்தே யிடைகடை சார்ந்து நின்றார். (அ)

825 இற்றையம் பொழுதின் முன்ன ரிருந்திடு குரவர் சில்லோர்
பொற்புறு கல்வி யின்றிப் பொருந்துறு மறிவு மின்றிக்
கற்றவர் தம்மை நோக்குங் காதலுங் கழிய நின்று
எற்றையு மெவரும் வெஃகா வியல்பினி னேற்ற மிக்கார். (௯)

826 அன்னவர் போலே யன்றி யரும்பெருங் கல்வி கற்று
நன்னய வறிவி னோங்கி நானில மதிக்கு மாறு
துன்னிய கொடையின் மிக்குச் சூழ்புகழ் சூரற்போர்ப்பப்
பின்னமில் சந்நிதானங் கொடைமடம் பிடித்த லாலே. (௧௰)

827 தோன்றிடிற் புகழி னோடே தோன்றுக வஃதி லாதார்
தோன்றிடா தொழிக வென்று சொற்றிடு குறளு மோர்ந்தேன்
ஊன்றிய புகழு டம்பை யுலகினில் வளர்த்த லாலே
ஆன்றசீர் நத்த மென்னு மருங்குற ளதுவு மோர்ந்தேன் (௧௧)

திருக்கோவையார், "ஊதியம் எடுத்தோதி ஊடல் தீர்த்தல்."

828 " காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
* சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர்தஞ் சங்க நிதிவிதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே." (௧௨)

வேறு.

829 இங்ஙன மிறைவன் றனை யாவர்க்கு மீதல் செய்யும்
பொங்குசீ ரருளைப் போலப் புனிதமார் குரவர் செய்தல்
அங்கவ ரிறையைக் கேற்கு மரும்பெருஞ் செயல தாகுந்
துங்கமார் சந்தி தானஞ் சூழ்ந்திடின் மனத்திற் றோன்றும்.(கங)

வேறு.

830 "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரி" தென்கோ. (கச)

831 "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரி" தென்கோ. (கரு)

832 "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரி" தென்கோ. (கசு)

வேறு.

833 எல்லாமுந் தானென்பே னென்பாலே யன்பாலே
எல்லாமு மெய்தத்தா னின்பாலே—பொன்பாலே
முந்துபே ராரருளான் முதறிவி னாலுய்த்துத்
தந்தசீ ரைம்பதினாற் றான். (கஎ)

வேறு.

834 திருத்தகு சந்திதான தெரிசனம் விரைவிற் செய்யக்
கருத்திருந் தருளைச் செய்வான் கண்ணுதற் காளகண்ட
மருத்துவ வைத்தீ சுரன்றன் மலரடி தைய லம்மை
பொருத்துறு முத்துக் குமாரன் பொன்னடி போற்றினேனே.

835 அருணந்தி யாகுஞ் சத்தி யதுகொடே யனைத்துஞ் செய்யும்
அருணந்தி யென்ற யாங்க ளகங்கொளுங் குருவே யுன்றன்
அருணந்தி யமிர்த மிங்கே யடியனேன் றனு முய்ய
அருணந்தி தேவைப் போல் வடியிணை வைத்துக் காப்பாய்.

836 வீட்டினி லிருந்து போந்து வீதியி னுலாவும் வண்ணம்
காட்டினி னடனஞ் செய்யுங் கண்ணுதற் பரமற் போற்றிக்
கூட்டினிற் குஞ்சு போலக் குக்குடா சனத்தி னூற்றேன்
பாட்டினி லடங்காச் சீர்த்திப் பண்ணவ வீதென் பண்பே.

### மற்றொருசமயம்.

837 சீர்பூத்த தருமபுர வாதீனத் திருமடத்திற் செவ்வி வாய்ந் துன், ஏர்பூத்த குருமணியா யிக்காலை யெழுந்தருளி யிலங்கா நின்ற, பேர்பூத்த மூதறிவின் பிழம்பென்ன யான்கொண்ட பெரும வுன்ற, ஞார்பூத்த திருவடிக்கோர் விண்ணப்ப நல முறயா ஞடித் தேர்க. (க)

### மற்றொருசமயம்.

838 திருவார் கொன்றை மருவா நின்ற
மருவார் செஞ்சடை வள்ளல் பாதம்
நாடொறு மருச்சி நயந்துசெய் நலனும்
தாடொழு மன்பர் சங்கரன் பதமலர்
நாடுறும் வண்ண நல்லுப தேசம்
மாடுறச் செப்பு மலிபே ரருளுங்
கல்வியிற் கன்றிய கவிஞர் விநோதமும்
விதிவிலக் கறிந்தே பதியரன் றருமம்
கதிபெறச் செய்யுங் கருதரு மறிவும்
இன்னன நன்னய மெல்லா மொருங்கே
துன்னிய சற்குருத் துணையடி வணங்கி
சிற்றறி வுடைய சிறிய தொழும்பன்
பற்றுடன் விடுக்கும் பளகில் கடிதம்
முற்று நாடி முடிபினை யோர்ந்து
தெற்றெனத் தெளிந்து திருவுளம்
பற்றிடு மாறு பதம்வேண் டினனே.

### மற்றொருசமயம்.

839 சிந்திதஞ் சிவத்தின் பாலாச் செய்கைதான் சித்தாந் தத்தைச்
சந்ததம் பரப்பு மாறு தன்னிகர் நூல்க ளச்சி
யந்திரத் தேற்றி யார்க்கு மன்புட னளிப்ப தாகப்
புந்திகொண் டுஞற்று கின்ற புண்ணிய குருவிண் ணப்பம். (க)

### தேவாரம்.

840 "நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கட னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே." (உ)

## மற்றொருசமயம்.

841 நித்தியமுஞ் சிவார்ச்சனையு நின்மலன்றன் சிந்தனையு நேர்மை குன்றாச், சத்தியமுந் தவச்செயலுஞ் சாதுக்கள் சங்கமுடன் சார்ந்து பன்னாற், பத்தியமும் பார்த்துணர்ந்து பரசிவன்றன் படைப்பாதி பகரு ஞானக், கத்தியமுங் கருத்திருத்துங் குருமணியே கண்டருள்க கருணையாலே. (௩)

## குறள்.

842 "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது." (௪)

843 "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது." (௫)

844 முன்னவ னென்னை யாண்ட முக்கணன் கருணை செய்து
மன்னிய சந்நிதான மகிழ்வுறக் கரும மெல்லாம்
முன்னிய படியே முற்றி மோசஞ்செய் வோர்கள் வெள்க
நன்னிய மாகக் காப்பா னவன்பத நயக்கின் றேனே. (௬)

845 சந்ததம் வாழ்க சந்நி தானமுங் கருணை தானும்
சந்ததம் வன்மை சேர்க சந்நிதா னத்தின் மேனி
சந்ததம் வளர்க சந்நி தானத்தின் றருமந் தானும்
சந்தத மோங்க சந்நி தானத்தின் பத்தி தானும். (௭)

846 வாழிய சந்நி தான வண்புக ழென்று மென்றும்
வாழிய சந்நி தான வண்மைக ளென்று மென்றும்
வாழிய சந்நி தான மதிநுட்ப மென்று மென்றும்
வாழிய சந்நி தான வயங்கருச் சனைக ளென்றும். (௮)

847 சிவன்றிரு நெறிவ ளர்க்குஞ் சீரிய சந்நி தானம்
சிவம்பெற யார்க்குஞ் செய்யுஞ் சீரிய செயல்க ளெல்லாம்
நவந்தரு செயலை யோட்டி நானிலத் தவர்கட் கென்றும்
தவந்தரு தன்மை செய்து சந்ததம் வாழி வாழி. (௯)

## மற்றொருசமயம்.

848 பிராசாத சட்கத்தைப் பேரார்வ மோடு
நிராதார நல்லுயிர்க ணீங்கத்—தராதலத்தில்
உய்யவச்ச வாகனத்தி லூர்வித்த சற்குருவே
தெய்வமெச்ச மாகணத்தோய் தேர். (௧)

பாநுகோயிலாதீனம் இலக்கணம்

## முத்துக்குமாரத்தம்பிரானவர்கள் விண்ணப்பம்.

849 பொன்பூத்த மகரந்தம் பொறிச்சுரும்பர்க் கீத்துவக்கும்
பொழில்சூழ் பொன்னிக், கொன்பூத்த திருத்தருமைக் குரு
பரசுப் பிரமணியக் கோமா னேநின், மின்பூத்த கமலமலர்ப்
பதயுகளந தலைக்கணிந்து மேலா ஞானத், தென்பூத்த திருமுன்
னர்ப் பணிந்தடியே னன்பினொடுஞ் செய்விண் ணப்பம். (க)

தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி

## காழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

850 பொறையுரு வமைந்த ஞான புரச்சிவ ஞான தான
நிறைதவ மூர்த்தி நாளில் நிகழ்த்துகட் டளைபிந் நூல்தான்
முறையுறச் சைவ வாய்மை மொழிந்தருள் தருமை வேந்தர்
மறைமுதல் சுப்ர மண்ய மகிபருக் குரிய தாகும். (க)

தருமபுரம் ஆதீன வித்துவான்

## சுந்தரலிங்கக் கவிராயர் இயற்றியது.

851 கடல்வளை யுலகை யீன்ற கன்னியெம் பீசன் சேயாந்
தடமணி மகுடஞ் சூட்டி தருமையம் பதிக்கு வேந்தாய்
புடவியோர் பணிந்து போற்றப் புகழ்பெருங் கருணை யாலே
திடமுறுங் கடவூர் வாழுஞ் சிவபிரா னருளி னாலே. (க)

852 உலகமீ ரேழும் போற்ற வோங்குமீ ரேழு தலத்து
நிலவிய கடவூர் வாழும் நின்மல னமுதே சற்கும்
நலமிகு வபிரா மிக்கு நமன்பணி மிர்த்யுஞ் சற்கும்
வலமலி துதிக்கை யான்முன் மற்றைய தேவ ரியார்க்கும். (உ)

853 திருப்பணி புதுக்கி யன்பு திருந்துகும் பாபி டேகம்
விருப்புடன் புரிவித் தானிவ் வியன்றரா தலத்தி லெங்கும்
பெருக்கமா மியாக சாலை பெருமையின் டியற்றி யாங்குக்
கருத்தினு நினைத்தற் கொண்ணா வெணியினி கழற லென்னே.

மகத்துவே தியரை நோக்கி மறைவலா னிறும்பூ தெய்தித்
திகைத்தலை யடைந்தா னென்னிற் செப்பிட முற்றும் வல்லார்
இகத்திலா ரேனைச் சீரு மியம்புத லெவரே யம்மா
சகத்துளார் பழியா ரென்னைச் சாற்றவல் லாளன் னென்றே.

855 அக்கங்கை யாலு மாறு வக்கங்கை வெப்ப நீங்கி
மிக்கசீ தளமா மென்ன வியநிலத் தவர்க ளேத்தத்
தக்ககும் பாபி டேகந் தனையிவ்வா றினிதி னாற்றும்
மிக்கவன் பேரு ராதி விளம்புதும் விரும்பி மன்னோ. (ரு)

856 அறத்தினாற் பொறையா லன்பா லருளினா லீகை யாற்சீர்த்
திறத்தினாற் கல்வி பண்பாற் சிவநேசச் செல்வந் தன்னால்
மறத்தினா ரரசர் மெச்சு மதிப்பினாற் பூதி கண்டி
நிறத்தினார் தரப்பூண் டெங்கு நிலவுமோர் மதிய மானோன்.

857 தண்ணிய வாச கத்தோன் றன்பெயர் தன்னை யோர்கால்
எண்ணினு முயர்ந்த பேற்றை யெய்தலா மெனநல் லோர்சொல்
புண்ணிய முதல்வற் கன்னுள் பொலிவுறுங் குடிலை சொன்னோன்
நண்ணுமெய்த் தவ முவப்பாய் நல்கிய குமர னானோன். (எ)

858 கற்றவர் காப்பான் மேனி கவினும்வெண் காப்பா னல்லோர்
பெற்றகண் மணியான் பூணும் பிறங்குகண் மணியா னூலோர்
மற்றசீர் மேவுஞ் சுப்ர மண்யதே சிகனும் வள்ளல்
முற்றுமெந் நாளு நன்றே மொழிதருஞ் செவ்வா யுற்றோன். (அ)

வேறு.

859 நிலமகளின் வதனமென நிலவியசோ ணாட்டிலணித்
திலகமென விளங்கியநித் திலகமலி வாவிசுலாம்
பலவளமு நிறைதருமைப் பதிஞான சம்பந்தன்
குலமணிசுப் பிரமணிய குலமணியே சொலக்கேண்மோ. (கூ)

860 பன்னுவவெல் லாஞ்சரதப் பண்பாலு நாவலர்க்குத்
துன்னுநலந் தருவாணி துலங்கியுற லாலுமுமை
அன்னையெனத் தவமீசர்க் கன்பதிக முறலாலும்
மன்னியயா வருஞ்சுப்ர மண்யதே சிகரென்றாரே. (ய)

861 பண்டொருகுண் டோதரன்றன் பசிக்கன்ன மிடமுடியா
வொண்டொடியென் றாயுள்ளத் துன்னியிறும் பூதடைய
அண்டிவரு வாரெவரே யாயினுமெல் லாருமுவந்
துண்டிவளை விற்போலு முதரமுடை யவராக. (கக)

862 நிடதபதி யொடுவீம னேர்வரினு மிச்சுவைபோ
லடதராணி யினினம்மா லாக்கமுடி யாதென்னக்
கடலிலெழு சுவையமுதுங் கடைபட்ட தாகுமெனப்
புடவிசுமப் பவன்றலம் போதுமிவை யருந்தவென. (கஉ)

863 அன்னமிடுஞ் சத்திரங்க ளாக்கிவைத்துப் புரங்காத்து
மின்னுவித்யா சாலைவைத்து மேன்மையினு லறங்காப்போன்
என்னபுண் ணியம்புரிந்தோ மெங்கடவ வேயுருவாய்
தன்னினிய மெய்த்தவத்தாற் சற்குருவாய் வந்துதித்தோய்.

864 கங்கடனண் ணியபயத்தாற் கருகிமலைப் பாலேகப்
புங்கமுறு தேருப் புகல்பஞ்ச முறத்தேனு
வங்கிருந்து கன்றுறமே லானதியாகந் தருவோய்
துங்கமிகும் புகழ்தருமைச் சுப்ரமண்ய சற்குருவே. (கச)

வேறு.

865 வாசவனு ருகுறையுங் காம தேனு வாருணிதன் சாப
வலி மாற்றி யம்பூ, வாசனுரோ மசன்கால வன்மாந் தாதா
வனத்து வசன் மூசுகுந் தன்றார், வாசனருச் சுனன்சனகா
திய னகத்ய வருணன்கௌ தமனதிவீ ரன்ப ரத்து, வாசன்
ரவி யிவர்க்குநலங் கொடுத்துங் கீர்த்தி மருவுதிருக் கடவூரா
மகா தலத்தில். (கரு)

866 எழுந்தருளி யடியவர்கள் வேண்டி யாங்கே யின்புதவு
மமூர்தலிங்க நாத ருக்கும், அழுந்தவயிற் றிடைமேவா துலகை
யீன்ற அன்னையபி ராமித்தா யவர்சேய் கட்கும், செழுந்தரள
முதன்மணிக ளுணை மேவத் திருப்பணியை விருப்பணியாற்
செய்வித் தியாரும், தொழுந்தகையர்க் கட்சயமுங் கொடுத்த
லாலே துலக்கமுறு மட்சயமாய்ச் சொல்லு மாண்டில். (கசு)

867 ஈசனுர் கொடியாகி யூர்தி யாகி யேற்றமுறுங் கணத்தலை
மை யெய்தி ஞான, வாசிரியர் தமக்குள்ளு முதன்மை மேவி
யவிர்தலாம் விடபத்தின் பின்னு லானி, மாசில்வடி வினர்விரு
ம்புந் தேதி யேழில் வான்மணிபோற் றுதலானு முதலா மன்
பால், ஆசில்வகை செயலானு மிந்து வார மவிர்சுபபக் கப்பொ
ருண்மே பூர்வ பக்கம். (கஎ)

868 ஆறுபுனை யாறுமுக வையன் மாம ஞர்திதிவன் றெண்டர்
பதி சென்ற நாளாம், யேறுபெருஞ் சுவாதிசிவ னுமயோக
மிலங்குமரி வனிசைசுப யோக நாளில், வீறுதவிர்த் திப்பேற்

றூற் புகழ்பெருக்கம் மேவியதே பெயராக விளங்கிற் றென்னக், கூறுமுயர் வுறுசிவ நாமயோகங் கொண்டதொரு நன்னாளைக் குறித்து மன்னோ. (௧௮)

869 துனுசுகும்ப மீனமிவை யிரட்டித் தேத்தி தனிக்கடகங் கைக்கொண்ட தாயாங் கன்னி, மனமகிழப் பங்களித்து விடப மேறி வருவாரு மவனூழுள மகிழ்ட்சி பூப்ப, நனிசிறந்த தான சிம்ம லக்கினத்தி னன்மறையா கமநூல்க ணவின்ற வாற்றா, லினியபுகழ் கும்பாபி டேகஞ் செய்வித் தெல்லவர்க்கும் பெரும்புண்ய மீந்த வள்ளால். (௧௯)

870 எத்தனையோ புண்ணியநீ யியற்றி வித்தா யெத்தனையோ புண்ணியங்க ளின்னுஞ் செய்வாய், அத்தனையு மெடுத்திசைக்க வல்லே னல்லே னரசேயொன் றுரைப்பனதை யன்பாய்க் கேட்டி, யித்தருணந் தமிழ்படும்பா டெல்லாங் காண்டி யிதுகுறையச் சமயநிலை யென்னு மையா, வுத்தமமாந் தமிழ்வளரும் பொருட்டு நீயே யுள்ளத்திற் கொளவேண்டு மொளிசெய் சீரோய்.

திருஞானசம்பந்தக்கோமான்றனை.

மற்றொருசமயம்.

வெண்பா.

871 கந்தபுரி நாதருக்குங் காழியில்வா ழீசருக்கும்
சந்தமுறு மாங்கடவூர் தற்பரர்க்கும்—அந்தமுற
வாழ்தருமைச் சுப்ரமண்ய வள்ளல்குருத் தேசிகனார்
தாழ்வில்கல சம்புரிந்தான் றான்.

872 மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தைச் சென்னிப்
பிறைக்கொழுந்தை வைத்த பெம்மானை—மறைக்கொழுந்தை
கொண்டா னுளத்திற் குருசுப்ர மண்யவள்ளல்
விண்டான் கடவூரை மேவி.

873 மண்டிய விருடைப் பற்றினைக் களைந்த மாசறு மனத்தினர் மறுமை, அண்டர்கோ னணைத்த வணிநக ரிதுவென் றையுறு மழகுவாய்ந் தவனிப், புண்டரீ கத்தின் பொருட்டெனப் பிறங்கிப் பொருவரு மாநதி புணரும், தெண்டிரைக் கடலின் றிருமுகத் தமர்ந்து திருநகர்க் கிறையெனப் பொலியும். (௧)

874 மாணதி பொன்னித் தென்கரை தன்னில் மறுவிய வார்கட லலைப்பக், கோணமூன் றுருவாய்க் கூறுமூன் றுளதாய்க்

குழிழிமிழக நகர்க் கிடங்கும், சேணளா வியபொற் கோபுர
நிலையுந் திண்மதில் நாஞ்சிலெண் டிசையும், காணலா முகத்தக்
காலினை யெழுப்பிக் கனத்தர சளித்தமாத் தருமை. (௨)

875 மும்மதக் களிற்றின் பந்தியு மாழி முட்டிய மூறித்தேர்
நிரையும், கைம்மலி யடகு காமுறு நெடிய கழுத்துடைக் கான
லங் கலமும், கொம்மிய வோடைக் கொய்யுளை யிவுளிக் குலங்
களுங் கூடிய பந்தி, விம்மிய வரிசை விளம்புதற் கெளிதோ விரி
கட லளக்கினும் விதியே. (௩)

வேறு.

876 இத்தகைய திருநகரி லவனிமுத லாகாய மிருதி யாக, வித்
தகமி லைம்பூதக் காலமைந்த வுடனிலையா விதத்தை யோர்ந்து,
சித்தமிகும் பெரும்புகழைத் தனக்குடலாக் கிக்கொண்ட திர
லோ னென்ன, வுத்தமமா கியகவியில் வல்லாரு மெல்லாரு
முரைக்கு மேலோன். (௪)

877 தாளம்பு ருடராகம் வைடூரி யங்கோமே தகமே நீல, மர
கதம்ப துமராகம் வைரமே பவளமுழு வதுங் குயிற்றிப், பிர
மன்முன் னோர்வியப்ப விவற்றாற்செய் கோவையையொன் றன்
பின் னொன்றாக, விரவியெங்குந் தூக்கியொளிர் கனகத்தாற்
செய்தமைத்த விமானத் தின்கண். (௫)

878 விண்டுதினம் பணிபரனைத் துதுசெல விடுத்துப்பின்
செங்கற் பொன்னாய்க், கண்டுவலி யாற்புரிந்தெ லும்பினையுங்
கன்னியரா பிறை யெயிற்றுத், திண்டரவந் தீண்டியுடன் மாய்
ந்தவனைச் செகமறிய யெழுப்பித் தந்தும், பண்டுபல செய்மது
ரத் தமிழ்வேதத் தெள்ளமுதைப் பருகுங் காதோன். (௬)

879 விண்ணவர்மண் ணவர்நாக ரிந்திரன்மா யன்முதலோர்
வியப்ப யாரு, மெண்ணரிய பிரணவத்தி னுட்பொருளை யுப
தேசித் தென் னிரண்டு, கண்ணகலா தமர்பரமா சாரியனா கிக்
கணக்கில் களிப்பு மேவ, நண்ணரிய நவமணிபீ டத்திருந்து நல்
கினன் காட்சிதனை நல்கு மாறே. (௭)

880 ஓங்கியநால் வேதமுமா றங்கமுமற் றென்னாலு மொரு
ங்கு கற்று, தேங்கியமெய்த் தெளிவமைந்து பக்குவமிக் குடை
யவராய்த் திகழ்நால் வர்க்கு, மேங்கியமா லயனிற்பக் கல்லாலி
னிழன்மேவி யிருந்து மேன்மை, தாங்கியவுண் மைப்பொருளைச்
சாற்றியசுப் பிரமணியத் தனிமை யோனே. (௮)

881 குருஞான சம்பந்தன் குருபூசை தனிலளித்த கொடை
யின் மேன்மை, வருமுலகி லுடுக்குமுடை யிவனதுடை வய
ராற வுணுமன்ன மிவனதன்னம், மருவுலகப் பொருளிவன்
றன் பொருள்கல்வி யிவன்கல்வி மகிழ்மற் றின்றுந், தருங்க
லனு மிவன்கலனே தரணியிலே யெவரெடுத்துச் சாற்றவல்லார்.

882 வானமருந் தருபதும மணிசங்கு தேனுவெனும் வகை
யைக் கூவி, தானமர்ந்து முறையோடுங் கொடைபயிற்ற சற்
றேனு முணராத் தன்மை, ஈனரெனத் தான்கண்டு சினங்கொ
ண்டு யிவ்வகையாற் றண்டித் தேபின், கானகத்திற் றுறத்தநடு
நடுங்கிவிண்ணில் மறைந்திடவே செய்திட்டக் கனகக்கையான்.

883 அன்றுநாங் கங்கைநதி சூழ்ந்ததிருக் காசிநக ராதி யாகத்,
துன்றுபுக ழிராமேச்சு ரம்வரையும் பலவகையாந் தூய தான,
மென்றுமியற் றிடமிகவு முயன்றுவிருப் போடுஞ்சேர்த் தெங்
கும் வைத்த, வொன்றுபெருஞ் செல்வமெலாஞ் சுப்ரமண்ய
சற்குருவா லோங்கு மாதோ. (கக)

---

### யாழ்ப்பாணம் வண்ணைநகர்
### சுவாமிநாதபண்டிதரவர்கள்
## திருப்பெருந்துறையிலிருந்து விண்ணப்பம்.

884 ஒருபொருளை யுளமதனி லோவாம லுறுத்திவைத்தே
யுயர்ந்த ஞானத், திருபொருளை யிருநிலத்தி லிலங்குபரு வத்
தினர்கள் யாருந் தேரத், தருபொருளைத் தருநூல்க டனிபரப்
புந் தருங்கருணை சாலக் கொண்டு, வருபொருளை வழுத்து
துமிவ் வழுத்தலுறு மப்பொருளை மகிழ்ந்து காண்க. (க)

---

### தருமபுரவாதீன வித்துவசிகாமணி
### காழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்
### இயற்றியது.

885 மீதராப் புனைதரு விமல ராகியிம்
மீதராத் தருமைவாழ் வேத மாதவர்
சாதராத் திகழ்கொடி சாற்று மெற்கொரு
சாதராத் தந்தனர் தரணி வாழியே.

### பாநுகோயிலாதீனம் இலக்கணம்
## முத்துக்குமாரத் தம்பிரான்சுவாமிகள் விண்ணப்பம்.

886 பூவளந்தரு பொன்னியின் கரையினிற் புலவோர்
பாவளந்தரு தருமையம் பதிபுரந் தருளுந்
தேவசுப்பிர மணியநற் றேசிகர் பெரும!
தாவகன்றநின் பதமலர் தாழ்ந்து விண்ணப்பம். (க)

### மற்றொரு சமயம்.

887 பூமலர்ந்துயர் காவளர் தருமையம் புரிபுரந் திருளோங்கு
மாமலர்ந்தெறு கருணைசெய் சுப்பிர மணியசற் குருநாத!
தேமலர்நதுயர் சிவநெறி யருளுநின் றிருவடி மலர்தாழ்ந்து
பாமலர்ந்துயர் சந்நிதிக் கடியனேன் பகர்தரும் விண்ணப்பம்.

### தருமபுரம் ஆதீனவித்துவசிகாமணி
## சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியவை.

### புலவராற்றுப்படை.

888 தண்ணஞ் சலசத் தருமபுரஞ் சார்ந்தக்கா
லெண்ணஞ் சிறக்கு மெழிற்புலவீ—ரண்ணல்
தருஞான சம்பந்தந் தந்தருள்வர் கண்டீர்
குருஞான சம்பந்தக் கோ. (க)

### பாணாற்றுப்படை.

889 நலமுறும் யாழகத்து நப்புலவ எம்போற்
புலமுறும் ஞானபுரம் போற்றிற்—பொலப்புட்
கரமணியத் தந்தருள்வர் கர்த்தர் குருசுப்
பிரமணியப் பெம்மான் பெரிது. (உ)

### கூத்தராற்றுப்படை.

890 செம்ம லடிபரவிச் செய்யுந் தனிக்கூத்த
பொம்மல் தருமபுரம் போய்ச்சேர்க—விம்முபுகழ்
மாரி நிகர்சுப் பிரமணிய வள்ளலார்
வாரி கொடைவழங்கு வார். (௩)

பாடாண்—வெள்ளிநிலை.

891 பரம்புநீர் வையகம் பல்லுயிர் தளிர்த்து
விரும்பு வேட்கையும் விழுப்பமு முற்றி
மனையறந் துறவற மனையவு நிலைபெற
விரிகதிர் செறீஇ வெள்ளி விளங்கலின்,
கொண்மூப் பலகாற் குறைவின்றிப் பொழிக
விண்ணோர் வேந்தும் விரிஞ்சனு மாலும்
பன்முறை வழுத்தும் பாடல்சால் மதுரையும்
வின்னுதற் கலைமகள் விரிதமிழ்க் கமலையும்
முப்பொருட் போத முன்னுபு மோனத்
தப்பொருள் கண்ட வருந்தவ முனிவர்க்
கின்பவீ டளிக்கு மெழிற்றடத் தருமையுங்
காக்குமெங் கோமான் பார்க்கொரு சீமான்
பாசம் பறிக்கும் நேசஞா னியர்க்குச்
சச்சிதா னந்தன் நித்தியா னந்தன்
ஆரண மார்க்கமு மாகமத் துறையும்
பூரண நடத்தும் புண்ணியன் குருசுப்
பிரமணி யப்பிரான் பெருந்தகை பிரசப்
பங்கய மலரும் பவளச்
செங்கர மென்ன திகழ்ந்திரு நிலமே. (௪)

வாயினிலை—பாடாண்.

892 திரையுந் திருப்பாற் கடலதுவே திரண்டு மலையி னுரு
வாகித், திகழ்வ தென்ன விளங்கிவருந் தெய்வக் கயிலை வரை
புரக்கும், தியாகச் சீகண் டப்பெருமான் தெருட்டு மரபிற்
றருமபுரஞ், சிறந்த ஞான சம்பந்த தேவ ராதீ னத்தோங்கி,
வரையும் மகத்து வச்சுப்ர மண்ய வள்ளற் குணர்த்திடுக, வாயில்
காக்க வீறமைந்து வாழும் வீர சேவகனே, வடநூற் கலையுந்
தென்கலையும் வளவே தாந்த சித்தாந்த, வளமும் பண்டை யிலக்
கணமும் மாட்சிச் சங்க விலக்கியமு, முரையு முணர்ந்து பிறர்க்
குரைக்க வூகந் தெரிந்த நால்வாக்கி, யொருவே லப்பர் பறி
யனக ருசன புராணங் கோமுத்தி, யுயர்பண் டார சாத்திரங்க
ளோவாக் குமரகுருபரர் நூ, லோங்கு சதம ணிக்கோவை யுள்ள
வெல்லாங் கற்றறிந்தா, னிரையும் பெருமைக் குணஞ்சான்ற
நிருபர் பலராற் பலபட்டம், நிகழ்த்தப் பெற்று ஞாங்கிலநூ
னித்தம் படித்து விவரிப்பா, னிபுணன் முத்துத் தாண்டவன்
தன் னேரார் புலவ னின்மகிமை, நிகழ்த்தும் விருப்ப மேற்
கொண்டு நிலவு கின்ற வரவஃதே. (௫)

## பரிசிற்றுறை.

893 மெய்ச்சிவ முணர்த்துந் தத்வரத் நாகரம்
திருச்சிற் றம்பல ருருச்சிக்கப் பாடிய
அறிவா னந்தச் செறிவாஞ் சமுத்திரம்
சிவக்கொழுந் தருள்சிவ நெறிப்பிர காசம்
மோஷ பரணமா ஞான வரணம்
இத்தனை நூலும்யா னிறைவநின் பாங்க
ருய்த்துணர் தற்கரு ளுயர்சுப்ர மண்யச்
சச்சிதா னந்தத் தருமை வாழ்வே. (௬)

## விறலியாற்றுப்படை.

894 ஒற்றை யாழியந் தேரின னொளிபின னுவந்தரு ளுவ
னென்று, கற்றை வார்குழல் விறலிநீ கருத்திது கருதுவை
களிப்போங்க, மறறை நங்குருந் தருமைவாழ் சுப்பிர மணிய
னைப் புகழ்வாயேல், பிற்றை நாண்மது ராபுரி பெற்றசீர்ப்
பெரும்பயன் பெறுவாயே. (எ)

## இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

895 பூமேவு ஞானபுரப் புங்கவன் பொற்சடிலன்
மாமேவு சுப்ரமண்ய வாய்மைப் பெரும்புகழான்
பாமேவு நந்தமக்கோர் பாநு. (அ)

## குறளடி வஞ்சிப்பா.

896 ஊருப்பிணி யாவுங்கெடப்
பாருட்புகழ் சீருப்பல
தேருந்திற மேவும்வகை
ஞானஞ்சிவ தானம்புரி
நாளும்
தண்ணியல் வளவிய தருமைத்
திண்ணிய சுப்பிர மணியதே சிகனே. (௯)

## கைக்கிளை மருட்பா.

897 பூவே யடிசுமக்கும் பூங்க ணிமைகொட்டும்
ஏவே யிவளணங்கே யல்லளால்—பாவே
தரும்புலவர் வாழ்த்துந் தரும புரத்து
வரும்புகழ் சுப்பிர மணியன்
அரும்பதம் பணியு மவனிமா மகளே. (௧௦)

வேற்றுமையணி.

898 சீமான் புறநிற்பார் செல்வமொன் றேபெறுவர்
பூமான் தருமபுரம் புரஞ்சாரிற்—கோமான்
அருளா லறமாதி யத்தனையும் பெற்றார்
தெருளா தவருந் தெருண்டு. (கக)

ஷடியாரவர்கள் மற்றொருசமயம்.

899 திருவிளங்கும் நள்ளாற்றுப் பெரும்பதிக மதனுற் றிகழ் மதுரை வளம்பதியிற சைவநெறி நாட்டி, உருவிளங்குந் திரு ஞான சம்பந்தப் பெருமான் உலகறிய யாமெனறு முயர்கருணை விளக்கத், தருவிளங்கும் பொழிற்றரும புரமதனி னெழு ந்து சற்குருசுப் பிரமணிய சாந்தகுண மூர்த்தி, யருவிளங்குந் தருமபுரம் நள்ளாறு கெழுமி யருளியநற் காட்சியினை யகத் துன்னித் தொழுவாம். (க)

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

சுவாமிநாதபண்டிதரவர்கள்

## திருப்பெருந்துறையிலிருந்து விண்ணப்பம்.

வெண்பா.

900 பணித்தமதி சூடினன் பாலன்பு மிக்குச்
சனிப்பெயர்ச்சி நல்விழாத் தன்னை—யுனித்தென்னள்
ளாற்றிற் செறிந்தன் கண்பாய்த் தரிசித்த
தேற்றக் குருமணியே தேர். (க)

---

பாநுகோயிலாதீனம் இலக்கணம்

## முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் விண்ணப்பம்.

901 ஏர்கெழு தருமைக் குருமர பதனி லிருபது மூன்றுமா மெண்ணிற், சீர்கெழு கருணைச் சுப்பிர மணிய தேசிக ரெனுந் திரு நாமம், பார்கெழு புகழோ டோங்கிட விளங்கும் பரமசற் குருபர பணிந்து, நார்கெழு முளத்தோ டடியனேன் றிரு முன் னவின்றிடற் குரியவிண் ணப்பம். (க)

### மற்றொரு சமயம்.

902 பூமணந்தரு தண்டலை புடைகெழு தருமைத்
தேமணந்தருள் சிவநெறித் தேசிக பெரும
மாமணந்துயர் சுப்பிர மணிய நன்மணியே
பாமணந்தநின் றிருவடி பணிந்தவிண் ணப்பம்.

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதர் அவர்கள்

## திருப்பெருந்துறையிலிருந்து விண்ணப்பம்.

903 உலகநல மெவற்றினுநன் குயர்ந்தநல முறுகவென வுற்றுத் தேர்ந்தே, இலகுமறி வுதவுபெரு நூல்களெல்லா மினிதச்சி னேற்றியியும், அலகிலசீ ரண்டரண்ட மெலாம்போர்ப்ப வகமகிழ்வா யமருஞ் ஞானக், குலகுருவே குழகுருவே கொடியனுளங் கொள்குருவே குறித்துக் காண்க.

---

தருமபுரம் ஆதீனவித்துவசிகாமணி

## சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்

## இயற்றியது.

904 பொற்குன்ற வாணர் பொலிதரு கூடற் புரங்கமலே
பற்குன்றக் கோட்டப் பனவ னமரும் பரங்குன்றஞ்செம்
பொற்குன்ற மென்னும் புரிசைத் தருமை நிருபர்எற்கு
நெற்குன்றந் தந்த நலத்தைப் பரவுவன் நீணிலத்தே.

---

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

## சுவாமிநாதபண்டிதரவர்கள்

## திருப்பெருந்துறையிலிருந்து விண்ணப்பம்.

905 முல்லைவல்லி மோந்திடலான் மூலவுப தேசத்தால்
இல்லையில்லை யென்னுமை லீதலினால்—வல்லையல்லை
வீட்டுதலா னன்பர்க்கு வேலவநேர் சாமியிது
நாட்டமுறும் போதருளை நாட்டு.

தருமபுரம் ஆதீனவித்துவானும்
துமுக்கூர் துரைத்தன கலாசாலை உயிர்நூலாசிரியரும் ஆகிய
ப. மு. சோமசுந்தரபிள்ளை M.A., L.T., அவர்கள்
இயற்றிய

## அருளியல்பு.

906 பூமலி புடவி பொருந்து புங்கவர்
தாமலி கேவலஞ் சாரும் விசிட்டம்
விழுமிய சிவாத்து விதமென விளம்பு
மூவிய னெறியினு முற்படுஞ் சுத்தந்
தாவில தெனமுத்தி நிச்சயஞ் சாற்றும்
எண்ணுமிச் சுத்த மெவரு மியையக்
கண்ணுவம் அதனால் கருதொணாக் கேவல
நீத்தெமைச் சகல நிறுவினிர் தேத்துச்
சுத்தநேர் வித்தல் சுத்தனும் மாண்பால்
கமஞ்சூற் கொண்மூக் கமஞ்சார் துடவை
பன்மணி யிமைப்பப் பருதி தீண்டும்
அற்புதத் தருமைச் சிற்பர
சுப்பிர மணிய பொற்பமர் மணியே.

---

தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி யாழ்ப்பாணம் வண்ணைநகர்
சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

907 ஆர்கொண்ட பேரன்பா லாட்கொள்ள வந்தகுருச்
சீர்கொண்ட வேணிச் சிவக்கொழுந்தே — நார்கொண்டு
நின்சரணம் போற்று நியதியுடை யேனிருபம்
நன்சரணந் தந்து நய. (க)

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் சீகாழித் திருமுலைப்பால் உற்சவத்தன்று சிவபோகசாரமும் சாதராவும் சிறப்புப் பெயரும் அநுக்கிரகித்தபோது இவ்வாதீனத்து வித்துவசிகாமணி

## சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் பாடியது.

908 விண்ணாரும் புத்தேளிர் புகழுங் கொன்றை மிளிருமெழிற் செங்கழுநீர்த் தெரியல் மாலை, தண்ணாருந் தருமபுராங் கூடல் பாடித் தருதிகொளுஞ் சுப்ரமண்ய குரவர் கையாற், பண்ணாருஞ் சிவபோக சார நூலைப் பரிசுபெற யான்படைத்த தவமும் நன்றாம், எண்ணாரும் பரம்பொருளா மிவர்த மேற்ற மெடுத்துரைக்க வென்னாவிற் கியலா தம்மா.

---

தருமபுரம் ஆதீனம் வித்துவசிகாமணி வைத்தீசுவரன்கோயில்

ச. சோமசுந்தர தேசிகரவர்கள் இயற்றிய

## வாழ்த்துப்பா.

909 பூவுறை மாதும் நாவுறை மாதும்
சாமிய மெய்திச் சார்ந்துவீற் றிருக்குந்
திருக்கயி லாய பரம்பரைச் சீர்பெறுந்
தருமையா தீனந் தழைத்திட வுதித்தோன்
மன்கரங் குவித்து வணங்கும் மாண்பினன்
தன்கரங் குவித்திடாத் தாணுப் பெருமையன்
சத்திநி பாதரின் உத்தமாங் கத்தில்
முத்திவித் தாம்பத முளரிவைத் திடுவோன்
திருக்கண் ணோக்கா றீப்பவ மொழிக்குங்
குருஞான சம்பந்தக் குரவ னருளினன்
உள்ளுறை யொன்றோ டொருபதா முறுப்புந்
தெள்ளுறக் கற்றோர் திரிமல மகற்றிச்
சிந்நய மளிக்குஞ் சிவபோக சாரமும்
நன்னயச் சொக்க நாதவெண் பாவும்
ஈங்கிரு நூலும் எழில்பெற வாய்ந்திட்
டாங்கிலக் குறிப்போ டச்சிட் டதிலொரு
பாங்கினோ டுயர்ந்த பயிண்டுப் புத்தகம்
தாங்கிவந் தொருவர் தரக்கொடுத் தனுப்பிய
தீங்கிலா தோட்குநற் றிருக்கை யாளன்

முத்திப் பேறருள் சித்திபே ருரையும்
முத்திநிச் சயமாம் முன்னவர் நூலும்
ஏட்டிற் பொறித்துள இனும்பல நூல்களுந்
தீட்டியே வச்சிடத் திருவுளங் கொண்டோன்
இடிவில் செல்வமும் இன்னருட் செல்வமுங்
குடிகொண் டிருக்குங் குறைவிலா நிறைவினன்
வழுவிலாத் தானம தெழுமூன் றிரண்டு
குழுமிட வந்த குருபரம் பரையினன்
ஒப்பிலா நவமணி உயர்தரு குருமணி
சுப்பிர மணிய தேசிக சுடர்மணி
வாழ்க நின்னருள் வாழ்கநின் றிருக்கரம்
வாழ்கநின் பொன்னடி வாழ்கநின் னாயுள்
வாழ்கநின் கல்வி வாழ்கநின் செல்வம்
ஊழிதோ றூழி வாழிவா ழியவே.

## யாழ்ப்பாணம் வண்ணைநகர் தருமபுர ஆதீன வித்துவசிகாமணி
## சுவாமிநாத பண்டிதரவர்கள்
## திருப்பெருந்துறையிலிருந்து விண்ணப்பம்.

910 என்னுடைய வின்னுயிரே யிமையவர்கள் நல்லமிர்தே
பொன்னுடைய சபையரசு புரிந்தருளுந் தவவரசே
கொன்னுடைய குணவரசே குளிர்ச்சிசெயு முளத்தரசே
உன்னுடைய திருவடியி னுரைத்திடுவிண் ணப்பங்கேள்.

மற்றொருசமயம்.

911 தருமபுர வாதீன சற்குரவர் நூல்கள்
அருமைபெரி தாரு மறியத்—திருமையெனப்
பொன்சொரிந் தச்சிட்டுப் புத்தகமாய்ப் பூப்பரப்பும்
இன்குருவே யென்சொலினை யெண்.

மற்றொருசமயம்.

912 பல்கலை தேர்ந்து வெல்கலை யாய்ந்தருட்
பல்கலை கொண்டவை நல்கலை முன்னிப்
பொருளினைக் கேளாப் பொருளறங் கேட்டு
மருளினை நீக்கி மாந்தரைப் புரக்கத்
திருவுளங் கொண்ட செஞ்சடைக் கற்றைப்
பரசிவ னுருக்கொள் படிமைக் குருமணி

நற்குரு ராய னல்லருட் கண்மணி
எற்கொரு தந்தையு மினிய தாயும்
அன்புறு மாமனு மவ்வியற் றாயும்
இன்புறு குருவு மினைய பிறவுமாய்
முன்புற நின்று முழுதருள் புரியும்
அன்பின் பிழம்புதன் னடிமலர் சிரத்திற்
கொண்டு குறிக்குங் கோதில்விண் ணப்பம்
கண்டு களித்துக் கருணை புரிகவே.

---

பாநுகோயிலாதீனம் இலக்கணம்

## முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமி அவர்கள் விண்ணப்பம்.

913 பொன்பூத்த திருத்தரும புரத்தொளிரு மாதீனம் புரந்து மேலாந், தென்பூத்த சிவஞானப் பெருநூல்கள் பலவுலகந் தேற நல்குங், கொன்பூத்த குருபரசுப் பிரமணியத் திருநாமக் கோவே! செய்ய, மின்பூத்த பதகமலந் தலைக்கணிந்தோர் விண் ணப்பம் விளம்பு வேனால். (க)

914 அடியேற்குப் பணித்தபணி திருவானைக் காவிலிருந் தாற்றி னேனௌம், அடிகேள்! முன் மகரமதி யினிலவணுற் றதுமுதலா வந்தாங் காறும், மிடியாகப் போக்குவர வுணவாதி நூற்றைந்து வெண்பொன் காசும், படியாக வொருநூற்று நான்கரிசி யுஞ்செலவு பாரித் தன்றே. (உ)

915 இட்டபணி யியற்றுவதே யென்கடனென் றியைந்தே னுக் கிறுதி காறும், இட்டதுமுப் பானைந்து ரூப்பியமே யெஞ் சியவை யெழுபா னென்றால், முட்டமுழு வதுந்தாங்க முடியா மை திருவுளத்து முன்னு தன்றே!!!, விட்டதுமென் வினை யென்றே யெண்ணுகிறேன் வேறென்னே விளம்ப லாமே. (௩)

916 கரிவாங்கும் பெருங்கவளத் தொருசிறிது வாய்தப்பிற் கைம்மாத் துன்பம், மருவாதங் கதுகொண்டே றெறும்புபல கிளை யோடு வாழு மென்றே, பெரியோர்முன் னருளியதுந் திரு வுளத்திற் கொண்டருள்க பெரும! கூடற், பிரியாத சொக்க லிங்கப் பெருமானல் லருளடியேன் பெறுக மன்னோ. (ச)

மற்றொருசமயம்.

917 பூமலர் சததளப் புதுநற வளிக்குத்
தாமகிழ்ந் தளிக்குந் தடம்பல புடைசூழ்

தருமையம் பதிவாழ் சற்குரு ராய
அருமையும் பெருமையு மான்றநற் சைவச்
செந்நெறி நூல்பல சீரினச் சிடுவித்
திந்நிலம் பெறவளித் திசைநனி நிறாஉந்
தோமிலா வாய்மைச் சுப்பிர மணிய
நாமமார் தருதிரு ஞானசம் பந்த
மருடரும் வறுமை மாய்ந்தடி யாருற
வருடரும் பெருமநின் னடியிணை தொழூஉ
ஒன்றுவிண் ணப்ப முரைப்பேன்
நன்றுயர் கருணை நலம்பெறற் பொருட்டே. (ரு)

---

சிதம்பரம் செந்தமிழ்ப் போதகாசிரியன்

## C. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் இயற்றிய

## விண்ணப்பம்.

---

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

918 பூமலிந்த பொழில்புடைசூழ் சோணாட்டின் றிலகமெனப் புலவோ ரேத்து, மாமலிந்த மாயூரத் தண்மையினிற் காவேரி வளஞ்சால் தென்பால், காமலிந்த தருமைநக ரெழுந்தருளி யடியார்தங் கருத்திற் கேற்பத், தேமலிந்த மலர்மணமேர் இறை யருள்செய் சுப்ரமண்ய தேவே போற்றி. (க)

919 முத்தமிழா கரஞான சம்பந்தன் சந்நிதியின் முதன்மை கொண்ட, சுத்தவருட் சிவபோக சாரமெனு முதனூலின் றேற்ற மாட்சி, வித்தகந்தேர்ந் தாங்கிலத்தின் மொழிபெயர்ப் பித் தச்சேற்றி விளக்க மாக்கி, அத்தகைய விடயத்திற் கீடு பட்டோர்க் குவக்கவரு ளரசே போற்றி. (உ)

920 தமிழறிஞர் யாவருக்குந் தகுதியறிந் தருள்செய்யுந் தன்மை கண்டே, இமையவருந் தொழுதேத்துந் தருமைநகர்க் காசானே யிருபான் மூன்று, அமையவெழுந் தருள்குருவே சைவர்களுக் காதரவே! அறிவின் மிக்கோய்!, தமியனேயு மென்றருள்சுப் பிரமணிய தேசிகனே சாந்த மூர்த்தி. (ங)

921 தருமைநகர்ப் பெரியோர்க டாமருள்செய் சித்தாந்த சைவ நூல்கள், அருமையறிந் தறிஞர்களா லச்சிடுவித் துலகமகி ழாக்கு விப்போய்!, கருமைமலங் கலங்கவடி யவர்க்கருள்சுப்

பிரமணிய கர்த்த வுன்றன், பெருமையுணர்ந் தேத்துநர்க்குப் பரிசளிக்கும் பெருந்தகையோய்! பிறங்கி வாழ்க. (௪)

922 உலகமதிற் புகழ்பெற்ற தருமைநகர்க் கருள்குருவே! உண்மை வாய்ந்த, திலகமெனுஞ் சைவகுரு மார்களருள் சித்தாந்தஞ் சிவஞா னூல்கள், பலவுமினுங் கலியுகத்திற் பரவமிகு தருமபுரப் பண்பு தேக்க, நலவிகசி தஞ்செய்சுப் பிரமணிய ஞானகுரு நாளும் வாழி. (௫)

---

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

## P. சிவசாமிசேர்வை அவர்கள் இயற்றியது.

923 திருவளரும் முகத்தானே செழுந்தருமை யமர்ந்தானே சிறியேன் நெஞ்சே, உருவளரும் ஆலயமா யுவந்தானே தமிழ் நிதியே யுலகம் போற்றும், மருவளருங் கழுநீரை மகிழ்ந்தோனே சுப்ரமண்ய வள்ளா லென்றுந், தருவளருங் கரத்தானே சற்குருவே வாழியநீ தரணி மீதே. (௬)

வேறு.

924 நிலவுவிரி நன்மணிகள் இழைத்தபீடத் திசைவலோ ரிசைபாட நேயத்தொண்டர், குலவுதிரு வடிபரவக் கோதில்சைவக் குழாமெல்லாந் தமிழ்வேதங் கூறவென்றும், நலமதார் தருமபுரந் தனிற்கிழக்கு நன்முகமா யமர்ந்துகொலு வீற்றிருக்கும், பலர்புகழ்சுப் பிரமணிய பரமநின்னைப் பாவியேன் றெரிசித்துப் பணிந்துய்ந்தேனே.

---

திருக்கைலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் திருமுன்

வைத்தீசுவரன்கோவில் வித்வான்

## மு. ஷண்முகதேசிகர் இயற்றிய இயன்மொழி வாழ்த்து விண்ணப்பம்.

925 பூவிலும் நாவிலும் மேவிவீற் றிருந்த
தேவிக ளிருவருஞ் சேர்ந்த நற்றிரு
தன்றே டென்றும் நன்னீ ரேயமை
பொன்னியின் றென்கரை தன்னிற் றேயா

மகிழுடைத் தருமையில் மாண்புடை முத்தீ
அகமகம் விட்டோ னன்புரு வான
அருளுடை அழகன் அடியிணை சேரும்
பண்பினர்ப் பாற்றும் பகலில் காம
முதலறு பகையிருள் முடிகதிர் நல்கா
நலந்தரு கதிரோன் நானில மெச்ச
எலியொடு பூசையும் புலியோ டானுந்
தம்மிற் கலந்தே தன்னுடைச் சந்நி
தானத் திருக்கத் தானருள் செய்தா
ளுதியி லிப்பத மமர்ந்தோன் ஞான
சம்பந் தப்பெயர்ச் சான்றோ னென்றும்
வழிதனில் வந்திரு பான்மூன் றாஞ்சு
தந்திரஞ் சார்ந்த சுப்பிர மணியப்
பெம்மா னேயுன் பொன்னடி விரும்பி
வந்தோர் மம்மர் தீர்க்க வக்கர
மைந்தையு மவர்தம் புந்தியிற் சேம
நிதியென வைக்க விதித்தருள் செய்மணி!
பதியும் பசுவும் பாசமு மாகிய
அரும்பொருள் மூன்றையு மருளிச் செய்தே
இருக்கு நற்குரு! இருநா லச்சி
லேட்டைவிட் டேறச் செய்தே படிக்க
விரும்பு மவர்களுக் கெழுத்தினின் மாசு
தருமிட ரிலாத தகைநா லேதவா
தொளிரவேண் டும்மெனு முளமுடைச் சுவாமி
பயன்பர முள்ளோர்ப் பழுத்ததே யாக
நயக்கு மவர்க்கெலாம் பயனளித் தெந்நாள்
வரினுங் கற்றோர் வறுமையைக் களைதி
இனிமையா யிலகுறு மிருமொழி யுள்பொரு
ளற்பக லிரண்டிலும் ஆயச் செய்தவ!
தொன்னூல் பலவுனுஞ் செல்லெனும் பகையடி
யேட்டில்வைத் தேற தோட்டிடுஞ் செல்வா
நாட்டுளோர் வினைகளை வீட்டிவே ளோர்வாழ்
முருகன தருளாற் றிருவுடன் வாழ்க
வாழ்கநின் கல்வி வாழ்கநின் செல்வம்*
வாழ்கநின் அடியார் வாழ்கநின் ஆயுள்
வாழ்கபஞ் சாக்கரம் வாழ்கநின் செங்கரம்
ஊழிதோ றூழி வாழிவா ழியவே.

---

குறிப்பு:—இவ்வகவலில் *இக்குறியிட்ட அடிவரை ஈற்றெழுத்துக்களைச் சேர்த்துப் படிக்கின் "தருமையாதீனம் மகா சந்நிதானம் சுப்பிரமணியதேசிகசுவாமிகள் திருவடி வாழ்க" எனவரும்.

தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி

## ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் இயற்றியது.

926 தெள்ளு தெண்டிரை சுலாவிய செழும்புவி தேத்துத்
துள்ளு மெம்முளந் திருவருட் சூழலிற் சூழ
மெள்ள நற்பதம் வைத்தெமை யாண்டிடும் விமல
ரொள்ளி யோருறை தருமையம் பதியம ருரவோர். (க)

927 மாத வத்தவர் சுப்பிர மணியமெய்க் குரவர்
காத லுற்றிட வருபிரா சாதமெய்க் கலையை
யோதி யின்புற வுதவினர் வாழிய வுவப்பாம்
நாத மெய்ப்புக ழருணந்தி நாமநன் முனிவர். (உ)

928 இந்த மெய்க்கலை யோதலிற் பயனென்னை யெனனின்
மந்த மாணவ ருயிரரன் மாட்டியோ சித்துத்
தந்த மாபரன் குணங்களை யவர்வயிற் சார்த்தி
முந்து மப்பர ஞக்குவித் திடுதலே மொழியின் (ங)

929 பரந்த மந்திர முதலைந்துங் கலையைந்திற் பகுத்துச்
சுரந்தி டாதவக் கலைகளை நன்குசோ தித்துச்
சுருங்க வில்லுயிர்க் கிரகித்துச் சோதியி னொடுக்கி
நிரந்த ஷட்குண மதன்குண மாகவே நிறுத்தி. (ச)

930 ஆதி யானந்த மேலிட வநுபவத் தமைத்து
நீதி முப்பொரு ளியல்பினை நெறிப்பட நிகழ்த்தி
வாதி யாமலம் மலத்தினை வாட்டியவ் வாய்மை
சாதி ஞானத்தை விளக்குவிக் கும்பிரா சாதம். (ரு)

ACROSTIC TRIPLETS SUNG ON THE

**GURUPOOJA DAY OF DHARMAPURAM MUTT**

WHICH OCCURRED ON

**12th Vaikasi of Angirasa year–25th May 1932.**

BY

**T. GANAPATHI PILLAI**

931 **S**iva's abode is Kailas mount,
**D**ay and night there Devas are count,
**A**ll for knowledge, from its fount. 1

**U**nite they pray for Gnana Bliss,
**E**ver sing the glory of His,
**R**are his advent do they miss 2

**B**orn of the sages of silver Hill
**S**aturate in their Holy pill
**A**ll their progeny this mut now fill 3

**R**are in gift to learn and love,
**I**nspired in God to bow,
**S**anctify his soul, then and now 4

**A**dmiring disciples hold him high,
**K**ind to Guru approach him nigh,
**A**sk for bless with relieving sigh. 5

**M**uch in evidence is his Dharma,
**A**ll he gets through past Karma,
**N**one can shake him in Terra firma 6

**A**gile in thought and noble ways
**P**ursue methods of olden days,
**N**on-violence his actions base. 7

**N**one else ruled this Holy mutt,
**A**like in piety in and out,
**A**ttracting all in mansion and hut. 8

**I**n this mood is our Guru Lord,
**N**ever stoops to actions hard,
**D**eigned towards all to guard. 9

**A**h! Such a holy soul is here
**D**eceitful folk in him has fear,
**H**allowed people find him seer,
**I**nnermost prayers may Lord hear. 10

**Note** –First letter of every first line, then first letter of every second line, lastly the first of every third line of the triplets, when taken together down words and read will give the name 'SUBRAMANIA DESIKA PANDHARASANNADHI.'

தருமபுரம் ஆதீனவித்துவான் கோடூர்

## அ. சிதம்பரநாதமுதலியாரவர்கள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

932 கருதார் புரமொரு மூன்றும் பொடித்த கடவுளுக்கன்
றொருதா ரகவுப தேசம் புரிந்தரு ளுத்தமனே
விருதார் தருமை யமர்ஞான தேசிக மெய்த்தவத்தோய்
யிருதா மிடிவெயில் மாற்றும் புயலுன் னிருகரமே.

---

பாநுகோயிலாதீனம் இலக்கணம்

## முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் விண்ணப்பம்.

933 ஏர்மேவு பொன்னி யகிலார முத்த மிறைகொண்டு வந்து பணியுஞ், சீர்மேவு கின்ற தருமைக்க ணோங்கு சிவஞான மோன குருவாந், தார்மேவு ஞான சம்பந்த னெந்தை தருநா லிரண்டு முறையாற், பார்மேவு நல்கு குருசுப்ர மண்ய பாதர் பதங்கள் பணிவாம்.

மற்றொருசமயம்.

934 பணிந்து சந்நிதா னத்தினற் றிருவடிப் பதுமந்
திணிந்த அன்பொடும் அடியனேன் செய்யும்விண் ணப்பம்
தணிந்த என்னுடற் சம்மிரக்ஷ ணைக்கெனத் தயவால்
துணிந்த பக்ஷமும் புத்தகத் தொகுதியும் பெற்றேன்.

935 "பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தரா" மூல கோர் தாங், கற்ற வாங்கிலத் தெனினுமெய்ச் சிவநெறி கடைப் பிடித் துயு மாற்றால், தெற்றெ னுச்சிவ போகசா ரந்தமிழ் தேர் சொக்கர் வெண் பாவும், இற்றை நாளினர்க் கேற்றவா றருள் செயு மெந்தைநின் னருள் வாழி.

திருச்சிற்றம்பலம்.

## திருச்சிராப்பள்ளி நாஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

## தி. பொ. பழனியப்பபிள்ளை அவர்கள் விண்ணப்பம்.

936 சீர்பூத்த கயிலாய பரம்பரையிற் சிவஞானத் தெளிவை நல்கும், பார்பூத்த தருமபுர ஆதீனத் தலைமைதகு பண்பின் மேவி, நார்பூத்த வடியருளத் திருளகற்றிச் சிவச்சுடர்வாய் ஞான தீப, மேர்பூத்தென் றும்விளங்க அருள்சுப்ர மண்யகுரு இணைத்தாள் போற்றி.

937 சிவஞான அருட்செல்வந் தழைத்தோங்கிச் செந்தமிழ்த்தே சஞ்செழிக்க முன்னர்த், தவஞானப் பெருஞ்செல்வர் தாங்களனு பூதியாய்த் தமிழிற் றந்த, நவஞான பண்டார சாத்திரங்கள் பதினேழு நலங்கண் மல்கிப், பவஞானங் கடக்கவெங்கட் களிக்கவென வச்சேற்றிப் பதித்த தாக.

938 செந்தமிழோர் கொண்டாடும் சீர்காழித் தமிழ்ப்புலவன் சீர்த்த வன்பின், முந்தமிழ்த மெனமொழிய முத்துத்தாண் டவராய முன்னோ னெற்குச், சொந்தமிக வுரைத்தமொழி கேட்டுவந்து சன்னிதிக்கே சொற்றேன் யானே, பந்தமறுத் துந்தனடி பற்றுதற்கா வழங்கவெனப் பணிந்து நின்றே.

---

### தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

939 அழகுறு சடையாய் போற்றி யருள்செயச் சடையாய் போற்றி
மழகுறு நகையாய் போற்றி மன்னுறு நகையாய் போற்றி
கழகுறு வித்தாய் போற்றி கவலறு வித்தாய் போற்றி
பழகுறு கண்டாய் போற்றி பளகறக் கண்டாய் போற்றி.

### மற்றொருசமயம்.

940 பூவினிற் றந்தாய் போற்றி புண்ணியந் தந்தாய்போற்றி
தீவயி னடையாய் போற்றி தேர்ந்தநூ னடையாய் போற்றி
காவினுக் குடையாய் போற்றி கதிர்கொள்பொற் குடையாய்
நாவினுக்கினியாய்போற்றி நற்குருவினியாய்போற்றி.[போற்றி

திருவாரூர் திருவள்ளுவர் கல்விச்சங்கம்

## V. வைத்திநாதசுவாமி ஸ்தபதி அவர்கள் இயற்றியது.

### குருஸ்துதி.

941 ஆற்றுபல வாதீனந் தம்மில் மேலாம் அதிகார ஞானவாதீன மென்று, தேற்றமுறுந் தருமைதனி லுயருஞ் சைவ சித்தாந்த நிலயமதாய்ச் செறியுந் தொண்டர், தோற்றமெனுங் கடல்கடக்குந் துணையாய் மோக்ஷ சுகங்கொடுக்குந் தாதாவாய்த் துலங்குஞ் சீர்த்தி, ஆற்றன்மிகு சுப்ரமண்ய தேசி கேந்தரன் ஆஞ்ஞைதனை அன்பினொடு அறைகு வாமே.

---

ஸ்ரீபர்வதராஜபுரம்

## நா. இராமசாமிப்பாவலர் இயற்றியது.

### ஆசிரியவிருத்தம்.

942 பாகமுறுஞ் செந்தமிழி னருமையுணர்ந் தெந்நாளும் பரிசுநல்கி, யோகமுறுங் கைலாய பரம்பரையிற் பரம்பரையாக புதித்துச் சீர்கொள், வாகைபெறுந் தருமகுண வாய்மையொடும் ஞானமொடும் வளரும் வச்ர, தேகமுறுஞ் சுப்ரமண்ய தேசிகப்பேர் கனயோக சுகுணன் காண்க. (க)

943 மலையிலே யுயர்ந்ததுபொன் மலைநதியி லுயர்கங்கை வாய்ந்த வெற்றிச், சிலையிலே யுயர்விதுர னரியவிரா கவனென்பான் செப்புந் தன்ம, நிலையிலே பொறுமையிலே புத்தியிலே நீதியிலே நிறைமெஞ் ஞான, கலையிலே யுயர்தருமைச் சுப்ரமண்ய தேசிகன்போற் கழறொ ணாதே. (உ)

944 என்னுயிருக் குயிரொப்பா ரெக்கலையுங் கற்றுயர்ந்தோரெல்லா ருக்கும், அன்னையொப்பார் சீடர்கட்குக் கல்விநெறி பயிற்றுவதி லப்ப னொப்பார், கன்னனொப்பார் குழுணரொப்பார் கற்பகமொப் பார்கொடையாற் கதித்த வாசச், சொன்னமல ரனையவெழிற் சுப்ரமண்ய தெசிகன்போற் சொல்லொணாதே. (ங)

945 ஈனாத வாக்கள்பல விருந்தென்ன போயென்ன விருநிலத்தில், வாணாளைக் கொடுத்துநிதி யுள்ளவரைப் பாடியென்ன

வரிசை பெற்றோர், மாணுறுந் தருமபுரச் சுப்ரமண்ய தேசிகன் றன் மலர்மு கத்தைக், காணுத கண்களெல்லாஞ் சித்திரத்தி லேயெழுதுங் கண்கள் தாமே. (ச)

946 காரணகா ரியங்கடந்த கங்கையணி சடையான்ற னுருக் கரந்து, தாரணியிற் கண்காணக் காட்சியுருக் கொண்டடியர் தம்மைக் காக்கும், பூரணனு கவந்துமுன்போ போகாது நாவலர்கள் புகழ வுற்ற, ஆரணஞ்சேர் தருமபுரச் சுப்ரமண்ய தேசிகனே யருள்செய் வாயே. (ரு)

947 பாரிடத்திற் பிறந்துவெகு பணமுழுத்த குணமுமிகப் படைத்து வைகும், பேரிடத்திற் கவிபாடி மதுரமிகப் படித்தாலும் பேசா தாலே, ஓரிடத்துஞ் சொல்லாம லுனையடைந்தே னிவ்வுலகி லுன்னை யன்றி, ஆரிடத்துச் சொல்லுவன்யான் சுப்ரமண்ய தேசிகப்பே ரறிஞ ரேறே. (சா)

நேரிசை வெண்பா.

948 திங்களு மும்மாரி செழிக்கு மறிவில்லார்
தங்கண் மடமை தவிர்க்குமே—செங்கையில்வேல்
வேள்பொருந்தப் பெற்ற வியன்சுப்ர மண்யனெழிற்
றாள்பொருந்தப் பெற்ற தலம்.

சுபம்.

---

தருமபுரம் ஆதீனவித்துவசிகாமணி

## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

949 சீரார் குருமணித் தேவே போற்றி
சீரார் குருமணித் திருவே போற்றி
கொன்றை தணந்த குரூஉச்சடி லந்தான்
கொன்றை யந்தி குலவிடக் கொண்ட
அமுதிற் றோன்று மரும்பெறற் பொருளாம்
அமுதிற் றோன்று மரும்பெறற் சுவையே
கண்டவர் களிக்குங் கருணைக் கடலே
கண்டவர் களிக்குங் கசப்புறு மமிர்தே
தரும புரத்தைத் தனதெனக் கோலிய
தரும புரத்தைச் சாடிய தலைவ
அடியார்க் குன்க ணன்புடை யாய்கின்
அடியார்க் குங்காண் பரியாய் போற்றி

பவமார் கத்தரைப் பாற்றுவோர் தாணுவிற்
பவமார் கத்தநின் பக்கம் போந்து
சிவதிசை ஞானத்தைத் தேடி மனங்க
சிவதிசை ஞானத்தாற் றேர்ந்தரு டேசிக
பூதியை மெய்கொளப் பொருந்தாய் நீவெண்
பூதியை மெய்க்கொளப் புண்ணிய னேதான்
அக்க மாலையை யணியா தன்பர்கம்
பக்க மாலையை யணிந்தொளிர் மெய்ய
பாரா யடிகாள் பக்குவ மிலரைப்
பாரா யடிகாண் பண்டுறு மிதனை
விப்பிரர் தாமும் வியந்து துதிக்குஞ்
சுப்பிர மணிய தூய தேசிக
மால்விடை தன்னை யாலிலை சேர்த்தோய்
மால்விடை யெற்கு மகிழ்ந்தருள் வாய்மன்
போற்றி போற்றி பூவடி போற்றி
போற்றி போற்றி புனையடி போற்றி
போற்றி போற்றி போற்றி
போற்றி போற்றிநின் புகழ்திரு வடியே. (க)

---

சென்னை இஞ்சினீரிங் பிராஞ்சு எட்கிளர்க்கு

## K. திருமலைசாமி நாயுடு அவர்கள் விண்ணப்பம்.

அறுசீர்விருத்தம்.

950 நிறைபெருந் தவத்தின் றாய்மை நிலைமையை யுணர்ந்து மேலாம், மறைமுதல் ஆகமத்தின் மன்னிய பொருளின் நுட்பந், துறையுற வுணர்த்தும் எங்கள் சுப்பிர மணிய வள்ளல், சிறைபவந் தவிர்க்குஞ் செம்மல் திருவடிக் கன்பு செய்வாம்.

வேறு.

951 அணிதரும புரிமடத்தில் அமர்ந்தருளும் தேசிகனே
பிணியகற்றும் சுப்ரமணியப் பெருமானே இறைவாகேள்
துணிவுடனே சிறுவனென் சொல்லினைத்துஞ் செவிமடுத்துத்
திணிபொருளை தந்தருளத் திகழ்புகழை யெய்துகவே. (உ)

952 வாழிநின் செல்வம் வாழிநின் கருணை
வாழிநின் கொடை வாழி சைவமுமே. (ங)

வேறு.

953 சிவபராஞ் சுடரே நீரெனக் கருதி சிறந்தவுன் பொற்பதம் பணிந்து, கவலையுள் முருக்க கடுகிநான் விரைந்து கழறிடும் மொழிசெவி மடுத்தே, அவனியிற் றழைக்க அன்புவைத் தாள்வாய் அடியனுன் வேண்டுவ திதுவே, தவமதில் மிக்க தனிப் பெருங் குருவே சகமதிற் புகழுநற் கோவே. (௪)

தனி.

954 "திருமணம் முடிப்பிப் போர்க்குச் செல்வமும் புகழு மோங்கும்
திருமணம் முடிப்போர் பக்கல் தீமைக ளணுகா தென்றும்
திருமணம் முடித்துத் தந்தோர் சிவனருள் பெறுவ ரென்றே
திருமறை மொழியு முண்மை திருவுள மறியும் நன்றே." (௫)

---

## திருக்கைலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம் அடியார்குழாத்தோருவரும் ஸ்ரீகாசிவாசி சொக்கலிங்கத்தம்பிரான்சுவாமிகள் மாணவருளோருவருமாகிய வித்துவான்

## சட்டைநாதத்தம்பிரான்சுவாமி அவர்கள் இயற்றிய பதிகம்.

955 சொன்னமு மணியு மிகவுடை யோருந் தூய்மையில் கருநிற மாய, பொன்னையு மில்லிற் புரிந்திடல் போலப் புண்ணியத் துன்னடி யவரோ, டென்னையு முறவே யாக்கினை யண்ணல் இதற்கியான் செய்கைம்மா றென்னே, நன்னயத் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௧)

956 குலமிலே னினிய குணமிலே னெல்லாக் கொடுமையு முடைமையேன் கல்விப், புலமிலே னுய புன்மையேன் றனையுன் பொன்னடிக் கமலங்கள் சூட்டித், தலமெலாம் புகழ் மெய்ந் நலமெலாந் தந்தாய் சார்புனை யன்றிமற் றுண்டோ, நலமுலாந் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௨)

957 இந்துவேய் சடையா யெங்கணு யகனே யெழிலினுக் குவமையா யியம்பும், வந்துவே யிரத மதனனை யுருவ மாஞற விழித்தகண் ணுதலே, பந்துவே யெனவுன் னடியரை யுணர்ந்தேன் பாசமே பகையினி வயலில், நந்துவேய் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (௩)

958 கண்ணுறு துயர மகற்றிட விமையைக் கருதியே யளித் தவ னீயே, கண்ணுறு துயர மடியனேற் கிமையிற் கருணை செய் தகற்றிடல் வேண்டும், பண்ணுறு தொடர்பி னடியவர் பரவிப் பாதபூ சனைதினம் புரிய, நண்ணுறு தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (ச)

959 என்செவி நாளு நின்புகழ் கேட்க இசைத்திட நாவுநின் றுமை, மென்செயல் யாவு நின்னடித் தொண்டி னியன்றிட விவ் வர மருள்வாய், மின்செய்வார் சடையா யடியவர்க் கெளியாய் விமலனே வெண்ணிறப் பணில, நன்செயார் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (ரு)

960 சத்தெனப் பொருள்கள் மூன்றையு முரைத்தாய் சார்ந்த வச் சத்துட னுறுதுஞ், சித்தெனல் பதியும் பசுவுமே யென்றாய் சேர்ந்தவா னந்தமப் பதிக்கே, ஒத்துறு மதனு னுனையன்றி யெமக்கோ ருணர்வுறு மானந்த முளதோ, நத்துறு தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (சு)

961 சரியையா ரோடுங் கிரியையார் யோகஞ் சார்ந்தவர் ஞானி யர்க் காக்குங், கிரியையா யாவு மொருங்குட னறியுங் கேடிலா ஞானமு முடையாய், உரியையாய் வாத வூரனுக் கருளவ் வுண் மையை யெமக்கரு ளுலகுன், னரியசீர்த் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (எ)

962 கதியுறக் கருதுங் கருத்தின ரெவருன் கான்மலர்ப் பூசனை யின்றி, யதுபெற லரியா ராற்றினைக் கடத்த லரியநன் மிதப் பிறு லன்றே, துதியுறு கும்ப முனிகர கத்திற் றோன்றியே விளங்குகா வேரி, நதியுறு தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (அ)

963 பங்கையா ருமையைப் பார்வையி னமைத்துப் பகீரதி மாதினை பதத்திற், றங்குற விருத்தித் தனித்தெழுந் தருளித் தமியனேற் கிருண்மலந் துமிக்குந், துங்கனீ யன்றோ தோன் றிய வருளுந் தூய்மையு மவைகளின் றெழில்பொன், னங்கை யார் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (கூ)

964 காவையா ரரியுங் காவையா ரரியுங் கமலமே லயனுநிற் போற்றி, காவையா வெனவே கழறுவ ரெனிலிக் கசடனே னெடொறும் புரியுஞ், சேவையா வுனது திருவுள மகிழச் செயுந் தினம் புகழ்பல வோர்தந், நாவையார் தருமைச் சுப்பிர மணிய ஞானசம் பந்ததே சிகனே. (கo)

965 வாழி தருமைநகர் வாழி யடியர்குழாம்
வாழிசிவ ஞானநெறி மாதவமும்—வாழியவே
சுப்பிர மணியத் தூய தவக்குரவன்
இப்புவியி னூழி யினைந்து.

**ஸ்ரீ குருசரணாரவிந்தாப்பியாந்நம:**

---

ஸ்ரீபர்வதராஜபுரம்

## நா. இராமசாமிப்பாவலனவர்கள் இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

966 கனந்தழைக்கு மலர்ச் சோலைத் தருமைமா நகர்தழைக்க கற்றோர் தங்க, ளினந்தழைக்க வடியவர்த மினந்தழைக்க விப் புவிபி லெவர்க்கு நல்ல, மனந்தழைக்கத் தழைத்தசுப்ர மண் ணியதே சிகன்கமல மலர்த்தாள் காணில், தனந்தழைக்குங் கற் றறிவிற் பனந்தழைக்குஞ் சிவஞானந் தழைக்குந் தானே (க)

967 திரைப்புணரி தனையெடுத்துண் டோனெனவே தமிழ்க் கடலைத் திரட்டியுண் டோர், உரைப்புலவர் கொண்டாட வுலகி லுள வுயிர்முழுது முளங்கொண் டாடத், துரைப்புலவ ரெனப் புகலும் சுப்ரமண்ய தேசிகர்தந் தொழிலென் சொல்வேன், அரைப்புலவன் காற்புலவன் வந்தாலு முழுப்புலவ னுக்கு வாரே.

968 பன்னருநற் குணங்கல்வி பகருநிறை பொறைவாய்மை படைத்துப் பாரில், முன்னவனை யெந்தருமைச் சுப்ரமண்ய தேசிகப்பேர் முகில்கற் றோர்க்கு, மன்னுமத கரிபரிதேர் மணி பணிதண் டிகைபசும்பொன் மகிழ்ந்து நாளுங், கன்னனும்பின் னிடக்கொடுக்குங் கையேகை மற்றவர்கை யென்கை மன்றே.

969 தரையினிற் புகழ்சால் தருமைமா நகரிற் றழைத்துளோன் தயையினோ டேக்கம், பொறைநிறை வாய்மை படைத்துளோன் போக்கு வரவிலா தவனெனப் புகலுங், கறைமிடற் றிறையின் கழலிணை மலரைக் கனவினு மறந்திடாக் கருத்தோ, நிறைதரு சுப்ர மண்யதே சிகனுக் குவமையா முரைசெயற் பாற்றே.(ச)

970 வாதாடுங் கொடியகலிப் பிணிக்கவுழ்தங் கொடுத்ததனை மாற்றி வைக்குந், தாதாவா ரெனவுலகிற் றிரிந்தலைந்து பார்த்த திலுந் தன்னை யன்றி, ஆதாரம் வேறில்லை சுப்ரமண்ய தேசிகப் பே ரறிஞ ரேறே, காதார விதன்பொருளைக் கேட்டுமன மகிழ்ந்தருளிக் கருணை செய்யே. (ரு)

## கலித்துறை.

971 விண்டாவுஞ் சூரிய மூர்த்தியைக் கண்டிந்த மேதினியில்
வண்டார் கமல மலருந் தரும வடிவுடையோர்
மண்டலம் போற்று மகான்சுப்ர மணியன் மலர்ப்பதத்தைக்
கண்டாற் புலவர் கலிதீரு நெஞ்சங் களிப்புறுமே. (சு)

---

## உலகம்பட்டி சைவசித்தாந்த நிலையம்

## ச. நடராஜதேசிகரவர்கள் விண்ணப்பம்.

972 தமிழுஞ் சைவமுந் தழைத்ததெங் கென்னில்
நெல்லும் நீரும் நிறைபெரும் நாடாம்
பொன்னி வளமார் பொருவில் சோணாடு
என்னும் பெயரிய நாட்டினிற் றலைமைப்
பதியார் தெய்வத் தருமையம் பதியில்
மன்னு மாதீன மடாலயத் தலைவராய்
வீற்றிருந் தருளும் சற்குரு மணியே
எந்தைநின் பாத இணைமலர் பணிவாம்.

---

## குற்றாலம், தஞ்சை போர்டு உயர்தரக்கலாசாலை

## தலைமைத் தமிழாசிரியர்

## ப. சிங்காரவேற்பிள்ளை விண்ணப்பம்.

973 பொன்மருவும் புகழ்மருவும் நன்னாட்டில் முன்னாடாம் பொன்னி நாட்டில், தொன்மருவுந் தருமையினில் வாழ்சுப்ர மணியகுரு தொண்டர் வாழ்வே, வன்மருவும் பேருரோன் றில்லாய்நீ பேருருவும் வழங்கக் கொண்டு, மன்மருவும் மானு டனா யன்றிமா னுடர்க்கருள வந்த தென்னே (க)

974 நங்கைவரின் நிலைபோகுங் கையிலையினுந் தருமைமிகு நன்பதத்தோர், துங்கமுறு மன்பிலரே யெனத்தொண்டர் உற மதியுந் தொலைவில் ஊனம், பங்கமுறு மெனமறைத்தாய் நெற் றிவிழி நெருப்பெனவே பகரக் காட்டாய், கங்கைகரந் தருள் சுப்ர மணியகுரு நீறுசடை காட்ட லென்னே. (உ)

975 எண்ணலருங் குருலிங்க சங்கமமாம் நின்னுருவி னிசைந்தி
ரண்டே, நண்ணலுற நிலைத்திணையா மிலிங்கவுரு வழிபாடு நித
முஞ் செய்வாய், அண்ணலருள் வைத்துநீ நின்னைவழி பாடி
யற்ற வமரா யென்னில், விண்ணவரும் அறிவரோ தருமைச்
சுப்பிரமணிய விமலர் கோவே. (௩)

976 கருமையுறு கரியுரிவை மறித்தன்ன கல்லாடை கலந்து
தோன்ற, அருமையுறு சடைமதியும் வெண்ணீறாய் விளையு
மென அன்பிற்கங்கை, பெருமையுறு காவிரியாய் வலம்வந்து
திரைக்கையான் பெய்பூ விட்டுத், தருமையின்முன் னேவணங்க
வருசுப்பிர மணியகுரு தயைதான் என்னே. (௪)

977 ஆதிகுரு நின்புதல்வ ரெனக்கொண்ட நன்றியினை அறியச்
செய்தோ, ஓதியுற வளர்தமிழ்க் கருள்புரியுங் கடவுளென
உணர்ந்து தானோ, பாதியுறு மனைமறைத்துந் தமிழ்வளர்க்க
வோமகன்பேர் பகரக் கொண்டாய், நீதியுறு தருமைசுப் பிர
மணிய குருவள்ளால் நீடு வாழ்க. (௫)

---

தருமபுரம் ஆதீன வித்துவசிரோன்மணி

## காழி. ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளை அவர்கள் விண்ணப்பம்.

978 பலகலை யுணர்ந்த பாவலர் பரவப் பன்னிறக் கலையெனக்
கீந்திங், குலகெலா முவப்ப வுஞற்றிய திறத்தா லுனதடி யனு
தினந் துதிப்பேன், றிலகமாம் பொழில்சேர் தருமைமெய்க்
குருவே திகழ்தரு சுப்பிர மணிய, இலகொளி விளக்கே நின
தரு ளுளத்தி னினிதினின் வைத்தனன் பொறித்தே.

---

தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி

## சுவாமிநாதபண்டிதர் அவர்கள் விண்ணப்பம்.

வெண்பா.

979 ஞானத்தை நல்கு நலமிக்க மாசந்நி
தானத்தைப் பாதத்திற் றாழ்ந்துமிக—ஊனத்தைப்
பாற்ற வெழுதுமிதைப் பல்காலும் பார்வையிட்டுத்
தேற்றமுற வேண்டுவல்யான் றேர்ந்து.

திருவாரூர் பேன்ஷனர்

## தி. கணபதிபிள்ளை அவர்கள் விண்ணப்பம்.

980 வேதத்தோ டாகமங்கள் விதித்தவழி யொழுகி விதவித மாத் தருமங்கள் மிக்கச்செய்து, பூதத்தோ டுறவாடுங் கண பதியை யீன்று பூரணியா ழுமைபாகம் பெற்றநாதன், பாதத்தா மரைமலரை பன்னாளும் வாழ்த்திப் பரமேசன் கடைநோக்கும் பண்புளோயே, சீதததா மரைசெழிக்குந் தருபுர மடமுஞ் சிறப் பவருஞ் சிவநேசச் செல்வாபோற்றி. (க)

981 சுந்தரர்க்காப் பரவையர்பால் தூதாப்போய் கால்நோய் துய்த்ததனித் தியாகேசர் தோன்றுமாரூர், அந்தரரும் இந்தி ரரு மந்திரங்கள் சொல்லும் அந்தணர்க ளாகுதிகள் வழங்க நாளும், சந்திரருஞ் சூரியருங் கோள்களுடன் தியாகர் கோயில் வலஞ் சாரவரு மாரூர்வாசன், கந்தரத்திற் கறையுடையோன் கண்டமுதற் சேயின் கழல்பணியுங் கணபதிநின் கால்கள் போற்றி. (உ)

982 அளிகள்மொய்த் துடையுமலர்த் தேன்பாயு மகல்வாய் அமுதமெனும் நீர்நிலைகள் கால்வாய்கூபம், ஒளிகள்மிகு நவ மணிகள் குயிற்றியவிர் பைம்பொன் ஒண்மசட மாளிகையு மடமுந்திகழ, களிகூரும் பத்தர்குழாம் நடுக்கருணை யுருவங் கண்டுநான் மனமகிழ்ந்தேன் இன்னாள்தீபா, வளியாடை தம் பதியா முடுத்தியருள் பூதி யணிந்துநினை வாழ்த்தவென வந் தேன்போற்றி. (ந)

சுபம்.

---

தருமபுரம் ஆதீனவித்துவானும், துமுக்கூர் துரைத்தனக்கலாசாலை உயிர்நூலாசிரியரும் ஆகிய

## ப. மு. சோமசுந்தரம்பிள்ளை M.A., L.T, அவர்கள் விண்ணப்பம்.

983 வேதநற் கலையு மாகம முடிபும் வியன்குரு ஞானசம் பந் தர், விரிவுறத் தொகுத்து முத்திநிச் சயமா விளம்பிய சைவநூ லதனைப், போதமார் வெள்ளி யம்பல வாணர் புகன்றபின் டப்பொழிப் புடனே, புவியுளா ருய்வா னச்சினிற் பொறித்துப்

பூரண நன்றிசெய் புனித, நாதனுர் யாவ ரெனவின வுறினெந் நம்பர்மெய்ஞ் ஞானபுங் கவரா, நண்ணிய தருமபுரத்தமர் கர்த் தர் நம்புல மாகிய வள்ளல், ஓதவைந் தெழுத்தி லுண்மையை யுணர்த்து முயரிய சுப்பிர மணிய, உத்தம மாசி லாமணி யென் பர் ஓங்கிவர் மாண்பின்வா ழியரே.

---

## பாநுகோயிலாதீனம் இலக்கணம்
## முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் விண்ணப்பம்.

984 பொன்னந் தாமரைப் பதமலர் புனைந்துசென் னியின் மேன், மன்னும் விண்ணப்ப மீங்கிது வரைகுவ னடியேன், துன்னு மாபுகழ்த் தருமையிற் சுப்பிர மணிய, நன்னர் நாம சற் குருபர நன்குகேட் டருளே.

---

## தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி
## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

985 போதம் வியக்கம் பொருவில்லாப் போதத்தாற்
றீதி லருணூல்கள் செவ்விதாய்—கோதறுத்தே
யச்சிற் பதிப்பித் தரும்புகழைக் கொள்ளமிர்தே
யிச்சையுட னிந்திருப மெண்.

---

## தருமபுரம் ஆதீன வித்துவசிரோண்மணி
## சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயப்பிள்ளையவர்கள் பிரார்த்தனை.

986 அன்னம் படைத்தவர் பொன்முடி தேடின ராலமுகில், வன்னம் படைத்தவர் சீரடி நாடினர் வையகத்துத், துன்னம் படைத்த கலைபாடு மெங்கட்குத் தூசளித்தார், பொன்னம் புயமார் தருமைச் சிகாமணி போற்றுதுமே.

---

கலை = நூல், சாதாரண ஆடை.

தூசு = பாதப்பொடி, உயர்ந்த ஆடை.

## தருமபுரம் ஆதீன வித்துவசிகாமணி
## சுவாமிநாதபண்டிதரவர்கள் விண்ணப்பம்.

987 ஞான முதவலா னற்புதத்தை யீதலால்
கான மறைகாப்புக் காட்டலால்—மானப்
புலவரவை வைத்தலாற் புண்ணியனை யொக்கு
நலமுடைய நற்குருவே நாடு.

---

## தருமபுரம் ஆதீனவித்துவான் அகத்தியான்பள்ளி
## இராம. வயித்தியநாதசர்மா அவர்கள் இயற்றியது.

### பஞ்சரத்ந வெண்பா.

988 பூமேவுந் தன்ம புரவா தினவித்வா
னீமேதி னிக்குளினி நேரெனவென்—பாமேவ
வாக்களித்த சுப்ரமண்ய மாசந் நிதிவாழ்க்
வாக்களித்த வெண்பாச்சர் மா. (க)

989 ஆதீன வித்துவா னாகவரப் பெற்றசொற்சு
வாதீன மோதுதிரு வாக்குப்பு—ராதீனங்
காணச்சன் மாசொற் கவிசுப்ர மண்யகுரு
காணச்சம் மானமிகுங் காண். (உ)

990 தன்மபுர வாதீனந் தாங்குகவிச் சக்ரவர்த்திச்
சன்மனுயர் வாக்குச் சரஸ்வதிசொற்—றன்மபதி
மான்சுப்ர மண்ய மகாசந்நி தானஞ்செய்
வான்பரிசு பெற்று வர. (ந)

991 பாமான்கை லாய பரம்பரைவாழ் சுப்ரமண்ய
மாமானு தீனவித்து வான்சர்மா—நாமான்
றருகவியாற் செல்வந் தருமபுரா தீனந்
தருகவுரைத் தேனுதவத் தான். (ச)

992 வாழிசுப்ர மண்ய மகாசந்நி தானமிக
வாழிவிப்ர னுங்கவிசர் மாவாக்கு—வாழி
தருமபுர வாதீனந் தன்மமிக வாழி
தருமகிமை தந்தருள்வள் தாய். (ரு)

## ஆசிரிய விருத்தம்.


993 புண்ணியன் புகழன் றன்ம புரமடத் ததிபன் கைலைப்
பண்ணியன் பரம்ப ரைக்கண் பரவுதே சிகனு தாரக்
கண்ணியன் கல்விச் செல்வன் கடவுளன் புறுவன் பத்தி
யுண்ணியன் சுப்ர மண்ய னுயர்சந்நி தானங் காண்க. (க)

994 தருமமே ஜயமென் றெண்ணுந் தமிழ்க்கவி வயித்ய நாதச்
சருமன திசைநி ரூபஞ் சந்நிதா னம்பி றங்க
வருமன மகிழ்ச்சி பொங்க மடாதிப நீய றிந்து
திருமகிழ் தரும்ப திற்காண் செயலெதிர் பாற்கின் றேனல். (உ)

995 சிவலிங்க பந்த மீந்தேன் சிவபரம் பரைவாழ் செல்வ, வவ
ணைனக் குச்சம் மான மாதீன வித்வா னென்றுன், றவமொழி
பெறப்பெற் றேனத் தனிமொழி சிறப்ப தேனும், புவனிகா
ணத்த குஞ்சீர் புரிதனல் லுறுதி யாமால். (ங)

996 அவ்வண மெதுசெய் தாலிங் கவனியோ ரறியச் செய்பு,
முவ்வகை யோதென் றுலிங் குன்றிருச் சந்நி தானத், தொவ்
விய கதையைச் செய்ய வுலகறி தருமப் போது, செவ்வியுன்
பரிச ளித்துச் செய்வது மிகவு நன்றே. (ச)

சுபம்! சுபம்!! சுபம்!!!




வெண்பா.

பூதிபதி கீதிபதி போதிபதி யாதிபதி
ஆதிறமா ருந்தருமைப் பூபதிம—டாதிபதி
மான்சுப்ர மண்யநாம மாசந்நி தானமகிழ்
வான்சிறப்பார் பத்மஞ்சர் மா.

சுபம்! சுபம்!! சுபம்!!!

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI
LIBRARY
MADRAS-1
சென்னை-1

இங்ஙனம்
கவிச்சக்கரவர்த்தி
தருமபுர ஆதீன வித்வான்,
இராம. வைத்தியநாத சர்மா,
அகத்தியான்பள்ளி.


ஆங்கிரஸ-௵
தைமீ 18௳

உ

தேவி துணை.

அகத்தியான்பள்ளி

## இராம. வைத்திநாதசர்மா அவர்கள் இயற்றியது.




சிவலிங்க பந்தக்கவி.

புண்ணியன் றமிழிசைப் பண்ணியன் மூவொன்
பதுசி வாலயங் கதுவ வாழு
மொருமன் றரும புரம டாதிப
கனவா னீடு தனமா சிவ வழி
வாய தேசிக நேய மணிமா
மதிவா ழிரச பதிநற் பிரபு
சருமன் பாப்புகழ் தருமன் புவிசுக
யோகந் திகழ்சிவ வாகசித் திரக்கவி
நேசிசுப் பிரமணிய தேசிகன் வாழி.

சுபம்! சுபம்! சுபம்!!